ஸ்ரீமதேராமாநுஜாயநம.

கூர்மபுராணம்.

பூருவகாண்டம்

முதலாவது.

இராம னவதரித்த வத்தியாயம்.

எண்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

என்றலும்வெண்மதிக்கண்ணியிறைவன்பாத மினிதேத்துமிராமனிய ற்சரிதையாவும், மன்றவிரித்துரைத்தியெனமகதிவீணை வான்முனியுமுயா குமிவானந்தேய்கரும், குன்றினிருஞ்சிறகரிந்தவயிரவொள்வாட் குரிசிலு ங்கேட்டலுமகிழ்ந்து குழைவிலேனும், கன்றுகுணிலாவிளவின் கனிகள்வீ ழ்த்துங்காயாம்பூவண்ணனிவை கழறுமன்றே.

விராய்மலர்ப்பூங் குழலிபங்கன் மகிழ்விளேங்கும் வெள்ளிமலைக்கீழ் கிடந்து விளரிபாடும், இராவணனுக் காற்றலமென் றிமையோாசிந்த ரியக் கர்முனி வராகளெறி திரைசேராடைத், தராதலமேழும்புரக்கு மரசரோ டுஞ் சதுமுகத்தோன் பாற்கடலிற் சார்ந்துபோற்றக, கராமறியக்கதிரே மி பணித்துவேழங் காத்தருளுந் திருநெடுமால் கழறலுற்றான்.

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்

வாலிதிற்கேட்டிவொன்றென் வடிவமோர்நான்குகூறாய்ச்
சால்வுறுமுலகங்காக்குந் தயரதன்புதல்வராகி
ஞாலமீதுதிப்பதீவீர நனிமலாககானின்வெற்பில்
பால்படுகுரங்கோடெண்காய் வருகெனப்பணித்தல்செய்தான். (க)

பண்ணவரொவருமவ்வா றுதித்தனர்பரிதியோட்டிக்
கண்வழுக்குறுசெஞ்சோதிக் கதிர்மணிமுகடுவேய்ந்த
அண்ணலங்குடுமிமாட முடித்துயரயோத்திவேந்தன்
புண்ணியப்புதல்வரின்றிப்புலம்பொடுமிருந்தானன்றே. (உ)

வெளிதெறிந்தகன்றகேள்விச் சுமந்திரன்வேந்தைநோக்கி
ஒளிறுவேலுரோமபாதன் காத்திடுமுலகம்யாவும
துளிமுகில்விளர்ப்பஞானத் துறைபடிகலைகோட்டண்ணல்
அளியுடனெய்தின்வானம் பொழியுமென்றமைச்சர்சொன்னா. (௩)

அறைதலுமுருவவாட்க ணங்கலார்வேந்தனேவ
மறைபயின்முனிபாற்போகி மார்பினிற்கோடுபூத்த
செறிதவமுனிவனொன்ன முனிவனைமயக்கஞ்செய்தாங்
கிறைநகர்தன்னிலுய்ப்ப விசும்பயல்பொழிந்ததன்றே. (௪)

வேந்தர்கோன்மகிழ்ந்துதூய மெய்த்தவமுனிவன்வேட்பச்
சாந்தையென்றுலகமேத்துந் தன்னுடைப்புதல்விதன்னை
ஈந்தனன்முனியுமாங்க ணிருந்தனனவனீண்டெய்தின்
நாந்தகவுழவரீயு நன்மகப்பெறுதியென்றான். (௭)

எனவுரைத்திடலும்வேந்த னிமைப்பினிலுரோமபாதன்
தனிநகர்க்கெய்தியாங்குத் தவம்புரிகலைக்கோட்டண்ணல்
முனிவனைக்கொணரவன்னோன் பரிமகமுற்றிப்பின்னும்
வினையில்புத்திரகாமேட்டி மேதகவாற்றினானே. (௮)

ஆற்றியதழலிற்றோன்று மவியினையணங்கனார்க்கு
வீற்றுவீற்றாகல்கக் கௌசலைவிறல்கொள்வாலி
கூற்றையீன்றனள்கைகேசி குணப்பெருங்கடலையீன்றாள்
மாற்றிலாவிருவர்தம்மைச் சுமித்திரைவயிறுவாய்த்தாள். (௯)

இராமன்வேற்பரதன்றூய விலக்குவனியக்கர்வேந்தர்
பராவுசத்துருக்கனென்னப் பழிப்பறுநாமஞ்சாத்தித்
தராதலமுழுதும்போற்றச் சௌளமேமுதலவாக
விராவுநற்கருமம்யாவும் விழுமிதின்வசிட்டன்செய்தான். (௧௦)

நறைகமழலங்கன்மாலை நம்பியைமுதலமைந்தர்
பிறையெனவளருநாளிற் கௌசிகன்பெட்பினோடும்
அறைகழலவனிவேந்தர் நெருங்குபேரவையினெய்தி
இறையவன்போதந்தேத்தியிருக்கெனவிருந்துசொல்வான். (௧௧)

அரக்கர்தீவினையால்வேள்வி யாற்றலனிடையூறின்றிப்
புரப்பதற்குன்பாலுற்றேன் புதல்வனையளித்தியென்ன
இரத்தலுமுள்ளமாழ்கித் தயரதனிராமனென்னும்
வரைத்தடந்தோளினானை முனிபின்போய்வருதியென்றான். (௧௨)

என்னவெஞ்சிலையிராம னிலக்குவனோடும்யார்க்கும்
பன்னருங்களிகொள்கேள்விப் பழமறைக்கிழவன்பின்போய்க்
கொன்னுனையெயிற்றுப்பேழ்வாய்க் கோளரிவழங்குங்கானின்
மன்னலுமிரண்டுவிஞ்சை மறையொடுமருளினானே. (௧௩)

நெடிபடுகானினேகு நெறியினோர்சாலைநோக்கி
விடலையீதென்கொலென்னக் கௌசிகன்விமலன்முன்னம்
ஒழிவறுதவஞ்செய்காலை யுடற்றியவில்வேளங்கம்
அடலையினெரித்தநாள்தொட் டநங்கனாச்சிரமமென்பார். (௧௪)

என்றவணீங்குமெல்லை யோரிருநகரநோக்கிக்
குன்றெனத்திரண்டதோளா னிவையெவைகூறுகென்ன
மின்றிகழ்வயிரவாளான் விருத்திராசுரன்றனாவி
பொன்றுதல்செய்தபாவம் போக்கியதலங்களென்றான். (௧௫)

சூர்வளியெறியுங்காளிற் றூனவினினேகுமெல்லை
ஆரியன்றோன்றுங்கானம் யாதுநீயறைதியென்னப்
போர்கெழுசுகேசுவேதன் பொன்னடிக்கமலம்போற்றி
வாரணிபூணைந்தமார்ப மங்கையையினிதினீன்றான். (கசு)

ஓடரித்தடங்கட்செவ்வா யொண்ணுதற்பணைகொண்மென்றோட்
டாடகைதன்னைச்சுந்தற் களிப்பவத்தையனல்லாள்
ஆடன்மாரீசனோடுஞ் சுவாகுவையருளினீன்றாள்
ஏடவிழ்நறுந்தார்ச்சுந்த னின்னுயிர்தொலைந்தானன்றே (கஎ)

தாடகைமைந்தரோடுந் தமிழ்முனிதன்னைப்பற்றப்
பீடுறுதவத்தோன்சீறிப் பிறையெயிறரக்கியாகிக்
கோடிவேழத்தினுற்ற பலத்தொடுங்கூடுகென்ன
நீடிருஞ்சாபம்பெற்ற நிசாசரிவனமீதாமால். (கஅ)

ஆங்கவடன்னையைய வணங்கெனவுளத்திலெண்ணல்
தீங்குறும்விரோசனன்றன் சிறுவியைமகவான்கொன்றான்
பாங்குடைவெள்ளிதாயைப் பசுந்துழாய்முகுந்தன்கொன்றான்
ஈங்கிவைகருதிநீயு மிவளுயிர்செகுத்தியென்றான். (கசு)

அத்தலைச்செறுநராவி யயின்றுவெம்புலவுநாறு
முத்தலையெஃகமேந்தி முகிலெனவுரறியார்த்துப்
பைத்தலைச்சுடிகைநெற்றிப் பார்முதுகுருக்கவந்தாள்
தத்துவெங்குருதிப்பேழ்வாய்த் தாடகையென்பாண்மன்றோ. (உ0)

ஈங்கிவடன்னைக்கோறி யெனமுனியியம்பவையன்
வாங்குவிற்பகழியொன்றாற் றாடகையாவிமாய்த்து
நீங்கலுமோரைஞ்ஞூறு வெங்கணைநெறியினல்கி
ஆங்கவையுபசந்தானம் புரியருமறையுமீந்தான். (உக)

அவ்வழியகன்றுசெல்லு மருநெறியதனின்மற்றோர்
திவ்வியாச்சிரமநோக்கி யாதிதுசெப்புகென்னப்
பவ்வநீருலகந்தன்னோ பதத்தினிற்பொதிந்தோன்வைகும்
இவ்விடந்தன்னைச்சித்தாச் சிரமமென்றிசைப்பனென்றான். (உஉ)

ஆங்குநின்றேகியைய னருமகச்சாலையெய்தித்
தீங்கறுமுனிவவேள்வி செய்கெனவியம்பலோடும்
வீங்கியகேள்விபோய கௌசிகன்வேள்வியாற்ற
ஓங்குமாரீசனோடுஞ் சுவாகுவந்தமரினுற்றான். (உஙு)

ஏற்றவர்தம்மில்வெம்போர்ச் சுவாகுவையெரிவாயம்பின்
கூற்றினுக்குணவுநல்கிக் கொடியமாரீசன்றன்னைக்
காற்றின்வெம்பகழியொன்றாற் கடலிடைக்கவிழ்த்தியாரும்
போற்றருவேள்விமுற்றப் புரந்தனன்புலவுவேலான். (உச)

கோவெடுத்தருந்தும்வைவேற் குமரருக்காசிகூறிப்
பாவடிப்பருமயானைப் பிடிமிசைப்பணைக்கைநீட்டி
மேவருகானம்யாவுங் கடந்துவில்வீரரோடும்
காவுசூழ்சோணையாற்றங் கரைமிசையினிதுசென்றான். (உரு)

இவ்விடம்யாவர்தேய மென்றிடவிராமன்கேட்ப
அவ்வியமவித்தசிந்தை யருந்தவன்றெளிந்துசொல்வான்
தெவ்வருன்சுவைக்கும்வைவேற் குசனெனுந்திறல்கொள்வேந்தன்
மவ்வலங்கூந்தற்செவ்வாய் விதேகர்கோன்மகளைவேட்டான் (உசு)

ஆங்கவனுன்குமைந்தர்ப் பெற்றனனவரின்மூத்தோன்
வீங்குதோட்குசனுபப்பேர் விறல்கெழுவேந்தர்வேந்தன்
ஓங்கெழின்மாடமுற்று மகோதயமென்னவோதும்
தீங்கறுநகரங்கோலித் திருவின்வீற்றிருந்தானன்றே. (உஎ)

கதிர்வடிவேற்குசாம்பன் கௌசாம்பிநகரஞ்செய்து
விதிமுறையரசுசெய்தான தூர்த்தசநாமவேந்தன்
மதியினோர்வியக்குர்தன்மாரணியமாநகரஞ்செய்தான்
சிதைவறுவசுமாடஞ்சூழ் கொடிக்கிரிவிரசஞ்செய்தான். (உஅ)

இத்தலம்வசுவின்றேய மஞ்சுவெற்பிடையிற்றோன்றும்
அத்தலமகததேய மன்னநீண்மலையினின்றும்
முத்தமுந்துகிரும்வாரி யகின்முருடுருட்டியோடும்
தத்துநீர்த்தரங்கஞ்சிந்து மாகதிதானென்றுண்டால். (உகூ)

அன்னமாநதியின்றீர்த்தத் தாடல்வேற்குசநாபற்குக்
கன்னலங்குதலைச்செவ்வாய்க் கிருதாசிகளிப்பினீன்ற
கொன்னுனைவேற்கண்ணுரோர் நூற்றுவர்கொடியினெல்கி
வன்னமேகலைகளார்ப்ப வண்டுளர்மலர்கொய்தாரால். (௩0)

காற்றிறையவரைநோக்கிக் காமநோயுழந்துமாழ்கி
ஊற்றுறுமின்பம்யாழோர் கூட்டத்தினுறுதிரொன்னப்
போற்றலுமறுத்தவேற்கட் பூங்கிளியனையதிஞ்சொல்
நூற்றுவருடலம்புக்கு நுடங்குகூனுக்கினனே. (௩க)

மங்கையரிதனைத்தந்தைக் கோதலுமனத்தினெண்ணிப்
பங்கயமடந்தையன்ன சோமதைபரிவினோடும்
துங்கநற்சூளிக்கீன்ற பிரமதத்தனுக்குத்தூய
சங்கினமுழங்கியார்ப்பத் தருமணம்புரிவித்தானல். (௩உ)

பாம்புறழ்நுழைநுசுப்பிற் பாவையருடற்கூன்போகிக்
காம்பிலிதேயந்தன்னிற் களிப்பொடுபிரமதத்தன்
ஏம்பலினிருந்துவாழ்ந்தா னிவைநிற்கசநாபப்பேர்
வாம்பரித்தடந்தேர்மன்னன் மகவினிகாற்றினனே. (௩௩)

அருமகமாற்றுமெல்லை யாடல்வேற்குசனுங்கெய்திப்
பொருவருமைந்தவொப்பில் புதல்வனைப்பெறுதியென்ன
வரமளித்துடலிறேடும் வானநாடதனிலுற்றான்
கருணைகூர்குசநாபன்சீர்க் காதியையினிதினீன்றான். (௩௪)

ஆங்கவன்கௌசிகப்பே ரணங்கொடுமென்னையீன்றாள்
தீங்கின்மற்றவளேதூய செயிரறுகௌசிகப்பேர்
வீங்குநீராறாயீண்டு மேவினளென்னவோதி
நீங்கலுங்கங்கையென்னு நெடுநதிதோன்றிற்றன்றே. (௩௫)

வள்ளலந்நதியைநோக்கி வரன்முறைகூறுகென்னத்
தெள்ளிதின்மறைகடேர்ந்த கௌசிகன்செப்பலுற்றான்
கள்ளவிழ்மலர்மென்கூந்த லுமையினைக்கங்கையோடும்
எள்ளருமிமயவேந்த னினிதினிற்பயந்தானன்றே. (௩௬)

உமையினையயன்மால்காணா தோங்கொளியாகிநின்ற
இமயவிற்குழையவாங்கு மீசனுக்கீந்தானீர்தத்
தமரவெண்டிரைநீர்க்கங்கை பாதலந்தரணிவிண்ணின்
அமர்தலாலுலகினுள்ளோ ரமர்திரிபதகையென்பார். (௩௭)

* * * (௩௮)

* * * (௩௯)

உலகெலாங்கமலத்தோனே டென்றசிற்றுதரவல்லி
குலமனையவர்பான்மைந்தர்ப் பெறுகலீொன்றுகூறி
நலனுறுகடவுளோரா வைதகன்ஞாலந்தன்னைப்
பலாவிழைகணிகைபோல வாழ்கெனப்பகர்ந்துபோனன். (௪௦)

சரவணமதனில்வெய்தாந் தழலுமிழ்வடிவேலேந்து
முருகவேளினிதுதோன்றி மொய்யமர்கடந்தவெற்றி
எரியுமிழ்தறுகட்பேழ்வா யவுணரையிகலினூறித்
தருநிழலமரர்வைகத் தானையங்காவல்பூண்டான். (௪௧)

ஈங்கிதுகிடக்ககங்கை வரன்முறையினிதுகேட்டி
வாங்குவிற்சகரனில்வாழ் மனைவியரிருவர்தம்மில்
தீங்கெறிபிருகுவென்னுஞ் செய்தவனருளாற்பொன்னங்
கோங்கலர்குழலாண்மற்றோர் குமரனையினிதினீன்றாள். (௪௨)

கலிவிருத்தம்.

அறுபதினாயிர மாடன்மைந்தரை
மறுவறமற்றவள் வயிறுவாய்த்தனள்
இறையசமஞ்சத னென்னுமைந்தனைச்
சிறுவரையொறுத்தலாற் கானஞ்சேர்த்தினன். (௪௩)

ஆங்கசமஞ்சத னஞ்சுமானெனும்
தீங்கறுபுதல்வனைச் சிறப்பினீன்றனன்
வீங்குமோதாட்சகரன் வாம்புரவிவேள்விகள்
பாங்கினிலொன்றொழி நூறுபண்ணினான். (சச)

மீட்டுமவ்வேள்வியின் விடுத்தவாம்பரி
பூட்டுவிலிந்திரன் புணர்ப்பின்வௌவுறா
வாட்டமில்கபிலமா முனிவன்வான்றவம்
ஈட்டுறுசாலையி னொளித்திட்டேகினான். (சரு)

தள்ளரும்பெரும்புகழ்ச் சகரர்வாம்பரி
எள்ளருமபெரும்புவி யெங்குங்காண்கிலார்
பள்ளநீர்வேலையைத் தொட்டுப்பாதலத்
துள்ளுறைகபிலன்மாட் டுறைதல்கண்ணுற்றார். (சசு)

தெள்ளிதிற்காண்டலுஞ் சினவுமன்னரைத்
தள்ளருமுனிமொழி சாம்பராக்கலும்
வள்ளறன்மைந்தரை வரவுகாண்கலா
துள்ளநொந்தஞ்சுமான் செல்கென்றேதினான். (சஎ)

அஞ்சுமான்பாதலத் தணைந்துமாதவன்
செஞ்சரண்பணிந்தவ னருளிற்செல்பரி
எஞ்சலில்சகரனுக் கீந்துதந்தையர்
உய்ஞ்சிடவருந்தவ முஞற்றினனரோ. (சஅ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அருந்தவம்பன்னாளாற்றி யஞ்சுமானென்னும்வேந்தன்
திருந்தலர்புகழும்வேற்கைத் திலீபனையினிதினீன்று
விருந்தினனாகிவிண்ணோ ரெதிர்கொளவிசும்பிற்போனான்
மருந்தினுமினியகேள்வித் திலீபனும்வானஞ்சேர்ந்தான். (சகூ)

அன்னவனளித்தவெற்றிப் பகீரதனன்பினோடு
முன்னரும்பருவமுப்பா னாயிரந்தவஞ்செய்காலைப்
பன்னருமறையோன்றோன்றிப் பகீரதவிழைந்ததென்ன
உன்னாங்கங்கையிந்த வுலகினினுறுதல்வேண்டும். (ருo)

[illegible] வேண்டுமென்ன வளித்துவானதியீண்டெய்தின்
எந்தையே யயனே நீமற்றுத் தரிக்குநரில்லையென்று
நந்தலில்பிரமனேக நாமவேற்குரிசிறாய
சந்திரமௌலியெய்த வளப்பினாட்டவஞ்செய்தானே. (ருக)

நீற்றொளிபழுத்தநெற்றி நிமலன்வந்தெய்தக்கங்கை
ஆற்றினையளித்தியென்ன வருந்தவம்பெரிதுமாற்றப்
போற்றருங்கங்கையீசன் புரிசடைக்காட்டுளெய்தித்
தோற்றமின்றாகமன்ன னீசனைத்தொழுதுசொல்வான். (ருஉ)

கங்கையையளித்தியென்னக் கடவுடன்சடையின்மீது
தங்குமோரிவலைநல்கத் தளியுமிழ்தராளுஞ்சிரதி
எங்குநீரபெருகிபோடச் சன்னுவின்சாலையெயத
அங்கவன்குடங்கைதன்னு லள்ளினனருந்தினுனல். (௫௩)

அருந்தலுமரசன்வேண்ட வரும்பெறற்கங்கைதன்னைப்
பெருந்தவன்செவியின்மீட்டும் விடுத்தலும்பெட்பினோடும்
திருந்தலாக்கடந்தவைவேற பகீரதன்றிணடோச்செல்லி
பொருந்துறும்வழியினேகிப் பாதலமடுகதன்றே. (௫௪)

பாதலதெய்திவேந்தர் ரடலையிற்படர்தலோடும்
தீதுறுசகரர்யாருந் துறக்கதினினிதுசேர்ந்தார்
மாதவக்கிழமைபூண்ட மன்னனுமயோத்தியுற்றான்
ஈதிதன்காதையென்னக் கௌசிகனியம்பினுனே. (௫௫)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

என்றுயர்கங்கைவரன்முறையுரைத்தாங் கேகுழிவிசாலைமாநகரம்,துன்
றவிந்நகரம்யாதெனவிராமன் சொறறலுங்கௌசிகனுரைப்பான், வென்றி
வேலவுணாதமமொடுங்தேவா கொடியவெஞ்சமந்தனிப்புரிந்து,பொன்றலும்
பொன்றுமருந்துவேட்டமரர் புணரியைப்பல்பகல்கடைந்தார். (௫௬)

மாயிருஞாலந்தாழியாமத்து மந்தரமாமதிதறியாக்
காயும்வெவ்விடத்துவாசுகிநாணுக் கடற்புனலவெண்டயிராக
ஆயிரம்பருவங்கடைதலுமாலம் பிறப்பமான்முதலியவமரா
பாய்விடையுயர்த்தபனிமதிக்கண்ணிப் பண்ணவன்பதம்பழிச்சினரால்.

வெயிலுடன்முளைத்துக்கிளைத்தசெம்மேனி விமலனுங்கெய்திமான்முதலாம்
செயிரறுதேவர்பருவரறுடைந்துத் திகழ்விடமருந்தினனகல
மயிலியல்பாகனருளினைவியந்து மான்முதலாகியதேவர்
பயிறருகடலைமீளவும்வியந்து பற்பலநாட்கடைந்தனரால். (௫௮)

மந்தரந்தாழமாயவனுமை யுருகொடுவலியினுற்றுங்கி
உந்துநீர்க்கடலைக்கடைதலுமோரகை கமண்டலமோர்கைதண்டேந்தி
நந்தலிறன்வந்திரிமுதற்பிறந்தார் நாடகக்கூத்தியராகும்
அந்தமிலரம்பைமகளிரதெள்ளமுதோ டறுபதுகோடிவந்துதித்தார். (௫௯)

நிலவுகொப்புளிக்கும்வெண்ணகைத்துவர்வாய் நிகரொறியரம்பையர்தமகருச்
சிலதியரநந்தமகளிர்வந்துதித்தார் திகழ்வளிமனத்தினுங்கடிய
கலினவாம்புரவிபிறந்ததுபின்னர்க் கருங்கடன்முழுவதுஞ்சிவப்பப்
புலரியிலெழுந்தசேட்டிளங்கதிரிற் கௌததுவம்பிறந்ததுபொலிவின். (௬0)

வியன்சினைத்தருக்களைந்துமாங்குதித்த விண்ணவர்முதலினோர்யாரும்
பயன்படுதேனுப்பிறந்ததுமறவோர் பான்மதிக்குடையவனுதித்த
தியங்குநூற்கோட்டுவெள்ளைநிகரயிரா வதப்பகடெழுந்ததுபின்னர்த்
தயங்கொளிமுகத்துக்காக்கைமீதுயாத்த தௌவையாங்குதித்தனளன்றே.

பூங்கதிர்பரப்பியுலகெலாம்விளக்கும் புண்ணியத்திங்களாங்குதித்த
தோங்குபைங்கணைக்காற்சேயிதழ்க்கமலத் தொழுகொளிபரப்புபொற்பொ
குட்டு,வாங்குநுண்ணுசுப்புவெண்ணகைத் துவர்வாய்வடிபுனைசேயரிநெடுங்
கட், டுங்குயிற்குதலைப்பொன்னுறழ்மேனித் திருமகளுதித்தன ளன்றே.

வாருணிநறவம்பிறந்ததுபின்னர் மற்றதுநுகர்தலாற்றேவர்
சீர்கெழுசுரராயினரஃதுண்ணா ரசுரராயினர்சிறந்தோங்கும்
ஆரமுதுதித்ததலங்கொளிமணியுந் திருவையுமாயனுக்களித்தார்
ஏர்கெழுமமுதமெமதெமதென்ன வவுணருமமரருமேற்றார். (௬௫)

ஏற்றவர்தம்மைமாயவன்விலக்கி மோகினியுருவொடுமெய்தித்
தோற்றியவமுதமுதலியவெவையுஞ் சுரர்தமக்களித்தலுமாற்றம்
ஊற்றிருந்தொழுகும்வச்சிரப்படையா லடல்கெழுமவுணரையொறுத்தாங்
காற்றலின்மகவான்பொன்னுலகனைத்துந் தனதடிப்படுத்தினனளித்தான்.

என்னுடைப்புதல்வர்வேரொடுமடிய விகலுடைச்சூழ்ச்சியிழைத்த
இன்னுயிரனையவதிதிமைந்தனையீன் டொறுப்பவோர்சிறுவனையருள்கெ
றன்னமென்னடையதிதியிரந்துரைப்பக் காசிபனாயிரம்பருவம் [ன்
மன்னிநீபுனிதமாய்த்தவமியற்றின் மகப்பெறுவாயெனவறைந்தான்.

ஆயிரம்பருவநோற்பவளொருநா ளலகுழல்விரித்துறங்குதலும்
பாயொளிவயிரப்படையினேனேக்கிப் பைந்தொடிவயிறறினுட்புகுந்து
சேயையேழ்கூறுயறுத்தலுமணங்கு சிதைத்திடலெனவிரந்திடலும
மாயிருவிசும்பினேழ்மருத்துவராய்த் திரிவுறவரமளித்தகன்றான். (௬௬)

அரும்பிளமுறுவற்றிதிமுனம்விரத மாற்றுழியிவ்விடமாகும்
பொருந்தலர்க்கடந்தவிக்குவாகுப்பேர்ப் புரவலனலம்புசையென்னும்
கரும்பினைக்கலந்தாங்களித்திடும்விசாலன் கட்டியநகரமீதவன்றன்
பொருந்தியமருமான்சுமதியிந்நகரம் புரவுபூண்டிருந்தனனென்றான். (௬௭)

கோசிகனிவ்வாறுரைக்குமெல்லையினிற் கோதறுசுமதிவந்தெய்தி
,ஆசைகடோறுந்தன்புகழ்நிறுவு மையனையளவளாய்த்தழீஇக்கொண்
டேசறுந்தனதுநகர்வயிற்கொணர வியற்றியவிருந்தெதிர்விரும்பி
மாசறுமுனியுந்தம்பியுந்தொடர மிதிலையூர்மருங்கணைந்தனனால். (௬௮)

கூன்புறக்கனிதாழ்கவிழ்குலைதூக்குங் குறுங்கழுத்தரம்பையிற்றாவி
வான்படர்ந்தோங்குங்கமுகிளம்பாளை கிழிதரவாளைபாய்ந்துழக்கும்
கான்படர்மிதிலைவளநகர்மருங்கோர் கண்கவர்சாலையைநோக்கி
ஊன்கெடநோற்றமுனிவவிவ்விடமேதுரைத்தியென்றிடமுனியுரைப்பான்

ஏர்கனிந்தொழுகுமின்னுருத்துவர்வா யகலிகைநகைவிருந்தருந்த
வாரொலிகழற்காலிந்திரனெய்தி மருவுதல்கோதமனேக்கிச்
சீர்கெழுபலம்வீழ்ந்திடுகெனச்சபித்துச் சேயிழைதன்னையூணின்றி
ஆர்தருமடலைபாயலாய்ப்பன்னா ளருபியாயுறைகெனச்சபித்தான். (௭௦)

ஙங்குநுண்ணுசுப்பாண்முனிவவிச்சாப மொழியுநாட்கூறெனவிராமன்
பூங்கழற்றுகளுன்மெய்யினிற்கதுவிற் போகுமென்றுரைத்தனனகலத்
தீங்கறும்வலாரிககமராதென்புலத்தோர் கூறதாய்த்திகழ்தரவீசம்
வாங்கினரமைப்பக்கறபகநீழல் வானவர்போற்றவீற்றிருந்தான். (எக)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தீதறுமுனிவனிவ்வா றுரைத்தலுஞ்செம்மல்கேட்டுப்
போதருநெறியிலேயன் பொன்னடித்துகள்சென்றெய்தக்
கோதமன்பன்னிசாப நீங்கிவெங்குருதிவேற்கண
மாதுருவாகியாசி வழங்கித்தன் மகிழ்நற்சேர்ந்தாள். (எஉ)

வள்ளலுமிளையகோவும் வான்றவமுனிவன்பின்போய்
அள்ளிலைப்பலவினெற்றி யளிந்துவீழ்சுளையினூறும்
கள்ளயின்றிளஞ்சூன்மந்தி கடுவனோடினிதிரேடும்
வெள்ளநீர்ப்படப்பைசூழு மிதிலைமாநகரம்புக்கார். (எங)

சேட்டிளம்பரிதிப்புத்தேள் செலவயாகடவுண்மான்றேர்
ஓட்டறநிவந்தசெம்பொற் சாலையுளுலங்கொடிணைடோள்
வாட்டிறலிளையரோடு மறைமுனியெய்தலோகித்
தாட்டுணைபணிந்துவெள்வேற் சனகனல்லிருக்கையீந்தான். (எச)

அருகுறைகுமரர்தம்மை யாய்பிழித்தாமமார்பன்
பருகுவான்போலநோக்கிப் பழமறைக்கிழவபோந்த
திருவினர்யாவரென்னத் தயரதன்சிறுவர்ஈசன்
பொருசிலைமதுகைகாண்பா னிவ்வழிப்போந்தரென்றான். (எரு)

விற்றொழிற்கொருவனுய விராமனைவிழைவினோக்கி
மற்றடந்தோளாய்கேட்டி கௌசிகன்வரலாறென்னப்
பொறறளிர்பொருவுமேனி யகலிகைபொற்பினீன்ற
ாற்றவக்கிழமைபூண்ட சதானந்தனவிலலுற்றான். (எசு)

கற்றிரள்பிறழுந்திண்டோட் காதிசேயுலகம்யாவும்
ஒற்றைவெண்குடையுள்வைத்துத் திகிரியொன்றுருட்டுநாளில்
வெற்றிவேற்புளிஙரோடும் வேட்டமேற்கொண்டுகொன்போய்
நற்றவவசிட்டன்வைகுஞ் சாலையினண்ணினானே. (எஎ)

அருந்ததிகணவன்வேந்தோ டளவளாய்முகமன்கூறி
விருந்தினிதளித்தியென்னத் தேனுவைவிழியினோக்க
மருந்தினுமினியவாய வான்சிறப்பியற்றமன்னன்
திருந்துநற்றவத்தோயிந்தத் தேனுவையளித்தியென்றான். (எஅ)

என்றலுமறுப்பமன்னன் றேனுவையெதிர்ந்துபற்றத்
துன்றியமயிர்க்காறேறும் யவனராதிதோற்றிவெய்ய
வென்றிவேற்றானைமாட்ட வெஞ்சமத்தரசன்மைந்தர்
சென்றிடவுங்காரத்தான் முனிவரன்செகுத்தானன்றே. (எகூ)

கூற்றரும்வெருவவேந்தன் கொடுஞ்சிலைகுழையவாங்கி
ஏற்றருமுனிவற்காற்று திடைந்தனனுகிமைந்தர்
நூற்றவர்தம்மினுய்ந்த மைந்தனைநோக்கிவையம்
போற்றுகென்றிமயத்தெய்திப் புலனவித்திருந்துநோற்றான். (௮0)

இமையவிற்குரிசிலெய்தி லிழைந்தமையுணர்ந்தேனென்று
அமைவருங்கடவுள்வானி யளித்தலுமரசன்போந்து
கமையுடைவசிட்டன்மெய்யில் விடுத்தவெங்கணைகள்யாவும்
திமிரமேய்கதிரிற்றண்டந் தீயெழவிழுங்கிற்றன்றே. (௮௧)

ஆங்கதுகண்டவேந்த னரசர்வெந்திறலையெள்ளி
ஓங்கழலூட்டியுண்ணு முனிவனையுவர்துபோகித்
தீங்கறுமுனிவர்வைகுந் தென்புலமதனிலெய்திப்
பாங்குறத்தழலினுப்ப ளுயிரம்பருவநோற்றான். (௮௨)

நோற்றலுங்கமலப்புத்தே ளெய்தின்வந்தெய்தமன்னன்
போற்றலும்வந்திராச முனிவனென்றுரைத்துப்போகக்
காற்றினைநுகர்ந்துசெய்ய கண்முகிழ்ந்தழலினுப்பன்
ஆற்றருவிரதம்பின்னுமாயிரம்பருவஞ்செய்தான். (௮௩)

விழவுகண்டுயிலாவீதி யயோத்திநாடாளும்வேந்தன்
மழைநிகர்தடக்கைவண்மை வளர்திரிசங்குவென்போன்
தொழுதகுவசிட்டற்போற்றி யுடலொடுந்துறக்கமெய்தப்
பழமறைதெரிந்தோரொச்சம் பண்ணுவிரதிடுகவென்றான். (௮௪)

என்னலுமுனிவனெல்லா தென்றலும்புதல்வர்ப்போற்றி
மன்னவன்புரிதிரென்ன மறுத்தலும்பிறாபாலெய்தி
நன்மகம்புரிவனென்ன நான்மறைவசிட்டன்சேறி
நின்னிலைதிரிந்துமற்றோ நீசனுயுறைதியென்றான். (௮௫)

கனைகளுயுலகம்யாவுங் காத்திடுந்தலைமைநீங்கி
உளமெலிவெய்திக்காதி மைந்தனுகுற்றகூறத்
தளரனீதுறகத்துய்ப்ப னென்றருந்தவத்தோர்க்கூவ
வளர்தவவசிட்டன்மைந்தர் மறுததலும்வைதுகொன்றான். (௮௬)

தழலிடைநறுநெய்பெய்து தனிமகம்புரியத்தேவர்
விழைவொடுமவிசைக்கொள்ளார் விடுத்தலும்வெகுட்சிகூர்ந்து
தொழுதகுசுருவையேற்றி வேந்தனைத்துறக்கத்துய்ப்ப
இழிதொழிறகீழ்ண்டெய்த லெனவுமபரிழிததிட்டாரால். (௮௭)

சென்னிகீழாகவீழுந் திரிசங்குவென்னும்வேந்தை
நின்னிலென்றமைத்துவானி னிறுவிவாசவன்றன்னோடும்
இன்னுமோருலகஞ்செய்வ னெனவுடுகணங்கள்விண்ணோா
பன்னருஞ்சராசரங்கள் சிறசிலபடைத்தானன்றே. (௮௮)

படைத்தலும்விண்ணோரஞ்சிக் கோசிகன்பால்வந்தெய்தி
அடற்கருவலத்தோய்நீயீண டமைந்தவையமையுமுன்னம்
தடுப்பறப்படைத்தயாவுந் தார்த்திரிசங்குவோடும்
உடுத்தெரியுலகின்பாங்கர் வதிகவென்றுரைத்துப்போனார். (அக)

கடவுளர்போயபின்னர்க் கௌசிகன்றனைவினைகிக்
குடதிசையதனைநண்ணிக் கொடுந்தவமியற்றுமெல்லைப்
படிபுகழம்பரீடன் பசுவினைமகவான்வெளவ
வடுவிலாரிசிகன்சேயை வான்பொருள்கொடுத்துக்கொண்டான். (கo)

பொற்றடந்தேரினேற்றிப் புருடமேதத்துக்காக
மற்றடந்தோளான்கொண்ட மறைமுனிபுதல்வனோடும்
கற்றடிப்படுத்தவிஞ்சைக் கௌசிகன்சாலைநண்ணப்
பற்றறுமுனியைநோக்கிப் பாலகனழுதிட்டானே. (கக)

அழுதகங்குழையும்பாலற் கஞ்சலென்றினிதுகூறிப்
பழுதறுமுனிவனீன்ற மைந்தரைப்பார்த்துநீவிர்
விழைவொடும்பசுவாயிந்த விடலையைக்காமினென்னத்
தொழுதனர்மறுப்பவேட ராகெனத்துனைவின்வைதான். (கஉ)

அந்தணன்புதல்வனுய்ய வாங்கவன்செவியினூடு
மந்திரமிரண்டுகூறி மறைமுனிவிடுப்பவேந்தன்
எந்திரத்தேரினேற்றிச் சாலையினெய்தியூபக்
கந்தினிலார்ப்பமைந்தன் கடவுண்மந்திரத்தையோர்ந்தான். (கங)

அத்தலையமரரெய்தி யவியினையடைந்தோரமிர்த
வித்தகச்சிறுவன்றன்னை விடுகெனவிடுத்துவேந்தன்
பத்திமைவேள்விமுற்றிப் பதியினிலடைந்தான்பின்னும்
பொய்த்தலைப்புகாதநெஞ்சப் புண்ணியன்றவத்தினின்றான். (கச)

காதிசேயாற்றுகின்ற தவத்தினைக்கமலப்புத்தேள்
மேதகவியந்துபோந்து மெய்த்தவவிருடியென்ன
ஓதினனகலப்பின்னு மொழிவறுமபுலன்கள்செற்றுத்
தீதெறிந்தழலினூப்பட் செய்தவமியற்றினானே. (கரு)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வெண்ணிலாக்கதிர்கள் விழுதுவிட்டொழுகும் விழுமணியணிபலவற்றின், வண்ணமென்கருங்காவட்கநன்கிருண்டு வளர்குழற்பொறையினிலந்தோ, நுண்ணிடைமுரியு முரியுமென்றேங்கி நூபுரமரற்றவெங்கூற்றம்,பெண்ணுருக்கொண்டு வருதல்போற்பெட்பின் மேனகையவ்வுழிப்போந்தாள்.

விளிம்புபூத்தெறிந்தமேகலையொலிப்ப மின்னெனமென்மெலவொதுங்கித், துளங்கிடையொல்க மேனகைவரலுங் கோசிகனருந்தவந்துறந்தாங், குளங்கனிந்துருகவாங்கவளோடு மொருபதினாயிரம்பருவம், அளந்தறிவரியவின்னலம்பருகி யமரரினுளங்களித்திருந்தான். (கஎ)

மாஷயயின்கோட்பான்மேநகையோடு மருவினனெனத்தனையிகழா
ஆயிரங்காதமகன்றவேற்றடங்க ணமிழ்தினையொல்லையின்விடுத்துப்
போய்வடதிசையினுயிரம்பருவம் பொறியவித்தருந்தவம்புரியச்
சேயநாணமலரோன்மாமுனியெனப்பேர்சிறப்பொடுமினிதளித்தகன்ருன்

முனிவரன்பின்னுமாயிரம்பருவ மூச்சவித்தருந்தவம்புரியக்
கனியுறழ்திஞ்சொலரம்பையையமரர் விடுந்தலுங்காதிசேய்முன்னம்
தனியவளெய்தப்பாறையாகென்னத் தையலைச்சபித்தருமுனிவன்
புனிதநல்லொழுக்கம்பூண்டுகீழ்த்திசையிற் போயினனருந்தவம்புரிந்தான்.

பருவமீரைஞ்ஞூறருந்தவம்புரிந்து பாரணம்பண்ணும்வெஞ்சோற்றைத்
தருதியென்றமராகோன்மறையவனு யிரத்தலுந்தயாவொடுமளித்துப்
புருவமத்தியையினிருவிழிசேர்த்துப் புலனெறுமூசசெழாதவித்துத்
திரமுறுமுனிவனுயிரம்பருவந் தியிடையருந்தவம்புரிந்தான். (கoo)

பேசருந்தவத்துமுனிவரனுச்சி பிளந்தழற்பிழம்பெழுந்தோங்கி
மாசறுபுவனமெங்கணும்புகையாய் மண்டலுமடவனமுகைக்கும்
ஈசனுங்கெய்திமகிழ்ந்தனம்பிரம விருடிநீதவமொழிகென்னப்
பாசடைக்கமலப்பொகுட்டிறைனகலப் பழமறைவசிட்டனையடைந்தான்.

அன்னமாமுனிவனிவனெனவுரைத்துச் சனகனன்மரபுமாங்கியம்பிப்
பன்னருங்கேள்வியுறுசதாநந்த னிருந்தலுங்கௌசிகன்பரிதி
தன்னுயிர்குலத்தினரசர்தந்தோற்ற முழுவதுந்தரளவெண்கவிகை
மன்னவன்சனகனுணர்ந்துளங்களிப்ப மகிழ்வுடனினிதெடுத்துரைத்தான்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நல்லெழிற்புதல்வரின்றி வரைமகட்போற்றநங்கை
அல்லியங்கமலையன்ன சீதையையசிதிற்றந்தாள்
வல்லியோர்பாகனம்பொன் வரிசிலைால்கியிந்த
வில்லிறுத்தவற்கேயுன்றன் மெல்லியல்கொடுதியென்ருன். (கoௗ)

எனப்புகன்றிலங்குவைவேற் சனகனென்றுயாத்தோன்றந்த
தனிச்சிலைகொணர்மினென்னச் சகட்டினிற்கொணர்ந்துகாட்ட
முனிக்கிறைகண்ணிற்றூண்ட முகினிறப்பவளச்செவ்வாய்ப்
பனிப்பிறைப்பூண்செய்தோளான் பரிதியினிழிந்துசென்ருன். (கoச)

சென்றதுமெடுத்துநாணிற் செறித்ததுந்திரண்டசெமபொன்
குன்றவில்லனையவல்விற் குனித்ததுமிறுத்தவாறும்
ஒன்றிடாவிமையாநாட்டத் தமரருமுணரகில்லார்
என்றிடிவிமைத்துநோக்கு மனிதரோவினிதுகாண்பார் (கoரு)

முருகுறழ்தோற்றத்தையன் மூரிவில்லிறுத்தலோடும்
உருகுபேருவகைவெள்ள முவட்டெடுத்தொழுகவேந்தன்
கருணைகூர்முனியைநோக்கிக் கடிமணமுடித்தற்கின்னே
தருகிகரனையவண்கைத் தயரதற்குணர்த்துகென்ருன். (கoகு)

கோசிகன்விடுத்தவோலை காண்டலுங்குமரரோடும்
தூசுலாநுழைநுசுப்புத் தொண்டைவாய்மகளிரோடு
மூசுவண்டரற்றுந்தண்டார்த் தயரதன்முனிவா சூழக்
காசுகண்படுக்குமாடக் கடிநகாமிதிலைபுககான். (கoஎ)

குடவளையலறியேங்கக் குணில்பொருமுரசுமார்ப்ப
உடைதிரைக்கடலந்தானை யொளிறுவேற்சனகன்போந்து
தடமுடைப்பவளச்செவ்வாய்ச் சீதையைத்தழல்சான்றாக
மடலவிழ்துளவினாற்கு நீரொடும்வழங்கினானே. (கoஅ)

உருவவோடரிக்கட்செவ்வா யூர்மிளையென்னுமாதை
அருவலையனையதிண்டோ ளிலக்குவற்களித்தநாளும்
மருவலர்க்கடந்தவைவேற் குசத்துவசன்றன்மக்கள்
இருவரைப்பரதனுக்குஞ் சததுருகனற்குமீந்தான். (கoகூ)

மணவினைமுடிந்தபின்னர் மன்னர்கோன்மைந்தர்சூழப்
பணிவரும்பவளத்தாற்றுச் செந்நெலம்படப்பைவேலி
அணிகெழுமிதிலைநீங்கி யகநகர்க்கேகுமெல்லைத்
துணிகதிர்ப்பரசுராம னிராமனைநோக்கிச்சொல்வான். (ககo)

பாற்றினஞ்சுழலுஞ்சூலப் படையினோனளித்தவில்லை
ஆற்றல்கொலிறுத்ததென்ன வணிமணிமுறுவல்கோட்டி
ஏற்றுதியிந்தவில்லென் றளித்தலுமிமைப்பினேற்றிக்
கூற்றுறழ்பகழிக்கென்கொ லிலக்குநீகூறுகென்றான். (கக்க)

ஈட்டியதவங்கள்யாவு மெய்துகொன்றிடுதியென்னப்
பூட்டியபகழியொன்றாற் பொன்னகர்ப்புகவுமாற்றி
வாட்டிறலிளையரோடு மன்னெடுஞ்சிலையிராமன்
சேட்டிளம்பரிதிதாழு மணிமதிலயோத்திசேர்ந்தான். (ககஉ)

இராமனவதரித்தவத்தியாயம் முற்றிற்று.

உ-ஆவது. இராமன் வனம்புகுந்த வத்தியாயம்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நாகிளங்கமுகின் மிடறுகொப்புளிக்கு நறவுபாய்வயல்விளிம்புடுத்த
கேகயத்தரசற்காணியவிருப்பிற் பரதனுமிளவலுங்கிளர்ந்த
ஓகையினடைந்தகாலையினைன் றுதிரமுண்டேன்சுவைத்தொளிரும்
வாகைவேலரசன்சுமந்திரன்முதலா மந்திரத்தலைவரோடுரைப்பான். (க)

கற்பகக்கானத்தரசுவீற்றிருக்குங் கடவுளுமேக்கறவெய்தப்
பற்பலகாலமுலகெலாமளித்தே னினியொளிர் பருமணிமௌலி
அற்பினினிராமற்கணிபெறச்சூட்டி யகனிலமவனடிபடுத்தி
ஏற்பெழுந்துடலமுணங்கமாதவத்தி னிருப்பதென்கருத்தெனவிசைத்தான்

காந்தெரிகவிழ்க்குங்கடகரீன்முன்கைக் காவலன்மொழியெதிர் விரும்பி
ஆய்ந்தநூற்கேள்விவசிட்டனைமுதலோ ரிராமனுக்காங்கதுவிளம்பி
வந்தெழினகரம்புனைகெனமுரச மியமபொலிகேட்டலுங்கூனி
பாந்தள்வாய்ப்படுத்தபறவையிற்பதைத்துக் கேகயன்பாவைபாலடைந்தாள்

மாற்றவண்மைந்தன்மணிமுடிபுனைந்துமாநிலம்புரக்கநின்மைந்தன்
ஏற்றுணவருந்தியிழிவுறுதிராமற் கெரிமணிமௌலிசூட்டிடுதல்
பாற்றினஞ்சுழலுமபரிதிவேலரசற் குணாதநீவிலக்கெனப்பணிப்ப [பாள்
வேற்றடங்கண்ணிமன்னவனுழைப்போய் முனிவொடுமென்மெலவுரைப்

முன்னநீதருவலென்றநல்வரங்க ளிரண்டுமீண்டுதவெனமொழிய
என்னுயிர்தருதியென்கினுமளிப்பன் கேட்கெனவிருநிலமுழுதும்
பன்னருஞ்சிறப்பிறபரதனுக்களிப்ப தொருவரமீரேழுபருவம்
பொன்முடிதுறந்துகானிடையிராமன் போவதோவரமெனப்புகன்றாள்.

முரசொலிகேட்டவசுணமென்புள்ளின் மூச்சவிந்தொருவழிதேறிப்
பரதனுக்குலகமளிப்பனென்மைந்தன் படர்வனம்புகாதளித்திடுகென்
றரசர்கோனிரப்பமறுத்தலுமெய்ம்மை யாவியிற்சிறந்ததென்றளித்துப்
பொருசிலையிராமன்றனைத்தருகென்னச் சுமந்திரனொடுந்தனிப்புகன்றான்.

மைம்முகில்கமலக்காடுபூத்தனைய மணிநிறவண்ணன்முன்னெய்திக்
கைம்மலர்குவித்துச்சுமந்திரனழைப்பக் கலினமான்றேரினிதிவர்ந்து
தெம்முனைகடந்தசினவுவேற்காளை தயரதன்மருங்குசென்றெய்தி, [னனால்.
எம்மையாளுடையாயழைத்ததேனென்ன விறையனெஞ்சயர்ந்துசோர்ந்த

கல்லும்வல்லிரும்பும்வெண்ணெயென்றுரைப்பக் காழ்படுமனத்தகைகேசி
மல்லடுதிணிதோட்பரதனுக்குலகம் வழங்கினீயேழிருபருவம்
கொலபுலிவழங்குகானிடைத்திரியக் கூறினனுந்தையென்றுரைப்ப
வில்விழுங்குயர்தோட்செம்மணிபணித்தவிலக்கலனெனத்தொழுதகன்றான்

கோசலையுறையுங்கோயிலுளெய்திக் கொற்றவன்பணியுரைத்துள்ளம்
மாசறத்தேற்றிச்சுமித்திரையோடு மன்னுழைப்போகெனக்கூறிப்
பூசல்வண்டறைதாரிளையவனோடும் புரிசரம்பிராங்குரிங்குசலைத்
தேசுகண்படுக்குஞ்சீதைபின்றொடரத் தயரதன்மருங்குசென்றடைந்தான்.

தயரதன்வருத்தநோக்கியுள்ளழிந்து சுமந்திரன்றளர்வொடுமொழ்கி
அயர்வொடுங்கலுழ்ந்துகொடியகைகேசி முகத்தினைநோக்கியீதுறைவான்
செயிரறுகடவுண்முனிவனல்லருளாற் றிருவளர்கேகயத்தரசன் [ருநாள்.
உயிருடையெவற்றின்பாடையுமுணர்ந்தாங் கொழுகுநாடன்னின்பற்றொ

மற்றடந்தோளான்மனைவியோடினிதின் வைகியமலரணைப்புறத்தில், சிற்றெறும்பொழுங்கிற்சேறலுமரசன் சேவடிகடக்கரிதென்ன, உற்றயன்மேவுமெறும்புமற்றயலோ ரெறும்புடன்வெகுண்டுரைத்திடுதல், கொற்றவேன்மன்னனுணர்ந்தனனகைப்பக்கோற்றொடிநகைத்ததென்னென்றாள்.(கக)

ஈங்கிதுநுவலின்முடியுமென்னாவி யியம்பலனென்னவுமறுத்துக்
கோங்கவிர்குழலாள்கூறுகென்றுரைத்து முனிதலுங்கோவடிவேலான்
தீங்குறுமுள்ளத்தரிவைதோணலந்திற் றீதுவேறின்றெனவிடுத்தான்
ஆங்கவளகட்டிறமோன்றியவுனக்கு மருளுறுமோவெனவறைந்தான். (௧௨)

மழையுறழ்தடக்கைத்தயரதன்மனைவாழ் மங்கையர்வயிறலைத்தேங்கி
அழுகுரலோதைகடையுகமுடிவி னார்கலியுடைந்தெனவொலிப்பக்
கழைசுழிதறுகட்கடாக்களிறனையான் காவலன்பணிதலைக்கொண்டு
குழைபொருதடங்கட்கொடியொடுமிளைய கோவொடும்வளநகர்கடந்தான்.

கொடிஞ்சிமான்றடந்தேர்சுமந்திரன்விடுப்பக் கோனகரழுதுபின்றொடரத்
தடந்திரைக்கரத்தானவமணிகொழிக்குங் கங்கையங்கரையினிற்சார்ந்து
தொடர்ந்துபின்செல்வோரறிவுறுவண்ணந் துன்றிருளிடைமறைந்தேகி
மடங்கலேறனையான்முனிவரருறையுஞ் சாலையின்மகிழ்வுடனடைந்தான்.

அலத்தகமருட்டிவருந்துயர்காவி னணிசொர்சீறடியணங்கோடும்
இலக்குவனோடுஞ்செல்வுழிப்போந்த குகனொடுந்தோழமையெய்தி
ஒலித்தடர்திரைநீர்க்கங்கையாறகன்று பரந்தவற்கண்டவனொருவிச்
சிலைத்தழும்பிருந்ததடம்புயத்தண்ணல் சித்திரகூடமெய்தினனால். (௧௫)

கோதைவேற்றடக்கைந்தயரதனுங்குச் சோசலைகேட்டியான்முன்னம்
ஏதமில்வேட்டமாடுவானெய்திக் கங்குலினிருடிதன்மகவைத்
தீதியல்விலங்கென்றெய்துவீழ்த்திடலுஞ் சிறுவனன்மொழியினைக்கேட்டுக்
காதலோடெடுத்துமற்றவன்றந்தை கைக்கொடுத்துள்ளவாறுரைத்தேன்.

மத்தரின்மயங்கிக்கண்ணிலாமுனிவ னிறந்திடுமைந்தனைத்தழுவிப்
புத்திரசோகத்திறத்திநீயென்னப் புலகயெழவெனைமுனிந்துரைத்துச்
சித்தமாழ்ந்துபன்னியோடெய்திச் சிறுவன்வெந்தழல்புகுந்தவிந்தார
வித்தகமுனிவன்சாபமீதென்ன விளம்பினனயருமெல்வையினில். (௧௭)

சித்திரகூடத்திராமனெய்தியது செப்பியசுமந்திரன்மொழியால்
அத்திறமரசன்மார்பகம்பிளப்ப விறத்தலுங்கனவுகண்டேங்கி
முத்தவெண்கவிகைப்பரதனுமொன்னா ருடைகமழ்குருதிவேற்றடக்கைச்
சத்துருக்கினனுங்கேகயமகன்று தண்புனலயோத்தியிலடைந்தார். (௧௮)

மற்றடந்திணிதோண்மைந்தர்கைகேசி மலரடிவணங்கினர்நிற்ப
உற்றவையனைத்துமாங்கவளுரைப்ப வுருமுவீழரவெனநடுங்கிப்
பெற்றவெங்கூற்றைமுனிந்துபோயரச னடியின்வீழ்ந்தழுதுபேதுறலும்
கற்றவர்தெருட்டத்தாதையைவேள்வித் தழலினிற்கடன்கழித்தனரால்.

களைகணாயுந்தையளித்தவிவ்வுலகங் காக்கெனவசிட்டனைமுதலோர்
தெளிவுறவுரைப்பமறுத்தனனாகிச் சித்திரகூடம்வந்தெய்தித்
தளையவிழ்கமலக்கண்ணனைவணங்கித் தந்தைவிண்ணடைந்தமைசாற்ற
உளமெலிவெய்திக்கலுழ்ந்துதன்றாதைக் குறுகடன்யாவையுங்கழித்தான்.

புரவுபூண்டுலகமளிப்பதுன்கடனிற் போற்றலென்கடனெனத்தொழுது
பரதன்வீழ்ந்திரப்பத்தழீஇக்கொடென்வாயமை பழுதுறுதீரொழுபருவம்
அரசனாயுலகமளித்திநீயென்னப் பணிந்தவன்பாதுகையிரண்டும்
எரிமணியிமைக்குமௌலியிறபுனைந்து நந்தியம்பதியிடையிருந்தான்.(உக)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சித்திரகூடநீங்கித் திசைமுகனனையகேண்மை
அத்திரியுறையுஞ்சாலை யடைந்தனரையன்பின்
கொத்தலர்மாலைசாந்தஞ் சானகிக்களிப்பக்கொண்டு
தத்துநீருவிச்சாரற் றண்டகாரணியஞ்சார்ந்தார். (உஉ)

கழைபொருதுகுத்தமுத்திற் கவையடிபெயர்ப்பமாழ்கி
உழையினமொதுங்குகானி னுறுதலுமுருமுச்சீற்றத்
தழலுமிழ்குருதிப்பேழ்வாய் விராதனாயிழையைவௌவ
நிழலுமிழ்வாளின்வீட்டி நிலத்திடைப்புதைத்திட்டாரால். (உங)

அங்கவனெழுந்துமுன்னான் றம்புருவரம்பைதன்னால்
பொங்குசீர்க்குமரனிட்ட சாபம்போக்கினையென்றேத்தித்
தங்குதன்பதியினேகச் சரபங்கன்றனக்குமீளாத்
தூங்கநன்முத்திநல்கித் தொன்னெறிசெல்லுமெல்லை. (உச)

பசுவின்றோன்மெய்யிற்போர்த்துப் பாய்புலிதிரியுமாபோல்
வசையறுமுனிவர்வேடந் தாங்கியும்வனத்திலுள்ள
நிசிசரர்க்கோறலென்கொ னீதியோவென்றுசீதை
வசிமுதற்படைகடாங்கில் வன்கண்மையடுக்குமன்றே. (உரு)

என்னவோர்காதையுண்டு கேட்டியெம்பெருமவென்னாத்
தன்னிருகைகள்கூப்பிச் சானகியுரைக்கலுற்றாள்
முன்னமோர்முனிவன்செய்த தவத்தினையழிக்கமுன்னிப்
பொன்னகர்க்கிறைவனோவாண் முனிகையிற்கொடுத்துப்போனான். (உசா)

மற்றதுகாத்தல்வேண்டி வைரவாள்கையிற்கொண்டு
நற்றவன்கொடிகள்வன்புன் மரங்குறைப்படுத்துப்பின்னர்
உற்றபல்விலங்கியாவுமொறுத்துவாள்பிடித்தவாற்றால்
பற்றுதீநரகிலெய்திப் பருவரலுழந்தானன்றே. (உஎ)

ஆதலால்வரிவிலேந்தி யரக்கரைமுனிந்துகோறல்
தீதெனவுரைப்பவையன் சீதைசொன்மகிழ்ந்துகேட்டு
மாதவர்தமக்குமுன்னம் வஞ்சினமுரைத்தவாற்றால்
பாதகர்க்கொல்லினன்மை பயந்திடும்பழியுறாதால். (உஅ)

அன்றியுமரசரோதி தரிப்பதேயறமதாகும்
மன்றலங்குழலாயென்ன வரிசிலையிராமன்கூறித்
துன்றருந்தவத்தின்மிக்க சுதீக்கணன்வழிமுன்காட்டத்
தென்றமிழ்முனிவன்சாலை யணித்தெனச்செல்லுமெல்லை. (உகூ)

சென்னெறியதனின்மற்றோர் தாமரைமடுவிற்றெய்வ
நன்முழவியம்பக்கேட்டு நண்ணுமோர்முனிவனோடு
மன்னுமீதென்கொலென்ன மறைபயின்மாண்டுகண்ணன்
என்னுநன்முனிவனீரு ளிருந்தவம்புரியுமெல்லை. (௩0)

வத்தருமுனிவன்செய்யு மிருந்தவமொழிப்பத்தெய்வக்
கூத்தியரைவர்தம்மை வயிரவாட்குரிசிலேவ
வேய்த்தடந்தோளாரெய்த முனியுளம்விழைந்துவாவி
நீத்தமோர்சாலையாகத் தவத்தினனிறுவியன்னோன். (௩௧)

தீங்கரும்பனுக்குஞ்செஞ்சொற் றெரிவையர்நலனுண்டாட
ஆங்கவர்சதியினோடு மமலையிம்முழக்கமென்ன
வாங்குவிற்றடந்தோளண்ணன் மற்றவைவிரும்பிக்கேட்டு
நீங்குழியிளவலோடு மிராகவனிகழ்த்தலுற்றான். (௩௨)

வில்வலன்றுணைவனுகும் வெய்யவாதாபிதன்னை
ஒல்லையிற்றகரதாக்கி யொறுத்தவூன்புழுக்கலாங்குப்
புல்லியமறையோர்க்கூட்டிப் போதுகென்றியம்பவெய்யோன்
வல்லையின்முனிவர்வீய வயிறுபோழ்ந்தேகுவானல். (௩௩)

செந்தமிழ்மணக்குஞ்செவ்வாய்க் குறுமுனிதனக்குத்தீயோன்
வெந்திறற்றம்பிதன்னை யின்னணம்விருந்துசெய்ய
அந்தமிலவலியோன்றன்னை யகட்டினுளறுத்தவெற்றி
மைந்துடைமுனிவன்சாலை யீதெனவழங்கலுற்றான். (௩௪)

தமிழ்முனி சாலையெய்தி யிறைஞ்சலுந்தவத்தின்மிக்கோன்
உமிழ்கதிர்வாளும்வில்லுந் தூணியுமுதவக்கொண்டாங்
கமையுறழ்தோளியோடு மையனுமிளையகோவும்
கமழலந்துறைசூழ்பஞ்ச வடியினிற்கடிதுசென்றார். (௩௫)

அவ்வழியெருவைமன்னன் சடாயுவந்தணுகலோடும்
செவ்விசேரிராமனோக்கி யாரைநீசெப்புகென்ன
எவ்வெலாத்திசையும்வென்ற தயரதன்றோழன்யானென்
கவ்வையின்மரபின்செய்தி கேளெனக்கழறலுற்றான். (௩௬)

ஆசறுதக்கனீன்ற வறுபதுமகளிர்தம்மில்
ஏசறுமெண்மர்தம்மைக் காசிபற்கீந்தானந்தப்
பாசிழைமகளிர்தம்மி லதிதிமுப்பான்முக்கோடி
தேசுறுமமரர்ப்பெற்றா டிதியித்தியனையீன்றாள். (௩௭)

தனுவயக்கிரீவற்றந்தாள் காளிகாளிகன்றனோடும்
புனிதமாநாகந்தந்தா டாமிரையென்னும்பூவை
செனிகிரவுஞ்சிபாசி திருதராட்டிரியினோடும்
கனிமொழிச்சுகியென்றோதுங் கன்னியர்தம்மைப்பெற்றாள். (௩௮)

பாசிபாசத்தையீன்றாள் செனிபருந்துவணமீன்றாள்
தேசுடைக்கிரௌஞ்சியென்பாள் கூகையைச்சிறப்பினீன்றாள்
ஆசறவுயர்ந்தசீர்த்தித் திருதராட்டிரிநல்லன்னம்
ஏசறுநேமிப்புள்ளும் கானனமிவற்றையீன்றாள். (௩௯)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சுகியெனவுரைப்பாணைகயினைத்தந்தா ணைகதொழும் விநதையைத்தந்
துகளறுகுரோதவசையரிமிருகி சுவேதைமாதங்கிசார்த்தூலி [தாள்
திகழ்தருசுரசைகத்துருசுரபி பத்திரமதையுடன்சிறப்பின்
வகைபடுமிருகமந்தையையீன்றாண் மிருகிநீணமிருகமீன்றனளே. (௪௦)

உரைத்திடுமிருகமந்தைவெங்கரடி சவரிமான்கவரிமானுயிர்த்தாள்
நிரைத்தசீர்ப்பத்திரமதையிராவதையை யீன்றனளிராவதைநிகரில்
வரைக்கிணையைராபதந்தினையீன்று ளரிகுரங்களித்தனண்மானம்
பரித்தசார்த்தூலிமந்தியோடழல்வாய்ப் பாய்புலிதன்னையீன்றனளே. (௪௧)

சொற்றமாதங்கிமாதங்கமுயிர்த்தாள் சுவேதைதிக்கயத்தினைப்பெற்றாள்
மற்றையசுரபிரோகிணியோடுந் திருவியைமகிழ்ந்தினிதளித்தாள்
உற்றகந்திருவிகுதிரையையுயிர்த்தா ளுரோகிணிபசுவினைப்பெற்றாள்
பற்றுறுசுரசைநாகங்களீன்றாள் கத்துருபன்னகமுயிர்த்தாள். (௪௨)

மனுவெனவுரைப்பாண்முகத்தினின் மார்பிற்றொடையினில்வழங்குறு காலில், புனிதமாமறையோர்வேந்தர்நல்வணிகர் பின்னவர்தமைப்பொறை யுயிர்த்தாள், அனலையென்றுரைப்பாடருக்களைப்பயந்தாள் விநதையென் பவளருணனையும், துனைவினிற்பறக்கும் புள்ளரசினையுந் துகளறவினிதி னீன்றனளால். (௪௩)

அருணனென்றுரைப்போ னருள்செய்சம்பாதி தன்னுடன்சடாயு வென்றுரைக்கும், எருவையின்வேந்தா மென்னையுமீன்று னெனமகிழ்ந்தி னிதெடுத்துரைத்து, வரிசிலையுழவநிற்புறங்காத்திங் கிருக்குவனென்றயல் வனத்தின், விரிசிறைப்பறவை யேகலுமிராமன் விழைவொடுமாங்கமர்ந்த னனால். (௪௪)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சென்றவணிருக்குமெல்லைச் சிலைத்தழும்பிருந்ததிணடோட்
குன்றினைநோக்கியாசை கூர்ந்துசூர்ப்பநகையென்னும்
வன்றிறலரக்கிபோந்து மானிடவுருவமெய்தி
இன்றெனைமருவியாவி தருகெனவிரந்துசொன்னாள். (௪௫)

அய்யனுமசதியாடிச் சின்மொழியறையுமெல்வைப்
பையரநுசுப்புச்செவ்வாய்ச் சீதைபாங்கெய்தநோக்கி
கையினலரக்கிவெளவ விளையவன்கண்டுகாதும்
வெய்யவண்மூக்குங்கொய்தான் கரனடிவீழ்ந்துசொன்னாள். (௪௬)

அவ்வுரைகேட்டலோடு மழலெழவுருத்துப்பொங்கித்
தெவ்வடுகரனும்விற்றூ டணனும்வேறதிரிசிராவும்
வெவ்வழற்குலமேந்தி விரிகடற்றுனையோடும்
எவ்வெலாத்திசையுஞ்சூழ்போந் திராமனையமரினேற்றூர். (சஎ)

ஏற்றவருடலம்புன்றே விறைச்சியென்பீருண்மூளை
வீற்றுவீற்றுகவீழ வெஞ்சிலைக்கல்விகாட்ட
ஊற்றிருந்தொழுகுங்கண்ணு ளிலங்கையினெல்லையெய்தி
ஆற்றலங்குருதியொள்வா ளிராவணற்கறியச்சொன்னுள். (சஅ)

கேட்டலுங்வெகுளியோடு காமமுங்கிளர்ந்துபொங்க
வாட்டிறலரக்கர்கோமான் மாமனல்லிருக்கையெய்தி
ஊட்டரக்குண்டசெவ்வா யொளடொடிச்சீதைகாணத்
தீட்டரும்படிவமாறுய்ச் செல்கெனமறுத்துச்சொல்வான். (சகூ)

மறையுருவாகமுன்னர் வாளெயிற்றரக்கர்மற்றுங்
இருவரோடிராமன்முன்ன ரெய்தலுமவன்கையம்பால்
பொருவருமென்றேடெய்து மிருவருமபொன்றல்செய்தார்
வெருவியான்மாயைதன்று லிலங்கையின்மேவினேறுல். (ரு0)

கத்துருமகவானுனே கறுப்பெனவிநதையென்னும்
மைத்தடங்கண்ணுள்வெள்ளை யென்றலுமைந்தர்செய்யும்
வித்தகச்சூழ்ச்சிதன்றுல் விநதையைத்தாசியாக்க
அத்தலைக்கலுழனன்னை யருஞ்சிறைநீக்கவெண்ணி. (ருக)

மேவிடுநெறியிலீராறி யோசனையகன்றமேனிப்
பாவடிக்களிறுமன்ன பரப்புறமாமையொன்றும்
சேவடியுகிரினள்ளிப் பழுமரஞ்சேர்தலோடும்
ஆவெனயாருமார்ப்ப வதன்பனையொடிந்ததன்றே. (ருஉ)

நூறியோசனையினுற்ற பணையினைநொய்திற்கௌவிச்
சேறலுமதனிற்சேரும் வாலகில்லியராந்தீதில்
ஆறறிமுனிவர்தம்மை மென்மெலவகற்றிவிணபோய்
ஊறமிரதெடுத்துத்தாயர்க் குதவிவன்சிறையுந்தீர்த்தான். (ருங)

ஆங்கவன்வதிந்தவாவிற் நீத்தலையாற்றுகின்ற
தீங்கறுதவத்திறநீரோ னென்றலுமரக்கன்சீறி
வீங்குதோட்கரனைக்கொன்ற தகம்பனன்விளம்புஞான்றும்
ஈங்குவந்துரைத்தேனன்று மறுத்திவைபோல்வசொன்னுய். (ருச)

எங்கைதன்செவியுமூக்கு மிகலின்றியறுத்தவெய்யோன்
மங்கையைவெளவமாறுய்ச் சென்றவண்மயககிடாயேல்
துங்கநீண்மௌலிகொய்வ னென்றலுந்துணுக்கமெய்தி
அங்கவன்முன்னமம்பொன் மானுருவமைந்துசென்றுன். (ருரு)

பொற்பிதிரோய்க்கும்புள்ளிப் பொறியிளமானைவௌவி
அற்பினிற்றருதியென்ன விராமனுக்கமிர்தச்செவ்வாய்க்
கற்பினுக்கரசிகூறத் தொடர்தலுங்கடிதினோட
விற்பழுத்துமிழும்வெய்ய கணையொன்றால்வீழ்த்தினானே. (ருசு)

வீழ்தருபொழுதிற்சீதா விலக்குவவென்றுவீழும்
ஆழ்துயர்மொழியைக்கேட்ட வணியிழையிளையகோவை
வாழியெங்கோமான்செய்தி கண்டிவண்வருதியென்னத்
தாழிருந்தடக்கையயன் றளாவொடுங்கடிதுபோனான். (ருஎ)

இருவருமகன்றவற்ற நோக்கியவிலங்கைவேந்தன்
அருமறைபறையுமுக்கோற் பகவனாயருகினெய்தத்
திருவனாளையன்வேள்வித் தீயினிலொளிப்பச்செந்தீ
மருவருமாயாசீதை வகுத்துமுன்விடுத்ததன்றே. (ருஅ)

சீதையென்றிலங்கைவேந்தன் செல்லியந்தடந்தேரேற்றிப்
போதலுஞ்சடாயுவெம்போர் புரியவொள்வாளில்வீழ்த்தி
மூதெயிலண்டகோளமுகடுயரிலங்கையெய்தி
மாதினையசோகசூழ லரக்கியர்மருங்குவைத்தான். (ருகூ)

ஈங்கிவைநிகழவெய்து மிலக்குவனிராமன்செய்ய
பூங்கழல்வணங்கியாங்க ணுற்றவைபுகலலோடும்
வாங்கியசிலையோன்சாலை மருவினனணங்கைக்காணா
தேங்கிவெய்துயிர்த்துமாழ்கி யெங்கணுந்துருவிப்போனான். (சுo)

அறைகழல்வீரரெய்து நெறியினிலமரர்கோமான்
சிறையரிவனாயின்வீழ்ந்த சடாயுவைத்திகைத்துநோக்கிப்
பெறலருங்கற்பிற்சீதைக் குற்றவைபேசுமெல்லை
மறிதலுமவற்குச்செந்தீக் கடன்கழித்தகன்றார்மன்னோ. (சுக)

நொச்சிமென்போதுவிள்ளு மிருளினுண்புனற்குச்செல்லும்
அச்சணங்கயில்வில்லேந்து மிலக்குவனயோமுகிப்பேர்
நச்செயிற்றரக்கிமூக்கு நாக்கொடுங்கொய்தபின்னர்க்
கச்சமால்களிறுபோல்வார் கவந்தன்வாழ்ககரம்புக்கார். (சுஉ)

மையன்மால்யானையாதி விலங்கெலாம்வயிற்றினூடு
கையரிக்கொண்டுபெய்யுங் கவந்தனைச்செகுப்பவன்னான்
மொய்கழலியக்கனாகி முறையினிற்பணிந்துபோற்றி
ஐயன்மீர்சவரிதன்பா லடைகெனவடைந்தாரன்றே. (சுஙு)

அருந்தவத்துணங்குமேனிச் சவரியுமடகுமூலம்
விருந்தளித்தண்ணல்கேட்டி விரிதலைமதங்கவெற்பில்
பொருந்தினன்சுக்கிரீவ னவனொடுநண்புபூண்டு
திருந்தலர்ச்செகுத்தியென்ன வுரைத்துநன்முத்திசேர்ந்தாள். (சுச)

கலிநிலைத்துறை.

மையகார்நிறவண்ணனு மிளவலுமணிதாழ்
ஐயதண்புனற்பம்பைமா நதிமருஙகுநமன்
பொய்யில்வாய்மைகேட் டளவளாயவனொடும்போந்து
செய்யதாமரைநாயகன் மதலைபாற்சேர்ந்தார். (௬௫)

தணிப்பருந்திறற் சுக்கிரீவனைத்தழல்சான் றுப்
பிணித்தவன்பினிற் பெட்பொடுந்தோழமைகொள்ள
வணக்குவெஞ்சிலை கொடுங்கணைவாலி மார்புருவப்
பணித்தியென்றலும் பங்கயக்கண்ணனோர் தனனால். (௬௬)

வாலிதிண்டிறலுரைக்குவன் மகிழ்ந்துகேட்கென்னச்
சீலமெய்தியசுக்கிரீவன் றெளிந்துரைப்பான்
ஆலமன்னமாயாவியென் றுரைத்திடுமவுணன்
காலனன்னவோர் வாலியைககடுஞ்சமர்க்கழைத்தான். (௬௭)

ஆங்கவன்றனைத் தொடர்ந்துபோய்ப் பாதலத்தணைந்து
வீங்குதோளுடை யவுணனதாருயிர்வீட்டி
ஈங்குறுமையி னிறந்தனனெனமனத்தெண்ணி
நீங்குபாதல மடைத்தியானெடுநகர்புகுந்தேன். (௬௮)

வாலியாருயிர் மறிந்தனனென்றெனக்கமைச்சர்
கோலநீண்முடி சூட்டலுங்கொடுந்தொழில்வாலி
காலினாற்பில மடைத்திடுங்கல்லினையுடைத்தென்
பாலடைந்தியா னிரப்பவும்பருவரல்விளைத்தான். (௬௯)

மந்தரத்தினைக் கடலினைமற்றெருழிற்கழைத்த
துந்துமிப்பெய ரரக்கனதாருயிர்தொலையா
உந்திமேலெடுத் தெறிதலுமதங்கனுற்றுறையும்
இந்தமாதவச் சாலையினெய்திவீழ்ந்ததுவே. (௭௦)

மதங்கமாமுனி யாங்கதுநோக்கியவ்வாலி
கதங்கொடீங்குறிற் கதிர்முடித்தலையொருநூறு
விதம்படத்தனித தெறிக்கெனவெகுண்டுரைத்தனனால்
அதிர்ந்துவாலியிங் கணைவுறானெனவிவணமர்ந்தேன். (௭௧)

துந்துபிப்பெய ரரக்கனதென்பிதுதனைவின்
அந்தரத்தெடுத் தெறிகெனவிரவிசேயறைய
மந்தரக்கிரியனையதை மணிவிரற்றலையால்
உந்தவையிரண் டியோசனையொல்லையேகியதே. (௭௨)

காழ்கொண்டோங்கி யெண்டிசையினுங்கவடுவிட்டுயர்ந்த
ஏழ்மராமர முருவிடவெய்கெனவிராமன்
தாழ்தடக்கையி னாற்றலந்தடஞ்சிலைகுனித்துப்
பாழிமாமர முருவிடவோர்கணைபணித்தான். (௭௩)

வில்விழுங்குதோ ளையனதாற்றலைவியந்து
கொல்சினத்தவா லியைககதிர்சேயறைகூவ
மல்விறலவ னிவன்வலிதொலைத்தலுமாழாந்
தொல்லைமீண்டஃ துரைத்தலுமிராகவனுரைப்பான். (எச)

வேறுகண்டில னுங்களையென்றுவில்வீரன்
ஊறுதேமலர்ப் பிணையலொன்றணிந்தமருடற்றச்
சேறியென்றலும் வாலியைச்சென்றுபோர்க்கழைப்ப
ஏறிரண்டெதிர்ந் தமர்புரிந்தாலெனவேற்றார். (எரு)

ஏற்றவெஞ்சமர் புரிதலுமிராமன்வில்வணக்கிப்
பாற்றினஞ்சுழன் றுன்னலர்நிணப்புலால்பருகி
ஊற்றிருந்துநெய்த் தோருமிழ்பகழியொன்றுகைப்பக்
கூற்றுமஞ்சுறும் வாலிதன்னுயிர்குடிததததுவே. (எசு)

பரிதிவானவன் மைந்தனவ்வுலகடிப்படுத்துப்
புரவுபூண்டிடப் பொழிகதிர்மணிமுடிபுனைநது
கருவிவான்பொழி சாலமாஙகொழிந்திடுகாறும்
அருவிதூங்குயர் பிரச்சிரவணமலையமாந்தார். (எஎ)

சிறந்தமல்லலந் திருவினாலிரவிசேய்நம்மை
மறந்தனன்கொலென் றிளவலைவிடுத்தலும்வணங்கி
அறங்கிடந்தொளிர் நெஞ்சினன்கிட்கிந்தையடைந்தாங்
குறைந்தவெய்யவன் மைந்தனுக்கியாவையுமுரைத்தான். (எஅ)

இரவிகாதல னிளவலோடி.ராமன்மாட்டெய்தி
விரைவின்வானரத் தலைவரைக்குணக்கினுமேற்கும்
பரவுமுத்தர திசையினும்பனிமொழியணங்கைத்
துருவியொல்லையின் மீள்கெனத்துனைவினின்விடுத்தான். (எகூ)

அஙகதனறறற சாமபவனலமனனறழையும
துங்கவெம்படைத் தலைவாசூழ்வரச்சுடராழி
மங்குலார்குழன் மடவரற்களிக்கெனவழங்கிச்
சிங்கவேறென வநுமனைத்தென்றிசைவிடுத்தான். (அ0)

நெடிபடுங்கொடுங் கானமும்வரைகளுநீந்திப
புடைகொள்வான்பில மருங்கினிலெய்தலும்போதந்
திடர்விளைத்திடு மவுணனையிராவணனென்ன
அடல்விளைத்தவ னுருயிரங்கதன்செகுத்தான். (அக)

அங்கதன்முத லாங்யவானரத்தலைவர்
சிங்கவேறெனப் பிலத்துவாரத்திடைச்சென்று
சங்குன்மேய்ந்தொளிர் கதிர்மணிக்குப்பைகால்விரிக்கும்
துங்கமாநக ரிடத்திலோர்தோகையைக்கண்டார். (அஉ)

கண்டவானர ருளமிறும்பூதுறக்கருதி
வண்டுபாட்டயர் வஷரிருஙகூந்தனியாளை
அண்டருர்நிகர் நகரம்யார்நகரரும்பவளம்
விண்டுகூறென மின்கொடிமென்மெலமிழற்றும். (அரு)

மயனெனுந்திற லவுணர்கோன்வரத்திறன்முன்னம்
வெயில்செய் பொன்னினிற்செய்திடும்விழுநகரீது
பயிலுமன்னவன் விசும்பிடைப்பனிமதிமுகததுக்
குயிலைவெளவியிக் கோநகரதனில்வீற்றிருந்தான். (அச)

அச்சணங்குவேல் மயனுடையாருயிர்மடிய
வச்சிரப்படை யெறிந்துவானவர்க்கிறையகலச்
செச்சையங்குழற் றிருநிகரோமைக்கந்நகரம்
பச்சைமாலுந்தி பூத்தவன்பரிவுடனளித்தான். (அரு)

தாமப்பூங்குழற் றண்ணிலாத்தரளவெண்முறுவல்
ஏமையென்பவ ளிந்நகரொன்வயினளித்துக்
காமர்வானுல கடைந்தனளென்றலுங்கவிகள்
தூமவோதியாஞ் சென்னெறிகாட்டெனத்தொழுத. (அகூ)

அஞ்சனப்புய றூதர்நீர்பிலமகன்றேகச்
செஞ்செவேவிழி புதைக்கெனச்செங்கையாற்புதைப்ப
விஞ்சையொன்றவ ளுரைத்தலும்வெம்பிலமகன்று
மஞ்சுகண்படு மகேந்திரவரையின்வந்தடைந்தார். (அஎ)

ஆங்கணெய்திய வங்கதன்முதலியவீரர்
கோங்குலாங்குழற் கொம்பினைக்கண்டிலமன்றி
வீங்குபோரிடைச் சடாயுவைப்போலவீந்திலமென்
றேங்குமாற்றங்கேட் டிருந்தசம்பாதியீதுரைப்பான். (அஅ)

எம்பிவீந்தமை கூறுமினென்னலுங்கவிகள்
நம்பிராகவ னன்மனைக்கிழத்தியையரக்கன்
வெம்புகாட்டிடை வெளவலுஞ்சடாயுமுன்விலக்கத்
தும்பைமோலியான் சுடர்மணிவாளினாற்றுணித்தான். (அகூ)

மாழைநோக்கியைக் கொண்டவனேகலும்வருந்திப்
பாழியம்புயத் திராகவன்பரிதிசேயோடும்
தோழமைக்கொடு வாலியைத்தொலைத்தரசளிப்ப
ஏழைபோமிட நாடுமென்றெங்களைவிடுத்தான். (கூ0)

என்னவோதலு மெருவைவேந்துளங்கசிந்துருகி
முன்னம்யானுமென் றம்பியுமொய்கதிருலகின்
மன்னுவான்பறந் திடுதலும்வருந்துமென்றம்பி
தன்னையென்னுடைச் சிறையினாற்றயாவொடுங்காத்தேன். (கூக)

வெய்யவன்கொடுங் கதிரினன்மென்சிறைகருகி
மையலோடுமிம் மகேந்திரவரையினில்வீழ்ந்து
பையுளுற்றன னெம்பியெவ்வுழிப்படர்ந்தனனோ
ஐயன்மீரஃ தறிந்திலனிவ்வுழியமர்ந்தேன். (கூஉ)

யான்பயந்தருள் சுபாரிசனுனெனக்களிப்பான்
வான்படர்ந்துயர் மகேந்திரவரையின்மேவுதலும்
ஊன்படர்ந்தவே லிராவணனேரணங்கோடு
கான்படர்ந்தன னேகலுங்கனன்றுபோய்ப்பிடித்தான். (கூங)

பொருந்தவெளவலு மிராவணன்புரந்தருள்கென்ன
வருந்திக்கூறலும் விடுத்திவண்வந்தவைபுகலத்
திருந்துமாதவர் சீதையுய்ந்தனளெனச்செப்பல்
பரிந்துகேட்டனன் பார்வைக்குந்தோன்றினனென்றான். (கூச)

முன்னிசாரங்க முனிவரனிராகவன்றூதர்
மன்னினின்சிறை மாண்புடன்முளைதிடுமென்னப்
பன்னினுனெனப் பகர்தலும்பண்டுபோற்சிறகர்
துன்னிநன்கினின் முளைந்திடாமனைத்துதித்தான். (கூரு)

சீதையாண்டுறை யிலங்கையுட்சேர்ந்தனளென்ன
ஓதிவீந்தவச் சடாயுவுக்கிருகைநீருகுத்துக்
காதல்கூர்தரும் வானரர்க்கினுனைகழறி
ஏதமற்றிடு மெருவைவேந்தேகினனன்றே. (கூசு)

துன்றுவார்சிறை யெருவைவேந்தேகலுந்துவன்றி
நின்றுவீரரு ணிறைந்தபேருவகையராகி
வென்றுமாருதி திரைக்கடல்கடக்கெனவிளம்பக்
குன்றின்மீதிவர் கோட்புலிப்போத்தெனவிவர்ந்தான். (கூஎ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம.

அங்கண்வானுலகணவுமா கேந்திரவரையினின்றநுமன்
திங்கணீண்முடியுரிஞ்சச் செல்வுழிமகபதியொறுப்ப
மங்குல்சேர்வழிநீரினுண் மறைந்தமைஞ்ஞாகமென்னுமையில்
தங்கியேகெனவதனைத் தடகையிறறடவந்துபோனுன். (கூஅ)

திரைசெய்தெண்கடன் முகட்டிற்கனுழனிற்செல்லுமாருதியைச்
சுரசையென்பவடடுப்பத் தன்னுடைப்பேருடல்சுருக்கி
விரைவின்வாய்வழிப்போகி மெய்ந்திழல்வெளவுபேரரக்கி
குருதிவாயிடைப்புகுந்து குடற்பறித்திலங்கையிற்குதித்தான் (கூகூ)

கன்னிமூதெயினுடுத்தகடிநகரிலங்கைகாத்தோம்பும்
மின்னுநக்கவாளெயிற்ற வணங்கின்வெங்கொடிற்றினிற்றக்கி
அன்னமாநகர்முழுது மங்கையிற்கனியெனநோக்கி
வன்னமேகலையணங்கைக் காண்கிலனுய்வருந்துற்றான். (கoo)

திங்களின்வடிம்பிடறு சிலைமலரசோகநன்னிழலின்
மங்குலூடொளியெறிக்கு மாசுபூத்தமென்கொடிபோல்
வெங்கண்வாளெயிற்றகல்வா யரக்கியர்மருங்குவீற்றிருக்கும்
நங்கைவாண்முகநோக்கி நன்னுதற்சீதையென்றுணர்ந்தான். (௧௦௧)

அன்னகாலையினெய்தி யரக்கர்கோனிரப்பவுமறுத்த
கன்னிமாதவக்கொழுந்தின் கற்புடைமாட்சிமைநோக்கித்
துன்னுகங்குலின்யாருந் துயில்வுழியாழிகைக்கொடுத்துப்
பொன்னின்வார்சிலைக்குரிசில் புகன்றவையாவையும்புகன்றான். (௧௦௨)

ஆங்குநின்றெழுந்தநும னுடைகப்பசுந்தளிரீன்ற
தேங்கொணுண்மலர்பொதுளுஞ் சோலைகள்யாவையுஞ்சிதைப்ப
வீங்குதோளினால்வல்லர் கிங்கரர்வெஞ்சமருடற்ற
ஓங்கலன்னதோள்வலியா லன்னவராருயிரொறுத்தான். (௧௦௩)

கயிலைமால்வரையெடுத்தவன் பணித்தலுங்கடற்படைத்தலைவர்
அயிலெயிற்றவாளரக்கரை வருமமைச்சர்தம்மைந்தர்
வெயிலெறிக்கும்வாளுழவ ரெழுவரும்வெஞ்சமருடற்ற
உயிர்குடித்தவர்புண்ணினீ ரொழுகிடவுடல்பிழிந்தெறிந்தான். (௧௦௪)

மீட்டும்வாளெயிற்றரக்கன் விடுத்தருள்சம்புமாலியைத்தன்
தோட்டுணைப்பெருவலியாற் றொலைத்தலுமிலங்கையர்பெருமான்
பூட்டுவெஞ்சிலைக்குமர னக்கனைப்போர்க்கெதிர்விடுப்பச்
சேட்டிளங்களிறனையா னழலெழநிலத்தொடுந்தேய்த்தான். (௧௦௫)

வயிரவாட்படையுழவன் மறங்கெடவரிசிலைகுனிக்கப்
புயனிறந்தவெந்தழற்கணி ராவணியமர்க்கெதிர்புகுந்து
வெயிலெறித்தழல்கவிழ்க்கும் விரிஞ்சன்வெம்படையினில்வீக்கி
அயிலெயிற்றவாளரக்கன்முன்ன ரவ்வநுமனையுய்த்தான். (௧௦௬)

ஆரைநீயெனமுனிவுற வரக்கனைக்கிளையொடுமறுப்பான்
வீரவஞ்சினமுரைத்த வில்லிதன்றூதன்யானின்னே
சோர்வில்கற்புடையணங்கை விடாயெனி லுன்னுடறணியா
ஈருளுன்சுவைபேய்க்கு வழங்குமவ்விராகவன்பகழி. (௧௦௭)

என்றுமாருதியுரைப்ப விராவணனெளிதினிற்குரங்கைக்
கொன்றுநீக்குமினென்னலும் வீடணன்றூதனைக்கோறல்
வென்றியன்றெனவிலக்க வாலினில்வெண்டுகில்சுற்றி
மன்றவெங்கனல்கொளுத்தி வல்லையில்விடுக்கெனவுரைத்தான். (௧௦௮)

அன்னவாறுவெவ்வரக்கர் வாலிடையாரழல்கொளுத்தக்
கன்னிமூதெயிலுடுத்த கடிநகரிலங்கைதீயூட்டி
அன்னமேகலையணங்கைப் பணிந்துசூளாமணிவாங்கிப்
பின்னர்வெண்டிரைக்கடறாய் மகேந்திரத்தடைந்தனன்பெரியோன் (௧௦௯)

வாலிமைந்தனைத்தொழுது மாதினைக்கண்டமைவிளம்பிப்
பீலிமாமயிலகவுமது வனமழித்தனன்பெயர்ந்து
நீலமால்வரையனைய நெடியவன்சேவடிவணங்கிச்
சாலிமீன்பெருங்கற்பிற் றையலைக்கண்டமைபகர்ந்தான். (கக0)

பகர்ந்தமாருதிபின்னும் பரிவொடும்வேறிருந்தேந்தி
முகிழ்ந்தவெண்டளவநகை மொய்குழறருசுடர்மணியைப்
புகழ்ந்துநல்கலும்வாங்கிப் பொருப்புறழ்நடம்புயம்பணைப்ப
மகிழ்ந்துகண்மணிகுளிர்ப்ப நோக்கினன்வரிசிலையிராமன். (கசக)

ஒற்றையாழியந்தடந்தே ரூர்பவன்மைந்தன்முன்னடப்பக்
கொற்றவெஞ்சிலைக்குரிசில் குறுகலராருயிர்குடிக்கும்
வெற்றிவாளுடையிளவல் பின்வரவினைவினிற்போதந்
தெற்றுதெண்டிரைசுருட்டு மிரங்குநீர்க்கடற்கரையிறுத்தான். (ககஉ)

இராமன் வனம்புகுந்த வத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம :

கூர்மபுராணம்.

இதில் நிலைமொழியும் வருமொழியும் வடமொழிப் பெயர்கள் ; முன்னது பொருட்பெயர், பின்னது பண்புப்பெயராயினும்,பண்பாகுபெயராய், பழமையாகிய ஒழுக்கத்தை உணர்த்தலால் தொழிற்பெயர். கூர்மபுராணமென்பது ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர் ; விரிந்தால் கூர்மத்தினது புராணமெனவிரியும் ; அறுவது கபிலர்பாட்டு என்பது கபிலரால் செய்யப்பட்ட பாட்டு, கபிலர்மேல் செய்யப்பட்டபாட்டு என்னும் இருவகைச் செய்யுட் கிழமைகளில் முன்னதுபோன்ற செய்யுட் கிழமைப்பொருளது. இவ்வாறுவது கூர்மத்தினால் கூறப்பட்ட நூலென்னும் பொருளில்வந்தது. இந்நூல் முதனூலால் பெயர் பெற்றது. புராணம்-சர்க்கம், பிரதிசர்க்கம், வமிசம், மநுவந்தரம், வமிசாநுசரிதம் என்னும் ஐந்துவகையிலக்கணமுடையது. இவ்வாசிரியர்.

தோற்றமுலகமீண்டொடுங்க றுகடீர்மனுவந்தரமுனிவர்
ஆற்றலரசர்மரபவர்தஞ் சரிதமென்னுமோரைந்தும்
சாற்றுபுராணவிலக்கணமென் றறிஞருரைப்பர்தவறின்றிப்
போற்றுபுராணம்பதினெட்டின் பெயருமுறையிற்புகலுவாம்.

எனக்கூறிய செய்யுளானு முணர்க.

சாககம - உலகம தோறறம ஒடுஙகல, பிரதிசாககம் முனிவா ஆற றல, வமிசம அரசாமரபு, வமிசாநுசரிதம அவாதஞ சரிதம என உரை ாக மநுவநதரம வேறு மநுஎனபது ஒரு மநுவினுடைய காலம எழுபத தொரு மகாயுகம் கொணடது, மகாயுகம கிரேதாயுகமுதலிய நானகுயுக ஙகொணடது

சாககம - பிரகிருதித தோறறமுரைதத அததியாயம், பிரதிசாககம்-தககன்மனைவியா வானவாமககளமுதலியோரைபபெறறது வமிசம - சூரியன மரபுரைததது, மநுவநதரம-மநுவநதரமுரைததது வமிசாநுசரிதம, ராமகிருஷ்ணுதி அவதாரமுரைததது முதலியவை இவவனைததும இநநூலுள இருபபனகாணக

இராமனவதரித்த வத்தியாயம்

இராமன - அடியாரது மனததில மகிழபவன, தனனைககாணபோா யாயவரையும மகிழவிடபவன எனனும பொருளமைாத வடமொழி அனைபாடபடாககைபபெயா, அசரித அவதாரமெனனும வடமொழிப பெயரடியாகப பிறநத இறநதகாலப பெயரெசசம, அததியாயம (படிககபபடுவது) நானமுடிபை உணாததும பெயாஎன மூனறுசொல இரணடு சநதியாய நினற இடதொடாமொழி அரவணைசசெலவன எனபதுபோல இவ வததியாயததுககுக காரணப பெயராயிறறு இரணடு சநதியாடின முன்னது எழுவாயத தொகாநிலைததொட பினனது காரியப பொருடடாகிய பெயரெசசத தொகாநிலைததொடா எனக இனிவரும அததியாயஙகளுககும இவவாறே எநருமாறுணாகக

1 இதன்பதப பொருள எனறும=எனறு சொலலுதலும, வெள் மதிக கணணி=வெளளிய சநதிரமாலை யணிநத, இறைவன,-சிவனது, பாதம-பாதஙகளை, இனிது எததும- இனிமையாகத துதிககினற, இராமன= இராமனது, இடறசரிதையாவும - இயறகையாகிய சரிததிரம முறறும, மனற-நிசசயமாக, விரிதது உரைததினன - விரிவாகசசொல எனறு, மக தி வீணை - மகதியெனனும வீணையைத தாஙகிய, வானமுனியும் - உயாநதநாரதமுனிவனும, உய குடுமி - உயாநத சிகரம, வானமதேயககும - மேகததைததேயச செயகினற, குனறின - மலைகளினது, இருசிறகுஅரிநத - பெரியசிறகுகளை வெடடிய, ஒள - ஒளிதஙகிய, வயிரவாள - வசசிராயுதததையேநதிய, குரிசிலும - தேவராசனும, கேடடலும, கேட்குதலும, மகிழ்நது- களிதது, குழைவிஞமெ - மனஉருககததோடும், கன்று - பசுவின கனறு, குணிலா-குறுநதடியாக, விளவினகனிகா - விளாஙகனிகளை, வீழததும-விழசசெயயும, காயாமபூவணணன - காயாமபூவையொதத மேனியையுடைய கணணன், இவைகழறும - இவறறைச சொலலுவான் எனறவாறு

ஒவ்வொரு காலத்தில் பாற்கடல் கடையுந்தோறும் உதிக்கின்ற ஒரு கலைச் சந்திரனை எடுத்துத் தான் மாலையாக அணிந்து கொள்ளுதலின் மதிக்கண்ணி இறைவனென்றார். குன்றின் சிறகரிந்தசெய்தி. மலைகள் அசுரர்களுக்கும் இராட்சதர்களுக்கு மிடம்கொடுத்து பறந்து இறங்குகின்ற ஊர்களிலுள்ள உயிர்கள்மாய்தலைக் கண்டு இந்திரன் மலைகளின் சிறகை அரிந்தனனென்பது. கன்றால் விளாவின் கனிஉகுத்தசெய்தி- கஞ்சனால் அனுப்பப்பட்ட வற்சாசுரன் கன்றுருக்கொண்டு கண்ணன் பசுமேய்க்கையில் அவனைப்பாய எத்தினித்தபோது அஃதுணர்ந்து கண்ணன் அக்கன்றின்பின்னங் கால்களைப் பிடித்து விளாமரத்தி லறைந்தனனென்பது. என்றலும், கேட்டலும், இறந்தகால வினையெச்சங்கள். என்-பகுதி, து, அல்-சாரியை, உம் இறந்தகால வினையெச்சவிகுதி, தகரம் றகரமானதும், உகரக்கேடும் சந்தி. யாவும்+என்பதில் யா எஞ்சாமைப் பொருளது. உம்மை முற்றும்மை யாதலின். மன்ற - தேற்றப்பொருள்தரும் இடைச்சொல். உரைத்தி - ஏவலொருமை வினை. உரை-பகுதி, த்-சந்தி, து - சாரியை, இ-ஏவலொருமை எதிர்கால விகுதி. வானம்-இடவாகுபெயர். வயிரவாள் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர். ஒடு என்னும் மூன்றனுருபைச் சார்ந்த உம் சாரியை. குனிலா என்பதின் ாற்றின் அகரவினையெச்ச விகுதியும், குச்சாரியையும் தொகுக்கப்பட்டன. இது முதலிய இரண்டு செய்யுளும் முதற்சீரிரண்டும், ஐந்தும், ஆறும் காயிறுதிச்சீரும், மற்றசீர் நான்கும் மாவிறுதிச்சீரும் பெற்ற அடிகள் நான்காலமைந்தன ஆதலால் எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தமெனப்படும்.

2. (இ-ள்.) விராய - கலந்துள்ள, மலர்ப்பூங்குழலி-மலர்களையணிந்த பொலிவாகிய கூந்தலையுடைய உமையவளை, பங்கன்-ஓர்பாகத்திலுள்ள சிவனது,-மகிழ்வின் ஓங்கும் - களிப்பினால் உயர்கின்ற, வெள்ளிமலைக் கீழ் கிடந்து-வெள்ளிமலையின் கீழ்தங்கி, விளரிபாடும் இசையைப்பாடிய, இராவணனுக்கு - இராவணன் செய்யும் உபத்திரவத்துக்கு, ஆற்றலமென்று - பொறுக்கமாட்டோமென்று, இமையோர் - தேவர்களும், சித்தர் - சித்தர்களும், இயக்கர் - யட்சர்களும், முனிவரர் - முனிசிரேஷ்டர்களும், எறிதிரை - வீசுகின்ற அலைகளையுடைய, நீராடை - கடலாகிய ஆடையையணிந்த, தராதலம்எழும் - ஏழுதீவுகளையும், புரக்கும் - காக்கின்ற, அரசரோடும்-அரசர்களோடும், சதுர்முகத்தோன் - பிரமன், பாற்கடலிற் சார்ந்து-பாற்கடலிலே சேர்ந்து, போற்ற-வணக்கஞ்செய்ய, காரம் - முதலை, மறிய - விழுந்திறப்ப, நேமி - சக்கரத்தை, பணித்து - கட்டளையிட்டு, வேழம்-கஜேந்திரனை, காத்தருளும் - காத்த, திரு-இலக்குமியையுடைய, நெடுமால்-பெரியவிஷ்ணு, கழறலுற்றான்.-சொல்லத்தொடங்கினான். எ-று.

விராய - இறந்தகாலப் பெயரொச்சம். விரா - பகுதி, ய்-இறந்தகால இடைநிலை, அ-பெயரொச்சவிகுதி, குழலி - பெண்பாற் படர்க்கைப்பெயர்.

பெண்பாற் படர்க்கைப் பெயர், குழல்-பகுதி, இ-பெண்பாற் படர்க்கை விகுதி. வில்லியென ஆண்பாலிலும், பொன்னியென ஒன்றன்பாலிலும், இகரவிகுதி வரும். பொன்னி-காவேரி. மகிழ்வின் ஓங்கும என்னும் வினைக்கு வினைமுதல் வெள்ளிமலை. பங்கன்மலை-பொருட் பிறிதின்கிழமைப்பொருளதாகிய ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.

3. (இ-ள்.) வாலிதின் - தெளிவாக, கேண்மின் என்று - கேளுங்கோளென்று, என்வடிவம் - என் உருவம், ஓர் நான்கூறுஆய்-ஒருநான்கு அமிசமாகி, சால்வுஉறும்-நிறைவுள்ள, உலகம்காக்கும் - பூமியிலுள்ளாரைக் காக்கின்ற, தயரதன் புதல்வர்ஆகி - தசரதசக்கரவர்த்திக்குப் புத்திரர்களாய், ஞாலமீது - பூமியில், உதிப்பம் - அவதரிப்போம், நீவிர் - நீங்கள், நனிமலர் - மிக்கமலர்களையுடைய, கானின் - காட்டிலும், வெற்பின்-மலையிலும், பால்படு - பகுப்புண்டாகிய, குரங்கொடு - குரங்குகளும், எண்கு - கரடிகளும், ஆய்- ஆக, வருக என - பிறக்கக்கடவிரென்று, பணிந்தல்செய்தான் - கட்டளையிட்டான். எ.று.

வாலிது பண்படியாகப்பிறந்த ஒன்றன் படர்க்கைப்பெயர் ; வால்-(தூய்மை) பகுதி, இ சாரியை, து ஒன்றன் படர்க்கை விகுதி ; இன் ஏழாம்வேற்றுமையுருபு. தெளிவாக என்பது ஐயம், திரிபு, பேதைமையில்லாமலென்றபடி. தயரதன் சக்கரவர்த்தியாதலால், அவனுளுகைக் குட்பட்ட பூமியைச் சால்வுறும் உலகென்றார். உதிப்பம் தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று. உதி பகுதி, ப் சந்தி, ப் எதிர்கால இடைநிலை, அம் தன்மைப் பன்மை விகுதி ; தனித்தன்மைப் பன்மையில்லையாதலால் இப்பன்மையை உயர்வுபற்றிவந்த வழுவமைதியென்க. உலகம் இடவாகுபெயர் ; வடமொழியாயின் உலோகமென வருமென்பர் நச்சினார்க்கினியர். பகுப்பாவன செம்முகக்குரங்கு, கருமுகுரங்கு, முசுமுதலியவை. இது முதலிய நாற்பது செய்யுளும், முதற்சீரும், நான்காஞ்சீரும் விளவிறதிச் சீராகவும், மற்ற நான்குசீரும் மாவிறுதிச் சீராகவும்வந்த அடி நான்காலமைந்தன ஆதலால் அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்த மெனப்படும்.

4. (இ-ள்.) பண்ணவர் - தேவர்கள், எவரும் - எல்லாரும், அவ்வாறு-அந்தப்படி, உதித்தனர் - பிறந்தார்கள், பரிதி - சூரியனை, ஓட்டி - அப்புறப்படுத்தி, கண்வழுக்குறு - (பார்ப்பவர்களுடைய) கண்கள் மழுங்குகின்ற, செம்சோதி - சிவந்த ஒளியை வீசுகின்ற, கதிர்மணி - கிரணங்களையுடைய இரத்தினங்களால், முகடு - மேலிடத்தை, வேய்ந்த - அணிந்த, அண்ணல் - உயர்வாகிய, அம் - அழகிய, குடுமி-சிகரங்களையுடைய, மாடம்-வீடுகளை, உடுத்து - சூழப்பெற்று, உயர்-உயர்ந்த, அயோத்திவேந்தன் - அயோத்திமாநகரத்து அரசன், புண்ணியம் - நல்வினையின்பயனாகிய, புதல்வர் இன்றி - புத்திரர் இல்லாமல், புலம்பொடும் - புலம்புதலோடு, இருந்தான்-இருந்தனன். எ-று.

புலம்பொடு மிருத்தலாவது—வந்த முனிவர்களிடத்தி லெல்லாம் இரங்கிச் சொல்லுதல். பரிதி - பண்பாகுபெயர். ஓட்டுதலாவது - தன்உயர த்தைக் கடக்கமாட்டாமல் சூரியன் விலகிச்செல்லுதலும், தன்னுடைய இய ற்கையான ஒளியால் சூரியனொளி வேண்டாமையும் பற்றியென்க: அண் ணலங்குடுமி என்பதில் அம் சாரியையெனினு மொக்கும்.

5. (இ-ள்.) வெளிது - அறியாமையை, எறிந்து - வீசி, அகன்ற-வி சாலமாகிய, கேள்வி - நூற்கேள்வியையுடைய, சுமந்திரன் - சுமந்திரனெ ன்னும்மந்திரியா தலைவன், வேந்தை நோக்கி - தசரதனைப் பார்த்து, ஒளி றுவேல் - பிரகாசிக்கின்ற வேலைத்தாங்கிய, உரோமபாதன் - உரோமபாத னென்னு மரசன், காத்திடும - அரசுசெய்கின்ற, உலகம்யாவும் - தேசம்மு ழுமையும், துளிமுகில் - மழையைத் தூவுகின்றமேகம, விளாப்ப - வெளு த்துத்தோன்ற, ஞானத்துறை - ஞானவழியில, படி-படிகின்ற, கலைக்கோ ட்டு அண்ணல் - முகத்தில் மான்கொம்பையுடைய பெரியமுனிவன், அளி யுடன் - கருணையோடு, எய்தின் - இங்கு வந்தால், வானம் பொழியுமென் று - மேகம் மழைபெய்யும என்று, அமைச்சா சொன்னார் - மந்திரியா சொன்னான். எ-று.

வெளிது பண்படியாகப் பிறந்த ஒன்றன் படர்க்கைப் பெயர். வெண்மை பகுதி, மை யீறு கெட்டது சந்தி, இகரச்சாரியை, து ஒன் றன் படாக்கை விகுதி. இங்கு வெண்மை அறியாமையின் மேலது. வேந் து பண்பாகுபெயா. காத்திடும் நிகழ்காலப் பெயரெச்சம. கா பகுதி, த் சந்தி, து சாரியை, இடு பகுதிப்பொருள் விகுதி, உகரகேடு சந்தி, அனைத் துமொரு பகுதி; உம் நிகழகாலப் பெயரொச்ச விகுதி. இங்கு உலகமென் றது தேசத்தை. யாவும் என்பதில் உபமை முற்றும்மை யாதலால் யா, எஞ்சாமைப் பொருளது. உடுத்து இறந்தகால வினையெச்சம் உடு பகு தி, த் சந்தி; த் இறந்தகால இடைநிலை; உகரம் வினையெச்ச விகுதி, புத ல்வரின்றி எழுவாய்த் தொகாநிலைத் தொடராகவும், இரண்டாம் வேற்று மைத் தொகைநிலைத் தொடாாகவும கொள்ளக் கிடந்தது.

6. (இ ள்.) அறைதலும் - இப்படிச்சொல்லுதலும், உருவம் - அழ கிய, வாள்கண் - வாள்போலும் கணகளையுடைய, அந்நலார் - அழகிய நல் லுருவமுடைய வேசையர்கள், வேந்தன் ஏவ- அரசன் ஏவியதினால், மறை பயில் - வேதங்களில் பழகுகின்ற, முனிபால் - கலைக்கோட்டுமுனிவனிட த்தில், போகி-போய், மார்பினில்-மாாபினிடத்து, கோடு - விலங்கின்கொ ம்புகள், பூத்த - உண்டாகிய, செறிதவம் - மிகுந்ததபந்தையுடைய, முனி வரோன - முனிவர்களென்று தம்மை நினைக்கும்படி, முனிவனை-கலைக்கோ ட்டுமுனிவனை, மயக்கம்செய்து- மயங்குதல் செய்து, ஆங்கு - அப்போது, இறை - உரோமபதனுடைய, நகர்தன்னில்-நகரத்தில், உய்ப்ப - கொண்டு வந்துவிட, இருபுயல் - பெரிய மேகம், பொழிந்தது - மழைசொரிந்தது.

ஏவ காரணப்பொருட்டாகிய செய என் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம், போகி-என்னும் வினையைக்கொண்டது. போகி இறந்தகாலவினையெச்சம். குச் சாரியைபெற்ற, போகு பகுதி, உகரத்தின் திரிபாகிய 'இ' விகுதி, உகரக்கேடு சந்தி. 'போகு' என்பதை, இயற்கைப் பகுதி யென்பாருமுளர். 'துளிமுகில்'-துளிக்கின்ற, துளித்த, துளிக்கும் என்று விரித்துவினைத்தொகையாகக் கொள்ளுதலேயன்றி 'துளியையுடையமுகில்' என இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனும் உடன் தொக்க தொகையாகவும் கொள்ளலாம். அண்ணல் - பண்பாகுபெயர். உய்ப்ப காரணப்பொருட்டாகிய இறந்தகாலச் செயவெனெச்சம்; இது பொழிந்ததென்னும் வினைகொண்டது.

7· (இ-ள்.) வேந்தர்கோன் - அரசர்க்கரசனாகிய உரோமபதன், மகிழ்ந்து-களித்து, தூய-பரிசுத்தமுடைய, மெய்த்தவமுனிவன் - உண்மையாகிய தவத்தையுடைய கலைக்கோட்டு முனிவன், வேட்ப - விவாகஞ்செய்துகொள்ளும்படி, சாந்தைஎன்று - சாந்தையென்று, உலகம் ஏத்தும்-உயர்ந்தோரால் துதிக்கப்படுகின்ற, தன்னுடை - தனது, புதல்விதன்னை - மகளை, ஈந்தனன் - கொடுத்தனன், முனியும் - அம்முனிவனும், ஆங்கண்-அவ்விடத்தில், இருந்தனன்-(தன் ஆச்சிரமத்துக்குப் போகாமல்) இருந்தான், அவன் ஈண்டு எய்தின் - அவன் இங்குவந்தால், ஈர்ந்தக உழவ - வாள்வீரனே, நீயும் - நீயும், நல்மக-நல்லபிள்ளையை, பெறுதிஎன்றான் - பெறுகின்றாயென்று சொல்லினான். எ-று.

சாந்தையென்பவள் தயரதனுடைய மகள்; தயரதனுக்கும்,உரோமபதனுக்கும் வேற்றுமையில்லாத நட்பினால், உரோமபதன் தசரதனை நோக்கி இப்பெண்ணைப் பெற்ற மகிழ்வைப் பெற்றாயாகலால் இவளைவளர்க்கும் சுகம் நான்பெறட்டுமென்று அழைத்துப்போய்த் தன்மனையில் வளர்த்தனனாதலால் விவாகம் செய்துகொடுப்பதில் சுதந்தரனாயினனென அறிக. வேட்ப காரியப்பொருட்டாகிய செயவென் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம்; வேள் பகுதி, ப் விரித்தல் விகாரம், அ எதிர்கால வினையெச்ச விகுதி, ளகரம் டகரமாதல் சந்தி; இம்முதனிலையின் அடியாக வேட்ட, வேட்கின்ற, வேட்கும் எனப் பெயரெச்சமும், வேட்டு, வேட்கின் எனவினையெச்சமும்பிறக்கும். உலகம் உயர்ந்தோரைத்தனக்குக்கண்ணாக உடைமையால் இடவாகு பெயராய் அவரை யுணர்த்திற்று. முனியுமென்ற உம்மை உயர்வு சிறப்புப் பொருளோடு ஒருபுடை எதிரதுதழீஇய எச்சவும்மை. நீயுமென்ற உம்மை இழிவுசிறப்புப் பொருளோடு ஒருபுடை இறந்ததுதழீஇய எச்சவும்மை. இழிவு சிறப்பாவது புத்திரனைப்பெறாமை, மக ஆண்பெ ணிரண்டுக்கும் பொதுவாயினும் இங்கு ஆண்பாலின் மேலது; இது ஈற்றில் உகரச்சாரியை பெற்று மகவு எனவழங்கும். பெறுதி முன்னிலைப்பன்மை நிகழ்கால வினைமுற்று; பெறுபகுதி, த் நிகழ்கால இடைநிலை, இ முன்னிலையொருமை விகுதி. எதிர்காலத்தை நிகழ்காலத்தால் கூறி

னது கலைக்கோட்டு முனிவன்வந்தால் பிள்ளைப்பே றுளதாகுமென்னும் து ணிவினால் வந்த காலவழுவமைதி.

8. (இ-ள்.) என உரைத்திடலும்-என்று(சுமந்திரன்)சொல்லுதலும், வேந்தன் - தயரதன், இமைப்பினில் - இமைக்குந்தொழில் நடக்குங்காலத்தில், உரோமபாதன் - உரோமபாதனது, தனிநகர்க்கு - ஒப்பற்றஅங்கதேசத்துக்கு, எய்தி - சேர்ந்து, ஆங்கு - அவ்விடத்தில், தவம்புரி - தவத்தைச் செய்துகொண்டிருக்கும், கலைகோட்டண்ணல் - கலைக்கோட்டையுடைய யுயர்ந்தோனாகிய, முனிவனைக்கொணர - முனிவனை உடன்கொண்டுவர, அன்னோன்-அம்முனிவன், பரிமகம் - அசுவமேதத்தை, முற்றி - நிறைவேற்றி, பின்னும்- அதன்மேலும், வினைநல்-தீயவினையில்லாத, புத்திரகாமேட்டி - புத்திரனைப்பெறும் விருப்பத்தால் செய்யும் யாகத்தை, மேதக (யாவரும்) விரும்பக்கூடியதாக, ஆற்றினான் - செய்தான். எ-று.

இமைப்பு இமைக்குந்தொழில் நடக்குங் காலத்துக் காயினமையால் முகத்தலளவை யாகுபெயர். கொணர செயவென் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம்; கொணு பகுதி, அ இறந்தகால வினையெச்சவிகுதி, ர் விரித்தல் விகாரம்; பரிமகம் முற்றுதற்குக் கொணர்தல் காரணமாதலறிக. முற்றி பிறவினையாகிய இறந்தகால வினையெச்சம்; முற்று பகுதி, வி பிறவினை விகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, உ வினையெச்சவிகுதி, இது விவ் விகுதி தொகுத்தலாய் நின்றது. மேதக மேவத்தக என்பதில் மேவன அகரவிகுதி தொகுந்தல் பெற்றது. புத்திரகாமேட்டி என்பதைப் புத்திரகாம இட்டி - எனப்பதம்பிரிக்க.

9. (இ-ள்.) ஆற்றிய-செய்த, தழலில்-யாகத்தீயில், தோன்றும்-பிறந்த, அவியினை - அன்னத்திரளையை, அணங்கு அனார்க்கு-தெய்வப்பெணணையொத்த தேவியர்களுக்கு, வீறு வீற்றாக - வெவ்வேறாக, நல்க - தயரதன்கொடுத்ததினால், கௌசலை-கௌசலாதேவி, விறல்கொள்வாலி - மிக்கவலியைப் பெற்ற வாலிக்கு, கூற்றினை - யமனாகிய சீராமனை, ஈன்றனள் - பெற்றாள், கைகேசி-கைகேசி, குணப்பெருங்கடலை - நற்குணத்தின் பெருங்கடலாகிய பரதனை, ஈன்றாள்-பெற்றாள், மாறுஇலா - மாறுதலில்லாத, இருவர்தம்மை - இலக்குமணனையும் சத்துருக்கினனையும், சுமித்திரை - சுமித்திரை என்பவள், வயிறுவாய்த்தாள் - கருக்கொண்டு பெற்றாள். எ-று.

அவி விண்ணோருணவு; யாகத்திற் பிறந்த அன்னத்திரளையாதலால் அதனை அவியென்றும், இராவணனை வாலிற் கட்டிச் சென்றவனாதலால் அவனைக் கொலைசெய்ததே சிறந்த வெற்றியென்னுங் கருத்தால் சீராமனை வாலிக் கூற்றுவனென்றும், தன்தாயால் தனக்குக் கிடைத்த அரசியலில் விருப்புநீக்கித் தன்னண்ணன் பெறவேண்டுமென்று சடைமுடிதாங்கி, மரவுரியுடுத்துச் சித்திரகூடஞ்சென்று தன்தமையனை நகரத்துக் கழைப்பச் சீராமன் மறுத்தகாலை பாதுகைகளைப் பெற்றுவந்து, சிங்காதனத்தில் வைத்

துச்சத்துருக்கினனை ராசகாரியம் பார்க்கும்படிகட்டளையிட்டுத் தானேகிக் கிராமஞ்சார்ந்து தென்திசையை நோக்கிக் கண்ணீர் பெருகவிட்டுக்கொண்டு காய்கனிகளை உண்டு அண்ணன் மீண்டுவருகிறவனையும அவ்வாறிருந்தமை பற்றிப் பரதனைக் குணப்பெருங்கடலென்றும், இலக்குமணனும், சத்துருக்கினனும் முறையே சிராமனிடத்தும், பரதனிடத்தும் ஒரு நாளும் மாறுபடலில்லாராதலால் மாற்றிலா விருவரென்றும் கூறினர். அணங்கு பரிசித்துயிர் கவரும் அழகுடைய தெய்வம். மாற்று தல் விகுதி புணர்ந்து கெட்டமாத்திரத்தில் மாறு மாற்றென விகாரப்பட்டமையால் முதனிலைதிரிந்த தொழிற்பெயரென்க. அண்ணனேவலால் அரசாட்சியைப் பரித்தவனென்பது பொருள் பரதனென்பது.

10. (இ-ள்.) இராமன்-இராமன், வேல்பரதன்-வேலைத்தாங்கியபரதன், தூய-சுத்தமுள்ள, இலக்குவன்-இலட்சுமணன், இயக்காவேந்தன்-யட்சர்களுக்கு அரசனாகியகுபேரன், பராவு - துதிக்கின்ற, சத்துருக்கன் - சத்துருக்கினன், என்ன - என்று, பழிப்புஅறு - நிந்தையில்லாத, நாமம்சாத்தி - பெயர்களிட்டு, தராதலம்முழுதும்-பூமிமுழுமையும், போற்ற - துதிசெய்ய, சௌளம்முதல்ஆக- சௌளகருமம்முதலாக, விராவு-(வைதிகத்தோடு) கலந்த, நற்கருமம்யாவும் - நல்லகருமங்களையெல்லாம், விழுமிதின் - சிறந்தவிதியில், வசிட்டன் செய்தான்-வசிட்டமுனிவன் செய்தான். எ-று.

தான்வருந்தும்படி செய்துகொண்டிருந்த லவணாசுரனை உயிர்க்கொலைபுரிந்த காரணத்தால் சத்துருக்கினனைக் குபேரன் துதிப்பானாயினன். பகைவர்களை அழிப்பவனென்பது. தூய பண்படியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; தூய்மை என்னும் முதனிலை, அகரப் பெயரெச்ச விகுதிப் புணர்ச்சியில் மை யீறுகெட்டது சந்தி. சௌளம் குடுமிவைக்குங் கருமம்; தராதலம் இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர், முழுது பண்புப்பெயர்; முழு பகுதி, து பகுதிப்பொருள் விகுதி; உம்மை முற்றும்மை. பராவு, விராவு என்னும் முதனிலைகள் பர விர என்பவற்றின் ஈற்று அகரம் ஆகாரமாய் நீட்டல்பெற்றன; உகரச்சாரியைபெற்று, பரவு பராவு, விரவு விராவு எனவரும், இங்கு இவ்விரண்டும் வினைத்தொகை வினைச்சொற்கள். விழுமிது பண்படியாகப் பிறந்த ஒன்றன் படர்க்கைப்பெயர்; விழுமம் பகுதி, து ஒன்றன்படர்க்கை விகுதி, அம்முகக்கேடு சந்தி, இ சாரியை, உகரக்கேடும் சந்தி. இலட்சுமணன் - கைங்கரியமாகிய செல்வமுடையான்.

11. (இ-ள்.) நறைகமழ் - தேன்மணக்கின்ற, அலங்கல்மாலை-அலங்கலாகிய மாலையணிந்த, நம்பியை முதலமைந்தர் - சிராமன் முதலாகிய புத்திரர், பிறைஎனவளரும் நாளில் - பிறைச்சந்திரன்போல வளர்கின்ற நாளில், கௌசிகன் - விசுவாமித்திரன், பெட்பினோடும் - அன்பினோடு,அறைகழல் - ஒலிக்கின்ற வீரகண்டைஅணிந்த, அவனிவேந்தர் - பூமியையாளுகின்ற அரசர்கள், நெருங்குபேர் அவையின் - நெருங்கியுள்ள பெரியசபையில், எய்தி - வர, இறையவன்-தசரதசக்கரவர்த்தி, போதந்து-(எதிர்)

வந்து, எத்தி-துதித்து, இருக்கஎன - வீற்றிருக்கக் கடவையென்று வேண்டினமையினால், இருந்துசொல்வான் - வீற்றிருந்து சொல்வான். எ-று.

அலங்கல் பூமாலைக்குத் தொழிலாகுபெயர்; அலங்கன்மாலை இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர். நம்பி யாவரும் விரும்பத்தக்கவன்; நம்பு (விருப்பு) பகுதி, இ ஆண்பாலொருமை விகுதி, உகரக்கேடு சந்தி, இது உரிச்சொலடியாகப் பிறந்த ஆண்பாற்பெயர்; தம்பி, நும்பி, எம்பிபோன்ற நம்பி பொருளடியாகப் பிறந்த முறைப்பெயர்: நாம் பகுதி, பி இளையவனென்னும் முறைப்பொருண்மை விகுதி, நா நவ்வானது குறுக்கல்விகாரம். பகுதி பன்மையினொருமை வந்த வழுவமைதி. நம்பியை என்பதில் ஐ சாரியை. நம்பி என்னும் பெயரோடு முதல் என்னும் குறிப்புப் பெயரெச்சத்தின் முதனிலை இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடராகப் புணர்ந்தது. முதல் பண்பாகுபெயராய்ச் சீராமனை உணர்த்தியது. முதல பொருளடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். பிறை தொழிலடியாகப் பிறந்த பெயர்; பிற பகுதி, ஐ வினை முதற்பொருண்மை விகுதி, பகுதியீற்று அகரக்கேடு கடைக்குறை: பிறத்தலுடையதென்பது பொருள். போதந்து இறந்தகால வினையெச்சம்; போ என்னும் படாக்கைக்குரிய முதனிலைத் தனிவினையோடு தன்மைக்குரிய தா என்னும் முதனிலைத் தனிவினை புணர்ந்த போதா பகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, உ வினையெச்ச விகுதி, சந்தித் தகரம் நகரமாதல் மெலித்தல்.

12. (இ-ள்.) அரக்கர் - இராட்சதர்களது, தீவினையால் - கொடுந்தொழிலால், வேள்வி ஆற்றலன் - யாகத்தைச் செய்யாதொழிந்தேன், இடையூறின்றி - இடையூறில்லாமல், புரப்பதற்கு - (யாகத்தை)காப்பதற்கு, உன்பால் உற்றேன் - உன்னிடம் வந்தேன், புதல்வனை - சிறந்தபுத்திரனாகிய சீராமனை, அளித்திஎன்ன - (என்னோடு) அனுப்பென்று, இரத்தலும் - பணிவாகக்கேட்குதலும், தயரதன் உள்ளம்மாழ்கி - தசரதன்மனம்மயங்கி, இராமன் என்னும் - சீராமனென்று சிறப்பித்துச் சொல்லப்படும், வரை - மலையை ஒத்த, தடவுத்தோளினானை - பெருந் தோள்களுடையானை, முனிபின் - இம் முனிவனுக்குப் பின்னே, போய்வருதி - போய்வா, என்றான் - என்று கட்டளையிட்டான். எ-று.

ஆற்றலன் தன்மை யொருமை எதிர்மறை வினைமுற்று: ஆற்றுபகுதி, அல் அத்தொழிலை மறுக்க வந்த எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்துமொரு பகுதி, அன் தன்மை யொருமை விகுதி. இடையூறு ஒரு சொல்லின் தன்மையது; இடையுறு பகுதி, தல் விகுதி புணர்ந்து கெட்டமாத்திரத்தில் இடையூறென நீட்டல் பெற்றது. ஊறெனத் தனிமொழியாகவும் வழங்கும். வரை மூங்கிலுக்குப் பண்பாகுபெயர்; அது தானியாகுபெயராய் மலையை உணர்த்தியது. போய்வருதி மங்கல வழக்கு. முனி இறைவனைச் சிந்தனை செய்பவன்.

13. (இ-ள்.) என்ன - (சக்கரவர்த்தி) என்றுசொல்ல, வெஞ்சிலை-வெவ்விய கோதண்டத்தைத் தாங்கிய, இராமன் - சீராமன், இலக்குவனோடும் - இலட்சுமணனோடும், யார்க்கும் - எவர்களுக்கும், பன்னரு-சொல்லுதலருமையாகிய, களிகொள்-களிப்பைக்கொள்ளுகின்ற, கேள்வி - கேள்வியாகிய, பழமறைக்கிழவன் பின்போய் - பழமறைகளுக்கு உரிமையையுடையவனாகிய விசுவாமித்திரனுக்குப் பின்னேசென்று, கொல் - கொல்லுந்தொழிலமைந்த, நுனை - கூர்மையாகிய, எயிறு - பற்களமைந்த, பேழ்வாய் - ஆழமாகிய வாயையுடைய, கோள்அரி - வலியமைந்த சிங்கங்கள், வழங்கும் - உலாவுகின்ற, கானின் - காட்டில், மன்னலும் - சேர்தலும், இரண்டுவிஞ்சை - இரண்டு வித்தைகளாகிய, மறை-மந்திரங்களை, அருளினான் - விசுவாமித்திரன் உபதேசித்தான். எ-று.

பன் - முதனிலைத் தொழிற்பெயர் எனக்கொள்ளுதலன்றி, செயவெனெச்சம் ஈறுதொகுத்தல் பெற்றதெனினும் ஒக்கும். கொல் முதனிலைத் தொழிற்பெயர் : விஞ்சைமறை - இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர். ஒடு-இசைநிறைப் பொருளது. ஓடும், ஒடும்-இரண்டு உம்மைகளும் சாரியை. இரணடு மந்திரங்களாவன:-பசியை ஓட்டுவதாகிய 'பலை' என்பதும், தாகத்தைப் போக்க, ஊக்கம், உடல்வலி முதலியவற்றைத் தரும் 'அதிபலை' என்பதும் ஆம்.

14. (இ ள்.) நெடிபடு - தீயுண்டாகின்ற, கானின்-காட்டில், ஏகு நெறியின் - போகும்வழியில், ஓர்சாலைநோக்கி - ஓராச்சிரமத்தை நோக்கி, விடலை - வீரனாகிய சீராமன், ஈதுஎன் - இவ்வாச்சிரமம்யாது, என்ன-என்றுகேட்க, கௌசிகன்-விசுவாமித்திரமுனிவன், விமலன்-சுத்தனாகிய சிவன், முன்னம் - முன்னாளில், ஒடிவுஅறு - (இடையில்) கெடுதலில்லாத, தவம்செய்காலை - தவத்தைச்செய்கின்ற காலத்தில், உடற்றிய - கோபம் பிறக்கச்செய்த, வில்-வில்லைத்தாங்கிய, வேள்-மன்மதனது, அங்கம் - உடலை, அடலையின் - சாம்பலாக, எரித்த - எரியச்செய்த, நாள்தொட்டு - நாள் தொடங்கி, அநங்கன் ஆச்சிரமம் அநங்காச்சிரமம், என்பார் - என்றுசொல்வார். எ-று.

ஞெகிழி என்பதன் - மரூஉ நெடி. கொல்அசை. உடற்றிய இறந்தகாலப் பெயரொச்சம் ; உடற்று பகுதி, இன் இறந்தகால இடைநிலை, அ பெயரொச்சவிகுதி, இடைநிலை ஈற்று னகரகேடு கடைக்குறை, யகரமெய் சந்தி ; இது செயப்படுபொருள் குன்றாத பிறவினை ; செயப்படுபொருள் சிவமூர்த்தி. உடன்றதன்வினை. அடலை தொழிலடியாகப் பிறந்தபெயர், அடு பகுதி, அல் சாரியை, ஐ செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. வேள் விருப்பம், அதனை உயிர்களுக் குண்டாக்குகின்றவனுக்குக் காரியவாகுபெயர். எரித்த நாள்முதல் அங்கமில்லாதவ னயினனாதலால் மன்மதனுக்கு அநங்கனெனப் பெயர்வழங்கும்.

15. (இ-ள்.) என்று - என்றுசொல்லி, அவண் நீங்கும்எல்லை - அவ்விடத்தினின்று நீங்கிச்செல்லும்போது, ஓர்இருநகரநோக்கி - இரண்டு நகரங்களைப் பார்த்து, குன்றுஎனத் திரண்டதோளான் - மலைபோலத்திரண்ட தோள்களையுடைய சீராமன், இவை - இந்நகரங்கள், எவை - எப்படிப்பட்டவை, கூறுகஎன்ன - சொல்லுக என்றுகேட்க, மின்திகழ்வயிரவாளான் - ஒளிவிளங்குகின்ற வச்சிராயுதத்தையுடைய இந்திரன், விருத்திராசுரன்றன் - விருத்திராசுரனுடைய, ஆவிபொன்றுதல் செய்தபாவம்-உயிர் அழிதலைச் செய்தபாவத்தை, போக்கிய தலங்கள் என்றான் - நீக்கிய தலங்களென்று சொல்லினான். எ-று.

எவை ஈறுதிரிந்த குறிப்பு வினையாலணையும்பெயர், நடந்தவை, செய்தவை என்பனவும் அன்ன. செய்த காரணப் பொருட்டாகிய பெயரொச்சம் தன்காரியமாகிய பாவமென்னும் பிறபெயர்கொண்டது. போக்கிய என்னும் பிறவினையாகிய பெயரொச்சம் தன் காரணமாகிய தலமென்னும் நிலப்பெயர் கொண்டது. பொன்றுதல் பிறவினையாகிய தொழிற்பெயர்; பொன்று தன்வினைப்பகுதி, வி பிறவினை விகுதி, பொன்று வி பிறவினைப்பகுதி, த் சந்தி, தல் புடைபெயர்ச்சி விகுதி; இதில் விவ் விகுதி தொகுத்தல் பெற்றது. இந்திரன் விருத்திராசுரனை ஆசிரியனாக வைத்துக்கொண்டு யாகஞ்செய்கையில் அவன் அசுரர்களது நலத்தைக் குறித்து மெதுவாக மந்திரஞ் சொல்வதை இந்திரன் உணர்ந்து அவ்வசுரனது தலையை வச்சிரத்தால் புடைத்தான். இரண்டு தலங்களாவன-கொலைசெய்த இடம் மலதம், பிராய்ச்சித்தமாகத்தவஞ்செய்த இடம் கருசம்.

16. (இ-ள்) சூர்வளி எறியும்கானில்-துன்பத்தைச் செய்யுங் காற்று வீசுகின்ற காட்டில், துனைவினின்-வேகமாக, ஏகும் எல்லை-போகும்போது, ஆரியன் - பூச்சியனாகிய சீராமன், தோன்றும்கானம் - காணப்படுகின்றகாடு, யாது - எத்தன்மையது, நீ அறைதி என்ன - நீ சொல்லென்று கேட்க, போர்செழு - போரில்மிகுந்த, சுகேது - சுகேது என்பவன், வேதன் - பிரமனது, பொன்அடிக்கமலம்போற்றி - அழகிய பாததாமரைமலர்களை வணங்கி, வார்அணி புனைந்த மார்பம்- கச்சையும் ஆபரணத்தையும் அணிந்த மார்பையுடைய, மங்கையை - பெண்ணை, இனிதின் ஈன்றான்-இனிமையாகப்பெற்றான். எ-று.

சூர்வளி சுழல்காற்று. அறைதி ஏவலொருமை வினை; அறை பகுதி, து சாரியை, அல்லது த் எழுத்துப்பேறு, இ ஏவலொருமை எதிர்கால விகுதி. யாது வினாவடியாகப் பிறந்த ஒன்றன் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று. ஈன்றான் ஆண்பாற்படர்க்கை இறந்தகால வினைமுற்று; ஈன் பகுதி ற் இறந்தகால இடைநிலை, ஆன் ஆண்பாற்படர்க்கை விகுதி.

17. (இ-ள்.) ஓடுஅரி - செவ்வரிஓடிய, தடங்கண் - பெருங்கண்களையும், ஒள் நுதல் - ஒளிதங்கிய நெற்றியையும், பணைகொள்மெல்தோள்-மூங்கிலினழகைப் பெற்ற மென்மையாகிய தோள்களையுமுடைய, தாட

கைதன்னை - தாடகையை, சுந்தற்கு - சுந்தனுக்கு, அளிப்ப - மணஞ்செய்துகொடுக்க, அத்தையல்நல்லாள் - அவ்வலங்காரமுள்ள நல்லவள், ஆடல் மாரீசனோடும் - (போரில்) வெற்றிஅடைவதற்குரிய மாரீசனுடனே, சுவாகுவை - சுவாகுஎன்பவனை, அருளின் ஈன்றாள் - கருணையோடு பெற்றாள், ஏடுஅவிழ் - இதழ்கள்விரிந்த, நறுதார் - நல்ல மலர்மாலையணிந்த, சுந்தன் இன்உயிர் தொலைந்தான் - சுந்தன் இனியஉயிர் நீங்கினான். எ-று.

தையல் அலங்காரம்; அது பண்பாகு பெயராய்ப் பெண்ணையுணர்த்துவதுமுண்டு. இங்கும் தையனல்லாளென்பதற்குத் தையலாகிய நல்லாளென உரைத்து இருபெயரொட்டுப் பண்புத் தொடராக்கலுமாம். சுந்தன் தன்புத்திரரிருவருடைய வலியைக கண்டு செருக்குக்கொண்டு தானும் மனைவியும் குமாரரோடு அகத்திய முனிவனது ஆச்சிரமத்தை அடைந்து, அங்குள்ள சோலையை அழிப்பதைக் கண்டு, அம்முனிவன் சபித்தமையினால் சுந்தன் உயிர் தொலைந்தான். உயிர் தொலைந்தான் இனைவழுவமைதி. அளிப்ப காரணப் பொருட்டாகிய செயவென் வாய்பாட்டிறந்த கால வினையெச்சம்: அளிப்ப அளி பகுதி, ப் சந்தி, ப் விரித்தல் விகாரம், அ இறந்தகாலச் செயவெனெச்ச விகுதி.

18. (இ-ள்.) தாடகை-தாடகையென்பவள், மைந்தரோடும்-புத்திரர்களோடுசென்று, தமிழ்முனிதன்னை - தமிழை வெளிப்படுத்திய அகத்திய முனிவனை, பற்ற - பிடித்துவைய, பீடுஉற - பெருமைமிக்க, தவத்தோன்-தவத்தையுடைய அகத்தியமுனிவன், சீறி-கோபங்கொண்டு, பிறைஎயிறு-பிறைபோலும் கோரப்பற்களையுடைய, அரக்கிஆகி - இராட்சதியாய், கோடிவேழத்தின் - ஒருகோடி யானைகளினிடத்து, உறறபலத்தொடு - உள்ள வலியுடனே, கூடுக என்ன - சேரக்கடவை யென்றுசொல்ல, நீடு இருசாபம்பெற்ற - மிக்கபெருமையாகிய சாபத்தைப்பெற்ற, நிசாசரி - அரக்கியினுடைய, வனம் ஈதுஆம் - காடு இது வாகும். எ-று.

தாய் சாபம்பெற்றதைக் கூறவே புத்திரர் சாபம்பெற்றதைக் கூறவேண்டா தாயிற்று. பிறை தொழிலடியாகப் பிறந்த பெயர்; பிற பகுதி, ஐ வினைமுதற் பொருண்மை விகுதி, பகுதி யீற்று அகரக்கேடு கடைக்குறை; பொருள்பிறத்தலுடையதென்பது. நிசாசரி இராத்திரியில் திரிபவள்.

19. (இ-ள்.) ஆங்கு- அப்போது, அவள்தன்னை-அத்தாடகையை, ஐய-ஐயனே, அணங்குஎன - பெண்என்று, உளத்தில் எண்ணல் - உள்ளத்தில் நினையாதை, தீங்குஉறும் - தீமைமிகுகின்ற, விரோசனன்தன்-விரோசனனுடைய, சிறுவியை - புத்திரியாகிய புலோமையை, மகவான்கொன்றான் - இந்திரன் கொலைசெய்தான், பாங்குஉடை - பகுகுவமுடைய, வெள்ளிதாயை - சுக்கிரனுடைய தாயை, பசுதுழாய் முகுந்தன் - பசுமையாகிய துளவமாலையணிந்த திருமால், கொன்றான் - கொலைசெய்தான், ஈங்கு-இப்போது, இவைகருதிநீயும் - இக்கொலைகளை நினைத்து நீயும் - இவள் உயிர்,

இத்தாடகையினதுயிரை, செகுத்தியென்முன் - மாய்த்துவிடு என்றுசொல்லினன். எ-று.

ஆங்கென்பது என்றனென்னும் வினைகொண்டது. உளத்திலெண்ணல் திங்குறும் என்பதற்கு - உள்ளத்திலெண்ணலால் பாவம் நேரிடும் என உரைத்தலும் பொருந்தும். செகுத்தல்- கொலைசெய்தல்: நித்தியமாகிய உயிரைக் கொலைசெய்தல் யாவராலும் முடியாத காரியமாதலின் அதற்கு உடலினின்றும் உயிரை நீக்குதலெனப் பொருளுரைக்க. நீயுமென்ற உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. செகுத்தி ஏவலொருமை வினை: செகு பகுதி, த் சந்தி, து சாரியை, இ ஏவலொருமை எதிர்கால விகுதி, உகரக் கேடும் சந்தி, அணங்கு - ஆசை: அது தன்காரணமாகிய பெண்ணுக்குக் காரியவாகுபெயர்.

20. (இ-ள்.) அத்தலை - அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில், செறுநர் - பகைவருடைய, ஆவிஅயின்று - உயிரையுணடு, வெம்புலவு நாறும்-வெவ்விய புலால்மணம் மணக்கின்ற, முத்தலை எஃகம்ஏந்தி - மூன்று தலையையுடைய ஆயுதமாகிய சூலத்தைக் கையிலேந்தி, முகில்என-மேகம் போல, உரறிஆர்த்து - குமுறி ஆரவாரித்து, பைத்தலை - படமுடைய (ஆதிசேடனது) தலையில், சுடிகைநெற்றி - உச்சிக்கொண்டையுள்ள நெற்றியிலுள்ள, பார் - பூமி, முதுகுஉளுக்க - முதுகை அசைக்க, வந்தாள் - வந்தனள், தத்து - தத்துகின்ற, வெம்குருதி - வெம்மையாகிய இரத்தம் வெளிப்படுகின்ற, பேழ்வாய் - ஆழ்ந்தகன்ற வாயையுடைய, தாடகை என்பாள்- தாடகையென்று சொல்லப்பட்டவள். எ-று.

செறுநர் நிகழ்கால வினையாலணையும் பெயர்; செறு பகுதி,(கோபி) ந் நிகழ்கால இடைநிலை, அர பல்லோர படர்க்கை விகுதி அயின்று இறந்தகால வினையெச்சம் : அயில் பகுதி, ற் இறந்தகால இடைநிலை, உ வினையெச்சவிகுதி, லகரம் றகரமாதல் சந்தி, அது னகரமாதல மெலித்தல். காரென்பது போன்றபார பணபாகுபெயர. பிறவுயிர்களைக் கொன்றுண்ட இரத்தமாதலின் வாயின்கடையில் தத்துவதாயிற்று. என்பாள் எதிர்காலச் செயப்பாட்டு வினையா லணையும்பெயர : என் செய்வினைப்பகுதி, ன் சந்தி, அ சாரியை, ப் சந்தி, படு செயப்பாட்டு வினைப்பொருண்மை விகுதி, என்னப்படு செயப்பாட்டு வினைப்பகுதி, ப் எதிர்கால இடைநிலை, ஆள் பெண்பாற்படர்க்கை விகுதி : என்னப்படுவா ளென்பதில படு விகுதி தொகுத்தலாய் நின்றது.

21. (இ-ள்.) ஈங்கு - இப்போது, இவள் தன்னை - இத்தாடகையை, கோறிஎன - கொலலென்று, முனி இயம்ப - விசுவாமித்திரன்சொல்லியதனால், ஐயன் - ஐயனாகிய சீராமன், வாங்கு - வளைத்த, வில்பகழி ஒன்றால் - வில்லில்தொடுத்த ஓரம்பினால், தாடகை ஆவி - தாடகையினதுயிரை, மாய்த்து - நீக்கி, நீங்கலும - அப்புறஞ்செல்லுதலும், ஓர்ஐஞ்ஞூற்

றுவெம்கணை - ஐந்நூறு கொடிய பாணங்களை, நெறியில் - சாத்திரமுறையில், நல்கி - (சீராமனுக்கு)கொடுத்து, ஆங்கு - அவ்விடத்தில், அவை- அப்பாணங்களினது, உபசங்காரம்புரி - மீட்குதலைச்செய்யும், அருமறையும் ஈந்தான், அரியமந்திரங்களையும் உபதேசித்தான். எ-று.

கோறி ஏவலொருமை வினை : கொல் பகுதி, து சாரியை, இ ஏவலொருமை எதிர்கால விகுதி, லகரக்கேடும், தகரம் றகரமாதலும், உகரக்கேடும் சந்தி, முதல்நீண்டது நீட்டல். மறை தொழிலடியாகப் பிறந்த பெயர் : மறு பகுதி, ஐ செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி : பொருள் மாணுக்கரல்லார்க்குச் சொலப்படாதவை. ஆங்கென்றது அடைக்கலம் புகுந்தவரை. மறையுமென்ற உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை.

22. (இ-ள்.) அவ்வுழி - அவ்விடத்தினின்று, நீங்கிச்செல்லும் - நீங்கிநடக்கின்ற, அருநெறியதனில் - காட்டுவழியில், மற்றுஓர் - வேறொரு, திவ்விய ஆச்சிரமம் - தேவர்தங்குதற்குரிய ஆச்சிரமத்தை, நோக்கி - பார்த்து, இதுயாது - இது எப்படிப்பட்டது, செப்புகஎன்ன-சொல்லக்கடவாயென்றுகேட்க, பவ்வம்நீர் - கடலினீரால் சூழ்ந்த, உலகம் - பூமி, தன்ஓர்பதத்தினின் - தன் ஒருதிருவடியினால், பொதிந்தோன் - மூடியநாராயணன், வைகும் - தங்கியுள்ள, இவ்விடந்தன்னை - இந்த இடத்தை, சித்த ஆச்சிரமம் என்று - சித்தாச்சிரமமென்று, இசைப்பர் என்றுன் - (அறிவுடையோர்) சொல்லுவரென்று சொல்லினன். எ-று.

திவ்வியம் தேவர்க்குரியது. யாது வினவடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. செப்புக என்னும் வியங்கோள் வினையின் பகுதி செப்பு திசைச்சொல். பௌவம் என்பதிலுள்ள ஔகாரத்துக்கு அவ் என்பது எழுத்துப்போலி. சித்தாச்சிரமம் : முனிவன் உள்ள இடம். பொதிந்தோன் ஆண்பாற்படர்க்கை இறந்தகால வினையாலணையும்பெயர் : பொதி பகுதி, த் இறந்தகால இடைநிலை, த் சந்தி, ஆன் ஆண்பாற்படர்க்கை விகுதி, சந்தித் தகரம் நகரமாதல் மெலித்தல் : விகுதி ஓலானது செய்யுள் வழக்கம்.

23. (இ-ள்.) ஆங்குநின்றுஏகி -அவ்விடத்தினின்றுபோய்,ஐயன்- சீராமன், அருமகச்சாலை - (செய்தல்)அருமையாகிய யாகசாலையை, எய்தி- அடைந்து, தீங்குஅறு-(காமவெகுளி பேதைமையாகிய)குற்றங்கள்நீங்கிய, முனிவ-முனிவனே, வேள்விசெய்கஎன - யாகத்தைச் செய்யக்கடவை என்று, இயம்பலோடும் - சொல்லுதலும், வீங்கு - மிகுகின்ற, வை- (உள்ளத்தில்) வைக்கப்படும், கேள்விபோய - நூற்கேள்வியில் தேர்ந்த, கௌசிகன் - கோசிகன் புத்திரனாகிய விசுவாமித்திரன், வேள்விஆற்ற - யாகத்தைச் செய்கையில், ஓங்குமாரீசனோடு - உயர்ந்த மாரீசனோடு, சுவாகு வந்து-சுவாகு என்பவன் வந்து, அமரின் உற்றுன் - போர்த்தொழிலில் அமர்ந்தான். எ-று.

ஆங்கு ஏழாம்வேற்றுமை இடப்பொருளில்வரும் சுட்டடியாகப்பிறந்த பெயராயினும் சிறுபான்மை ஐந்தாம வேற்றுமை நீங்கற்பொருளவாகிய நின்று, இருந்து என்னும் சொல்லுருபுகளை யேற்றுவரும்: அறுமுனிவன் என்பதை வினைத்தொகை நிலைதொடராகவும், பெயரெச்சத் தொகாநிலைத்தொடராகவும் உரைக்கலாம். போய இறந்தகாலப் பெயரெச்சம்: போ பகுதி, ய் இறந்தகால இடைநிலை, அ பெயரெச்ச விகுதி. இயம்பலோடும் இறந்தகால வினையெச்சம்; இயம்பு பகுதி, அல், ஒடு சாரியை, உம் இறந்தகால வினையெச்ச விகுதி, உகரக்கேடு சந்தி.

24. (இ-ள்.) ஏற்றவர்தம்மில்-எதிர்ந்த இரண்டரக்கரில், வெம்போர்ச்சுவாகுவை - கொடியபோரில் சிறந்த சுவாகுவை - எரிவாய் அம்பின்-தீயைவீசுகின்ற வாயையுடைய அமபினால், கூற்றினுக்கு- யமனுக்கு, உணவு-உணவாக, நல்கி - கொடுத்து, கொடிய மாரீசன்றன்னை - கொடுமையுள்ள மாரீசனை, வெம் - கொடிய, காற்றின்பகழிஒன்றால் - ஒருவாயுவாஸ்திரத்தால், கடலிடைக் கவிழ்த்து - கடலில் கவிழ்ந்துவிழ எறிந்து, யாரும் - எவாகளும், போற்றுஅரு, புகழ்தல்முடியாத, வேள்விமுற்ற - யாகம் நிறைவேறும்படி, புரந்தனன் - காத்தனன், புலவுவேலான் - புலாலின் மணமுள்ளவேலை ஏந்திய சிராமன். எ-று.

போற்று முதனிலைத் தொழிற்பெயர் எழுவாய்த் தொகாநிலைத் தொடராக அரு என்னும் பண்படியோடு முடிந்தது: இவ்வாறன்றிப் போற்ற என்னும் செயவெனெச்சத் திறுதொகுந்தலாயிற்றெனினும் ஒக்கும். எரிவாய் இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராகக் கொள்ளுதலே அன்றி, எரிகின்றவா யெனப்பொருள் கொண்டு, வினைத்தொகை நிலைத் தொடராக்கினும் பொருந்தும். உணவு தொழிற்பெயர்: உண் பகுதி, அ சாரியை, வு புடைபெயர்ச்சி விகுதி. கொடிய பண்படியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்: கொடுமையென்னும் பண்புப்பெயர் பகுதி, பெயரெச்ச விகுதியாகிய அகரப் புணர்ச்சியில் ஈறுபோதல், என்பதனால், மை ஈறுகெட்டு, 'இடை உகரம்' இய்யாதல், என்பதனால், இகரம் ஆகி, 'இஈ ஐவழி யவ்வும், என்பதனால் யகர வுடம்படுமெய் தோன்றி முடிந்தது.

25. (இ-ள்) கோளடுத்து-(பகை)அரசர்களைஎடுத்து, அருந்தும்வைவேல்-உண்ணுகின்றகூரியவேலைத்தாங்கிய, குமரருக்கு ஆசிகூறி - இராமலட்சுமணர்களுக்கு ஆசீர்வாதம்சொல்லி, பாஅடி - பரந்தபாதத்தையும், பருமம் - மேலிடும் தவிசையும் உடைய, யானை - யானையானது, பிடிமிசை - பெண்யானையின்மேல், பனைக்கை - பனைபோன்ற கையை, நீட்டி-நீட்டித் தழுவி, மேவரு - விரும்பிவருகின்ற, கானம யாவும்கடந்து - கானம்முழுதும் கடந்து, விலவீரரோடும் - வில்லைத்தாங்கிய அவ்வீரரோடும், காவுசூழ்-சோலைகளாற் சூழப்பட்ட, சோணையாற்றங்கரைமிசை - சோணையாற்றின் அழகிய கரையின்மேல், இனிது சென்றான் - சுகமாய் நடந்தான் முனிவன். எ-று.

கோ ஒருமை பன்மைக்[illegible] யாகின்றது. இதுபற்றியே கோக்[illegible]குகிப் பொருள் விகுதியென்பா, வைவேல் [illegible]ா. பருமயானை யென்பதில் பருமம சாதிபற்[illegible]ல வங்கக் கடலென்பதிலும், காட்டானைக்[illegible]கிய கசேந்திர[illegible]ன என்பதிலும் அவ்வாறு அடை வருதல் காணக மே என்னும முதனிலை இறந்தகால வினையெச்சப் பொருள்பட நின்றது. யாற்றங்கரை என்பதில் அம் சாரியை என்னலும் பொருந்தும்.

26. (இ ள.) இவ்விடம் - எதிரில் தோன்றுகின்ற இடம், யாவர் தேயம் - எவருடைய தேசம், என்றிட - என்றுகேட்க, இராமன் கேட்ப - சீராமனது செவியிற்படும்படி, அவ்வியம் அவிந்தசிந்தை - பொறாமையை அழிந்தமனமுடைய, அருந்தவன் - அரிய தவங்களைச்செய்த விசுவாமித்திரன, தெளிந்துசொலவான் - தனனுள தேறிச்சொலலுவான், தெவ்வா - பகைவருடைய, ஊன்சுவைக்கும் - உடலைச் சுவைபாாக்கின்ற, வைவேல - கூரியவேலைத் தாஙகிய, குசன்எனும் - குசனென்று சிறப்பித்துச் சொல்லபபடும, திறலகொள் வேநதன் - வலிமையபெற்ற அரசன், மவ்வல அமகூந்தல - முல்லைமலா மாலையணிந்த அழகிய கூந்தலையும், செவ்வாய் - சிவந்தவாயையுமுடைய, விதேககோன் மகளை - மிதிலாநகர அரசன்மகளை, வேட்டான் - கலியாணஞ் செய்தான் எ-று.

விதேகா விதேகதேயத்தாா. விதேகம் தேசம, மிதிலை இராசதானி. இத்தேய அரசன் யோகத்தினால் தேகத்தை ஒழித்து நெடுநாள் அத்தேசத்திலிருந்தான் ஆதலால் அவனுக்கு விதேகன் எனவும், அவனுடைய தேசத்துக்கு விதேகம் எனவும் வழங்கும் : வசிஷ்டருடைய சாபத்தினால் தேகமிழநதவனுமாயிருந்தவன் இமமரபிலுளன். இச்சரிதையை அவன் மேலேற்றிக் கூறவாருமுளர் என்றிட இடைச்சொலடியாகப் பிறந்த காரணப பொருட்டாகிய இறநதகாலச் செயவெனெச்சம் : என் பகுதி, று சாரியை, இடு பகுதிப் பொருள விகுதி, தகரம றகரமானதும, உகரக்கேடும் சந்தி, அனைத்துமொரு பகுதி, அ இறநதகாலச் செயவெனெச்ச விகுதி, அவ்வியம, மவ்வல் இவவிரணடிலும ஔகாரத்துக்கு அகரவகரம போலியாகவநதன.

27. (இ-ள்) ஆங்கு-அக்காலத்தில், அவள்-அப்பெண, நான்கு மைந்தர்ப் பெற்றனள் - நான்குகுமாரரகளைப்பெற்றாள், அவரில்-அந்நாலவரில், மூத்தோன் - மூத்தவன், வீங்குதோள - பருக்கின்ற தோள்களையுடைய, குசநாபப்பேர - குசநாபனென்னும பெயரையுடைய, விறல்கெழு - வெற்றியுண்டாகிய, வேந்தாவேந்தன் - அரசாகளுக்கு அரசன், ஓங்கு எழில - அழகுமிகுந்த, மாடம் முற்றம்-மனைகள் நிரம்பிய, மகோதயம என்னஓதும்-மகோதயமென்று சொல்லப்படும், தீங்குஅறும் - தீமைகள் நீங்குகின்ற,

யாதிணைய டெயராதலாலும், இது

தொகை [illegible] டராதலாலும், நன-உயி-கு-

கு-இனை [illegible] யாகாமல், உ[illegible] கு-கக-இன படி [illegible] யலபின் [illegible] ரமாயி

ற [illegible] ன இந்தசால [illegible] யாலணையும் பெய [illegible] பகுதி, த ச

தி, [illegible] கால [illegible] டைந்து, [illegible] ஆணைபாரபடாக்கைக விகுதி கைரதது

கரு [illegible] ளள [illegible] ணை செயயுள லவழககம

28 ([illegible]) [illegible] ணைகளுளள குரிய வேலைநதாங

ய, குதாமடை - குதாமடையணைபவன, கௌசாமபிநகரம் பெயர [illegible] கௌ

சா [illegible] அரசுபோயிதான - (மரு

[illegible]) [illegible] ஆகசெயதான, அஜாதசததுமேவெந

தன் - அஜாதசத்ரு எனறு பெயரையுடைய அரசன, மகிழ்சேரா -

[illegible] டையா, [illegible] யமகுப - [illegible] மதிரளை, [illegible] மாரணியப [illegible] மா

[illegible], நகாமலி [illegible] - நகர [illegible] கிலனை, [illegible] அறு-

அதி [illegible], பக - பகைவனடயன், படபரு - மனிகள சிரமபிய, கொ

டி - கொடி [illegible] டிய, சிரிவாசம செய்தான - ஸிரிவிரசாகரத்தை எறப

டுத்தினை. எ-று.

அஜாதசதருசு எனபது அஜாதசததுவென்றுனது, சிரவிாசம மலை

கட்டிய மலைகளினடுவிலுளளசாகு அதினை இது ஆறும வேறறுமை

த் தொகைபபுறததுப பிறதத அனமொழிததொகை.

29 ([illegible]) இநதலம - இவவிடம, வகவினசேயம - வசுளனபவ

னுடைய தேசம, அஞசுவெறபிடையில ஐநது மலைகளுககுநடுவில, தோ

ன்றும் - விளஙகுகினற, அ [illegible] - அவவிடம, மகததேயம மகததேசமெ

னனபபடும, அனன - அபபடிபபட்ட, நீள்மலையினினறு - பெரிய மலைக

ளினின்று, முததமும் - முத்துகளையும, துகிரும - பவளஙகளையும, வாரி -

வாரிகொண்டு, அகில - அகிலமரஙகளையும, முருடு- குஙகுமமரஙகளையும்,

உருட்டி - உருட்டிககொணடு, ஓடும ஓடுகிறற, [illegible] தகுகினற, நீர

நதரஙகம [illegible] - நீரலைகளை எறிகினற, மாகநிதானெனறும் - மாகநிதியெ

னறு சொலலபபட்டு, உணடு - ஒருநதி உளது எ-று

மகததேசததிறகு ஐநது மலைகளைச சூழநதுகொணடு பாயவதி

[illegible] மாகநதியனடபெயா வழஙகியது அஞசு ஐநதெனபதில

நகரததுககு ஞகாரமும, தகரததுககுச சகரமும போலியாக வநதவையாய

[illegible] யா [illegible], [illegible] மெனனும பெயரெசசம இரணடுகெகி,

மாக [illegible] பெயராக சொனடன [illegible] மெனபது தனவினை

கருமம் செயபபடுபொருள குன்றியவினைகளும, செயப்படு

பொருள் குன்றாவினைக்கும் பொதுவாயினும் இங்குப் பிறவினைக்குஞ் செயப்படுபொருள் குன்றாவினைக்கும் உரியதாய் நின்றது.

30. (இ-ள்.) ஆடல்வேல் - வெற்றிவேலையேந்திய, குசாபற்கு - குசநாபனுக்கு, கன்னல்அம்குதலை - கரும்பின் இரசம்போலும் அழகியமழலைச் சொல்லைப்பேசுகின்ற, செம்வாய் - சிவந்தவாயையுடைய, திருநாரி - திருநாகிபொன்பாவையள், களிப்பின் - மனக்களிப்பினோடு, ஈன்ற - பெற்ற, கொல் - (பகைவரை) கொல்லுகின்ற, கூர்வேல்கண்ணார் - கூரியவேல்போலும் கண்களையுடையாராகிய, நூற்றுவர் - ஒருநூறுபேர், கொடியின் ஒல்கி - பூங்கொடிபோல அசைந்து, வன்னமேகலைகள் ஆர்ப்ப - பலநிறங்களையுடைய மேகலைகள் ஆரவாரிக்கும்படி, அன்னமாநதியின் - அப்படிப்பட்ட பெரியநதியினது, தீர்த்தத்து - தீர்த்தத்தில், வளைகின்ற - வளைவுகள் (காலால்)நடவுகின்ற, பல்மலர்கொய்தார் - மலர்பறித்தார். எ-று.

அன்ன இடைச்சொலடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; அன் பகுதி, ன் சந்தி, அ பெயரெச்ச விகுதி. செவ்வாய் பண்புத்தொகை நிலைத்தொடர்; விரிந்தால செம்மையாகிய வாயெனவிரியும், செம்மையென்னும் நிலைமொழிவாயென்னும் வருமொழி புணர்ந்தபோது, "ஈறுபோதல்" என்பதனால் மை விறுகெட்டு, "முன்னின்ற மெய்திரிதல்" என்பதனால மகரம் வகரமாகத் திரிந்தது. பலவகை மணிகள் சேர்த்துச் செய்யப்படுவதாறு மேகலையாதலால் வன்னமேகலை எனப்பட்டது பெண்களின் பன்மையைக் குறித்து மேகலை மேகலைகளெனப் பன்மையாய்நின்றது.

31. (இ-ள்.) காற்றுஇறை - காற்றுக்குத்தலைவனாகிய வாயுதேவன், அவரைநோக்கி - அப்பெண்களைப்பார்த்து, காமநோய் உழந்து - காமநோயினால் வருந்தப்பட்டு, மாழ்கி - மனமயங்கி, ஊற்றும் ஊறும் இன்பம் - பெருகுகின்ற இன்பத்தை, யாமோர்கூட்டத்தின் - ஈந்தருவாருடைய மனத்தில், உறுதிர் என்ன - அடையுமினென்று, போற்றலும் - இரந்துவேண்டுதலும், மறுத்த - (அதுகூடாதென்று) தடை சொல்லிய, வேல்கணை - வேல்போலுங் கண்களையும், பூங்கிளிஅனைய - அழகியகிளியின் மொழியையொத்த, தீஞ்சொல் - இனிய சொற்களையுமுடைய, நூற்றுவர் - நூற்றுவருடைய, உடலம்புக்கு - உடலில்புகுந்து, முடங்குகூன் - (உடல்)கடுங்குகின்றகூனாக, ஆக்கினன் - செய்தான் எ-று.

உறுதிர் ஏவற்பன்மைவினை; உறு பகுதி, த் எழுத்துப்பேறு, இர் ஏவற்பன்மை எதிர்கால விகுதி. கூன்முதுகில தங்குசதை பாரமாக நிற்பதாதலால் முடங்குகூனென்றார். உடலமென்பதில் அம் சாரியை. ஆக்கினன் ஆண்பாற் படர்க்கை இறந்தகாலப் பிறவினையாகிய வினைமுற்று ஆக்கு வினைப் பகுதி, க் சந்தி, கு பிறவினை விகுதி, அனைத்தும் பிறவினைப் பகுதி, இன் இறந்தகால இடைநிலை, அன் ஆண்பாற்படர்க்கை விகுதி, ககரக்கேடு சந்தி; இவ்வாறன்றி, ஆகு என்பதே தன்வினைப் பகுதியெனக்கொண்டு

கூடு கூட்டெடன விகாரப்பட்டுப் பிறவினைப் பகுதியாவதுபோல ஆக் கெ ன்பது பிறவினைப் பகுதி யாயிற்றெனினும் பொருந்தும்.

32. (இ-ள்.) மங்கையர் - மங்கைப்பருவமுடைய அப்பெண்கள், இதனை - இச்செய்தியை, தந்தைக்கு ஓதலும் - குசநாபனுகிய தந்தைக்குச் சொல்லுதலும், மனத்தின் எண்ணி - தன்மனத்தில் ஆராய்ந்து, பங்கயமட ந்தை அன்ன - தாமரைமலரி லெழுந்தருளிய திருமகளைஒத்த, சோம தை - சோமதையென்பவள், பரிவினேடும் - அன்போடு, துங்கம் உயர் வாகிய, நல்சுளிக்கு ஈன்ற - நல்லசுளியென்பவனுக்குப் பெற்ற, பிரமதத்த னுக்கு - பிரமதத்தனென்பவனுக்கு, தூயசங்குஇனம் - சுத்தமாகிய சங்கி ன்கூட்டம், முழங்கிஆர்ப்ப - மிருதியும் ஒலிக்க, தருமணம்புரிவித்தான்-த குந்த கலியாணம் செய்வித்தான். எ-று.

பதின்மூன்று வயதுமுதல் பதினெட்டு வரையும் பெண்மங்கையெனப் படுவாள். தூய குறிப்புப் பெயரெச்சம்; தூய்மை பகுதி, அ பெயரெச்ச விகுதி, மை யீறுகெட்டது சந்தி. முழங்கியார்ப்ப ஒருபொருட்பன்மொழி.

33. (இ-ள்.) பாம்புஉறழ் - பாம்பினைஒத்த, நுழைநுசுப்பின்-நுண் மையாகிய இடையையுடைய, பாவையர் - பிரதிமையை ஒத்தபெண்கள், உடல் கூன்போகி - உடலினது வளைவுநீங்கினமையினால், காம்பிலிதேயத் தன்னில் - காம்பிலிதேசத்தில், களிப்பொடு - மகிழ்வினேடு,பிரமதத்தன்- பிரமதத்தனென்பவன், எம்பலின் இருந்து வாழ்ந்தான் - விருப்பத்தினுலி ருந்துவாழ்ந்தான், இவை நிற்க - இவைநிற்கட்டும், குசநாபப்பேர் - குசநாப னென்னும் பெயரையுடைய, வாம்பரி - தாவியோடும் குதிரைகளைப் பூண் ட, தடவுத்தேர் மன்னன் - பெருந் தேரையுடைய அரசன், மகம்இனிது ஆற்றினன் - (புத்திர காமேட்டியென்னும்) யாகத்தை இனிமையாகச் செய்தான், எ-று.

பாவை உவமையாகுபெயர் ; இதுபலர்பால் விகுதிபெற்றுப் பெண் பன்மையை யுணர்த்திற்று. போகி போக என்னும் இறந்தகால வினையெ ச்சத்தின் திரிபு. இது எம்பலினிருந்து வாழ்ந்தமைக்குக் காரணமாயிற்று.

34. (இ-ள்) அருமகம் ஆற்றும் எல்லை - அருமையாகிய யாகத் தைச் செய்யும்போது, ஆடல்வேல்குசன் - வெற்றியைத் தருகின்றவேலைத் தாங்கிய குசனென்பவன், ஆங்குஎய்தி - அவ்யாகசாலையைஅடைந்து,பொ ருவுஅறுமைந்த - ஒப்பில்லாத புத்திரனே, ஒப்பு இல்புதல்வரை - ஒப்பில் லாத பிள்ளைகளை, பெறுதிஎன்ன - பெறுவாயென்று, வரம்அளித்து - வர த்தைக்கொடுத்து, உடலினேடும் - தேகத்தோடு, வானநாடதனில் உற்று ன் - சுவர்க்கம்போய்ச் சேர்ந்தான், கருணைகூர் குசநாபன் - அருள்மிகுந்த குசநாபன், சீர்க்காதியை இனிதின் ஈன்றுன் - சிறப்புள்ள காதியைஇனி மையாகப் பெற்றுன். எ-று.

பொருவறு, ஒப்பில் இரண்டும் எழுவாய்த் தொகாநிலைத்தொடர். அறுமைந்த விளித்தொக நிலைத்தொடர் ; இல் புதல்வரை, பண்புத்தொ

கை நிலைத்தொடர். நாடது ஒன்றன் படர்க்கைப் பெயர்; நாடு பகுதி, அ சாரியை, து பகுதிப்பொருள் விகுதி, ஆதலால் சொல்லளவில் பகுபதமாயும், பொருளளவில் பகாப்பதமாயும் வந்ததென்க.

35. (இ-ள்.) ஆங்குஅவன்-அப்படிப்பட்டஅக்காதி, கௌசிகப்பேர்-கௌசிகனென்னும் பேரையுடைய, அணங்கொடும் - பெண்ணினோடும், என்னைஈனறான - என்னைப்பெற்றான், தீங்குஇல் - தீமையில்லாத, மற்றுஅவளே - மற்றவளே, தூய - சுத்தமாகிய, செயிர்அறு - (மூழ்குவோர்) குற்றம்நீங்குகின்ற, வீங்குநீர் - மிகுந்த நீரையுடைய, கௌசிகப்பேர் - கௌசிகனென்னும் பெயரையுடைய, ஆறுஆய் - அருவி, ஈண்டுமேவினள் - இவ்வுலகில் தங்கினாள், என்னஓதி, என்றுசொல்லி, நீங்கலும் - அந்நதிக்கு அப்புறப்படுதலும் கங்கைஎன்னும் - கங்கையென்று சொல்லப்படும், நெடுநதி தோன்றிற்று - பெரியயாறு காணப்பட்டது. எ-று.

அணங்கு பண்பாகுபெயர். கௌசிகி நாயகனாகிய இரிசிகமுனிவன் சுவர்க்கத்துக்குச் செல்ல, பிரிவாற்றாமல் நதியுருக்கொண்டு பின்சென்றனள், அவளைநோக்கி நீ பூமியில் சிறந்த நதியாயிருவென்று சொல்லிப்போயினன். அவளே என்னும் ஏ பிரிநிலை. மற்று பிறிதென்னும் பொருளது. தோன்றிற்று ஒன்றன் படர்க்கை இறந்தகால வினைமுற்று, தோன்று பகுதி, இன் இறந்தகால இடைநிலை, று ஒன்றன்படர்க்கை விகுதி, னகரம் றகரமாதல் சந்தி.

36. (இ-ள்.) வள்ளல் - (யாவருக்கும் வேண்டியவற்றை) தருகின்றசிராமன், அந்நதியை நோக்கி - அந்த யாற்றைப்பார்த்து, வரல்முறை - (பூமியில்) வந்ததைப்பற்றிய முறைமையை, கூறுகஎன்ன - சொல்லுகஎன்றுகேட்க, தெள்ளிதின் - தெளிவாக, மறைகள்தேர்ந்த - வேதங்களையுணர்ந்த, கௌசிகன் செப்பலுற்றான்-விசுவாமித்திரன் சொல்லத்தொடங்கினான், கள்அவிழ்மலர் - தேன்சிந்துகின்ற மலரையணிந்த, மெல்கூந்தல்-மெல்லிய கூந்தலையுடைய, உமையினைக் கங்கையோடும் - பார்வதியைக் கங்கையுடனே, எள்அரு இமயவேந்தன் - இகழ்வு இல்லாத இமயமலை அரசன், இனிதினில் - இனிமையாக, பயந்தான் - பெற்றான், எ-று.

வள்ளல் ஈகைத்தன்மை: இப்பண்புப்பெயர் பண்பியை உணர்த்தலால் பண்பாகுபெயர்: வரன்முறை பண்புத்தற் கிழமைப் பொருளதாகிய ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்: விரிந்தால் வரலினது முறை என விரியும். உமை இளம்பருவத்தில் தவத்துக்குச் சென்றதைப் பருவதராசன் கண்டு, உ-மா என்றான் அதுவே பெயராயிற்று: உ என்பது அழைப்பதற்குரிய ஒலிக்குறிப்பு, மா வேண்டா என்னும் பொருளது. எள் அரு எழுவாய்த் தொகாநிலைத் தொடர். எள் முதனிலைத் தொழிற்பெயர்.

37. (இ-ள்.) உமையினை - பார்வதியை, அயன்மால்காணாது - பிரமனும் விஷ்ணுவும் காணாதபடி, ஓங்குஒளிஆகின்ற - உயர்ந்த அக்கினிம

லயாகின்ற, இமயவில் - பொன்மலையாகிய வில்லை, குழையவாங்கும் - வளையும்படி வளைத்த, ஈசனுக்கு ஈந்தான் - சிவனுக்குக் கொடுத்தான், இத்தத்தமரம் - இரத ஒலியையுடைய, வெள்திரை - வெண்மையாகிய அலைக ளைவீசுகின்ற, நீர்க்கங்கை - நீர் மிகுதியுள்ள கங்கை, பாதலம் - பாதாள லோகத்திலும், தரணி-பூமியில், விண்ணினை -சுவர்க்கத்தில், அமர்தலால்-தங்குதலால், உலகின் உளோர் - உலகத்திலுள்ளவர்கள், அமர - விரும்பத்தக்க, திரிபதகை எனபார் - திரிபதகை என்று சொல்வார். எ-று.

திரிபதகை-மூன்றுவழியாய்ச் செல்வது, பாதலத்தில் பாய்வதற்குப் போகவதி, பூமியில பாய்வதற்குப் கங்கை, சுவர்க்கத்தில பாய்வதற்கு மந்தாகினி என்பனபெயர்.

38. * * * * *

39. * * * * *

40 (இ-ள்) உலகுஎல்லாம- உலகையெல்லாம், கமலத்தோனொடு- பிரமனொடு, ஈன்ற - பெற்ற, சிறுஉதரவல்லி - சிறுவயிற்றையுடைய பூங்கொடிபோன்ற பார்வதி, நலம்உறு - சுகத்தைஅநுபவிக்கின்ற, கடவுளோரை - தேவர்களை, குலமனையவர்பால் - குலத்தில் மணஞ்செய்த மனைவியரிடத்தில், மைந்தர்ப்பெறகலீர்-புத்திரரைப்பெறமாட்டீர், என்று வைதுகூறி - என்றுசபித்துசசொல்லி, அகல்ஞாலந் தன்னை - விசாலித்த பூமியை, பலர்விழை - பலர்விரும்புகின்ற, கணிகைபோல-வேசிபோல, வாழ்கஎனப் பகர்ந்துபோனாள் - வாழக்கடவையென்று சொல்லிடபோயினாள். எ-று.

கணிகைபோல வாழ்தலாவது ஒருவனுக்குரியதாய நின்றதேயம் வேற்றரசன் அவனை வெற்றிகொண்டபின், வெற்றிகொண்டவனது ஆகுகைக்குரித்தாதல. மனை தலைமைபற்றிவந்த இடவாகுபெயர் பெறுகலீர பல்லோர படர்க்கை எதிர்மறை வினைமுற்று; பெறு பகுதி, கு சாரியை, அல எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனை ததுமொரு பகுதி, ஈர முன்னிலைப பனமை விகுதி, மைந்தர்ப் பெறகலீர இதர்தொடர் இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத் தொடராதலாலும், நிலைமொழி யுயர்திணைப் பெயராதலாலும, நன்-உயிர-கு-கூ- நூல் பகரம் மிகாது, உரு-கு-கசு-ஆல் இயல்பின் விகாரமாயிற்று.

41. சரவணமதனில் சரவணப்பொய்கையில், வெய்துஆம - வெப்பமுனை யதாகிய, அழல்உமிழ் - நெருப்பைக்கக்குகின்ற, வடிவேலேந்து - கூரியவேலை ஏந்திய, முருகவேள் - முருகனாகிய செவ்வேள், இனிதுதோன்றி - இனிமையாக அவதரித்து, மொய் அமர்கடந்த- (வீரர்)நெருங்கிச் செய்தபோரை வெற்றிகொண்ட, வெற்றி-வெற்றியையும், எரிஉமிழ்- தீயைச் சிந்துகின்ற, தறுகண - அஞ்சாமையையும், பேழ்வாய் - பெரியவாயையுமுடைய,அவுணரை - அசுரரை, இகலில்நூறி-போரில் பொடிசெய்து, தருநிழல் - கற்பகத்தருக்களினது நிழலில், அமரர்வைக - தேவர்கள் இனி

மையாகத் தங்கும்படி, தானைகாவல் பூண்டான் - தேவர்சேனையைக் காக்குந் தொழிலைப்பூண்டான். எ-று.

சரவணம் - நாணற்பைப்புல்; சரவணப்பொய்கை என்றது - சரவணப்புதருள்ள கங்கையின் சிறுபிரிவு. முருகவேள் திருப்பெயரொட்டுப்பண்புத்தொகை நிலைத்தொடர். தானையங்காவலன் என்பதில் அம் என்பதைச் சாரியையாக்காமல், அழகாகிய பொருளை உணர்த்தும் பண்புப் பெயராகக் கொண்டு அழகாகிய காவலனென உரைப்பினும் பொருந்தும். இது தானையைக்காவல், தானைக்குக் காவல, தானையினது காவல் எனவிரிக்கலாம்.

12. (இ-ள்.) ஈது நிற்க - இப்போது இது இருக்கட்டும், சங்கைவரன்முறை - சங்கைவருதலின் முறைமையை, தெரிந்து கேட்டி - இனிமையாகக் கேள், சார்ங்கவில் - வளைப்பதற்குரிய வில்லைத்தாங்கிய, சகரன் - சகரனுடைய, மனைவாழ் - மனையில் வாழ்கின்ற, மனைவியர் இருவர்தம்முள் - மனைவியர் இருவரில், தீங்குளறி - தீச்செயல்களை அப்புறப்படுத்திய, பிருகுவென்னும் - பிருகுவென்று சொல்லப்படும், செய்தவன் அருளால் - செய்தற்குரிய தவமுடையானது அருளினால், பொலம் - பொன்னிறமமைந்த, அம் - அழகிய, கொங்கு அலர் குழலாள் - மணம்பரவிய கூந்தலையுடைய கேசினி, மற்று ஓர் குமரனை - வேறொருகுமாரனை, இனிதின் ஈன்றாள் - சுகமாகப் பெற்றாள். எ-று.

பிள்ளைப்பேறில்லாக் குறையால் இமாசலத்தின் சாரலில் சகரன் மனைவியருடன் சென்று தவஞ்செய்துகொண்டு பிருகுமுனிவரையும் வழிபாடு செய்துவந்தமையால் அம்முனிவர் பிரதாபசாலிகளாகிய புத்திரர் வேண்டுமோ? ஞானமுடைய புத்திரன் ஒருவன்வேண்டுமோ? என்று கருணையோடு வினவியகாலை மூத்தாளாகிய கேசினிக்குப் பல புத்திரர்களையும், சுமதிக்கு ஒரு புத்திரனையும் அநுக்கிரகிக்கும்படி பணிவாகக் கேட்டுக்கொண்டானென்பது என்றது. கிடக்கவியங்கோள் வினைமுற்றுகலின், நன்- உயி - கு - மள - ஆல் இயல்பாயிற்று. சங்கைவரல் வினைமுதற் பொருண்மையிலவந்த தொழிற் பண்புத்தற் கிழமைப் பொருளதாகிய ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்: வரன்முறை பண்புத்தற்கிழமைப் பொருளதாகிய அவ்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர். கேட்டி ஏவலொருமை; கேள் பகுதி, டு சாரியை, இ ஏவலொருமை எதிர்கால விகுதி, தகரம் ளகரத் திரியும், உகரக்கேடும் சந்தி; இது முன்னிலை வினையாயின் இறந்தகால வினைமுற்றெனப்படும், ட் இறந்தகால இடைநிலை, இ முன்னிலை யொருமை விகுதி. பிருகு வடமொழிக் குற்றியலுகரமாதலின் கெடாது நின்றது.

43. (இ-ள்.) அறுபதினாயிரம் - அறுபதினாயிரமாகிய, ஆடல்மைந்தரை - வெற்றியுடைய புத்திரரை, மறுஅற - குற்றமில்லாமல் மற்றவள்- கேசினிஎன்பவள், வயிறுவாய்த்தனள்-கருப்பமிருந்து பெற்றனள், அசம

ஞ்சகன் - அசமஞ்சசன், என்னும் மைந்தனை - என்று சொல்லப்படும்புத்திரனை, சிறுவரை - (அயோத்தியிலுள்ள) சிறுவர்களை, ஒழுத்தலால் - (சரயுநதியில் எறிந்து) தண்டித்தலினால், இறை - சகரராசன், கானம்சேர்த்தினன் - காட்டுக்கு அனுப்பினான். எ-று.

நகரத்தில் அசமஞ்சசன் சிறுவர்களைச் சரயுநதியி லெறிந்து கொல்கின்றமையால் உண்டாகின்ற பழிக்கு அஞ்சி அவனைக் காட்டுக்குச் செல்ல அரசன் கட்டளையிட்டபோது, தான் எறிந்த சிறுவர்களையெல்லாம் தவமகிமையால் வரவழைத்துவிட்டுச் சென்றனன். ஒறுத்தல் தொழிற்பெயா; ஒறு பகுதி, த் சந்தி, தல் புடைபெயர்ச்சி விகுதி. மூன்றனுருபு ஏதுப்பொருளது. சேர்த்தினன் பிறவினையாகிய ஆண்பாற்படர்க்கை இறந்தகால வினைமுற்று; சேர் தன் வினைப்பகுதி, த் சந்தி, து பிறவினை விகுதி, இவ்விரண்டுஞ் சேர்ந்த சேர்த்து பிறவினைப் பகுதி, இன் இறந்தகால இடைநிலை, ஆன் ஆண்பாற்படர்க்கை விகுதி. இதுமுதலிய ஆறுசெய்யுளும், மூன்றுஞ் சீரொன்றும் மாவிறுதிச் சீராகவும் மற்ற மூன்றும விளவிறுதிச் சீராகவுமவந்த அறுசீர் நான்காலமைந்தன. ஆதலால் கலிவிருத்தமெனப்படும்.

41. (இ-ள்.) ஆங்கு அக்காலையில், அசமஞ்சகன்- அசமஞ்சசனென்பவன், அஞ்சுமான்எனும் - அஞ்சுமானென்னப்படும், தீங்குஅறு-தீமையில்லாத, புதல்வனை - புத்திரனை, சிறப்பின் ஈன்றனன் - (களிப்பின்)மிகுதியோடு பெற்றனன், வீங்குதோள் - பருந்த தோள்களையுடைய, சகரன்-சகரமகாராசன், வாம்புரவி வேள்விகள் - தாவுகின்ற அசுவமேதங்கள், ஒன்றுஒழி - ஒன்றொழிந்த, நூறுபாங்கினில் பண்ணினன் - நூறு பகுவமாகச் செய்தான். எ-று.

45. (இ-ள்.) மீட்டும் - மேலுடசெய்கின்ற, அவ்வேள்வியின்-அவ்வசுவமேதத்தில், விடுத்த - (பூமியைச்சுற்றிவர) அனுப்பிய, மாமபரி - தாவிஓடுங்குதிரையை, பூட்டுவில் - (அம்பை) பூட்டுகின்ற வில்லையேந்திய, இந்திரன்-இந்திரன், புணாப்பின் - ஆலோசனையினால், வௌவுறா- அபகரித்து, வாட்டம்இல் - துன்பம் இல்லாத, கபிலமாமுனிவன் - கபிலனென்னுமபெருமுனிவன், வால்தவம் - தூய்மையாகிய தவத்தை, ஈட்டுறு - பெருகச்செய்கின்ற, சாலையின் ஒளித்திட்டு - சாலையில் மறைவாகக்கட்டி, ஏகினன் - போயினன். எ-று.

இந்திரன் - பெருஞ்செல்வமுடையான் என்பது பொருள். மீட்டு பிறிதென்னும் பொருள்பட நின்றமையால் இடைச்சொல். உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. வௌவல் - களவுசெய்தல்: வௌவுறா செய்யா என்னும் வாய்பாட் டிறந்தகால வினையெச்சம்; வௌ என்னும் முதனிலைத் தொழிற் பெயரை வினைப்படுத்த உறு என்னும் முதனிலை புணர்ந்து நின்ற வௌவுறு பகுதி, ஆ இறந்தகால வினையெச்ச விகுதி, உகரக்கேடு சந்தி. ஒளித்திட்டு - ஒளி பகுதி, த் சந்தி, து சாரியை, இடு பகுதிப்

பொருள் விகுதி, உகரக்கேடு சந்திபெற்று நின்ற ஒளித்திடு பகுதி, உ வினை யெச்சவிகுதி, இங்கு உகரக்கேடோ சந்தி, பகுதி ஒற்றிரட்டியதே காலம் காட்டியது ; ஒளித்திட்ட, ஒளித்திட, ஒளித்திடுகின்ற, ஒளித்திடுவான் எனஎச்சவினைகளிலும், முற்றுவினையிலும் வருகின்றமையிறைல் இட்டென்பதை அசைமொழி என்னற்க.

46. (இ-ள்.) தள்அரு பெருபுகழ் - நீக்குதலரிய பெரும்புகழையுடைய, சகரர் - சகரர்கள், வாம்பரி - தாவிஓடும் குதிரையை, எள்அருபெருபுவி - நிந்தையில்லாத பெரியபூமியில், எங்கும் - எவ்விடத்திலும், காண்கிலார் - காணுதவர்களாய், பள்ளநீர்வேலையை - ஆழமாகிய நீரையுடையகடலை, தொட்டு - தோண்டி, பாதலத்துள் உறை - பாதாளத்தில்வசிக்கின்ற, கபிலன்மாடு- கபிலமுனிவனிடத்தில், மறைதல் கண்ணுற்றார் - அக்குதிரை இருந்தலைக் கண்டார்கள். எ-று

தள்அரு, எள்அரு எழுவாய்த்தொகாநிலைத் தொடர். தள்ளஅரு, எள்ளஅரு எனக்கொண்டு செயஎன் வாய்பாட்டு வினையெச்சத் தொடரொனினும், தள்ளற்குஅரு, எள்ளற்குஅரு எனக்கொண்டு நான்காம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடரொனினும் ஒக்கும். தொட்டு இறந்தகால வினையெச்சம் ; தொடு பகுதி, உ வினையெச்ச விகுதி, பகுதி ஒற்றிரட்டியதே காலங்காட்டியது, உகரக்கேடுசந்தி.

47. (இ-ள்) தெள்ளிதில்- பிரத்தியட்சமாக, காண்டலும் - காணுதலும், சினவு - கோபிக்கின்ற, மன்னரை-ராசகுமாரராகிய சகரரை, தள்அரு- (பிறரால்) நீக்குதல் கூடாத, முனிமொழி - முனிவனதுசொல், சாம்பர் ஆக்கலும் - சாம்பலாகச் செய்தலும், வள்ளல் - சகரராசன், தன்மைந்தரை - தன்புத்திரரை, வரவுகாண்கலாது - வருதல் காணுமல், உள்ளம்நொந்து - மனம்நொந்து, அஞ்சுமான் - அஞ்சுமானே, செல்க என்று- போகக்கடவாயென்று, ஓதினன் - சொல்லினன். எ-று.

தெள்ளிதில் என்பதில் தெள்ளிது பண்படியாகப் பிறந்த ஒன்றன் படர்க்கைப்பெயர் ; தெண்மை பகுதி, து ஒன்றன் படர்க்கைவிகுதி, மை யீறு கெட்டதும், ளகரத்தோற்றமுஞ் சந்தி, இ சாரியை. இல் ஏழனுருபு. சினவு மன்னர் வினைத்தொகை நிலைத்தொடர். சினவும் மன்னரெனப் பதம்பிரிக்கின் பெயரெச்சத் தொகாநிலைத் தொடர். உகரச்சாரியை பெருமல் வரின் சினக்கும், சினந்த, சினக்கின்ற எனவரும். வினைத்தொகை வினைச்சொலொன்றும் உகரச்சாரியை பெற்றே வரும். அஞ்சுமான் செல்க என்பது விளித்தொகா நிலைத்தொடர் ; இது அண்மைவிளி. நிலைமொழியீற்று னகரம் திரியாது நிற்பதிறைல் அஞ்சுமான் செல்க என்பதை இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடரொன்னலாகாது.

48. (இ-ள்.) அஞ்சுமான் - அஞ்சுமானென்பவன், பாதலத்து அணைந்து - பாதாளத்தில்சேர்ந்து, மாதவன் - பெருந்தவத்தினனுகிய கபில

முனிவனது, செம்சரண்பணிந்து - செந்நிறமாகிய பாதங்களை வணங்கி, அவன் அருளின் - அவனது கட்டளையினால், செல்பரி - ஓடுதற்குரியகுதிரையை, எஞ்சல் இல் சகரனுக்கு-(ஊக்கம்)குறைதலில்லாத சகரனுக்கு, ஈந்து-கொடுத்து, தந்தையா - பிதாக்கள், உய்ஞ்சிட - நல்லகதியடையும்படி, அருதவம்-அருமையாகிய தவத்தை, உஞற்றினான்-முயன்றுசெய்தான்.எ-று.

அருளென்னும் பண்புப்பெயர் தன் காரியமாகிய கட்டளையின்மேலது. இன் உருபு கருவிப்பொருளது. உய்ஞ்சிட காரியப்பேருட்டாகிய செயவென் வாய்பாட் டெதிர்கால வினையெச்சம்; உய் பகுதி, த சந்தி, து சாரியை, இடு பகுதிப்பொருள் விகுதி, சந்தித்தகரம ஞகரமாதல் மெலித்தல், உகரக்கேடு சந்தி, அனைத்துமொருபகுதி, அ எதிகால வினையெச்ச விகுதி, உகரக்கேடு சந்தி, நகரத்துககு ஞகரமும், தகரத்துக்குச் சகரமும் போலியாகவந்தன.

49. (இ-ள்.) அருதவம் - அருமையாகியதவத்தை, பல்நாள்ஆற்றி-பலநாள்செய்து, அஞ்சுமான்என்னும் வேந்தன் - அஞ்சுமானென்னும் அரசன், திருந்தலா - பகைவரும், புகழும்வேற்கை - புகழும்வேலைத் தாங்கிய கையையுடைய, திலீபனை இனிதின்ஈன்று-திலீபனை மகிழ்வாகப்பெற்று, விருந்தினன்ஆகி-விருந்தாளிஆகி, விண்ணோர் எதிர்கொள - தேவர்கள் எதிர்கொண்டுவர, விசும்பில்போனான்-சுவர்க்கத்தில்போயினான், மருந்தினும்-அமிர்தத்தினும், இனியகேள்வி-இனிமையாயுள்ள நூற்கேள்விகளை உணர்ந்த,திலீபனும் வானம்சேர்ந்தான்-திலீபனும் சுவர்க்கமடைந்தான். எ-று

பன்னாள் பண்புத்தொகை நிலைத்தொடர் ; விரிந்தால் பன்மையாகிய நாள்என விரியும் : பல என்பதன் விகாரமொழி பல் என்பர் நன்னூலாசிரியர் முதலியோர். திருந்தலா எதிர்மறை வினையாலணையும் பெயர் ; திருந்து பகுதி, அல் பகுதிவினையை மறுக்கவந்த விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்து மொரு பகுதி, ஆ பல்லோர்படர்க்கை விகுதி; இதனீற்றில் உயர்வு சிறப்பும்மை தொகுத்தல். விருந்தினன் பண்படியாகப் பிறந்த ஆண்பாற்பெயர். விருந்து புதுமைப் பண்பு. விண், விசும்பு, வானம் இடவாகு பெயர். இது முதலிய ஏழு செய்யுளும் முதற்சீரும், நான்காஞ் சீரும விளவிறுதிச்சீராகவும், ஒழிந்தசீர்நான்கும் மா விறுதிச்சீராகவும்வந்த அடிநான் காலமைந்தன ஆதலால் அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தமெனப்படும்.

50. (இ-ள்.) அன்னவன் - அத்திலீபன், அளித்த - பெற்ற, வெற்றிப்பகீரதன் - வெற்றியையுடைய பகீரதனென்பவன், அன்பினோடு-(சகரரிடத்துவைத்த) அன்பினாலே, முன்அரு - நினைத்தலருமையாகிய, முப்பான்ஆயிரம் பருவம் - முப்பதினாயிரம் வருடம், தவம்செய்காலை - தவத்தைச் செய்தபோது, பன்அரு - சொல்லுதலரிய, மறையோன் - வேதங்களையுடைய பிரமன், தோன்றி - எதிரில்வந்து, பகீரத - பகீரதனே, விழைந்தது - நீ விரும்பிய பொருள், என்ன - யாது,உன்அரு - நினைப்பதற்குஅரிய,

கங்கை - கங்கையென்பவள், இந்த உலகினில் - இந்தப்பூமியில், உறுதல் வேண்டும் - அடைதல்வேண்டும். எ - று.

என்னஎன்பது எவனென்பதன் வினைக் குறிப்பு வினைமுற்றின் மரூஉ. இந்த இ என்னும் சுட்டின் மரூஉ. மறையோன் பொருளடியாகப் பிறந்த ஆண்பாற் படர்க்கைப் பெயர் : மறை பகுதி, ய் சந்தி, ஆன் ஆண்பாற் படர்க்கைவிகுதி, விகுதி ஆ ஓ ஆதல் செய்யுள்வழக்கு; மறை தொழிலடியாகப் பிறந்த பெயர் ; மறு பகுதி, ஐ செயப்படு பொருண்மை விகுதி, உகரக் கேடு சந்தி, பொருள் சூத்திரருக்கு மறைக்கப்பட்டதென்பது. இறைவனுடைய குணம் செயல் முதலியவற்றை மறைவாகச் சொல்வது என்னும் பொருளதென்னின் பண்பாகுபெயர்.

51. (இ-ள்.) மைந்தனும் - ஆடவனாகிய பகீரதனும், வேண்டுமென்ன-(கங்கைவருதல்) வேண்டுமென்று கேட்க, அளித்து - வரந்தந்து, வானநதி - உயர்ந்தகங்கை, ஈண்டு எய்தின் - இங்கேவந்தால், எந்தையைஅன்றி - என்தந்தையாகிய சிவனை அல்லாமல், தரிக்குநர் - தாங்கவல்லவர், மற்றுஇல்லை - வேறுஇலர், என்று-என்றுசொல்லி, நந்தல்இல் - அழிவில்லாத, பிரமன்ஏக - பிரமன்போக, நாமவேல்குரிசில் - அச்சந்தைத்தருகின்ற வேலைத்தாங்கிய பகீரதராசன், தூய - களங்கமில்லாத, சந்திரமௌலி, சந்திரனைமுடியிலுடைய சிவன், எய்த - தன்முன்வர, அளப்பு இல் நாள் - அளவுசெய்தலில்லாத நாள்கள், தவம்செய்தான் - தவத்தைச்செய்தான். எ-று.

தரிக்குநர் பல்லோர்படர்க்கை நிகழ்கால வினையாலணையும் பெயர்: தரி பகுதி, க் சந்தி, கு சாரியை, ந் நிகழ்கால இடைநிலை, அர் பல்லோர்படர்க்கை விகுதி : இவ்விடைநிலை காலங்காட்டாமல் பெயரிடை நிலையாய், கொழுநன் எனவருதலும் காண்க. மற்று வினைமாற்றுப் பொருளது. என்று இடைச்சொலடியாகப் பிறந்த செய்யா என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். அச்சப்பொருளதாகிய நாமமென்னும் உரிச்சொல் நாம என ஈறுதிரிந்தது. இங்ஙனமன்றிக் குறிப்புப் பெயரெச்சமெனினும் ஒக்கும்.

52. (இ-ள்) நீறுஒளி-திருநீற்றினது ஒளி,பழுத்தநெற்றி-முதிர்ந்தநெற்றியையுடைய, நிமலன்வந்து எய்தி - பரிசுத்தனாகிய சிவன் வந்து பிரசன்னமாகி, கங்கைஆற்றினை - கங்கையாற்றை, அமைதிஎன்ன - தருவிப்பாயென்று கேட்க, அருதவம் பெரிதும்ஆற்ற - அரியதவத்தை மிகுதியும் செய்ய, போற்று அரு கங்கை - துதித்தலருமையாகிய கங்கை, ஈசன் புரிசடைக்காட்டுள் எய்தி - சிவனது கட்டுகின்ற சடையில் வந்து சேர்ந்து, தோற்றம் இன்று ஆக-வெளிப்படுதலிலதாயிருக்க, மன்னன்-பகீரதராசன், ஈசனைத்தொழுது சொல்வான் - சிவனைத்தொழுது சொல்லுவான். எ-று

அளித்தி ஏவலொருமை வினை, அளி பகுதி, த் சந்தி, து சாரியை, இ ஏவலொருமை எதிர்கால விகுதி, உகரக்கேடு சந்தி, தோற்றம் தொழிற்

பெயர், தோன்று பகுதி, அமபுடை டெயாசசி விகுதி, உகரங்கெடுமன னக ரம நகரமாதலும் சந்தி, குறறியலுகரங்களும, முறறிய லுகரமும அமவிகு திப புணாசசியில பகுதி விகாரபபடும

53 (இ-ள) கஙகையை அளிநபினனை - (சடையிலஅடஙகிய) கஙகையைச கருணையாலகொடு எனறுகேட்க, கடவுள - சிவன, தன் சடை யின்மீது தனசடையில தஙகுநீர - தஙகுகினற கஙகைநீரில, திவலை லக-ஒருதுளியைககொடுகக, தளி-அநதுளியானது,உமிழ-சஙசிறுவ தரபட டட,தரளமகிநதி முததுகளைச சிநதி, எஙகுநீ ப பெருகிற்ட-எஙகும நீரபெ ருகிறுடுமபடி, சநதமினசாலையத - சநதமுனிவனற வேளாவிசசாலையை அடைய, அஙகுஅவன அசசாலையில அமமுனிவன, குடஙகைதன்னுல-உ ளளஙகையால, அளளினன அருநதினுன - அளளி உணடான எ று

கட வுள தொழிலாகுபெயா குடஙக குடமபோலக குழிநதகை அளளினன் அருநதினுன முறறுளள வினைமுறறு வினையெசசமாய அடு தத வினையைககொணடு முடிநதது, வினைமுறறு வினையெசசமானபோது இயறகையாகிய வினையெசசஙகளைப போலாகாமல, தன நிணைபால இட ஙகளைவிட்டு நீஙகாமல நிறகும வினைமுறறு வினையெசசமாகுதல எவவிட நதெனறுல வினைமுறறுகள பெயாகளைப பயனிலைசளாகக கொணடு முடியு ம, பெயரைககொளளாமல வினையைககொணட இடததில எனக சநது முனிவன உணடு செவியினவழி விடடதமையால கஙகைககுச சாநவியெ னும பெயரும, பகீரதன கொணடுவநதமையால பாகீரதியெனனும பெய ரும்வழஙகும்

54 (இ-ள்) அருநதலும-உணணுதலும, அரசனவேணட-பகீரதன்வே ணடிககொளள, அருபெறல கஙகைதனனை - பெறுதலஅரிய கஙகையை, பெருதவன் - பெருநதவததினனுகிய சநதமுனி, செவியின - காதினுல, மீடடும விடுததலும - மீளவும விடுததலும, திருநதலாகடநத - பகைவரை வெனற, வைவேல - கூரமையாகிய வேலைததாஙகிய, பகீரதன் - பகீரதனு டைய, திணதோசசிலவி - திணமையாகிய தேரினது சககரம, பொருநது றும வழியினவகி - பொருநதுகினற சுவடடினவழியே போய, பெடபிே னெ டும-பெருமையோடு, பாதலமபுககது-பாதாளலோகததில புகுநதது எ று.

அனறு, எ அசை சிலவிவடடம், அது பணபாகுபெயா

55 (இ-ள) பாதலநதனயதி - பாதாளததில சென்று, வேநதா அ டலையில - (சகரொன்னும) அரசாகளது சாமபரில, படாதலோடும- செல லுதலும, ஈதுஅறு - குறறமறற, சகரரயாரும - எலலாசசகரரகளும, நறக கநதின்-சுவாககததில, இனிதுசேர்ந்தார - சுகமாகசசோநதாா, மாதவஙகி ழமைபூணட - பெருநதவததின துரிமையை மேறகொணட, மனனனும்- பகீரதராசனும, அயோததி உறறனன அயோததியாநகரததைச்சாாநதான,

இதன்காதை - இந்தநதியின்சரித்திரம், ஈது என்ன இது என்று, கௌசிசன் இயம்பினான் - விசுவாமித்திரமுனிவன் சொல்லினான். எ-று.

வேந்தரடலை ரிபினைக்கப் பொருளதாகிய ஆறும் வேற்றுமைத் தொகை சீலைத்தொடர். மன்னனுமென்ற உம்மை இறந்தது தழீயதன்றே ஐ உயாவு சிறப்புப்பொருளது.

56. (இ-ள்) என்று உயர்கங்கை வரல்முறை-என்று உயர்வாகிய கங்கையினது வருகையின் முறைமையை, உரைத்துஆங்கு அ குழி - சொல்லி அங்கே நடக்கையில், விசாலைமாநகரம-விசாலையாகிய பெரியநகரத்தை, துன்ற-நெருங்க, இந்நகரம் யாதுஎன - இந்நகரம் எத்தன்மையதென்று, இராமன் சொற்றலும - இராமன் கேட்குதலும், கௌசிகன் உரைப்பான்-விசுவாமித்திர முனிவன் சொல்லுவான், வென்றிவேல் அவுணர்தம்மொடு - வெற்றிதரத்தக்க வேலைதாங்கிய அசுரரோடு, தேவர் - தேவர்கள், கொடியவெம்சமர - மிகக்கொடுமையாகிய போரை, தனிபுரிந்து - தாமே செய்து, பொன்றலும - (தம்மிலபலர்) அழிதலும, பொன்றா - சாகாத, மருந்து - அமிர்தத்தை, வேட்டுஅமரர் - விருமபித்தேவர், புணரியை-பாற்கடலை, பல்பகலகடைந்தார் - பலநாள் கடைந்தார். எ-று.

இச்செய்யுள்முதல், கக-செய்யுளும் முதற்சீரும், மூன்றாஞ்சீரும், ஐந்தாஞ்சீரும, ஆறாஞ்சீரும் விளவிறுதிச் சீராகவும், ஒழிந்த மூன்று சீர்கள் மாவிறுதிச் சீராகவும் வந்த நான்கடிகளால் அமைந்த செய்யுள்களாதலால் எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தங்களெனப்படும். சொற்றலும் இறந்தகால வினையெச்சம்; சொல் பகுதி, து, அல், சாரியை, உம் இறந்தகால வினையெச்ச விகுதி, லகர தகரங்கள் றகரமாதலும, உகரங்கெடும் சந்தி. கொடியவெம ஒருபொருட் பன்மொழி. புணரி இடையறாது என்னும் பொருளதாதலின் இ வினைமுதற் பொருண்மை விகுதி. பொன்றாமருந்து என்பதில் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம தன் காரணமாகிய மருந்தென்னும் பெயர்கொண்டது.

57. (இ-ள்) மாஇருஞாலம்-மிகப்பெரியபூமி, தாழிஆ-சாடியாகவும், மந்தரம்-மந்தரமலை, மத்துஆ-மத்தாகவும், மதிதறிஆ-சந்திரன் தூணாகவும், காயும்வெம்விடத்து - சுடுகின்ற வெவ்விய விடத்தையுடைய, வாசுகிநாண் ஆக-வாசுகியென்னும் பாம்பு கயிறாகவும், கடல்புனல்-கடலினீர், வெள்தயிர்ஆ-வெண்மையாகிய தயிராகவும், ஆயிரம்பருவம்- ஆயிரம்வருடம், கடைதலும் - கடைதலும், ஆலம்பிறப்ப-விஷம்பிறக்க, மால்முதலியஅமரர்- திருமால் முதலிய தேவர், பாய்விடை - பாய்கின்ற ரிஷபக்கொடியை, உயர்த்த- உயரப்பிடித்த, பால்மதிக்கண்ணி - வெண்மையாகிய பிறைச்சந்திர மாலையணிந்த, பண்ணவன்பதம - சிவமூர்த்தியினது பாதங்களை, பழிச்சினர் - துதித்தார்கள். எ-று.

மாயிரு ஒருபொருட் பன்மொழி: இடையேதோன்றிய உடம்படு மெய்யல்லாத யகரமெய் நன்-உருபு-கு-ஈசு-ஆல் தோன்றியது. ஆக என்னும் செயவெனெச்சம் ஈறுதொகுத்தல் பெற்றது. பழிச்சினா பல்லோரா படர்க்கை இறந்தகால வினைமுற்று; பழிச்சு பகுதி, இன் இறந்தகால இடைநிலை, அர் பல்லோரா படர்க்கை விகுதி, உகரக்கேடு சந்தி.

58. (இ-ள்) வெயில்-சிவந்தஒளி, உடன்முளைத்து-நன்றுஞ் தோன்றி, கிளர்ந்தசெம்மேனி-பிரகாசித்த சிவப்பாகிய மேனியையுடைய, விமலன்- சிவமூர்த்தி, ஆங்குஎய்தி - ஆங்கே வந்து, மால்முதல்ஆம - திருமால் முதலாகிய,செயிர்அறுதேவர் - குற்றமற்றதேவர்களது,பருவரல்துடைத்து-துன்பத்தைநீக்கி, திகழ்விடம அருந்தினன்அகல - விளங்குகின்ற விடத்தை உண்டவனுகி நீங்க, மயிலியல்பாகன் - மயில்போலும்சாயலுடைய பார்வதியை ஒருபாகத்திலுடையவனது, அருளினைவியந்து - கருணையை அதிசயித்துப்பேசி, மால்முதலாகிய தேவர் - திருமால்முதலியதேவர், பயில்தருகடலை - கடைகின்ற கடலை, மீளவும - மீளவும, விழைந்து- விரும்பி, பற்பலநாள் கடைந்தனர் - பலபலநாள் கடைந்தார்கள். எ-று.

மயிலியல் உவமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். வியந்து இறந்தகால வினையெச்சம; வியபகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, உ வினையெச்ச விகுதி, சந்தி த்தகரம் நகரமாதல் மெலித்தல் விகாரம்.

59. (இ-ள்.) மந்தரம் தாழ - மந்தரமலை அமிழ்ந்தமையினால், மாயவன் - திருமால், ஆமைஉருக்கொடு - ஆமையினுருவங்கொண்டு, வலியினால் - பலத்தினால், தாங்கி - சுமந்து, உந்து நீர்க்கடலை - தள்ளுகின்றஅலைநீரையுடைய கடலை, கடைதலும் - கடைதலும், ஓர்கை கமண்டலம் - ஒருகை கமண்டலத்தையும், ஓர்கைதண்டுஏந்தி - ஒருகை யோகதண்டத்தையும் ஏந்தி, நந்தல் இல் - அழிதலில்லாத, தன்வந்தரி முதல் பிறந்தான் - தன்வந்தரி முதலில் பிறந்தான், நாடகக்கூத்தியர் ஆரும் - நாடகத்தில் வல்லகூத்தியராகிய, அந்தம் இல்-முடிவில்லாத, அரம்பைமகளிர் - தெய்வப்பெண்கள், தெள்அமுதொடு - தெளிவாகிய அமுதத்தோடு, அறுபது கோடிவந்து உதித்தார் - அறுபதுகோடியர் வந்துபிறந்தார். எ-று.

கூத்தியர் தொழிலடியாகப் பிறந்த பலர்பாற் படர்க்கைப் பெயர்: கூத்து (முதனிலையில்லாத் தொழிற்பெயர்) பகுதி, இ பெண்பாற் படர்க்கை விகுதி, உகரக்கேடு சந்தி, இதன் பன்மையை உணர்த்தப் புணர்ந்தது அர் விகுதி, ய் சந்தி. ஒருமை விகுதிகெடாது நிற்க, பன்மை விகுதிபெற்ற பெயர்கள் பூங்குழலியர், சிறுமியர், பிறைநுதலியர். அறுபதுகோடி எண்ணலளவை யாகுபெயர். அறுபது, பத்துக்கோடி இவ்விரண்டு தொடரும் பண்புத்தொகை நிலைத்தொடர.

60. (இ-ள்.) நிலவுகொப்புளிக்கும் - சந்திரிகையை மிகுதியும் வீசுகின்ற, வெள்நகை - வெண்மையாகிய பற்கள் அமைந்த, துவர்வாய் - சிவந்தவாயையுடைய, நிகரிலா - உவமையில்லாத, அரம்பையர் நமர்கு - அரம்பையர்களுக்கு, சிலதியர் - தோழியர், அநந்தமகளிர் வந்து உதித்தார் - கணக்கிலலாத பெண்கள்வந்து பிறந்தார், திகழ்வளி மனத்தினும் - விளங்குகின்ற காற்றினும் மனத்தினும், கடிய - வேகமாய்ச் செல்லத்தக்க, கலினம் - கடிவாளம்பூண்ட, வாம்புரவி பிறந்தது - தாவிஓடும் உச்சைசிரவசென்னும் குதிரைபிறந்தது, பின்னர் - பின்பு, கருகடல்முழுவதும் - பெரிய கடல் முழுமையும், சிவப்ப - செந்நிறமாகத்தோன்ற, புலரியில் எழுந்த - விடியற்காலையில் உதயஞ்செய்த, சேடுஇளகதிரின் - மிகக இளமையாகிய சூரியனைப்போல. பொலிவின் கௌத்துவம் பிறந்தது - மிகுந்த ஒளியோடுகௌத்துவமணி பிறந்தது. எ-று.

நிலா என்னும் பெயர் குறியதன்கீழ் ஆக்குறுகி, உகரமேற்றது. நன் உயிர்-கு-உட கொப்புளிக்கும் பெயரெச்சத்தில் கொட்புளமெனும் பெயரடியாகப் பிறந்த கொப்புளி பகுதி. நகை தொழிலடியாகப் பிறந்தபெயர், நகு பகுதி, ஐ வினைமுதற் பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி; ஒளியையுடையது என்பது பொருள். மகளிர் மக பகுதி, அள் பெண்பால் படர்க்கை விகுதி, விகுதி-அகரககேடு முதற்குறை, அல்லது ளகர விகுதி எனினும் பொருந்தும், இவ்வொருமையின் பன்மையையுணர்த்த இர் விகுதி புணர்ந்தது.

61. (இ-ள்.) வியன்சினை - பெருங்கிளைகளையுடைய, தருக்கள் ஐந்தும் - கற்பகமரங்களைந்தும், ஆங்குஉதித்த - அப்பாற்கடலில் பிறந்தன, விண்ணவர் முதலினோர் - தேவர்முதலினோர், ஆரும்-உண்ணுகின்ற, பயன்படு - பாலுண்டாகின்ற, தேனுபிறந்தது - காமதேனுப் பிறந்தது, மற்று ஓர்பாலமதி - வேறொரு வெண்மையாகிய சந்திரன்போன்ற, குடை அவண்உதித்தது - குடைஅங்குப் பிறந்தது, நாற்கோட்டு - நான்குதந்தங்களையுடைய, இயங்குவரைநிகர் - உலாவுகின்ற மலையை ஒத்த, அயிராவதப் பகடு - ஐராவதமென்னும் யானை, எழுந்தது - பிறந்தது, பின்னர் - பின்பு தயங்கு - நன்றாய் விளங்குதல், ஒளி - மறைந்த, முகத்து [illegible] டைய, காக்கைமீது உயர்த்த - காக்கைக் கொடியை மேலே உயர [illegible] தௌவை ஆங்கு உதித்தனள் மூதேவிஅங்குப் பிறந்தாள். எ-று.

ஐந்துமென்ற உம்மை முற்றும்மை. விண்ணவர் முதலினோர் யாரும் பயன்படு எனப்பாடமானபோது - தேவர் முதலியோர் எவரும் பயனைப் பெறுகின்ற என உரைக்க - மேல்காட்டிய பாடத்துக்கும் இவ்வுரை உரைக்கினும் பொருந்தும். யார், ஆர் யாவரென்பதன் மரூஉ இங்குப்பிறந்த குடை வருணனடைந்தான். தயங்கொளி முகத்தென்ற [illegible] தௌவைக்கென்க. துக்கமே விளங்கு முகத்தினளாதலின்] [illegible] கு முன்பிறந்தவளாதலால் தௌவையென மூதேவிக்குப் பெயர் [illegible]

62. (இ-ள்) பூகதிர்பரப்பி - பொலிவாகியகிரணங்களைப்பரப்பி, உலகுள
ளாம்-உலகமுழுமையும், விளக்கும்-விளங்கச்செய்கின்ற, புண்ணியத்திங்கள்-
புண்ணியத்தையொத்தசந்திரன், ஆங்குஉதித்தது-அங்குப்பிறந்தது-ஓங்குபை
ங்கணைக்கால்-உயர்கின்றபசுமையாகியமுடங்கிய நணைடி லுள்ள, செய்இதழ்க
கமலத்து-சிவந்தஇதழ்களைநிரம்பிய தாமரைப்பூவினது, ஒரூகுஒளிபரப்பு-ஓ
ங்குகின்றஒளியைப் பரப்புகின்ற, பொன்பொகுட்டு-பொன்னாகிய பொகுட்
டில், வாங்கு-வளைகின்ற, நுணுநுசுப்பு-நுட்பமாகியஇடையையும், வெள்நகை-
வெண்மையாகிய பற்களமைந்த, துவர்வாய் - சிவப்பாகிய வாயையும், வடி
புரை - மாம்பிஞ்சின் பிளவையொத்த, செய்அரிநெடுங்கண் - சிவப்பாகிய வரி
யுள்ள பெருங்கண்களையும், குயில் - குயிலின் குரலையொத்த, கிளுதலை - மது
ரமாகிய மழலைச்சொல்லையும், பொன்உறழ்மேனி - பொன்னையொத்தமேனி
யையுமுடைய, திருமகள் உதித்தனள் - இலட்சுமி பிறந்தாள் எ-று.

புண்ணியத்துக்கு உரு வெண்மைநிறத்ததாதலால் அது உவமையா
யிற்று, செயிதழ பண்புத்தொகை நிலைத்தொடர். செம்மை என்னும்பண்
புப்பெயர் இதழென்னும் வருமொழிப் புணர்ச்சியில், நிலைமொழி யீற்று
மை யீறுகெட்டு, முன்னின்ற மகரமெய் யகரமாகி, செ என்னும் ஆதி எ
ழுத்து நீண்டது: ஆதி நீளாதாயின் செவ்விதழென வரும். கமலம் முத
லாகுபெயர். வடு மாம்பிஞ்சு, வடி அதன் பிளவு இ ஒன்றன்பால விகுதி.
தீ இனிமையுணர்த்தும் பண்புப்பெயர்: இது இரட்டிய தித்தி என்னும்
பகுதியடியாகத் தித்திப்பு, தித்தித்து, தித்தித்த, தித்தித்தது, என வினைகளை
பிறக்கும். பரப்பி பிறவினையாகிய இறந்தகால வினையெச்சம்; பர தன்
வினைப்பகுதி, ப் சந்தி, பு பிறவினை விகுதி, பொற பரப்பு பிறவினைப் பகு
தி. உகரத்தின் [illegible] ஆகிய இ இறந்தகால வினையெச்ச விகுதி, உகரக்கேடு
[illegible] வழாறனறி, எழும்பென்னும் தன்வினைப் பகுதி, எழுப்பெனப்
பிறவினைப் பகுதி ஆவதுபோல வரம்பென்பது வரப்பெனப் பிறவினைப் பகு
தியாயிற்றெனின் பொருந்தும்.

63. (இ-ள்) வாருணிநறவம் வாருணியாகியமது, பிறந்தது-தோன்றிய
[illegible]-பின்பு, அதுநுகர்தலால்-அம்மதுவைஉண்டதனால், தேவர்-தே
[illegible]. சுரர்க்கழ் - சிறப்புண்டாகிய, சுரர்ஆயினர்-சுரரெனப்பட்டார், அஃ
[illegible] அந்த மதுவை உண்ணாதவர், அசுரர்ஆயினர் - அசுரரென்
[illegible] சிறந்து ஓங்கும் - சிறப்புப்பெற்று உயர்கின்ற, ஆர் அமுதுஉ
[illegible]மையாகிய அமிர்தம் பிறந்தது, அலங்குஒளிமணியும்-மிகுதி
[illegible]ற கௌத்துவ மணியையும், திருவையும் - திருமகளையும்,
[illegible]அளித்தார் - திருமாலுக்குக் கொடுத்தார், ஏர்கெழும் அமுதம்-
[illegible]கிய அமுதம், எமது எமது என்ன - எம்முடையது எம்முடைய
[illegible]து, அவுணரும் அமரரும் - அசுரரும் தேவர்களும், ஏற்றார்-கையே

வாருணி வருணன் மகள் : ஆதிசேடனுக்கு மனையாளாயினுள். இப்பதம் தத்திதாந்த நாமம். இவள் மதுவுக்கு அதிதேவதை. எமது பொருளாடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று : யாம பகுதி, அ சாரியை, து ஒன்றன் படர்க்கை விகுதி, யா இடப்பிறப்பாலொத்த எகரமானது குறுக்கல்-அடுக்கு அவாப்பொருளது.

64. (இ-ள்)ஏற்றவர்தம்மை-ஏற்றவர்களை, மாயவன்விலக்கி-திருமால் அப்புறப்படுத்தி, மோகினிஉருவொடும்எய்தி- மோகினியுருவத்தோடும்வந்து, தோற்றிய அமுதம்முதலிய எவையும் - பிறந்தஅமுதம் முதலிய எல்லாப்பொருள்களையும், சுரர்தமக்கு அளித்தலும் - தேவர்களுக்குக் கொடுத்தலும், மாற்றம் (அசுரர்மேல்) பகைமை, ஊற்றிருந்து - சுரப்பெடுத்து, ஒழுகும் வச்சிரப்படையால் - பெருகுகின்ற வச்சிராயுதத்தினுல், அடல்கெழும் அவுணரை ஒறுத்து - வலிமிகுந்த அசுரரைத்தண்டித்து, ஆங்கு - அப்போது, ஆற்றலின் - தன்வலியினுல், மகவான் - இந்திரன், பொன் உலகு அனைத்தும் - சுவர்க்கலோகத்தார் எவரையும், தனது அடிப்படுத்தினன்அளித்தான் - தன்காற்கீழொதுங்க நடத்திக்காத்தான். எ-று.

அசுரர் கொடியவர்களாதலால் விருப்புக்கொண்டு வந்து விழுதலும் மோகினியுருக்கொண்ட பெருமான் உங்களில் வல்லவன் என்னை அங்கீகரிக்கலாமென்று சொல்லுதலும். யான்வல்லேன் யான்வல்லேனென்று ஒருவரை யொருவர் தாக்கினமையாலும், இந்திரனது வச்சிரப் படையினுலும் மாண்டார்கள் ; சாதுக்களாகிய தேவர்கள் தாயெனப் பாவித்து நின்றமையால் அமுதம்பெற் றுயர்ந்தார்கள். மகவான் யாவராலும் பூசிக்கப்படுவோனென்பதுபொருள்.

65. (இ-ள்.) திதி - திதியென்பவள், என்னுடைப் புதல்வர் - என்னுடைய புத்திரர், வேரொடுமடிய - சந்ததியோடும் அழியும்படி, இகல்உடைசூழ்ச்சியின்ஒறுத்த - பகைமையையுடைய ஆலோசனையினுல் தண்டித்த, இன்உயிர்அனைய - (உனக்கு) இனிய உயிரை ஒத்த, அதிதிமைந்தரை - அதிதியின் புத்திரராகிய தேவர்களை, ஈண்டுஒறுப்ப - இப்போதுதண்டிக்கும்படி, ஓர்சிறுவனை - ஓர்புத்திரனை, அருள்க என்று - கிருபைசெய்க என்று, அன்னம்என் நடையாதிதி - அன்ன நடையென்னத்தக்க நடையுடைய திதியென்பவள், இரந்து உரைப்ப - யாசித்துக் கேட்டுக்கொள்ள, காசிபன் - காசிபமுனிவன், நீபுனிதமாய் - நீபரிசுத்தமுடையளாகி, ஆயிரம்பருவம்-ஆயிரம்வருடம், மன்னி - சலனமில்லாமல், தவம்இயற்றின் - தவத்தைச்செய்தால், மகப்பெறுவாய் எனஅறைந்தான் - பிள்ளைபெறுவாயென்று சொல்லினுன். எ-று.

உடை இரண்டனுள் முன்னது ஆரும் வேற்றுமைச் சொல்லுருபு. பின்னது பண்படியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம் ; இவ்விரண்டும் ஈறு தொகுத்தல்பெற்றன. ஒறுப்ப காரியப்பொருட்டாகிய எதிர்காலச் செ

யவெனெச்சம் ; ஒறு பகுதி, ப் சந்தி, ப் விரித்தல் விகாரம், அ எதிர்கால வினையெச்ச விகுதி. பெறுவாய் ஏவலொருமை வினை: பெறு பகுதி, வ் சந்தி, ஆய் ஏவலொருமை எதிர்காலவிகுதி; வகரமெய் எதிர்கால இடைநிலையாயினபோது முன்னிலையொருமை எதிர்கால வினைமுற்றென்க. இவ்விரண்டில் முன்னதை இங்குக் கொள். புனிதம் குணியைக் குணமாககூறவதோர்மரபு வழுவமைதி. ஓர்மரபு பெருகுவதற்குச் சந்ததியே காரணமாதலால் அதனை வேறொன்றார்.

66. (இ-ள்.) ஆயிரம்பருவம் நோற்பவள் - ஆயிரம்வருடம் தவஞ் செய்பவளாகிய திதி, ஒருநாள் - ஒருதினம், அலைகுழல் விரித்து உறங்குதலும் - அலையும் இயல்புள்ள கூந்தலை விரியவிட்டு நித்திரித்தலும், பாய்ஒளி- பாய்கின்ற ஒளியையுடைய, வயிரப்படையினன் நோக்கி - வஃசிராயுதத்தையுடைய இந்திரன் கண்டு, பைந்தொடி வயிற்றினுள்புகுந்து - திதியினுடைய வயிற்றுள்புகுந்து, சேயைஏழ்கூறாய் அறுத்தலும் - இளங்குழந்தையை ஏழ்பங்காகத் துண்டுசெய்தலும், அணங்கு - அப்பெண், சிதைத்திடல் என இரந்திடலும் - அழித்திடாதையென்று கெஞ்சுதலும், மாயிருவிசும்பின்-மிகப்பெரிய சுவர்க்கத்தில், ஏழ்மருத்துவர்ஆய் - ஏழு மருத்துக்களாகி, திரிவுறவரம் அளித்து அகன்றான் - சஞ்சரிக்கும்படி வரத்தைக் கொடுத்துப் போனான். எ-று.

பைந்தொடி என்பதில் பசுமையென்னும் நிலைமொழி தொடியென்னும் வருமொழிப் புணர்ச்சியில், மை யீறுகெட்டு, ப என்னும் அடி அகரம் ஐ ஆகி, 'இனையவும்' என்பதனால் சுகரம் கெட்டு, நகரமாகிய இன மிகுந்து புணர்ந்தது. தொடி தொழிலடியாகப் பிறந்தபெயர் : தொடு பகுதி, இ செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி, பொருள் தொடுக்கப்படுவதென்பது ; இத்தொடர் பண்புத்தொகை நிலைத்தொடராதலால், இது பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப் பெயர். சேய், அணங்கு பண்பாகுபெயர்கள். மருத்து ஒருவகைத் தேவசாதியார்.

67. (இ-ள்.) அரும்பு இளமுறுவல் - முல்லை அரும்பை ஒத்த புன்சிரிப்பையுடைய, திதிமுனம்விரதம் ஆற்றுழி இவ்விடம்ஆகும் - திதியென்பவள் முன்புதவம்செய்த இடம் இந்த இடமாகும், பொருந்தலர் கடந்த - பகைவரைவெற்றிகொண்ட, இக்குவாகுப்பேர்ப் புரவலன்- இட்சுவாகு என்னும் பெயருடையஅரசன், அலம்புசைஎன்னும் - அலம்புசையென்றுசொல்லப்படும், கரும்பினைக்கலந்து - கரும்பைஒத்தவளைச்சேர்ந்து, ஆங்குஅளித்திடு - அப்போதுபெற்ற, விசாலன் கட்டிய நகரம்ஈது - விசாலன் கட்டிய நகரம்இது, அவன்றன் பொருந்தியமருமான் - அவனுடைய சேர்ந்தபேரனாகிய, சுமதிஇந்நகரம் - சுமதியிந்நகரத்தை, புரவுபூண்டு இருக்குநன்என்றான் - காத்தலை மேற்கொண்டிருக்கின்றான். எ-று.

அலம்புசை தெய்வவேசி. கரும்பு உவமையாகு பெயர். விசாலன் மகன் ஹேமசந்திரன், இவன்மகன் சுசந்திரன், இவன் மகன் தூம்ராசுவன், இவன் மகன் சிருஞ்சயன், இவன்மகன் சகதேவன், இவன்மகன் குசாசுவன், இவன்மகன் சோமதத்தன், இவன்மகன் சுமதி ஆதலால் மகன் மகனல்லூண்மைபற்றிச் சுமதியைப் பொருந்திய மருமானென்றார்.

68. (இ-ள்.) கோசிகன்-விசுவாமித்திரன், இவ்வாறு-இப்படி, உணைக்கும்எல்லையினில் சொல்லுகின்றகாலத்தில், கோதுஅறு-குற்றமில்லாத, சுமதிவந்துஎய்தி-சுமதிவந்துசேர்ந்து, ஆசைகள்தோறும் - எல்லாத்திக்குகளிலும், தன்புகழ்நிறுவும் - தன்கீர்த்தியை நிலைபெறச்செய்யும், ஐயனை-பெரியானுகிய ஸ்ரீராமனை, அளவளாய் - அன்போடு மனங்கலந்துபேசி, தழீஇக்கொண்டு-தழுவிக்கொண்டு, வசுஅறும்-நிந்தையில்லாத, தனதுநகர்வயின் கொணரா - தன்நகரத்தில் அழைத்துவந்து, இயற்றிய - செய்த, விருந்துஎதிர்விரும்பி - விருந்துணவை எதிராகவிரும்பியுண்டு, மாசுஅறுமுனியும்-காமவெகுளிமயக்கமில்லாத விசுவாமித்திரனும், தம்பியும்தொடர - இலட்சுமணனுந்தொடர்ந்துவர, மிதிலைவளர்மருங்கு அணைந்தனன் - மிதிலாபுரிக்குசமீபத்தில் சேர்ந்தான். எ-று.

நிறுவும் நிகழ்காலப் பிறவினைப் பெயரொச்சம்; நில்தன்வினைபகுபிறவினைவிகுதி,பகுதியீறற லகரங்கெட்டு, விகுதிமுதல் தகரம் நகரமானது சந்தி, இப்படிமுடிந்த நிறு பிறவினைப்பகுதி, உ சாரியை, வ் சந்தி, உம்நிகழ் காலப் பெயரொச்சவிகுதி, உகரக்கேடும்சந்தி. அளவளாய் இறந்தகால வினையெச்சம். அளவளா பகுதி, உகரத்தின் திரிபாகிய ய் விகுதி; அளவு மனங்கலத்தல் தன்னளவும் முன்னிலையானளவும், விரவுதலால் வருவதாதலால் அளவளா முதனிலைத் தொழிற்பெயரென்க. தழீஇக்சொண்டு என்பதில் அளபெடை சொல்லிசை யளபெடை. விருந்து புதியவர்க்குப் பண்பாகுபெயர்; அவர்க்குச் சமைத்த உணவுக்குக் காரணவாகுபெயர். எதிர்விரும்பி - விருந்திடுவோன் விருப்பத்தினளவுவிரும்பி என்பது. ரு-ஆம் வரியில், கொணர என்பதைக் கொணரா என்று திருத்துக.

69. (இ-ள்.) கூன்புறக்கனி - வளைந்த மேற்புறமுடைய கனிகள், தாழ்கவிழ்குலைதூக்கும்-தொங்குகின்ற கவிழ்ந்தகுலைகளைத் தூக்குகின்ற, குறுகமுத்து - சிறுகழுத்துடைய, அரம்பையில்தாவி-வாழைமரத்தில் குதித்து, வான்படர்ந்து ஓங்கும் - மேகத்தில்சென்று உயர்கின்ற, கமுகு இளபாளை - கமுகமரத்தினது மென்மையாகியபாளை, கிழிதர - கிழியும்படி,வாளைபாய்ந்து உழக்கும் - வாளைமீன் பாய்ந்து கலங்கச்செய்கின்ற, கான்படர் மிதிலை - சோலைகள் படர்ந்துள்ள மிதிலையாகிய, வளநகர்மருங்கு - வளப்பமுடைய நகரத்தின் பக்கத்தில், கண்கவர் - (பார்ப்பவருடைய) கண்களைகவருகின்ற, ஓர்சாலையைநோக்கி - பன்னசாலையைப் பார்த்து, ஊன்கெடநோற்ற - உடல் இளைக்கும்படி தவஞ்செய்த, முனிவ இவ்விடம் - முனிவ

னே இந்தஇடம், ஏது உரைத்திஎன்றிட - யாதுசொல்லென்று கேட்க, முனிஉரைப்பான் - முனிவன் சொல்லுவான். எ-று.

கூன்புறம் வினைத்தொகை நிலைத்தொடர், விரிந்தால் கூனிய, கூன்கின்ற, கூனுமென விரியும். தாழ்என்னும் முதனிலையை வினைத்தொகை வினைச்சொல்லாக்காமல், வினையெச்சப் பொருள்பட நின்றதெனக் கொண்டு, தாழ்ந்தென உரைப்பினும் பொருந்தும். வான் இடவாகுபெயர், நோற்ற இறந்தகாலப் பெயரெச்சம்; நோல் பகுதி, ற் இறந்தகால இடைநிலை, அ பெயரெச்சவிகுதி, லகரம் றகரமானது சந்தி, கிரிசா காரியப்பொருட்டாகிய எதிர்கால வினையெச்சம்: கிழியென்னும் முதனிலைத் தனிவினைப்பெயரை வினைப்படுத்தத் தா என்னும் முதனிலை புணர்ந்த கிழிதா பகுதி, அ எதிர்கால வினையெச்ச விகுதி, தா தவ்வானது குறுக்கல், ருவிரித்தல் விகாரம், உகரக்கேடு சந்தி.

70. (இ-ள்.) ஏர்கனிந்துஒழுகும்-அழகுபழுத்துவழிகின்ற, இன்உரு-இனியஉருவையும்,துவர்வாய்-பவளம்போன்றவாயையுமுடைய, அகலிகை-அகலிகையினது, நகைவிருந்து-புன்சிரிப்பாகியவிருந்தை,அருந்த-உண்டதலைவனாகலை-நீண்டஒலிக்கின்ற,கழல்கால்இந்திரன்-வீரகண்டையணிந்தகாலையுடைய இந்திரன், எய்திமருவுதல் - வந்து அவளைச்சேர்தலை, கோதமன்நோக்கி - கௌதமன் உணர்ந்து, சீர்கெழுபலம் வீழ்ந்திடுக எனச் சபித்து - சிறப்புண்டாகிய விதையம் அறுந்து விழக்கடவதென்று சபித்து, சேயிழைதன்னை - செம்பொனணியணிந்த அகலிகையை, ஊண்இன்றி-உணவில்லாமல், ஆர்தரும்அடலை - நிரம்பியுள்ளசாம்பல்,பாயல்ஆய் - படுக்கையிடமாக, பல்நாள் - பலநாள், அருபிஆய் - உருவமில்லாதவளாகி, உறைக எனச் சபித்தான் - தங்கக் கடவையென்று சபித்தான். எ-று.

ஊண் உண்ணப்படுவதென்னும் பொருளில் உண் பகுதி, ஐ செயப்படுபொருண்மை விகுதி புணர்ந்துகெட்ட மாத்திரத்தில் முதனீண்டது: இவ்வாறன்றி ஆகுபெயரெனக் கொண்டு, உண் பகுதி, தல் என்னும் புடைபெயர்ச்சி விகுதி புணர்ந்து கெட்டது, கெடுதலும் முதல் நீண்டமையால் முதனிலை திரிந்த தொழிலாகு பெயரென்க. வீழ்ந்திடுக -உறைக என்னும் வியங்கோள்களில் அகர ஈறு தொகுத்தலாயின, சேயிழை பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயர்.

71. (இ-ள்) ஏங்கும்-வருந்துகின்ற, நுண்நுசுப்பாள்-நுண்ணியஇடையையுடையஅகலிகை,முனிவ-முனிவனே, இச்சாபம்ஒழியும்நாள்-இச்சாபம்(என்னினின்று) நீங்கும்நாளை, கூறுஎன - சொல்லென்று கேட்க, இராமன் - இராமனது, பூகழல்துகள் - தாமரை மலர்போன்ற பாதத்தினது பொடி, உன்மெய்யினில் கதுவின் - உன்னுடலில் படிந்தால், போகும்என்று உரைத்தனன் அகல - நீங்குமென்று சொல்லிப்போக, தீங்குஅறுவலாரிக்கு - தீமை நீங்கிய இந்திரனுக்கு, அமரர் - தேவர்கள், தென்புலத்

தோர் - பிதிரருடைய, கூறது ஆய் - பாகத்துக்குரியதாக, திகழ்தகர் - விளங்குகின்ற ஆட்டினது, வீசம்வாங்கினர் அமைப்ப - பீசத்தை எடுத்து ஒட்டவைத்ததனால், கற்பகநிழல் - கற்பகத்தினிழலில், வானவர்போற்ற வீற்றிருந்தான் - தேவர்கள் துதிசெய்யும்படி (இந்திரன்) பெருமையாக இருந்தனன். எ - று.

கௌதமனுடைய சாபத்தினால் இந்திரனுக்குப் பீஜம் அறுந்து விழுதலும், பிதிர் தேவர்களுக்குத் தரும் யாகப் பசுவாகிய ஆட்டின் பீசத்தை பிதிரர்கள் பெறுதபடி வரம் பெற்றுக்கொண்டு, பின் ஆட்டின் பீசத்தை எடுத்து இந்திரனுக்கு ஒட்டினர். தென்திசையிலிருப்பவராதலால் பிதிரருக்குத் தென்புலத்தாரெனப் பெயராயிற்று. வலாரி - வலனைச்சங்கரித்தவன்.

72. (இ-ள்.) திது அறு - குற்றமற்ற, முனிவன் - விசுவாமித்திரன், இவ்வாறு உரைத்தலும் - இப்படிச் சொல்லுதலும், செம்மல்கேட்டு - சிராமன்கேட்டு, போதருநெறியின் - நடக்கின்றவழியில், ஐயன் பொன்அடித்துகள் - ஐயனுடைய அழகிய பாதத்தில்படிந்ததுகள், சென்றுஎய்த - போய்ப்படிந்ததனால், கோதமன்பன்னி - கௌதம முனிவனுடைய பத்தினியாகிய அகலிகை, சாபம்நிங்கி - சாபம்ஒழிந்து, வெம்குருதி வேல்கண் - வெவ்விய இரத்தந்தோய்ந்த வேல்போலும் கண்களைஉடைய, மாது உருவாகி - பழைய பெண்ணுருவைப் பெற்றவளாகி, ஆசிவழங்கி - ஆசீர்வாதத்தைச் சொல்லி, தன்மகிழ்நன் சேர்ந்தாள் - தன்நாயகனாகிய கௌதமனைச் சார்ந்தாள். எ - று.

செம்மல் பண்புப்பெயர் ; செம் பகுதி, ம் சந்தி, அல் பகுதிப்பொருள் விகுதி, இது பண்பாகு பெயராய்க் குணியை உணர்த்தியது. மாதுகாரிய வாகுபெயர். இச்செய்யுள் முதலிய இருபத்து நான்கு செய்யுளும் முதற்சீரும் நான்காஞ்சீரும் பெரும்பாலும் விளமீறுதிச்சீராகவும், ஒழிந்த சீர் நான்கும் மாவிறுதிச் சீராகவும் வந்த கழிநெடிலடி நான்காலமைந்தன ஆதலால் அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தமெனப்படும். பெரும்பாலுமென்றமையால் சிறுபான்மைகாயீறுதிச சீரும்வரும். அது எழுபத்தாறும் செய்யுளில் நான்காம் அடியில் நான்காஞ்சீரைக் காண்க.

73. (இ-ள்.) வள்ளலும் - ஈகைத்தன்மையுடையசிராமனும், இளையகோவும் - இலக்குமணனும், வான்தவ முனிவன் பின்போய் - உயர்ந்ததவத்தையுடைய விசுவாமித்திரன் பின்னேசென்று, அள்இலைப் பலவின்நெற்றி - அச்சவடிவாகிய இலைகளையுடைய பலாமரத்தின்முகத்தில், அளிந்து வீழ் சுளையின்ஊறும் - கைந்துவீழ்கின்ற சுளையில் சுரக்கின்ற, கள்அயின்று - இரசத்தையுண்டு, இளசூல்மந்தி - இளமையாகிய கருப்பத்தையுடைய பெண்குரங்கு, கடுவனோடு - ஆண்குரங்கினோடு, இனிதின் ஓடும் - களிப்பினால்ஓடுகின்ற, வெள்ளநீர் - வெள்ளமாகிய நீர்வளமுள்ள, படப்பை சூழ்ந்த -

சோலைகளால் சூழப்பட்ட, மிதிலைமாநகரம்புக்கார் - மிதிலையென்னும் பெரிய நகரத்தில் புகுந்தார். எ-று.

வள்ளல் பண்பாகுபெயர். சிகரத்துக்குக இழிடத்தை நெற்றி என்றது இலக்கணை வெள்ளமும் அவ்வாகுபெயர்

74 (இ-ள்) சேடுஇளபரிதிபபுத்தேள் - மிகுந்தஇளமையாகியசூரியனாகியதேவன், செலவுஅயர்-செல்லுதலைச்செய்கின்ற, கடவுள் - தெய்வத்தன்மையுள்ள, மான்தேர் - குதிரைகட்டியதேர், ஓட்டுஅற - ஓடுதலொழிய, நிவந்தசெம்பொன் சாலையுள் - செம்பொன்னாற்கட்டிய அரணமனையில், உலம்கொள்திண்டோள்-திரண்ட கல்லினழகைக்கொண்ட வலியமைந்ததோள்களையும், வாள்திறல் இளையரோடு - வாளின்போரில் வல்லமையையுமுடைய இராமலட்சுமணர்களோடு, மறைமுனி எய்தல்நோக்கி - வேதங்களையுணர்ந்த விசுவாமித்திரன் வருதலைஅறிந்து, வெள்வேல்சனகன் - கூரியவேலைத்தாங்கிய சனகன், தாள்துணைபணிந்து - இரண்டுபாதங்களையும்வணங்கி, நல்இருக்கை ஈந்தான் - நல்லஆசனத்தைத் தந்தான். எ-று.

புத்தேள் பண்பாகுபெயர். செலவு தொழிற்பெயர்; செல் பகுதி, அ சாரியை, வு புடைபெயர்ச்சி விகுதி. ஓட்டு முதனிலைதிரிந்த தொழிற்பெயர். வெண்மைப் பண்பு கூர்மைப் பண்பை உணர்த்தியது. இருக்கை தொழிலடியாகப் பிறந்தபெயர்: இரு பகுதி, க் சந்தி, கு சாரியை, ஐ இடப்பொருண்மை விகுதி, நடையென்பதும் இது. இரு-நட பகுதிகளிரண்டும் செயப்படுபொருள் குன்றிய வினையடிகளாகையால ஐ விகுதியைச் செயப்படுபொருண்மை விகுதியென்ன லாகாதென்க.

75. (இ-ள்.) அருகுஉறைகுமரர்தம்மை - முனிவன்பக்கத்தில் தங்கிய சிறுவர்களை, ஆய்பிழித்தாமமார்பன் - குற்றமற்ற தேனுள்ள மலர்மாலையணிந்த மார்பையுடையசனகன், பருகுவான்போல நோக்கி - வாரியுண்பவனைப்போல (இராமலட்சுமணர்களை) நோக்கி, பழமறைக்கிழவ - பழமையாகிய வேதங்களுக்குரிய விசுவாமித்திரனே, போந்ததிருவினர் - நின்னோடு) வந்தசெல்வர், யாவர்என்ன - எவரென்றுகேட்க, தயரதன்சிறுவர்-தசரதனுக்குக் குமாரர், இவ்வழிப்போந்தது - உன்னிடம் வந்தது, ஈசன்பொருசிலை - சிவனது போர்செய்யும் வில்லினது, மதுகைகாண்பான் - வலியை அறியுமபடி, என்றான் - என்றுசொல்லினான். எ-று.

பிழி தொழிலடியாகப் பிறந்த பெயர்; பிழி பகுதி, ஐ செயப்படுபொருண்மைவிகுதி புணர்ந்துகெட்டது. பிழியப்படுவதென்னும் பொருளதாயினும், தேனுக்குப் பொதுப் பெயராய் வழங்குகின்றது. தயரதன் எட்டுத்திக்கிலும், சுவர்க்கமாகிய மேலிலும், நாகலோகமாகிய கீழிலும்செல்லும் தேரையுடையானெனவும், சம்பரன் முதலிய பத்தசுரர்கள் ஏறிவந்ததேர்களைவென்றவனென்றும் பொருள் கூறுவர்.

76. (இ-ள்.) வில்தொழிற்கு - விற்போர்க்கு, ஒருவன் ஆயஇராமனை - ஒப்பற்றவனாகிய சிராமனை, விழைவின்நோக்கி - விருப்பத்தோடு பார்த்து, மல்தடவுத்தோளாய் - மற்போரில்வல்ல பெரியதோள்களையுடையானே, கேட்டி - கேள், கௌசிகன்வரலாறு என்ன - விசுவாமித்திரனுடைய செய்தியை என்று, பொன்தளிர் பொருவுமேனி அகலிகை-பொன்னாற்செய்த தளிரைஒத்த மேனியையுடைய அகலிகை, பொற்பின்ஈன்ற-அழகாகப்பெற்ற, நல்தவக்கிழமை - நல்லதவத்தினுடைய உரிமையை, பூண்ட-மேற்கொண்ட,சதாணந்தன் - சதாணந்தமுனிவன், நவிலல்உற்றான்-சொல்லத்தொடங்கினான். எ-று.

ஆய இறந்தகாலப் பெயரெச்சம் ; ஆ பகுதி, ய் இறந்தகால இடைநிலை, அ பெயரெச்சவிகுதி, இராமன் நல்லோருள்ளத்தில் ஆநந்திப்பவன், நல்லோர் யாவரும் ஆநந்தப்படுமவன் எனப்பொருள் கூறுவர்.

77. (இ-ள்.) திரள்கல் - திரண்டகல், பிறழும்திண்தோள்- (ஒப்பாகாது) தவறுகின்ற திண்ணிய தோள்களையுடைய, காதிசேய் - காதியரசனுடைய குமாரனாகிய இம்முனிவன், உலகம்யாவும்- உலகைமுழுமையும், ஒற்றைவெண்குடையுள் வைத்து - ஒன்றாகிய வெண்பட்டுக் குடைநிழலில் வைத்து, திகிரிஒன்று உருட்டுநாளில் - கட்டளைச் சக்கரத்தை நடத்துகின்றநாளில், வெற்றிவேல் புளினரோடு - வெற்றிதரும் வேலைப்பிடித்த வேடர்களையுடையானாகி, வேட்டம் மேற்கொண்டு - வேட்டையாடுதலை மேற்கொண்டு, கான்போய் - காட்டுக்குச்சென்று, நல்தவவசிட்டன் - நல்லதவத்தையுடைய வசிட்டமுனிவன், வைகும்சாலையில் நண்ணினான் - தங்குகின்றசாலையில்சேர்ந்தான். எ-று.

யாவும் என்பதில் உம்மை முற்றும்மை யாதலால் யா எஞ்சாமைப் பொருளது. ஒற்றை ஒன்று குற்றியலுகரமாதலால் ஐகாரச் சாரியைபெற்று, மெல்லெழுத்து வல்லெழுத்தாதலாகிய திரிதற் சந்திபெற்றது. "மென்றொடர்மொழி, "ஐ யீற்றுடைக் குற்றுகர" என்னும் நன் - உயிர் - சூத்திரங்களால்விதி உணர்க.

78. (இ-ள்.) அருந்ததிகணவன்- அருந்ததிநாயகனாகிய வசிட்டமுனிவன், வேந்தோடுஅளவளாய்-அரசனோடுகலந்துபேசி, முகமன்கூறி-உபசரித்து, தேனுவை-தெய்வப்பசுவை, விருந்து - விருந்துணவை, இனிது அளித்திஎன்ன - இனிமையாகக்கொடு என்று, விழியின்நோக்க - கண்களால் பார்க்க, மருந்தினும் இனியஆய, அமுதத்தைப் பார்க்கினும் இனிமையுடையனஆகிய, வான்சிறப்பு இயற்ற - உயர்வாகிய சிறப்பினைச் செய்தமையினால், மன்னன் - அவ்வரசன், திருந்துநல் தவத்தோய் - திருத்தமாகிய நல்லதவத்தையுடைய முனிவனே, இந்தத் தேனுவை - இக்காமதேநுவை, அளித்திஎன்றான் - (எனக்கு) கொடுஎன்று கேட்டான். எ-று.

முகமன் முகத்தின் றன்மையென்பது பொருளாதலால், இது பண்புப்பெயர் ; முகம் பகுதி, மன் பகுதிப் பொருள் விகுதி, மகரக்கேடு சந்தி,

வாய்மை வாயின் தன்மை மெய். பருமன், பெருமன் என்பவற்றிலும் அ வ்விகுதி காண்க. இனிது பண்படியாகப் பிறந்த குறிப்பு வினையெச்சம்; இனிமை பகுதி, உ வினையெச்சவிகுதி, மை யீறுகெட்டது சந்தி, த் விரித் தல் விகாரம்.

79. (இ-ள்.) என்றலும் - என்றுகேட்டுதலும், மறுப்ப- முனிவன் மறுத்துச் சொன்னமையினால், மன்னன்தேனுவை எதிர்ந்துபற்ற - அர சன் கடவுட் பசுவை எதிர்த்துப் பிடிக்க, துன்றிய மயிர்க்கால் தோ றும் - அடர்ந்துள்ள மயிர்க்களிலெல்லாம், யவனரைத் தோற்றி - யவனர்க ளைப் பிறப்பித்து, வெய்ய - கொடிய, வென்றிவேல் தானைமாட்ட - வெற்றி தரும் வேலைத்தாங்கிய சேனையை அழித்ததனால், வெம்சமத்து அரசன் மைந்தர் - வெவ்விய போரையுடைய அரசன் புத்திரர்,சென்றிட-தன்மே ல்வர, உங்கார[illegible]ச்செய்த ஒலியினால், முனிவரன்- முனி சிரேட்டனாகிய [illegible]க்கான் - கொலைசெய்தான். எ-று.

தோற்[illegible]இறந்தகால வி[illegible]யெச்சம் இது தன்வினை பிறவினைகளுக் குப் பொதுவினை[illegible] பிறவினையாய் நின்றது. வெய்ய பண் படியாகப் பிறந்த கு[illegible] பெ[illegible]ாச்சம் : வெம்மை பகுதி, பெயரொச்ச அ கர விகுதிப் புணர்ச்சியில மை யீறுகெட்டதும், மகரமெய் யகரமானதும், யகரம் இரட்டியதும் சந்தி, "எகரமெய்யோடேலாது" என்பதை மறந்து வெ பகுதியென்பாருமுளர்.

80. (இ-ள்.) கூற்றரும்வெருவ - யமனும்அஞ்சும்படி, வேந்தன் - அரசன், கொடுசிலை - வளையுமியல்புள்ள வில்லை, குழையவாங்கி ஏற்று- வளையவளைத்து எதிர்த்து, அருமுனிவற்கு - அருமையாகிய முனிவனுக்கு, ஆற்றாது இடைந்தனன் ஆகி - எதிர்க்க வலியில்லாமல், மைந்தர் நூற்றுவர் தமமின் - புத்திரர் நூறுபேரிலிருந்து, உய்ந்த மைந்தனைநோக்கி - தப்பிய புத்திரனைப்பார்த்து, வையம்போற்றுக என்று - பூமியைக் காவல்செய்க எ ன்றுசொல்லி, இமயத்துஎய்தி - இமாசலத்தைச் சார்ந்து, புலன் அவித்தி ருந்து - ஐம்புலன்களை அடக்கியிருந்து, னோற்றான்-தவஞ்செய்தான்.எ-று.

புலங்களாவன.—ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை போற்றுக என்பதில் ஈறுதொகுத்தல்.தம்மினென்னும் ஐந்தனுருபுநீங்கற்பொருளது.

81. (இ-ள்.) இமையவில் குரிசில்எய்தி - பொன்மலையாகியவில்லைப்பிடி த்ததலைவன்வந்து, விழைந்தமைஉணர்ந்தேன்என்றூ-நீவிரும்பியதை அறிந் தேனென்று, அமைவுஅருகடவுள்வானி - (பிறர்க்கு) கிடைத்தலருமையாகி ய தெய்வத்தன்மையுள்ள அம்புகளை, அளித்தலும் அரசன்போந்து - கொ டுத்தலும் அரசன்வந்து, கமைஉடை வசிட்டன் மெய்யில் - சாந்தகுணமு டைய வசிட்டனது உடம்பில், விடுத்தவெம் கணைகள் யாவும் - எய்தகொ டிய அம்புகளையெல்லாம், திமிரம்மேய்கதிரின் - இருளைஉண்ணுகின்ற சூரி யனைப்போல, தண்டம் - (அம்முனிவனது) யோகதண்டம், தீ எழவிழுங் கிற்று - தீப்பறக்க விழுங்கியது. எ-று.

விழைந்தமை இறந்தகாலத் தொழிற்பெயர் : விழை பகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, அ சாரியை, மை புடைபெயர்ச்சி விகுதி, சந்தித்தகரம் நகரமாதல் மெலித்தல் விகாரம் : நிகழ்காலத்தில் விழைகின்றமை : எதிர்காலத்தில் வராது. கதிர் பண்பாகுபெயர்.

82. (இ-ள்.) ஆங்குஅதுகண்டவேந்தன் - அங்கே அச்செயலைக்கண்டஅரசன், அரசாவெம் திறலைஎள்ளி - அரசரது மிக்கவலியை அவமதித்து, ஓங்குஅழல் ஊட்டிஉணணும்முனிவரை - (யாகத்தில்) உயர்ந் தெரிகின்ற தீக்கடவுளுக்கு ஆவுதிகொடுத்துப்பின் உண்ணுகின்ற முனிவர்களை, உவந்துபோகி - மகிழ்ந்துபோய், தீங்குஅறுமுனிவர் - தீமையில்லாதமுனிவர்கள், வைகும்தென்புலமதனில்எய்தி - வசிக்கின்ற தெற்குத்திசையில்சேர்ந்து, பாங்குஉற - பெருமையடைய, தழலின்நாப்பண் - தீக்குநடுவில், ஆயிரம்பருவ நோற்றான் - ஆயிரமவருஷம் தவஞ்செய்தான். எ-று.

ஊட்டி பிறவினையாகிய இறந்தகால வினையெச்சம் ; உண் தன்வினைப் பகுதி, டு பிறவினை விகுதி புணர்ந்தபோது, முதனீண்டது நீட்டல் விகாரம், ணகரம் டகரமாதல் சந்திபெறற ஊட்டு பிறவினைப் பகுதி, உகரத்தின் திரிபாகிய இகரம் வினையெச்ச விகுதி, உகரக்கேடு சந்தி. பருவம் வயது ; வயதென்பது ஒரு வருடமாதலால, ஆயிரம் பருவம் ஆயிரம வருடம் என்றும்.

83. (இ ள்.) நோற்றலும் கமலப்புத்தேள்-தவஞ்செய்தலும் தாமரை மலரிலுள்ள கடவுளாகிய பிரமன், நொய்தின்வந்து-விரைவில்வந்து, எய்த-பிரத்தியட்சமாக, மன்னன் போற்றலும் - அரசன் நமஸ்காரம் செய்தலும், உவந்து இராசமுனிவன்என்று உரைத்துப்போக - (பிரமன்) மகிழ்ந்து நீ இராசமுனிவனாகின்றாயென்று சொல்லிப்போக, காற்றினை நுகர்ந்து-காற்றை (உணவாக)உண்டு, செய்யகண்முகிழ்த்து - அழகிய கண்களைமூடிக்கொண்டு, அழலின்நாப்பண் - ஐவகைத் தீயினடுவில், ஆற்று அருவிரதம்-(பிறர்) செய்தற்கரிய தவத்தை, பின்னும் ஆயிரம் பருவஞ்செய்தான்-மேலும் ஆயிரம்வருடஞ் செய்தான். எ-று.

புத்தேள் - புதுமை : அது எப்போதும் புதியனாகத்தோன்றும் தேவனுக்குப் பண்பாகு பெயராயிற்று. கமலம் முதலாகுபெயர். ஆற்று முதனிலைத் தொழிற்பெயர் : ஆற்றஎனப் பதமபிரிக்கின் செயவெனெச்சத்தீறு தொகுத்தலென்க.

84. (இ-ள்.) விழவு - திருவிழா, கண்துயிலா - கண்உறங்காத, வீதிஅயோத்திநாடு - தெருக்களையுடையஅயோத்திநாட்டை, ஆளும்வேந்தன்-ஆளும் அரசனாகிய, மழைநிகர் - மேகத்தைஒத்த, தடக்கை வண்மைவளர்-பெருங்கையினது ஈகைவளர்கின்ற, திரிசங்கு என்போன் - திரிசங்கு என்னப்படுவோன், தொழுதகு வசிட்டன் போற்றி - (யாவரும்) தொழத்தகுகின்ற வசிட்டனைப்போற்றி, உடலொடும் துறக்கம் எய்த - இத்தேகத்

தோடு சுவர்க்கத்தை நான்அடையும்படி, பழமறை தெரிந்தோர் - பழமை யாகிய வேதங்களை உணர்ந்தமுனிவரால், எச்சம்பண்ணுவித்திடுக - யாகத் தைச் செய்வித்திடுக, என்றான் - என்றுகேட்டான். எ-று.

தெரிந்தோரென்றும் இறந்தகால வினையாலணையும் பெயரினீற் றில் மூன்றனுருபு தொகுத்தல் பெற்றது. விழாஎன்னும் குறியதன் கீழா குறுக்கல்பெற்று, உகரச் சாரியைபெற்றது. விழவு கண்துயிலாமை ஒழியா மல் நடப்பது. திரிசங்கு வடமொழிக் குற்றியலுகரமாதலின் கெடவில்லை.

85. என்னலும் முனிவன் ஒல்லாது என்றலும் - என்றுகேட்குதலு ம்வசிட்டன் முடியாதென்று சொல்லுதலும், புதல்வர்ப்போற்றி-(அம்முனி வனது) புத்திரர்களை வணங்கி, மன்னவன் புரிதிர் என்ன - திரிசங்கு (யா கம்) செய்யுமென்று கேட்க, மறுத்தலும் - தடுத்தலும, பிறபால்எய்தி-வே றுமுனிவரிடத்துப்போய், நல்மகம்புரிவன்என்ன - நல்லயாகத்தைச் செய் துகொள்வேனென்று சொல்லியதனால், நான்மறைவசிட்டன்சிறி - நான் குவேதங்களையு முணர்ந்த வசிட்டன் கோபித்து,நின்நிலைதிரிந்து - உன்நிலை மைமாறுபட்டு, மற்றோர்நீசன்ஆய் - வேறொருபுலையனாகி, உறைதி என்றா ன்-வாழ்ந்திருஎன்று சபித்தான். எ-று.

புரிதிர் ஏவற்பன்மை; புரி பகுதி, த் எழுத்துப்பேறு, இர் ஏவற்ப ன்மை எதிர்காலவிகுதி. நின்னிலை பண்புத்தற் கிழமைப் பொருளதாகிய ஆறாம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்; நிலை தொழிற்பெயர்; நில் பகுதி, ஐ புடைபெயர்ச்சி விகுதி; இது பகுதியாகிய மை விகுதிபெற்று நிலைமை எனப் பண்புப்பெயர் வழங்கும்.

86. (இ-ள்) களைகண்ஆய் - ஆதரவாகி, உலகம்யாவும் - உலகத்து யிர்களையெல்லாம், காத்திடும் தலைமைநீங்கி - காக்கின்ற முதன்மைநீங்கி, உளம்மெலிவுஎய்தி - மனமவருந்துதலை அடைந்து, காதிமைந்தனுக்கு உற் றகூற - காதிபுத்திரனாகிய இம்முனிவனுக்குத் தனக்கு நேரிட்டவற்றைச் சொல்ல, தளரல்நீ - கவலைப்படாதைநீ, துறக்கத்துஉய்ப்பன்என்று- சுவர்க் கத்தில் செலுத்துவேனென்று, அருந்தவத்தோர்க்கூவ - அரியதவத்தினரை அழைக்க, வளர்தவ வசிட்டன்மைந்தா - பெருகுகின்றதவத்தையுடைய வசிட்டன்புத்திரர், மறுத்தலும் வைதுகொன்றான் - தடைசெய்தலும் சா பஞ்சொல்லிக் கொன்றான். எ-று.

உற்ற இறந்தகால வினையாலணையும் பெயர்; உறு பகுதி, அ பலவி ன்படர்க்கை விகுதி, பகுதி ஒற்றிரட்டியதுசந்தி, அதுவே காலங்காட்டியது, உகரக்கெடும் சந்தி, தளரல் ஏவலொருமை எதிர்மறை: தளர் பகுதி, அல் ஏவலொருமை எதிர்மறை விகுதி.

87. (இ-ள்.) தழலிடை நறுநெய்பெய்து - யாகத்தீயில் நல்லநெய் யையிட்டு, தனிமகம்புரிய - ஒப்பற்றயாகத்தைச் செய்கையில், தேவர் - தேவர்கள், விழைவொடும் அவிசைக்கொள்ளார் - விருப்பத்தோடுஅவியை

க்கொள்ளாமல், விடுத்தலும் - விட்டுவிடுதலும், வெருட்சிகூர்ந்து - கோப மிகுந்து, தொழுதகு சுருவைஎற்றி - தொழுதற்குத்தக்க செய்க்கரண்டியை மேலே உயரப்பிடித்து, வேந்தனைத் துறக்கத்து உய்ப்ப - திரிசங்குவைச் சுவர்க்கத்துக்குச்செலுத்த, இழிதொழில்கீழ் - இழிவாகிய செயலைப்புரியும் கீழ்மகனே, ஈண்டுஎய்தல்என - இங்குவாராதேயென்று, உம்பர் இழித்திட்டார் - தேவர்கீழே விழத்தள்ளினார்கள். எ-று.

கீழ் பண்பாகுபெயர், வெருட்சி தொழிற்பெயர்: வெருள்பகுதி, சி புடைபெயர்ச்சி விகுதி, ளகரம் டகரமாதல் சந்தி, இகரவிகுதி ஏற்று வெருளி, தல் அல் விகுதிகளைத் தனித்தனி ஏற்கின் வெருடல், வெருளல் என வரும். சுருவை அத்திமரத்துண்டு, விகங்கதத்துண்டு அதாவது சொத்தைக் களாமரத்துண்டு இவற்றுள் ஒன்றால் செய்யப்பட்ட சிறிய அகப்பை. உம்பர் இடமடியாகப் பிறந்த பலர்பாற்பெயர்: அர் போலியெனக்கொண்டு, உம்பரிழித்திட்டார் என்பதற்கு மேலிடத்தினின்றும் கீழே தள்ளினாரென வும் உரைக்கலாம்.

88. (இ-ள்.) சென்னிகீழ் ஆக வீழும் - தலைகீழாக வீழ்கின்ற, திரிசங்கு என்னும் வேந்தை - திரிசங்கு என்னும் அரசனை, நில்நில் என்று அமைத்து - நில்நில்லென்று (கையால்) அமர்த்தி, வானில்நிறவி - ஆகாயத்தில் நிற்கச்செய்து, வாசவன் தன்னோடும் - இந்திரனோடும், இன்னும் ஓருலகஞ் செய்வன்என - இன்னமும் ஓருலகத்தைப் படைப்பேனென்று, உடுக்கணங்கள் - விண்மீன்கூட்டங்களையும், விண்ணோர் - தேவர்களையும், பன் அரு - சொல்லுதலரிய, சரஅசரங்கள்சிற்சில - திரியும் பொருள்களில் திரியாப் பொருள்களில் சிலசிலவற்றையும், படைத்தான் - சிருட்டித்தான். எ-று.

அடுக்கு சினைப்பொருளது. உடுக்கள்-சப்தருஷிகளென்னும் விண்மீன்கள், விண்ணோர்-பூதங்கள், அசரங்களில் முள்ளுக கீரைத்தண்டுமுதலியவை, சரங்களில் நீர்க்குதிரை, நீர்யானை, நீர்நாய், நீர்க்காக்கைமுதலியவை.

89 (இ-ள்.) படைத்தலும் - சிருட்டித்தலும், விண்ணோர் அஞ்சி - தேவர்கள் அச்சங்கொண்டு, கோசிகன்பால் வந்துஎய்தி - கௌசிகனிடத்தில் வந்து சேர்ந்து, அடற்கு அருவலந்தோய் - (பிறரால்) பொருவதற்கரியதவ வலியுடையானே, நீ ஈண்டு அமைத்தவை அமையும் - நீ இங்குப்படைத்த வைபோதும், முன்னர் - முன்னே, தடுப்புஅற படைத்தயாவும் - தடையில்லாமல் படைத்த விண்மீன்கள் எல்லாம், தார்த்திரிசங்குவோடும் - மலர்மாலையணிந்த திரிசங்குடனே, உடுத்தெரி உலகின்பாங்கர் - விண்மீன்கள் விளங்குகின்ற உலகின்பக்கத்தில், வதிகஎன்று உரைத்துப்போனார் - வாசஞ்செய்யக்கடவன் என்று சொல்லிப்போனார்கள். எ-று.

அநுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் என்னும் ஐந்து நட்சத்திரங்கள் திரிசங்கு சுவர்க்கமெனத் தென்திசையில் தேவரால்

அமைத்தன. அமைத்தவை பலவின்படர்க்கை ஈறுதிரிந்த இறந்தகால வினை யாலணையும் பெயர்; அமை பகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, அ சாரியை, வை பலவின்படர்க்கை விகுதி; ஈறுதிரியாதாயின் அமைத்தன எனவரும். யாவும் இத்தொடரில் யா வினுவடியாகப் பிறந்த பலவின் படர்க்கைப் பெயர்; யா பகுதி, வ் பலவின் படர்க்கைப் பெயர் விகுதி புணர்ந்கெட்டது; பலவின்பாலைப் பகுதியே காட்டுமெனின் பாலைக்காட்டு தல் விகுதிக்குரிய இலக்கணமாதலானும், ஒன்றன் பாலைக்காட்டியன்றோ பின்பு பலவின்பாலைக் காட்டல் வேண்டும் அங்ஙனம் இல்லாமையாலும் அது கூடாதென்க. உம்மை முற்றும்மை.

90. (இ-ள்) கடவுளர் போயபின்னர் - தேவர்கள் போனபின்பு, கௌசிகன் துனைவின்ஏகி - கௌசிகன் விரைவில்போய், குடதிசையது னைநண்ணி - மேறறிசையைச் சோந்து, கொடுதவம் இயற்றும்எல்லை - பெருந்தவத்தைச் செய்யும்போது, படிபுகழ் அம்பரீடன் - உலகத்தார்புகழ்கின்ற அம்பரீஷன், பசுவினை மகவான்வௌவ-யாகப்பசுவை இந்திரன் கவர்ந்துபோனமையினால், வடுஇலாரிசிகன்சேயை - குற்றமிலாத இரிசிக முனிவனது குமாரனை, வான்பொருள் கொடுதுக்கொண்டான் - மிகுந்தபொருளைக் கொடுத்து வாங்கினான். எ-று.

குடக்கு என்னும் நிலைமொழி திசையது என்னும் வருமொழி புணர்ந்தபோதுநிலைமொழி யீற்றுயிர் மெய்கெட்டது. படி இடவாகுபெயர், பசுயாகத்துக்குரிய உயிர்-விசுவாமித்திரனுடைய அக்கையாகிய கௌசிகியென்பாளுடைய புத்திரர் மூவரில் மூத்தவனாகிய சுநபுச்சனைப் பிதா தனக்கென்றும்,இளையோனாகிய சுநோலாங்கூலனைத் தாய் தனக்கென்றுங் கொள்ள நடுவற் குமாரனாகிய சுநசேபன் அம்பரீஷனை நோக்கித் தந்தை தாயினுடைய வறுமைகெடப் பொருளை அவர்களுக்குக்கொடு, யான் வர இசைந்தேனென்றான். திசையது திசை பகுதி, ய் சந்தி, அ சாரியை, து பகுதிப் பொருள் விகுதி. இபபெயரோடு ஐயுருபு புணர்ந்தபோது அன் சாரியை வந்தது.

91. (இ-ள்) பொன்தடவுத்தேரின் ஏற்றி - பொன்னாகிய பெரிய தேரில் (அச்சுநசேபனை) ஏற்றி, புருடமேதத்துக்காக - புருடமேதமென்னும் யாகஞ்செய்வதற்காக, மல்தடவுத்தோளான் - மற்போரில் வல்லபெருந்தோள்களையுடைய அமபரீடன், கொண்ட மறைமுனி புதல்வனோடும்-வாங்கின வேதங்களையுணர்ந்த இரிசகனுடைய புத்திரனோடு, கற்று- படித்து, அழிப்படுத்தவிஞ்சை - நன்குபழகின மந்திரங்களையுடைய, கௌசிகன் சாலைநண்ண - கௌசிகனுடைய தவச்சாலையைச் சார்ந்தமையால், பற்றுஅறு முனியைநோக்கி - (யான் எனதென்னும்) பற்றறநீக்கியமுனிவனை நோக்கி, பாலகன் அழுதிட்டான் - இச்சிறுவன் அழுதான். எ-று.

நரனை யாகப்பசுவாகக் கட்டிச்செய்யும் யாகம் நரமேதம்.

92. (இ-ள்.) அழுது அகம்குழையும் பாலற்கு - அழாநின்ற மனம் நைகின்ற சிறுவனுக்கு, அஞ்சலென்று இனிதுகூறி - பயப்படாதேயென்று இன்சொல்லைச்சொல்லி, பழுதுஅறுமுனிவன் ஈன்ற மைந்தரைப்பார்த்து குற்றமற்ற கௌசிகன் தான்பெற்ற புத்திரர்களைப் பார்த்து, நீவிர்விழைவொடு பசுஆய் - நீங்கள் வெறுப்பில்லாமல் யாகப் பசுவாகி, இந்த விடலையைக் காமின்என்ன - இவ்விளைஞனைக் காவுங்கோளென்றுசொல்ல, தொழுதனர்மீறுப்ப - தொழுது தடுந்தமையினால், வேடர்ஆகஎனத்துனைவின் வைதான் - வேடர்களாகக் கடவீர்களென்று விரைவில் சபித்தான். எ-று.

அஞ்சல் ஏவலொருமை எதிர்மறை; அஞ்சு பகுதி, அல் ஏவலொருமை எதிர்மறை விகுதி, உகரக்கெடு சந்தி. இனிது பண்படியாகப் பிறந்த ஒன்றன் படர்க்கைப் பெயர்; இனிமை பகுதி து விகுதிப் புணர்ச்சியில் மை யீறுகெட்டது. இனிதென்பதைக் குறிப்பு வினையெச்ச மாக்கினும் பொருந்தும். விகுதி உகரமென்க. பொருள் இனிமையாயென்பது.

93. (இ-ள்) அந்தணன் புதல்வன்உய்ய - இரிசிகனுடைய புத்திரனாகிய சுநசேபன் பிழைக்கும்படி, ஆங்கு அவன் செவியினூடு - அங்கே அவனது செவியில், மந்திரம் இரண்டுகூறி - இரண்டு மந்திரங்களைச் சொல்லி, மறைமுனி விடுப்ப - வேதங்களை உணர்ந்த விசுவாமித்திரன் அனுப்ப, வேந்தன் எந்திரத்தேரின் ஏற்றி - அம்பரீஷன் சூத்திரங்களாலமைத்த இரதத்தில் ஏற்றி, சாலையின்எய்தி - யாகசாலையை அடைந்து, யூபக்கந்தினில் ஆர்ப்ப - யூபஸ்தம்பத்தில் கட்ட, மைந்தன் கடவுள் மந்திரத்தை ஓர்ந்தான் - அச்சிறுவன் தெய்வமந்திரங்களைச் சிந்தித்தான். எ-று.

அந்தணன் இடுகுறிமாத்திரமாய் முனிவனையும், காரணங் கருதிய போது, அம் - அழகிய, தணன் - அருளையுடையானையும் உணர்த்தலால் இப்பெயரைக் காரண விடுகுறிப் பெயரென்க. இப்பெயர்க்கு இவ்வாறன்றி, அந்தம் - வேதமுடிவிற் சொல்லும் ஒழுக்கத்தை, அணன் - பொருந்தினவன் என்னலுமாம். இதில் அகரம் ஒன்றுதொகுத்தல். மந்திரம் இரண்டாவன,-இருக்குவேதத்தில் இந்திரனைக் குறித்தும், உபேந்திரனைக் குறித்தும் இருக்கென்று வரும் இரண்டுபாட்டு. உய்ய காரியப்பொருட்டாகிய எதிர்காலச் செயவெனெச்சம்; ஆர்ப்ப காரணப் பொருட்டாகிய இறந்த காலச் செயவெனெச்சம்.

94. அத்தலை அமரர்எய்தி - அவ்யாகத்தில் தேவர்கள்வந்து, அவியினை அடைந்தோம் - எங்கட்குரிய அவியைப் பெற்றோம், இந்த வித்தகச் சிறுவன் தன்னை விடுக்கஎன - இந்த நல்ல ஞானமுடைய சிறுவனை (கட்டவிழ்த்து)விடுக என்றுசொல்ல, வேந்தன்விடுத்து - அரசன்விடுத்து, பத்திமை வேள்விமுற்றி - பத்தியோடு செய்கின்ற யாகம் நிறைவேறினமையால், பதியினில் அடைந்தான் - நகரத்தில் சேர்ந்தான், பின்னும்-மீளவும், பொய்த்தலைபுகாத - பொய்யில் நுழையாத, நெஞ்சப்புண்ணியன்

தவர்தில் நின்ருன் - மனத்தையுடைய அறத்தின் பயனுள்ள விசுவாமித்திரன் தவத்தொழிலில் நிலைத்தான். எ-று.

95. (இ-ள்.) காதிசேய் ஆற்றுகின்ற தவத்தினை - காதிபுத்திரன் செய்கின்ற தவத்தை, கமலப்புத்தேள் - தாமரைப் பூவிலுள்ள பிரமன், போந்து மேதகவியந்து - வந்து விரும்பத்தகுதியாக அதிசயித்து, மெய்த்தவ இருடிஎன்ன ஓதினன் - உண்மையாகிய தவருஷியென்று சொல்லி, அகல - போக, பின்னும் - மீளவும், ஒழிவுஅறும் புலன்கள்சேற்று - விட்டொழிதலில்லாத ஐம்புலன்களைக் கடிந்து, நீதுஎறிந்து - (காமவெகுளிமயக்கமாகிய) முக்குற்றங்களைவீசி, அழலின் நாப்பண் - தீயினுக்கு நடுவில், செய்தவம் இயற்றினுன் - செய்தற்குரிய தவத்தைச் செய்தான். எ-று.

மேதக என்பதில் மேவ என்னும் நிலைமொழி யீற்று உயிர் மெய் கெட்டு, அப்படியாயிற்று. போந்து இறந்தகால வினையெச்சம்; புகு என்பதன் மரூஉ ஆகிய போபகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, உ வினையெச்ச விகுதி, சந்தித் தகரம் நகரமாதல் மெலித்தல் விகாரம். செற்று இறந்தகால வினையெச்சம்; செறு பகுதி, உ வினையெச்ச விகுதி,பகுதி ஒற்றிரட்டல் சந்தி, இதுவே காலங்காட்டியது, உகரக்கேடும் சந்தி. தீயினுக்கு நடுவிலென்றது தவத்துக்குத்தான் நின்ற நிலைக்கு நான்கு பக்கங்களிலும் மூட்டி எரிகின்ற தீ, மேலேகாய்கிற சூரியன் இவைதத்தான் பஞ்சாக்கினி மத்தியிலென்பதும்.

96. (இ-ள்.) வெள்நிலாக்கதிர்கள் - வெண்மையாகிய சந்திரகிரணங்கள், விழுதுவிட்டு ஒழுகும் - விழுதுவிட்டுப் பாய்கின்ற, விழுமணி அணிபலவற்றின் - சிறந்த வயிரம்பதித்த பலஅணிகளினுலும், வண்ணமெல் கருகார்வட்க - அழகிய மென்மையாகிய கரியமேகம் தன்னியற்கைகெட,நன்குஇருண்டு - மிகுதியும் கறுத்து, வளாகுழற் பொறையினில் - வளர்கின்ற கூந்தற் பாரத்தினுல், அந்தோ - ஐயோ, நுண்இடை முரியும்முரியும் என்றுஏங்கி - நுட்பமாகிய இடைஒடிவது திண்ணமென்று துக்கித்து, நூபுரம் அரற்ற - சிலம்பு கதறும்படி, வெம்கூற்றம் - கொடியயமன், பெண்ணுருக்கொண்டு வருதல்போல - பெண்ணினுருவத்தைப் பெற்று வருதல்போல, பெட்பின் மேநகை - பெருமையுடைய மேநகை, அவ்வுழிப் போந்தாள் - அங்குவந்தாள். எ-று.

விழுது விழுதலுடைய தென்னும் ஒன்றன் படர்க்கைப் பெயர்; விழு பகுதி, து ஒன்றன்படர்க்கை விகுதி ; வேது என்பதுபோல இடைநிலை பெருத தொழிற்பெய ரெனக்கொண்டு தொழிலாகு பெயரென்னலுமாம். அடுக்குத் துணிவுப்பொருளது. பிறை பிறத்தலுடைய தென்பது பொருள்; பிற பகுதி, ஐ வினைமுதற் பொருண்மை விகுதி, பகுதி யீற்று அகரக்கேடு கடைக்குறை. இது முதலிய ஏழு செய்யுளும் இவ்வத்தியாயத்தில்-௫௬-ஆவது செய்யுள்போன்ற எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

97. (இ-ள்) விளியபுபூத்து எறிந்த-களைஉண்டாகிப் பரந்த, மேகலைஒலிப்ப-மேகலாபரணம் ஒலிக்கவும், மின்என - மின்னலென்று சொல்லும்படி, மெல்மெல - மெள்ளமெள்ள, ஒதுங்கி - நடந்து, துளங்குஇடைஒல்க - நடுங்குகின்ற இடைதுவளவும், மேநகை வரலும் - மேநகையானவள் வருதலும், கோசிகன் அருதவம் துறந்தான் - கோசிகன் அருமையாகிய தவத்தைக் கைவிட்டு, ஆங்கு உளம்கனிந்து உருக-அவளைக் கண்டபோது உள்ளம்•ஆசைமிகுந்து உருகியதனால், ஆங்கு அவளோடும் ஒருபதினாயிரம் பருவம் - அப்போதுஅவளுடனேபதினாயிரவருஷம், அளந்து அறிவு அரிய இன்நலம் பருகி - அளவுசெய்து அறிதலருமையாகிய இனியசுகத்தை அநுபவித்து, அமரரின் உளம்களித்திருந்தான் - தேவர்களைப்போல மனம் களிப்புக்கொண்டிருந்தான். எ-று.

வளமது ஓரம் : அது களையை உணர்த்தினமையினால் இடவாகு பெயர். மேகலை ஒலிப்ப, ஒல்க என்னும் காரியப்பொருட்டாகிய வினையெச்ச மிரண்டடுக்கி வரலுமென்னும் வினையெச்சங் கொண்டன.

98. (இ-ள்.) மாயையின் கோட்பால் - மாயையினது சூழ்கையினால், மேநகையோடு மருவினன்என - மேநகையினோடு சேர்ந்தேனென்று, தனைஇகழா - தன்அறிவை இகழ்ந்து, வேல்தடவுகண்அமிழ்தினை-வேல்போலும் பெருங் கண்களையுடைய அமிர்தத்தை ஒத்தமேநகையை, ஒல்லையின் விடுத்து - விரைவில் விட்டு, ஆயிரங்காதம் அகன்றுபோய் - ஆயிரங்காத வழி நீங்கிப்போய், வடதிசையின் ஆயிரம் பரும் - வடதிக்கில் ஆயிரம் வருடம், பொறி அவித்து அருதவம் புரிய - ஐம்பொறிகளின் வலியைக்கெடுத்து அரியதவத்தைச் செய்தமையினால், சேயநாள்மலரோன் - செந்நிறமாகிய புதியதாமரை மலரிலுள்ள பிரமன், மாமுனி எனப்பேர் - மகாமுனி யெனப்பேரை, சிறப்பொடும் இனிது அளித்து அகன்றான் - சிறப்பொடும் இனிமையாகத்தந்து அகன்றான். எ-று.

கொட்பு சுழற்சி. சேய பண்படியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; செம்மை பகுதி, அ என்னும் பெயரெச்ச விகுதிப் புணர்ச்சியில், மையீறுகெட்டு, முன்நின்ற மகரமெய் யகரமெய் ஆகத் திரிந்தது. உ - ஆம் அடியில், அகன்ற என்பதை அகன்று எனத்திருத்துக. நாளென்றது மூலதாமரையாயினும் படைப்புக் காலந்தொடங்கித் தன்னியல்பு கெடாமையை, தாமரையின்னதென்பதை "புறக்குன்று புல்லிதழ் முன்னீர் பிரசம் பொருவில் செம்பொன், நிறக்குன்று கன்னிகை யெண்கிரிதாது நிலமதனுள், பிறக்குந் துகள்முது மாசுணம் நாளம் பிரமன் வண்டு, சிறக்குந்திகிரியரங்கேசருந்திச் செழுமலர்க்கே" இக்கட்டளைக் கலித்துறையாலுணர்க.

99. (இ-ள்.) முனிவரன்பின்னும் ஆயிரம்பருவம் - முனிசிரேட்டன் மேலும் ஆயிரம்யாண்டு, மூச்சுஅவித்து அருதவம்புரிய - மூச்சடக்கி அரியதவத்தைச் செய்கையில், கனிஉறழ்திசொல் அரம்பையை - முக்கனியை ஒத்த மதுரமாகிய சொல்லையுடைய அரம்பையை, அமரர்விடுத்தலும்-

தேவர் அனுப்புதலும், தனி அவள் காதிசேய்முன்னம் எய்த - தனித்துஅவ் வரம்பைகாதிகுமாரனாகிய முனிவனுக்கு எதிரில் வந்ததனால், பாறைஆக என்னத் தையலைச் சபித்து - பாறை ஆகக்கடவையென்று அப்பெண்ணைச் சபித்து, அருமுனிவன் புனிதநல்லொழுக்கம பூண்டு-அருமையாகிய முனிவன் சுத்தமாகிய நல்ல ஒழுக்கத்தை மேற்கொண்டு, கீழ்த்திசையில் போயினன் அருதவம் புரிந்தான் - கிழக்குத் திக்கில்போய் அரிய தவத்தைச்செய்தான். எ-று.

ஓரெழுத் தொருமொழியாகிய சுவைப் பண்புணர்த்தும் தீ என்பது குறுகி இரட்டி தித்தினை வினைப்பகுதியாகி தித்திப்பு, தித்தித்த, தித்தித்து, தித்தித்தது என வினை விகற்பங்கள் பிறக்கும். பண்படியாகப் பிறந்த முதனிலை வினையெச்சப் பொருள்பட நின்றது. தையல்-அலங்காரம்; இது பண்பாகுபெயராய்ப் பெண்ணையுணர்த்தியது.

100. ஈரைஞ்ஞூறுபருவம் அருதவம்புரிந்து - ஆயிரம்வருடம் அரியதவம்செய்து, பாரணம்பண்ணும் வெம்சொற்றை - உண்ணமுயலும் சுடு சோற்றை - அமரர்கோன் மறையவனாய் தருகென்று இரத்தலும் - தேவர்களரசன் அந்தணனுருக்கொண்டு வந்து கொடுஎன்று யாசித்தலும், தயாவொடும் அளித்து - கருணையுடையனாய்க் கொடுத்து, புருவமத்தியை யின் இருவிழிசேர்த்து - புருவத்தினடுவில் இரண்டுகண்களின் பார்வையும் பொருந்தவைத்து, புலனொடு மூச்சுஎழாது அவித்து - ஐம்புல விருப்பத்தோடு மூச்சுப்புறத்தில் வராமல் அடக்கி, திரம்உறு முனிவன் - ஊக்கமுடைய முனிவன், ஆயிரம் பருவம் - ஆயிரம்வருடம், தீயிடைஅருதவம்புரிந்தான்- ஐந்துதீக்குநடுவில் அரியதவத்தைச் செய்தான். எ-று.

ஐந்நூறென்பதில் நகரத்துக்கு ஞகரம் போலியாக வந்தது. தயாஈற்றுகாரம் ஐகாரமாகத் திரியாது வந்தது. சீதா, கலாஎன்பனவும் அவ்வாறே. புலம் இருகுறிலை யடுத்த மகரமாதலின் அதற்கு னகரம் போலியாகவந்தது. எழாது எதிர்மறை வினையெச்சம்: எழு பகுதி, ஆ எதிர்மறை விகுதி,உகரக்கேடு சந்தி,அனைத்தும் ஒரு பகுதி, த் எழுத்துப்பேறு, உவினையெச்சவிகுதி. ஆயிரம் வருடம் தவஞ்செய்து முடித்தபின் சமைத்த உணவையுண்ண முயலுகையில் இம்முனிவன் முற்றத் துறந்தவனோ அல்லனோ என்று சோதித் துணரும்படி விருத்தவேதியனாய்வந்து யாசித்தனன். இவன் அவனுக்கே தந்தனன் தராவிட்டால் தவப்பயன் முற்றும் ஒழியும்.

101. (இ-ள்.) பேசு அருதவத்து முனிவரன் உச்சிபிளந்து-சொல்லுதலரிய தவத்தையுடைய மகாமுனிவனது உச்சியைப்பிளந்து, அழல்பிழம்பு எழுந்துஓங்கி - தீத்திரளெழுந்துயர்ந்து, மாசுஅறு புவனம் எங்கணும் புகையாய் - குற்றம்அற்ற பூமிமுற்றும் புகையாகி, மண்டலும் - நிறைதலும், மடஅனம் உகைக்கும்ஈசன் - இளமை யாகிய அன்னத்தை ஏறிநடத்

தும் தலைவனுகிய பிரமன், ஆங்குஎய்தி - அம்முனிவனிடம்வந்து, மகிழ்ந்தனம் பிரமவிருடி நீதவம்ஒழிக என்று - நின்தவத்தை மகிழ்ந்தோம்நீபிரமஇருடி தவத்தை விடுகஎன்று சொல்லி, பாசடைக் கமலப்பொகுட்டினேன்அகல - பசுமையாகிய இலைகளையுடைய தாமரையின் பூம்பொகுட்டிலுள்ள அப்பிரமன் நீங்கினமையினுல், பழமறை வசிட்டனை அடைந்தான் - பழமையாகிய வேதங்களையுணர்ந்த வசிட்டனிடஞ்சேர்ந்தான். எ-று.

பேச முதனிலைத் தொழிற்பெயர். பிளந்து செய்வினைக்கும், செயப்பாட்டுவினைக்கும, தன்வினைக்கும், பிறவினைக்கும், செயப்படுபொருள் குன்றியவினைக்கும, செயப்படுபொருள் குன்றுவினைக்கும் பொதுவாயினும் இங்குச் செய்வினை தன்வினை செயப்படுபொருள் குன்று வினைகளுக்குச் சிறப்பாகிய இறந்தகால வினையெச்சம வசிட்டமுனிவன் வாயால் தான்பிரமவிருடியென அழைக்கப்பட வேண்டுமென்னுங் கருத்தால் வசிட்டனை அடைவானுயினுன்.

102. (இ-ள்.) அன்னமாமுனிவன் இவன்என உரைத்து - அப்படிப்பட்ட பெருமுனிவன் இவனென்றுசொல்லி, சனகன் நல்மரபும் ஆங்குஇயம்பி, சனகனுடையகுற்றமற்றமரபின் பெருமைகளையும் சொல்லி, பன்அருகேள்விஉறு சதாநந்தன்இருந்தலும்- சொல்லுதலரிய நூற்கேள்விமிக்க சதாநந்தமுனிவன் இருத்தலும், கௌசிகன் - விசுவாமித்திரன், பரிதிதன் உயர்குலத்தின் அரசர்தம் தோற்றம்முழுவதும் - சூரியகுலத்திற்பிறந்த அரசர்களது பிறப்பின் சரிதமுழுதையும், தரளவெள்கவிகை மன்னவன்சனகன் - முத்துகளால் செய்த வெள்ளைக்குடையையுடைய சனகராசன், உணர்ந்து உளம்களிப்ப - அறிந்து மனம்களிக்கும்படி, மகிழ்வுடன் இனிதுஎடுத்து உரைத்தான் - களிப்போடு எடுத்துச்சொல்லினுன். எ-று.

அன்ன இடைச்சொலடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்: அன் பகுதி, ன் சந்தி, அ பெயரெச்ச விகுதி. அன்னுன் எனக் குறிப்புமுற்றுவரும்: மற்றவினை விகற்பங்கள் முதனிலையடியாகப் பிறவா. முழுவது பண்புப்பெயர்; முழு பகுதி, வ் சந்தி, அ சாரியை, து பகுதிப்பொருள் விகுதி: அடுத்த உம்மை முற்றும்மை. கவிகை தொழிலாகுபெயர்: கவி பகுதி, கு சாரியை, ஐ வினைமுதற் பொருண்மை விகுதி, உகரகேடு சந்தி எனவைத்துத் தொழிலடியாகப் பிறந்த பெயரென்னலுமாம்.

103. (இ-ள்.) நல்எழில் புதல்வர் இன்றி - நல்ல அழகுமிக்க புத்திரரில்லாமல், வரைமகள்போற்றி - பார்வதியை வணங்கியதனுல், நங்கை - பெண்களிற் சிறந்தவளாகிய, அல்லிஅமகமலை அன்ன சீதையை - அகவிதழையுடைய அழகிய தாமரையிலுள்ள திருமகள் ஒத்தசீதையை, அரிதின்தந்தான் - அருமையாகப் பெற்றுன், வல்லிஓர்பாகன் அம்பொன் வரிசிலைநல்கி - பூங்கொடியை ஒத்தபார்வதியை ஒருபாகத்திலுடைய சிவன் அழகிய பொன்னுகியகட்டியவில்லைக்கொடுத்து, இந்தவில் இறுத்தவர்குவ-இந்

தவில்லை வளைத்தவனுக்கே, உன்றன்மெல்லியல் கொடுத்தியென்றான் - உன்னுடைய பெண்ணைக் கொடுவென்று சொல்லினான். எ-று.

இது முதலிய பத்துச் செய்யுளும்-எஉ - அம் செய்யுளோடொத்த அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம். அல்லி உள்ளிதழ், புல்லி புறவிதழ். வளைமுலைக்குப் பண்பாகுபெயர், மலைக்குத் தானியாகுபெயர், வல்லி உவமையாகுபெயர். மெல்லியல் பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். மகட்பாற்று, மெல்லியற்கொடுத்தி என்னுந் தொடரில் நிலைமொழிகள் உயர்திணைப் பெயர்களாதலாலும், இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராதலாலும் ஈறு திரிந்தன.

101. (இ-ள்) எனப்புகன்றா - என்றுசொல்லி, இலகுகூர்வைவேற்சனகன் ஏறு உயர்த்தோன்றந்த - விளங்குகின்ற கூரிய வேலைப்பிடித்த சனகன் ரிஷபக்கொடியைஉயர்த்துப்பிடித்த சிவன்தந்த, தனிச்சிலைகொணர்மின்என்ன - ஒப்பில்லாத வில்லைக்கொண்டு வாருங்களென்று சொல்ல, சகட்டினில் கொணர்ந்துகாட்ட - வண்டியிலே கொண்டுவந்து (ஏவலாளர்) காட்ட, முனிக்கு இறை கண்ணின் சாட - முனிவர் தலைவனாகிய விசுவாமித்திரன் கண்ணினாலேவ, முகில்நிறம் பவளம்செவ்வாய் - கார்மேகம்போன்ற நிறத்தையும் பவளம்போன்ற சிவந்த வாயையுமுடைய, பனிப்பிறைப்பூணசெய தோளான் - குளிர்ச்சியாகிய பிறைவடிவாகச் செய்தபூணணிந்த தோள்களையுடைய சிராமன், பரிதியினிழிந்து சென்றான் - சூரியனைப்போலச் சிங்காசனத்தினின்று இறங்கி (வில்லினருகே) போயினான். எ-று.

உயர்த்தோன் ஆண்பாற்படர்க்கைப் பிறவினையாகிய இறந்தகால வினையாலணையும் பெயர்: தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாயினும், இங்குப்பிறவினையாய் நின்றஉயர் பகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, ஆன் ஆண்பாற்படர்க்கை விகுதி; "இதில் வி என்னும் பிறவினை விகுதிதொக்குத்தலாயிற்றென்பாருமுளர். விகுதி ஆ ஓவானது செய்யுள்வழக்கு. கொணர்மின் ஏவற்பன்மைவினை; கொணர்பகுதி, மின் ஏவற்பன்மை எதிர்கால விகுதி, ர் விரித்தல், ஆ அவ்வாதல் குறுக்கல். முதலடியில 'னென்று' என்பதை 'னேறு' எனத்திருத்துக.

105. (இ-ள்) சென்றதும் எடுத்து நாணில்செறித்ததும் - அருகே சென்றதையும் எடுத்து நாணில் சேர்த்ததையும், திரண்டசெம்பொன்குன்றவில்அனையவல்வில - திரண்ட உருவமுள்ள செம்பொன்மலையாகிய வில்லை ஒத்த வலியவில்லை, குழைத்ததும் - வளைத்ததையும், இறுத்தவாறும் - முறித்த விதத்தையும், ஒன்றிடா - (இமைகள்) ஒன்றோடொன்று பொருந்தி, இமையா நாட்டத்து - இமைக்காத கண்களையுடைய, அமரரும் உணரகில்லார் என்றிடில் - தேவரும் உணரமாட்டாராயினரென்றால், இமைத்து நோக்கும் மனிதரோ - இமைத்துப் பார்க்கும் மனிதரோ, இனிது காண்பார் - திருத்தமாகக் காணவல்லார். எ-று.

சென்றது, செறித்தது, குழைத்தது மூன்றும் இறந்தகாலத்தொழிற்பெயர். பொற்குன்றம் பொன்னாகிய குன்றம், பொன்னுலாகிய குன்றமெனப் பண்புத் தொகைநிலைத் தொடராகவும், மூன்றும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராகவுங்கொள்க. குன்றவல் என்பதும் அது. ஒன்று முதனிலைத்தொழிற்பெயர், இடா செய்யாவென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம்;* இது இமையாத என்னுமெதிர்மறைப் பெயரெச்சத்தின் முதனிலையோடு முடிந்தது.

106. (இ-ள்.) முருகு நாற்றோற்றத்து ஐயன் - முருகன் ஒப்பாகின்ற காட்சியையுடைய பெரியோன், மூரிவில்லிறுத்தலோடும் - வலிமையாகிய வில்லை முறித்தலும், உருகுபேர் உவகை வெள்ளம் உருகுகின்றமிக்க களிப்பாகிய வெள்ளம், உடைத்து ஒழுகவேவர்தல் - பெருக்கெடுத்து வழியாநிற்க அரசன், கருணை கூர்முனியையோர்ப்பி - கருணைமிக்க விசுவாமித்திரனைப் பார்த்து, கடிமணம் முடித்தற்கு - புதியமணத்தை நிறைவேற்றுதற்காக, தருநிகர் அனைய வண்கைத் தயரதற்கு - கற்பகத்தரு ஒப்புப்பொருளாக ஒத்த ஈகையைப்பெற்ற கையையுடைய தசரதனுக்கு, இன்னே உணர்த்துக என்றான் - இப்போதே தெரிவிக்கக் கடவாயென்றுசொன்னான். எ-று.

முருகு இளமைப் பண்பு பண்பியை ஆகுபெயரா யுணர்த்தியது. முடித்தற்கு இந்நான்கனுருபு நிமித்தகாரியப் பொருளது. நிகரொன்பதும் பண்பாகுபெயர்.

107. (இ-ள்.) கோசிகன் விடுத்த ஓலைகாண்டலும் - விசுவாமித்திரன் அனுப்பிய திருமுகத்தைப் படித்துணர்தலும், குமரரோடும் - மூன்று புத்திராகளுடனும், துகிலாம் நுழைநுசுப்பு - மெல்லிய ஆடைதங்குகின்ற நுட்பமாகிய இடையையும், தொண்டைவாய் மகளிரோடும் - கொவ்வைக்கனியை ஒத்தவாயையுமுடைய மனைவியருடனும், மூசுவண்டு அரறும் தண்தார்த்தயரதன் - மூசுவண்டுகள் ஒலிக்கின்ற குளிர்ந்த மலர்மாலையணிந்த தயரதன், முனிவர்சூழ - முனிவாகள் தன்னைச்சூழ்ந்துவரும்படி, காசுகண்படுக்கும் - இரத்தினங்கள் நித்திரிக்கின்ற, மாடககடிநகர் மிதிலை புக்கான் - மனைகளையுடைய காவல்கொண்ட நகரமாகிய மிதிலையில்புகுந்தான். எ-று.

மகளிர் ஒருமை யீறுகெடாது நின்ற மகளென்பதன் பன்மையைக் காட்ட இர என்னும் பன்மை யீறு புணர்ந்த பலர்பாற்பெயர். பெண்டிர், புத்தேளிர் என்பவற்றிலும் அவ்விகுதியைக் காண்க. மூசுவண்டு ஒருவகைவண்டு. உலாவுமென்பதில் ஈற்றுயிர் மெய்கெட்டது. தொண்டை முதலாகுபெயர். கண்படுத்தலாவது இரத்தினங்கள் பதிக்கப்பட்டன. ஆதலால் உறங்குவான்போல நின்ற நிலையினின்று அசையாமல் விளங்கல்.

108. (இ-ள்) குடவளை அலறி ஏங்க - குடம்போன்ற சங்குகள் அலறிஒலிக்கவும், குணில்பொருமுரசம் ஆர்ப்ப - குறுங்கோலால் கொட்டப்படுகின்ற முரசங்கள்ஒலிக்கவும், உடைதிரைக் கடல்அம்தானை - எழுந்து உடைகின்ற அலைகளையுடைய கடலைஒத்த அழகிய சேனையையும், ஒளிறுவேல் சனகன்போந்து - ஒளிசெய்கின்ற வேலையுமுடைய சனகன்வந்து, தடம் உடைப் பவளச்செவ்வாய்ச் சீதையை - பெருமையையுடைய பவளத்தை ஒத்தசெவ்வாயையுடைய சீதையை, தழல்சான்று ஆக - தீச்சாட்சியாக, மடல்அவிழ் துளவினற்கு - இதழ்விரிந்த துளவமலர்மாலை யணிந்த சீராமனுக்கு, நீரொடும் வழங்கினன் - நீரோடுங்கொடுத்தான். எ-று.

109. (இ-ள்.) உருவஓடு அரிக்கண் செம்வாய் - (காதணியை)உருவும்படி செல்லுகின்ற செவ்வரிபடர்ந்த கண்களையும்சிவந்தவாயையுமுடைய, ஊர்மிளை என்னும் மாதை - ஊர்மிளையென்னும் பெண்ணை, அருவரை அனைய திண்தோள் - உயர்ந்த மலை ஒத்த வன்மையாகிய தோள்களையுடைய, இலக்குவற்கு அளித்து - இலட்சுமணனுக்குக் கொடுத்து, நாளும் மருவலார்க்கடந்த வைவேல் - எந்நாளும் பகைவரை வெற்றிகொண்ட கூரியவேலைப்பிடித்த, குசத்துவசன் தன் மகளிர் இருவரை - குசத்துவசனுடைய பெண்கள் இருவரை, பரதனுக்கும் சத்துருக்கினற்கும் ஈந்தான் - பரதனுக்கும் சத்துருக்கினனுக்கும் கொடுத்தான். எ - று.

சனகனுடைய ஔரசபுத்திரி மாண்டவியைப் பரதனுக்கும், இளையானாகிய குசத்துவசனுடைய புத்திரிகளாகிய ஊர்மிளையை இலட்சுமணனும், சுதகீர்த்தியைச் சத்துருக்கினனுக்கும் கொடுத்தனனென்ப. பகவான் வான்மீகிமுனிவர்.

110. (இ-ள்) மணவினைமுடிந்தபின்னர் - கல்யாணத்தொழில் முடிந்தபின்பு, மன்னர்கோன் மைந்தர்சூழ - தசரதசக்கரவர்த்தி புத்திரர் சூழ்ந்துவரும்படி, பணிவரும் பவளத்தாறு - பணிந்து வருகின்ற பவளநிறமுள்ள நெற்குலையுடைய, செந்நெல் அம்படப்பைவேலி - செந்நெல்வயலாகிய வேலியையுடைய, அணிகெழுமிதிலைநீங்கி - அழகுமிகுந்த மிதிலநகரத்தினின்றுநீங்கி, அகல்நகர்க்கு ஏகும் எல்லை - பரந்தஅயோத்தியாநகரத்துக்குப் போகுங்காலையில், துணிகதிர்ப் பரசுராமன் - (பகைவர் தலைகளை) துண்டிக்கின்ற கிரணமமைந்த மழுவாயுதத்தையுடைய இராமன், இராமனை நோக்கிச் சொல்வான் - சீராமனைப்பார்த்துச் சொல்வான். எ-று.

111. (இ-ள்.) பாற்றினம்சுழலும்சூலப்படையினோன்-பருந்தின்கூட்டம்மேலேசுற்றுகின்ற சூலாயுதத்தை யுடையசிவன், அளித்தவில்லை-கொடுத்தவில்லை, இறுத்தது ஆற்றல்கொல்என்று - முறித்ததுவல்லமையோஎன்றுவினவி, அணிமணிமுறுவல்கோட்டி - அழகிய முத்துவிளங்குவதுபோலச்சிரித்து, இந்தவில் ஏற்றுதிஎன்று அளித்தலும் - இவ்வில்லை நாணேற்றென்றுகொடுத்தலும், இமைப்பின்ஏற்றி - ஒருமாத்திரைப்பொழுதில் நாணே

ற்றி, கூற்றுஉறழ் பகழிக்கு - யமன்ஒத்த அம்புக்கு, என்கொல் இலக்குநீ கூறுகளென்றான் - யாதுஇலக்குநீ சொல்களென்று கேட்டான். எ-று.

112. (இ-ள்.) ஈட்டிய தவங்கள்யாவும் - நான்சம்பாதித்த எல்லாத்தவங்களையும், எய்துகொன்றிடுதியென்ன - எய்து அழித்திடு என்றுசொல்ல, பூட்டியபகழிஒன்றால் - (வில்லில்)பூட்டின அம்பொன்றினால், பொன்நகர்புகவும் ஆற்றி - (அத்தவங்கள்) சுவர்க்கத்தில் புகுதலையுஞ்செய்து, வாள்திறல் இளையரோடும் - வாட்போரில் வல்லமையுடைய தம்பிமாரோடும், மன்னொடும் - தயரதசக்கரவர்த்தியோடும், சிலைஇராமன் - கோதண்டத்தையுடைய ஸ்ரீராமன், சேடுஇளை பரிதிதாழும் - மிக்க இளமையாகிய சூரியன் (உயரத்தைக் கடக்கமாட்டாமல்) தாழ்ந்துசெல்கின்ற, மணிமதில் அயோத்திசேர்ந்தான் - இரத்தினமிழைத்த மதிலாற்சூழப்பட்ட அயோத்தியில் சேர்ந்தான். எ-று.

ஈட்டிய பிறவினையாகிய இறந்தகாலப் பெயரொச்சம் : ஈண்டு தன்வினைப் பகுதி, மெல்லொற்று வல்லொற்றாய் நின்ற ஈட்டு பிறவினைப் பகுதி, இன் இறந்தகால இடைநிலை, இதனீற்று னகரக்கேடு கடைக்குறை விகாரம், ய் சந்தி, அ பெயரொச்ச விகுதி. இறந்தோரை விண்ணேற்றினனென்னும் வழக்கைப பற்றிப் பொன்னகர்ப் புகவுமாற்றியென்றார். உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை. புகவு தொழிற்பெயர் ; புக பகுதி, வு புடைபெயர்ச்சி விகுதி. இடைச்சொல் பெயரோடொக்கு மாதலால், மிகுதிப் பொருளதாகியமன்னென்னும் இடைச்சொல் அரசனுக்குப் பண்பாகுபெர்.

இராமன்வனம்புகுந்த வத்தியாயம்.

---

1. (இ-ள்.) நாகுஇளகமுகின் மிடறுகொப்புளிக்கும் - மிகஇளங்கமுகமரத்தினது மிடறுகொப்புளிக்கின்ற, நறவுபாய் வயல்வ்ளிம்பு உடுத்த - தேன்பாய்கின்ற வயல்களை ஓரத்தில்(ஆடையாக)உடுத்த,கேகயத்தரசர் காணிய-கேகயநாட்டு அரசனைக்காணும்படி, விருப்பின் - விருப்பத்தால்,பரதனும் இளவலும்-பரதனும் சத்துருக்கினனும், கிளர்ந்த ஓகையின்-மேலெழு மகிழ்ச்சியினால், அடைந்தகாலையின் - போனகாலத்தில், ஒன்னார் உதிரம் உண்டு ஊன்சுவைத்துஒளிரும் - பகைவருடைய வுதிரத்தைக் குடித்துஊனைச் சுவையறிந்து தின்று விளங்குகின்ற, வாகைவேல் அரசன் - வெற்றிமாலையணிவேலையுடைய தயரதன், சுமந்திரன்முதலாம் மந்திரத்தலைவரோடுஉரைப்பான் - சுமந்திரன் முதலாகிய சிறந்த மந்திரியரோடு சொல்லுவான். எ - று.

நாகிள ஒருபொருட் பன்மொழி. காணிய செய்யிய என்வாய்பாட்டெதிர்கால வினையெச்சம் ; இதில் விகுதி இய ; இது எதிர்காலங் காட்டி

யது. இளவல் பண்புப்பெயர்; இது பண்பாகுபெயர். ஒன்றா எதிர்மறை வினையாலணையும்பெயர்; ஒன்றென்பதன் மரூஉ ஆகிய ஒன்று பகுதி, ஆ மறை விகுதி, உகரக்கேடு சந்தி, விகுதி ஆன், விகுதி ஆகாரக்கேடு முதற்குறை. மந்திரத்தலைவரோ டென்னும மூன்றனுருபு ஏழாவதனிடப் பொருளது.

2 (இ-ள்) கற்பகக்கானத்து அரசுவீற்றிருக்கும்- கற்பகச்சோலையில்பெருமையாக அரசிருக்கின்ற, கடவுளும் ஏக்கறவுஎய்த - இந்திரனும் (தனக்கிலதே என்னும்)கவலையை அடையும்படி, பல்பலகாலம் உலகுஎல்லாம்அளித்தேன்- மிகப்பலநாள் பூமிமுற்றும்காத்தேன், ஒளிர்பருமணி மௌலி-விளங்குகின்ற பருமையாகிய இரத்தினங்களழுத்திய முடியை, இன் அற்பினின் இராமற்கு இனி - அன்பினால் சிராமனுக்கு, அணிபெறச்சூட்டி - அழகுபெறும்படிச் சூட்டி, அகல்நிலம் அவன் அடிப்படுத்தி - பரந்த பூமியை அவன்பாதத்தின் கீழ்ப்படச்செய்து, எறும்புஎழுந்து உடலம்உணங்க - எறும்புகள் மேலெழுந்து உடலம் உலரும்படி, மாதவத்தின் இருப்பது என்கருத்துஎன இசைத்தான் - பெரிய தவத்தொழிலில் இருத்தல் என தெண்ணமென்று சொல்லினான். எ-று.

கற்பகக்கானம் பலவினிட்டத்தற் கிழமைப் பொருளதாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். ஐந்துதருக்களாவன.-சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம. இவ்வைந்துக்கும் கற்பகமென்பது பொதுப்பெயராயும் வழங்குதலால் ஒன்றன் கூட்டத் தற்கிழமை என்னலுமாம். உலகு இடவாகுபெயா. எல்லாம் ஒருமையிற் பன்மை வந்த பால்வழுவமைதி. எழுந்து என்னும் வினை வினை உணங்க என்னும் முதல் வினையோடு முடிந்தது.

3 (இ-ள்.) காந்துஎரி கவிழ்க்கும் கடகம - பிரகாசித்து ஒளியைக் கொட்டுகின்ற காப்பு, நீள்முன்கைக்காவலன் - சிறந்துள்ள முன்னங்கையுடைய தசரதனது, மொழிஎதிர்விரும்பி - சொல்லுக்கு எதிராக விரும்பி, ஆய்ந்தநூற்கேள்வி வசிட்டன் முதலோர் - ஆராய்ந்த நூல்களின் புலமையையும் கேள்விகளையுமுடைய வசிட்டன் முதலானோர், இராமனுக்கு ஆங்கு அதுவிளம்பி - சிராமனுக்கு அப்போது அதனைச்சொல்லி, எந்துஎழில நகரம்புனைகஎன - உயர்ந்த நகரத்தை அலங்கரிக்கக் கடவீரென்று, முரசம் இயம்பு ஒலிகேட்டலும் - முரசுஒலிக்கின்ற ஒலியைக் கேட்குதலும், கூனிபாந்தள் வாய்ப்படுத்த - கூனியானவள் பாம்புதன் வாயில் அகப்படுத்தின, பறவையின் பதைத்து - பறவைபோலப் பதைத்து, கேகயன்பாவைபால் அடைந்தாள் - கேகயராச குமாரத்தியினிடம் சேர்ந்தாள். எ-று.

வசிட்டனை என்பதில் ஐ சாரியை. வசிட்டன் முதல் இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர்; முதல்பண்பாகுபெயர். பாவை உவமையாகுபெயர். கைகேசியின் பிதாவின்பெயர் அசுவபதி.

4. (இ-ள்.) மாந்தவன் மைந்தன் - உனது சக்கரவர்த்தி புத்திரன் மணிமுடிபுனைந்து - இரத்தின மிழைத்த முடியைத் தரித்து, மாநிலம் புரக்க, பெரிய பூமியை அரசு செய்யாநிற்க, நின்மைந்தன் ஏறு - உன் புத்திரன் இராமன் கைகளிற்றைம ஏற்று, உறாது அருநதி - ஏழையுண்டு, இழிவுஉறாது - அவமதிப்பை அடையாமல், இராமற்கு எரிமணிமௌலிசூட்டுதல் : விளங்குகின்ற மணிமுடி சூட்டுதலை, பாறு இனம் சுழலும் பரிதி வேல் அரசருக்கு - பருந்தின் கூட்டம் சுற்றுகின்ற சூரியனை ஒத்த ஒளியுள்ள வேலைப்பிடித்த அரசனுக்கு, [illegible] விலக்கு எனப் பணிப்ப - சொல்லி நீவிலக்கென்று சொல்ல, வேல்தடங்கண் - வேல்போலும் பெருங்கண்களையுடைய கைகேசி, மன்னவற்கு உரைப்ப போய - அரசனிடத்துச் சென்று, முனிவொடு மென்மெல உரைப்பாள் - கோபத்தோடு இடையறாமல் மெல்லச்சொல்லலுற்றாள். எ-று.

உறு முதனிலைத்திரிந்த தொழிலாகுபெயர். அடுக்கு இடையறாமைப்பொருளது. முன்னம் பண்பாகுபெயராய்க் காலத்தை உணர்த்தியது, அது இடவாகுபெயராய்க் கிரி ... அரசன் கையில் வேலையேர்திப்புறத்தேவர்நால இப்படலாவதை ... முதலிய உறுப்புகள் குறைதல் இன்றமையெனக் கருதி, அவ்வுதிர மாமிசாதிகளை உணவைவிரும்பிச் சுழலுவனவாயின. சுழலும் என்னும் பெயரெச்சம் எதுவும் கருவியுளடங்குமாதலால் வேலென்னும் கருவிப்பெயர் கொண்டு முடிந்ததென்க.

5. (இ-ள்.) முன்னம்நீ தருவல் என்ற நல்வரங்கள் இரண்டும்-தேர் செலுத்தியகாலத்தில் நீ கொடுப்பேனென்ற நல்வரங்களிரண்டையும், ஈண்டு உதவு எனமொழிய - இப்போதுகொடுஎன்று கேட்க, என்உயிர் தருதிஎன்னினும் அளிப்பல் கேட்கென - என் உயிரை நீ கொடுஎன்று கேட்டாலும் கொடுப்பேன் கேட்கக்கடவை என்று சொல்ல, இருநிலம்முழுதும் - பெரிய பூமிமுழுமையும், பின் அருகிருப்பின் பரதற்கு அளிப்பது ஒருவரம்-பேசுதலரிய சிறப்பினையுடைய பரதனுக்குக் கொடுப்பது ஒருவரம், ஏழ்பருவம் - பதினான்குவருஷம், முடி துறந்து - பொன்முடி அணிதலை ஒழித்து, இராமன் கானிடைப்போவது ஒருவரம்எனப் புகன்றாள் - இராமன் காட்டில் போய்வசிப்பது ஒருவரமென்று சொல்லினாள். எ-று.

முன்னம் பண்பாகுபெயராய்க் காலத்தை உணர்த்தியது. தருவல் தன்மையொருமை எதிர்கால வினைமுற்று: தா பகுதி, ரு விரித்தல் விகாரம், வ் எதிர்கால இடைநிலை, அல் தன்மை யொருமை விகுதி : இவ் விகுதி தன்மை ஒருமையில் எதிர்கால முற்றுக்கே வரும். அளிப்பது, போவது என்னுங் காரியங்களை வரமெனக் காரணமாக உபசரித்தார்.

6. (இ-ள்) முரசு ஒலிகேட்ட அசுணமெல்புள்ளின் - முரசினது ஓசையைக்கேட்ட மென்மையாகிய அசுணப்பறவைபோல, மூச்சுஅவிந்து ஒருவகைதேறி - மூச்சடங்கி ஒருவகையாகத் தெளிந்து, பரதனுக்கு உலகம்அளிப்பன்- பரதனுக்குப் பூமியைக்கொடுப்பேன், என் மைந்தன் படா

வனம் புகாதுஅளித்திடுகென்று - என்புத்திரனாகிய ஸ்ரீராமன் படர்ந்தவனத்தில் போகாமல் கருணைசெய்களென்று, அரசாகோன் இரப்ப மறுத்தலும்- சக்கரவர்த்தி யாசிக்க (அதற்குக்கைகேசி) உடன்படாதிருத்தலும், மெய்ம்மை ஆவியின்சிறந்ததென்று அளித்து - சத்தியம் உயிரினும் சிறந்ததுளன்ற(அவ்வரங்களை) கொடுத்து, பொருசிலையிராமன் தனைத்தருக எனபோர்செய்கின்ற வில்லைப்பிடித்த இராமனை அழைத்துவா என்று, சுமந்திரனெனும் தனிப்புகன்றான் - சுமந்திரனோடு தானேசொன்னான். எ-று.

7. (இ-ள்) மைம்முகில்கமலக்காடு பூத்தனைய-கரியமேகம்செந்தாமரை மலர்க்காடு பூத்தாலொத்த, மணிநிற அண்ணல்முன் எய்தி -நீலமணிநிறத்தை ஒத்தபெரியோனாகிய ஸ்ரீராமன் முன்போய், கைம்மலர் குவித்துச் சுமந்திரன்அழைப்ப - கைகளாகிய தாமரைமலர்களைக குவித்துச் சுமந்திரன்அழைக்க, கலினமான்தேர் இனிதுஇவர்ந்து - கடிவாளம் பூண்ட குதிரைகளைக் கட்டிய தேரில் இனிமையாசஏறி, தெவ்முனை கடந்த சினவுவேற் காளை - பகைவரது போரைவென்ற கோபிக்கின்ற வேலைத்தாங்கிய இடபத்தைஒத்தஸ்ரீராமன், தயரதன் மருங்குசென்றுஎய்தி - தசரதனுசகுப் பககத்தில் போய்ச்சேர்ந்து, எம்மை ஆள்உடையாய் அழைத்தது என்என்ன-எங்களை ஆளுதலுடையானே அழைத்தது யாதுகாரியம் என்றுகேட்க, இறைவன்நெஞ்சு அயர்ந்து சோர்ந்தனன் - சக்கரவர்த்தி (எப்படிச் சொல்வதெனமனம்சோர்ந்து கலங்கினான். எ-று.

8. (இ ள்.) கல்லும்வல்இரும்பும் வெண்ணெய்என்றுரைப்ப - கருங்கல்லும் வன்மையாகிய இரும்பும் (தன்வன்மைக்கு) வெண்ணெய்என்று சொல்லுமபடி, காழ்படுமனத்தகைகேசி - திண்மையாகியமனமுடையகைகேசி, மல்அடுதிணிதோட் பரதனுக்கு உலகம்வழங்கி - மற்போர் செய்யவல்ல வலியமைந்த தோள்களையுடைய பரதனுககுப் பூமியைக்கொடுத்து, நீ ஏழ்இருபருவம் - நீ பதினான்குவருடம், கொல்புலிவழங்குகானிடை - கொல்லுமியல்புள்ள புலிகள் திரிகின்ற காட்டில், திரியக்கூறினன்உந்தைஎன்று உரைப்ப - சஞ்சரிக்கச்சொல்லினான் உன்பிதா என்று சொல்ல, வில்விழுங்கு உயர்தோட்செம்மல் - கோதண்டதரைத எளிதாகத் தாங்குகின்ற தோளையுடைய நற்குணமுடைய ஸ்ரீராமன், நீ பணித்த விலக்கலன் எனத் தொழுது அகன்றான் - நீ கட்டளையிட்டவற்றை விலக்கேனென்று தொழுது அப்புறப்பட்டான். எ-று.

காழ் வைரம் ; இது திண்மையை உணர்த்தியது. மனத்த சினையடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம் ; மனம பகுதி, அத்துச்சாரியை, அ பெயரெச்ச விகுதி, மகரச்கேடும், அகரககேடும், உகரக்கேடும் சந்தி. திணிதோள் வினைத்தொகை நிலைத்தொடர் : விரிந்தால் திணிர்த, திணிகின்ற, திணியும் என விரியும். இங்கு நிகழ்காலத்ததாகக் கொள். வில்லை விழுங்குதலாவது தோளினது பருமனுக்கும், வலிக்கும் போதாமல் அதனில் கிடத்தலே. வில் என்பதற்கு ஒளி எனப்பொருள்கொண்டு, ஒளியையுண்ட

தோளென உரைப்பினும் பொருந்தும் இருவழியும் இரண்டாம வேற்றுமைத் தொகை என பது வலிந்து கோடலாய ன்றது.

9. (இ-ள்) கோசலைஉறையும் கோயிலுள்எய்தி - கௌசலைவசிக்கும் மாளிகையினுட்போய், கொறறவன பணிஉரைத்து - அரசன கட்டளையைசசொல்லி, உள்ளமமாசு அறத்தேறறி - உள்ளம குற்றம நீங்கும்படி தேறசசெய்து, சுமித்திரையோடு மனனுழைபபோக எனககூறி, சுமித்திராதேவியோடு அரசனிடம் போககக்கடவை என்றுசொல்லி, பூசல வண்டுஅறைதார இளையவரேனும் -ஒன்றோடொன்று போரைச் செய்கின்ற வண்டுகள ஒலிக்கின்ற மாலையணிந்த இலட்சுமணரேனும், புரிரம்பு இரங்குகீகுதலை - கட்டியாசரமபுகள இரங்குகின்ற மதுரமாகிய குதலைசசொற்லையுடைய, தோககனபடிக்கும சீதைபின தொடர - ஒளி விட்டுநீங்காத சீதைபின் தொடாந்துவர், தயரதன மருங்குசென்று அடைந்தான் - தசரதனபககம போயச் சேர்ந்தான். எ-று.

10. (இ-ள்.) தயரதன் வருந்தம் நோக்கி உளஅழிந்து - தசரதன் படும் வருத்தத்தை நோககிஉள்ளமநைந்து, சுமந்திரன் தளர்வொடுமாழ்கி-சுமந்திரன் தளர்ச்சியோடு துன்பபபட்டு, அயர்வொடும் கலுழ்ந்து - சோகத்தோடுஅழுது, கொடியகைகேசி முகத்தினைநோக்கி ஈதுஅறைவான்-கொடுமையுடைய கைகேசி முகத்தைப்பார்த்து இதைச்சொலவான், செயிர்அறுகடவுள் முனிவன் நல்அருளால - குற்றமற்ற தெய்வத்தன்மை யுள்ளமுனிவனது நல்லகருணையினால், திருவளர்கேகயத்துஅரசன் - செல்வம்வளர்கின்ற கேகயதேசத்து அரசன், உயிர்உடைஎவற்றின் பாடையும் உணர்ந்து - உயிருடைய எலலாபபிராணிகளின் பாஷைகளையும அறிந்து, ஆங்கு ஒழுகுநாள் தமமில் ஒருநாள - நடக்கின்ற நாளகளில் ஒருநாள எ-று.

நாள்பால பகாஅஃறிணைப் பெயராயினும இங்குப் பலவின்பா லென்பது தானேறற தம என்னும் சாரியையால விளங்கிறறு கொடிய குறிப்புப பெயரெச்சம் கொடுமை பகுதி, அகர விகுதிப் புணர்ச்சியில், மை யீறுகெட்டது, உகரம இ ஆனதும், யகரமெய்த் தோற்றமும சந்தி. உடைய என்னும் பணபடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சத்தின் அகரவீறு தொகுத்தல.

11 (இ-ள்) மல்தடவுத்தோளான் - மற்போரில்பெருமையுள்ளதோள்களையுடைய கேகயராசன், மனைவியோடு இனிதின்வைகியமலர் அணைப்புறத்தில்-மனையாளோடு இன்பமாகத் தங்கியிருந்த புஷ்பசயனத்தில், சிற்றெறும்பு ஒழுங்கில சேறலும-சிற்றெறும்புகள் நேராகசசெல்லலும,அரசன் சேவடி கடககஅரிதுஎன்ன - அரசனது சிவந்தபாதத்தைக கடந்துசெல்லுவது அரிது என்று (ஓரெறும்பு) சொலல, அயல் உறறுமேவும் எறும்பு - (அதற்கு) அயலில் பொருந்தியுள்ள எறும்பு, அயல்ஓர்எறம்புடன்- பக்கத்துள்ள ஓரெறும்புடனே, வெகுண்டு உரைத்திடுதல - (அரசனை) கோபித்

துப் பேசுதலை, கொற்றம்வேல் மன்னன் உணர்ந்தனன் நகைப்ப - வெற்றியைத் தரத்தகுந்த வேலைததாங்கிய கேகயன் கேட்டுணர்ந்து சிரிக்க, கோல்தொடி நகைத்தது என்னென்ருள் - அழகிய வளையலணிந்த மனைவி நகைத்தது யாதென்று கேட்டாள். எ-று.

சேறலும இறந்தகால வினையெச்சம்; செல் பகுதி, து, அல் சாரியைகள், உம் இறந்தகால வினையெச்ச விகுதி, பகுதி எகரம் ஏகாரமாதல் நீட்டல், லகரக்கேடும், தகரம் றகரமாதலும், உகரக்கேடும் சந்தி. சேவடி செம்மை என்னும் பண்புப்பெயர் அடிஎன்னும் வருமொழி புணர்ந்தபோது, மை யீறுகெட்டு, மகரம வகரமாகி முதல் நீண்டது; சேயடி என மகரம் யகரமாகத் திரிதலுமுண்டு. உடனென்னும் மூன்ருவதன்சொல்லுருபு ஏழாவதனிடப் பொருளது. கோற்ருெடி பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயா; கோலமென்பது - அழகு; இது கடை குறைந்தது. தொடி தொழிலடியாகப் பிறந்த பெயர்; தொடு பகுதி, இ செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி.

12. (இ-ள்.) ஈங்குஇதுநுவலின்என்ஆவிமுடியும்-உன்னிடத்துஇதைச்சொல்லிஞல் என்உயிர்உடலினின்றநீங்கும், (ஆதலால்)இயம்பலன்என்னவும்-சொல்லேனென்று சொல்லவும்,கோங்கு அலர்குழலாள் மறுத்துக்கூறுகஎன்று உரைத்துமுனிதலும் - வாசனைபரந்த கூந்தலையுடையாள் (அரசன்சொல்லை) தடுத்துக்கூறக் கடவைஎன்று சொல்லிக்கோபித்தலும்-கோஅடுவேலான் - பகைஅரசர்களை (போரில்) கொல்லுகின்ற வேலைப்பிடித்த கேகயன், தீங்குஉறும் உள்ளத்து அரிவைதோள் நலத்தின் - (தனக்கு) தீங்கு வருதற்குக் காரணமாகிய பெண்ணினது தோளினின்பத்தைக் காட்டினும், திதுவேறு இன்றுஎனவிடுத்தான் - தீமையைத்தருவது வேறுபொருள் இலதென்று துணிந்து (அவளை) கைவிட்டான், ஆங்குஅவள் அகட்டில்தோன்றிய உனக்கும் - அககேகயநாட்டில் அவள் வயிற்றில் பிறந்தஉனக்கும், அருள்உறுமோ என அறைந்தான் - கருணைதோன்றுமோ என்று சொல்லிஞன். எ-று.

இயம்பலன் எதிர்மறை வினைமுற்று, இயம்பு பகுதி, அத்தொழிலை மறுத்த அல் எதிர்மறை விகுதி,அனைத்துமொரு பகுதி,அன் தன்மை யொருமை விகுதி. என்னவுமென்ற உம்மை உயர்வுசிறப்பு. பரிமளத்தை உணர்த்தும் கொங்கென்னும் பண்புப்பெயர் கோங்கென நீட்டல்பெற்றது. கோ உயாதிணை ஆணெருமைக்கும், பன்மைக்கும் பொதுவாயினும் இங்குப் பன்மையாய் நின்றது. நலத்தினென்னும் ஐந்தனுருபு எல்லைப்பொருளது. வேறு பண்பாகுபெயர். அகடு தான்பெற்ற உணவின்சாரத்தை எல்லா உறுப்புகளுக்கும சரியாகத் தருதலால் பண்பாகுபெயர்; அகடு நடு.

13. (இ-ள்) மழைஉறழ் தடவுக்கைத்தயரதன் - மேகத்தை ஒத்த பெருங்கைகளையுடைய தசரதன், மனைவாழ்மங்கையர் வயிறு அலைத்துவ

ங்கி - மனையில் வாழ்கின்ற பெண்கள் வயிற்றிலடித்துக்கொண்டு அழுது, அழுகுரல் ஓதை, அழுகின்ற குரலின் ஓசை, கடையுகமுடிவின் ஆர்கலி உடைந்தாலென - கலியுகத்தின் முடிவில் கடல்கள் கரை புரண்டாற்போல, ஒலிப்ப- ஒலிக்க, கழைகளிதறுகண்கடாக்களிறு அனையான் - கரும்பை முறித்துத் தின்னும் அஞ்சாமையுடைய மதயானையை ஒத்த ஸ்ராமன், காவலன்பணிதலைக்கொண்டு - தசரதனுடைய கட்டளையைத் தலைமேற்கொண்டு, குழைபொருதடங்கட்கொடியொடும் - குண்டலத்தைத் தாக்குகின்ற பெருங் கண்களையுடைய பூங்கொடியை ஒத்த சீதையினேடும், இளைய கோவொடும் வளநகா கடந்தான் - இலட்சுமணனேடு வளமுடைய அயோத்தியைத் தாண்டினன். எ-று.

மனைவாழ் மங்கையராவார் தசரதனுடைய மனைவியார் அறுபதினாயிரம்பேர, யுகக்கடை கடையுகமென நின்றமையால் இலக்கணப்போலி; கடாம் மதம்.

14. (இ-ள்.) கொடிஞ்சிமான் தடவுத்தோ சமந்திரன் விடுப்ப - மேல்மொட்டமைந்த குதிரைகளைப் பூட்டிய பெரிய தேரைச் சுமந்திரன்ஓட்ட, கோன்நகர் அழுதுபின்தொடர - ராஜநகரத்து ஜனங்கள் அழுதுகொண்டு பின்தொடர்ந்துவர, தடவுத்திரைக் கரத்தால் நவமணிகொழிக்கும் -பெரிய அலைகளாகிய கைகளால் ஒன்பது வகை இரத்தினங்களை ஒதுக்குகின்ற, கங்கை அம்கரையினில் சார்ந்து - கங்கைக்கரையைச்சார்ந்து, தொடர்ந்துபின் செல்வோர் அறிவுஉறுவண்ணம் - விடாமல் பின்னேவருகின்ற நகரத்துக்குடிகள் அறியாதவிதம், துன்றுஇருளிடை மறைந்துஏகி - அடர்ந்த இருளில் மறைந்துசென்று, மடங்கல்ஏறு அனையான் - சிங்கங்களில் ஆண்சிங்கம்போன்ற ஸ்ராமன், முனிவரர் உறையும்சாலையின்- முனிசிரேட்டர் வசிக்கின்ற பன்னசாலையில், மகிழ்வுடன் அடைந்தான் - மகிழ்ச்சியாயடைந்தான் எ-று.

மான், கோன் இரண்டுபெயர்களிலும் னகரம் சாரியை. நகர் இடவாகுபெயர். கங்கையங்கரை என்பதில் அம் சாரியை, மடங்கல்யானைமுதலியவற்றின் மேல்பாய்கையில் முன்னங்கால் பின்னங்கால் வால்முதலியன மடங்குதலால் தொழிலாகுபெயர். இதுஒன்றுக்கும்மடங்காதது என்பதுபொருளென்பாரை வினையாலணையும் பெயர பால் காட்டும் விகுதியுடையதாயிருத்தல்வேண்டுமே இதில் யாதெனவினவி மறுக்க. ஏறு தொழிலாகுபெயர்.

15. (இ-ள்.) அலத்தகமருட்டிவருந்து - (செந்நிறத்தால்) செம்பஞ்சியை மயங்கச்செய்து (நடையால்) வருந்துகின்ற, அணிகொள்சீறடி அணங்கோடும் - அழகைப்பெற்ற மெல்லிய பாதங்களையுடைய தெய்வப்பெண்ஒத்த சானகியோடும், இலக்குவனேடும் - இலட்சுமணனேடும், உயர்காவின்- உயர்ந்த சோலையில், செல்வுழி-போனபோது, போந்த குகனெடும் தோழமைஎய்தி - காணவந்த குகனுடன் சிநேகமடைந்து, ஒலித்தடவுத்திரைநீர்க்கங்கையாறு அகன்று - ஓசையைச் செய்கின்ற பெரிய அலைகளையுடைய

கங்கையாற்றைக் கடந்து, பரத்துவன் கண்டு அவண் ஒருவி - பரத்துவாச முனிவனைக் கண்டு அங்கிருந்து நீங்கி, சிலைத்தழும்பு இருந்த தடவுப்புயத்து அண்ணல் - வில்லினது தழும்புள்ள பெருந்தோள்களை யுடையோனாகிய ஸ்ரீராமன், சித்திரகூடம் எய்தினன் - சித்திரகூட மலையை அடைந்தான். எ-று.

சேடிப் பண்புத் தொகைநிலைத் தொடர்; விரித்தால் சிறுமையாகிய அடியென விரியும்; சிறுமையென்னும் நிலைமொழியோடு அடியென்னும் வருமொழி புணர்ந்தபோது, பகுதி மை யீறுகெட்டு, இகரம் ஏகாரமாகி, உகரங்கெட்டது. செல்வுழி என்னும் வினையெச்சத்தில் வகரம் உடம்படு மெய்யல்லாத சந்தி. ஒருவி தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாயினும் இங்குத் தன்வினை இறந்தகால வினையெச்சமாய் நின்றது.

16. (இ-ள்.) கோதைவேல் தடவுக்கை தயரதன் ஆங்கு - மாலையணிந்த வேலைப்பிடித்த பெருங்கையையுடைய தயரதன் அப்போது, கோசலைகேட்டி - கௌசலையேகேள், யான்முன்னம் ஏதமஇல் வேட்டம்ஆடுவான் எய்தி - முன்னாளில்குற்றம்இல்லாத வேட்டைஆடும்படி (காட்டில்)போய், கங்குலின் இருடிதன்மகவை - இருட்போதில் சலபோசனென்னுமுனிவனுடைய புத்திரனாகிய சுரோசனனென்னும் சிறுவனை, தீதுஇயல் விலங்குஎன்றுஎய்து வீழ்த்திடலும் - தீமையுள்ள செயலுடைய விலங்கென்று கருதி அம்பைவிட்டு விழச்செய்தலும், சிறுவன் நல்மொழியினைக்கேட்டு - அச்சிறுவனுடைய நல்லசொற்களைக் கேட்டு, காதலோடு எடுத்து-விருப்பத்துடன் எடுத்து, அவன் தந்தைகைக் கொடுத்து உள்ள ஆறு உரைத்தேன் - அவனுடைய பிதாவின் கையில் கொடுத்து நடந்தசெய்தியைச்சொல்லினேன். எ-று.

வேட்டம் முதனிலையிலலாத் தொழிற்பெயர். மக ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய பெயராயினும், பின்னே சிறுவனென்றமையால் ஆண்பாலை யுணர்த்திற்று. காசிபமுனிவனுடைய குமாரன் விருத்தேசனன் அவன் குமாரன் சலபோசன், அவன் குமாரனாகிய சுரோசனனென்பவன் நான் இருகண் பார்வையுமில்லாத என்தாயையும் தந்தையையும் உறியில்வைத்துக் காவுதடி முனையில்முடிந்து காவுவேன். இப்போது பருகுதற்கு நீர்கேட்டனர். நான் தேடிவந்து கரகம்கொண்டு நீர்மொள்ளுகின்ற காலை யானைத் தும்பியினால் நீருட்கொள்ளுகின்ற ஒலியென மயங்கி எய்தனை. விரைவில் அவ்விருவருக்கும் நீர் கொண்டுபோய்க் கொடுத்து என் சாவையும் சொல்லென்றனன் தசரதன் அவ்வாறே அத்தாய் தந்தையரிடம்சொல்லினன்.

17. (இ-ள்.) கண்இல்லாமுனிவன் மத்தரின்மயங்கி - பார்வையில்லாத சலபோசமுனிவன் பித்தனைப்போல மயக்கங்கொண்டு, இறந்திடுமைந்தனைத்தழுவி - இறந்த புத்திரனைத்தழுவி, புத்திரசோகத்து இறத்தி நீ

ன்ன - புத்திரசோகத்தினாலே நீ இறப்பாயென்று, டமனைமு னிவர் முனிந்து உரைத்து - புகையெழும்படி மிகவுங் கோபித்துச் சபித்து, சித்தம்மா ழாந்து - மனம் மிக்க அன்புற்று, பன்னியோடு மேகி - தன்பத்தினி யோடுகூடி, இறுவன் வெந்தழல் புகுந்து அவிந்தான் - சிறுவனுக்காகமூட் டிய வெவ்விய தீயில்தானும் நுழைந்து இறந்தான், வித்தகமுனியன் சாப மதனை - ஞானமுடைய முனிவனிட்ட சாபமாகிய அதுவாகும் என்று, விளம்பினன். அயருமெல்லையில் - சொல்லினவனுளஞ்சோகிக்கும் போது. எ-று.

தழுவியென்னும் இறந்தகால வினையெச்சம் உரைத்தென்னும் வினை கொண்டது. மாழ்கு என்னும் முதனிலையோடு யா என்பதன் மரூஉ ஆகிய ஆ என்பது புணர்ந்தபோது முதனிலைவினை கடைக்குறையாகி நின்ற மாழா பகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, உ வினையெச்ச விகுதி, சந்தித்தகரம் நகரமாதல் மெலித்தல்; கடைக்குறை பெறுதாயின் மாழ்கி ன, மாழ்கி, மாழ்கினேன், மாழ்கல் எனவரும். அதென்னும் சுட்டியாகப்பிற ந்த குறிப்பு வினைமுற்று சாபத்தின்மையைச் சுட்டிநின்றது.

18. (இ-ள்.) சித்திரகூடத்து இராமன் எய்தியது - சித்திரகூடம லையில் சீராமன் சேர்ந்ததை, செப்பிய சுமந்திரன் மொழியாம் அதிறம் - சொல்லிய சுமந்திரனுடைய சொல்லாகிய அவ்வகை, அரசன்மார்பு ஆகம் பிளப்ப இறத்தலும் - அரசன் மார்பைப் பிளந்ததனால் உயிர் நீங்குதலும், கனவுகண்டு அழுங்கி - கனக்கண்டு மனம்வருந்தி, முத்தம்வெள்கவிகைப்ப ரதனும் - முத்தினாற்செய்த வெள்ளைக்குடையையுடைய பரதனும், ஒன்னார் முடைகமழ் குருதிவேல்-பகைவருடைய புலால்நாற்ற மணக்கின்ற இரத்த ம்படிந்த வேலேந்தாங்கிய, தடவுக்கைச் சத்துருக்கனனும் - பெருங் கையை யுடைய சத்துருக்கனனும, கேகயம் அகன்று - கேகயநாட்டினின்று நீங்கி, தண்புனல அயோத்தியில் அடைந்தார் - குளிர்ந்த நீர்வளமுடைய அயோ த்தியில சேர்ந்தார். எ-று.

எய்தியது இறந்தகாலத் தொழிற்பெயர்; எய்து பகுதி, இன் இறந் தகால இடைநிலை, அ சாரியை, து புடைபெயர்ச்சி விகுதி, இடைநிலை ன கரக்கேடு கடைக்குறை, ய் சந்தி. மார்பகம் ஒற்றுமைப் பொருளதாகிய ஆறும்வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்.

19. (இ-ள்.) மல்தடவுத் திணிதோள்மைந்தர் - மற்போரில் வல்ல பெரிய வன்மையாகிய தோள்களையுடைய பரதசத்துருக்கினர், கைகேகிமல லர் அடிவணங்கினர்நிற்ப - கைகேசியினுடைய தாமரைமலர்போன்றபாத ங்களைவணங்கி நிற்க, ஆங்குஅவள் உற்றவை அனைத்தும் உரைப்ப - அப் போது நடந்தவற்றை யெல்லாம் சொல்லியதனால், உருமுவீழ்அரவுஎனாடு ங்கி - இடிவீழ்ந்த பாம்புபோல நடுங்கி, பெற்றவெங் கூற்றை முனிந்துபோ ய் - தன்னைப்பெற்ற கொடிய யமனையொத்த கைகேசியை வெறுத்துப்

போய், அரசன் அடியின்வீழ்ந்து அழுது பேதுறலும் - தசரதனுடைய பாதங்களின்மேல் விழுந்து கலங்குதலும், சுற்றவர்தெருட்ட - சுற்றத்தார்தமேலோர் தெளிவித்ததனால், தாதையை வேள்வித் தழலினில் - தந்தையை ஔபாசனாக்கினியில், கடன்கழித்தனன் - தான் செய்யவேண்டியகடமைகளைச் செய்தான பரதன். எ-று.

இறந்தவன் முன்செய்துவந்த ஔபாசனாக்னியை உரிமைக்கடன்செய அன்றுமூட்ட மயானத்தில் இறந்தவனை ஏற்றும் சிதையில் சேர்த்துக் கொளுத்தல் அந்தணர், அரசர், வைசியர் மூவர்க்குமுரியது. கூற்று சொல்லால் அஃறிணையாயினும், பொருளால் உயர்திணை ஆண்பாலாதலால் கைகேசியைக் கூற்றுஎன உருவகப்படுத்தினது பால்வழுவமைதி என்க; சொன்மாத்திரத்தில் திணைவழுவமைதி.

20. (இ-ள்.) உன்தந்தைகளைகண்ஆய் அளித்த இவ்வுலகம்-நின்பிதா ஆதரவாகக்காத்த இவ்வுலகத்தை, காக்கஎன வசிட்டனைமுதலோர் - நீகாக்கக்கடவையென்று வசிட்டன் முதலியபெரியோர், தெளிவுஉற உரைப்பமறுத்தனன் ஆகி - மனமதெளியும்படி சொல்ல அதைமறுத்து, சித்திரகூடமவந்து எய்தி - சித்திரகூடம் சென்றுஅடைந்து, தளைஅவிழ் கமலக் கண்ணனைவணங்கி - கட்டவிழ்ந்த தாமரைமலர்போன்ற கண்ணுடைய ஸ்ரீராமனைவணங்கி, தந்தை விண்அடைந்தமைசாற்ற - தந்தை விண்ணுலகை அடைந்த செய்தியைச் சொல்லியதனால், உளம்மெலிவு எய்திக்கலுழ்ந்து - மனந்தளர்ந்து அழுது, தன்தாதைக்கு உறுகடன் யாவையும கழித்தான் - தன்தந்தைக்குச் செய்யவேண்டிய உரிமைக் கடனைச் செய்தனன். எ-று.

களைகண் அடைந்தவருடைய துன்பங்களை ஒழிக்கின்ற இடம்எனப்பொருள்படுகின்ற இருதொடர்மொழி ஒருசொல்லின் தன்மையது. வசிட்டனை என்பதில் ஐ சாரியை, தளையவிழ கமலமென்றது தாமரைப் புதுமலரை. கமலம் பொருளாகுபெயர். கடம்என்பது கடனென னகரம் போலிபெற்றது.

21. (இ-ள்.) உன்கடன் - உன்கடமை, புரவுபூண்டு உலகமளிப்பது - காக்குந்தொழிலை மேற்கொண்டு பூமியை ஆளுதல், என்கடன்-என்கடமை, நின்போற்றல் - நின்னைவணங்குதல், எனத்தொழுது - என்றுவணங்கி, பரதன்வீழ்ந்துஇரப்ப - பரதன் ஸ்ரீராமனுடைய பாதங்களில் தண்டமிட்டு யாசிக்க, தழீஇக்கொடு என்வாய்மை பழுதுஉறாது - தழுவிக்கொண்டு என்மெய்ம்மை குற்றப்படாமல், ஈர்எழுபருவம் நீஅரசன்ஆய்- பதினான்குவருடம் நீஅரசனாகி, உலகம் அளிதிஎன்ன - உலகத்தைக் காவென்றுகட்டளையிட, பணிந்து அவன்பாதுகை இரண்டும் - பரதன்வணங்கிஅச் ஸ்ரீராமனுடைய மிதியடிகளிரண்டையும, எரிமணி இமைக்கும் மௌலியில்புனைந்து - ஒளியுள்ள இரத்தினங்கள் பிரகாசிக்கின்ற முடிபோல அலங்காரமாகச் சுமந்து, நந்திஅம்பதியிடை இருந்தான் - நந்திக்கிராமத்தில் இருந்தான். எ-று.

புரவு தொழிற்பெயர், புர பகுதி, வு புடைபெயர்ச்சி விகுதி. நிற்போற்றல் இது இரண்டாம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடராதலால் "நின்றியல்பாம் உறவே" என்ற இயலபின் விகாரமாயிற்று, தழீஇக்கொடுஎன்பதில் அளபெடை சொல்லிசை அளபெடை கொண்டென்பதன் மரூஉ கொடு.

22. (இ-ள்.) சித்திரகூடம் நீங்கி - சித்திரகூட மலையினின்று நீங்கி, திசைமுகன் அனையகேண்மை அத்திரி-நான்முகனை ஒத்த (உயிர்களிடத்து) அன்புள்ளஅத்திரிமுனிவன், உறையும்சாலைஅடைந்து-வசிக்கும் பன்னசாலையை அடைந்து, அநசூயை அப்பின்கொத்து அலர்மாலை சாந்தம் - அம்முனிவன்பத்தினியாகிய அநசூயை பூங்கொத்துகள் பரந்துள்ள மாலையையும்சந்தனத்தையும், சானகிக்கு அளிப்பக்கொண்டு - சீதைக்குக்கொடுக்கப்பெற்று, தத்துநீர் அருவிச்சாரல் - துள்ளுகின்ற நீரையுடைய அருவியின் பக்கத்துள்ள, தண்டக அரணியம் சார்ந்தான் - தண்டகாரணியமென்னும் வனத்தை அடைந்தான் சிராமன். எ-று.

இது முதலிய பதினெட்டுச் செய்யுளும் முதற்சீரும், நான்காஞ்சீரும் விளவிறுதிச் சீராகவும், ஒழிந்த நான்குசீரும் மாவிறுதிச் சீராகவும் வந்த அடி நான்கா லமைந்தன ஆதலால் அறுசீரக் கழிநெடிலாசிரிய விருத்தமென்க. திசை நான்கென்னும் எண்ணை உணர்த்திய குறிப்புச்சொல். கேண்மை கேளாகுந்தன்மை, கேள் - உறவு. இது தன்காரணமாகிய அன்பை உணர்த்தியது.

23. (இ-ள்.) கழைபொருது உகுந்தமுத்தின் - மூங்கில்கள் (ஒன்றிறேடொன்று) தாக்கியதனால் சிந்திய முத்துகளினால், கவைஅடி பெயர்ப்ப மாழ்கி - பிளந்தவடிவுள்ள கால்களை எடுத்துவைக்க வருந்தி, உழையினம் ஒதுங்குகானின் உறுதலும் - மான்கூட்டம் பக்கமாகச்செல்லும் காட்டில் சேர்தலும், உருமுசீற்றநது அழல்உமிழ - இடியையொத்த கோபமமைந்ததீயைக் கக்குகின்ற, குருதிப்பேழ்வாய் - (உண்ட) இரத்தம்வழிகின்ற பெரிய வாயையுடைய, விராதன் ஆயிழையைவெளவ - விராதன் சானகியை எடுத்துச் சென்றதனால், நிழல்உமிழ் வாளின்வீட்டி - ஒளியைவீசுகின்ற வாளினால் (இராமலட்சுமணர்) வெட்டி, நிலத்திடைப் புதைத்திட்டார்- (அவன் உடலை) மண்ணில் புதைத்தார். எ-று.

பொருது காரணப் பொருட்டாகிய இறந்தகாலச் செயவெனெச்சத்தின் திரிபு. உரும என்னும் பெயர் சீற்றமெனனும் வருமொழிப் புணர்ச்சியில உகரச்சாரியை பெற்றது. ஆயிழை வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர்.

24. (இ-ள்.) அங்குஅவன் எழுந்து - அவ்வுடலினின்றும் அவன் எழுந்து, முன்நான்தும்புரு - அரக்கனாவதற்கு முன்னான தும்புரு, அரம்

யைதன்றல் - அரம்பை என்னும் தேவவேசியினுல், சீபொங்குமான்இ ட்ட - புகழ்மிகுந்த குபேரன்கொடுத்த, சாபம்போக்கினை என்று வந்தி-சா பத்தை நீக்கினையென்று துதிந்து, தங்குதன்பதியின் ஏக - வசிக்கின்றந கரத்துச்குச்செல்ல, சரபங்கன்தனக்கு - சரபங்கமுனிவனுக்கு, மீளா-மீ ண்டுவராத, துங்கநல் முத்திநலகி - உயர்வாகிய நல்லவீட்டுலகை அருளி, தொல்நெறிசெல்லும் எல்லை - பழமையாகிய காட்டுவழியில் செல்லுங் காலே. எ-று.

நான் தம்புருவென்னுங் காந்தருவன், குபேரனிடஞ் செல்லும்அ ரம்பையைக் கண்டு விருப்புமிகுந்து தீச்செயல் புரிந்தமையால் குபேரனி ட்ட சாபத்தினல் அரக்கனயினேன் என்றான் விராதன். பிரமனல் அனு ப்பப்பட்ட இந்திரன் சரபங்கமுனிவனை நோக்கிப் பிரமன் தன்னுலகுக்கு அழைக்கவரச்சொல்லினனென, அம்முனிவன் நான்நெடுங்காலம் பெருந் தவம் செய்தேனகையால், இப்படிப்பட்ட பதவிகளைப்பெற விருப்பமில னென்று மறுத்தனன். இந்திரன் வந்த ஆடம்பரத்தைக் கண்டு சீராமன் தனியேசெல்லுதலும் அம்முனிவன்கண்டுவேதம் விதித்த தீயை மூட்டிச்சீ ராமனிடத்து விடைபெற்று மனைவியுடன் அத்தீயில் மூழ்கிவீட்டுலகை அ டைந்தனன்.

25. (இ-ள்.) பசுவின்தோல் மெய்யில்போர்த்து - பசுவினதுதோ லைஉடலில்போர்த்துக்கொண்டு, பாய்புலி திரியுமாபோல - பாயும்இயல்பு டைய புலிதிரியும் வகைபோல -வசைஅறும் முனிவர்வேடம் தாங்கியும்- நிந்தையில்லாத முனிவரது வேடத்தைப் பூண்டும், வனத்திலுள்ள காட்டி லுள்ள, நிசிசரர்க்கோறல்என்-இராக்கதரைச் கொல்லுதல்என்ன, நீதியோ என்று - நீதியாகுமோஎன்ற, சீதை - சானகி, அசிமுதற் படைகள் தாங் கின் - வாள்முதலிய ஆயுதங்களைப் பிடித்தால், வன்கண்மை அடுக்கும் அன்றே (உயிர்களினிடத்து) இரக்கமிலாமை துணிவாகச்சேரும். எ-று.

உம்மை உயர்வு சிறப்பு. பசுவின்றோல் சினைத்தற்கிழமைப் பொரு ளதாகிய ஆறும் வேற்றுமைத் தொகை. இது எடுத்துகாட் டுவமையணி. கொல அசை - ஓ எதிர்மறை. அன்றே என்னும் இடைச்சொல் தேற்றப் பொருள்தரும் இடைச்சொல்.

26. (இ-ள்)என்ன ஓர்காதை உண்டு-இப்படி என்று ஒரு கதையுளது, கேட்டிஎம்பெருமனென்ற - கேள்எம் பெரியானே என்றுசொல்லி, தன்இ ருகைகள்கூப்பி - தன்இரண்டு கைகளையுங்குவித்து, சானகி உரைக்கல்உற் றுள் - சானகிசொல்லுதல தொடங்கினுள், முன்னம் ஓர் முனிவன்செய்த தவத்தினை - முன்னளில் ஒருமுனிவன் செய்ததவத்தை, அழிக்கவுன்னி- அழிக்க நினைத்து, பொன்நாகரு இறைவன் - அமராவதிககுத்தலைவனுகிய இந்திரன், ஓர்வாள் முனிகையில் கொடுத்துப்போனுன் - ஒருவாளை முனி வன் கையில் கொடுத்துவிட்டுப் போனுன். எ-று.

உரைக்கல தொழிற்பெயர், உரை பகுதி, க சாரியை, கு சாரியை, அல் புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி. கூப்பி பிறவினையாகிய இறந்தகால வினையெச்சம; கூம்பு தன்வினைப் பகுதி மெல்லொற்றுவல்லொற்றாதலாகிய விகாரம் பெற்ற கூப்பு பிறவினைப்பகுதி, உகரத்தின் திரிபாகிய இகரம இறந்தகால வினையெச்ச விகுதி, உகரக்கேடு சந்தி.

27. (இ-ள்) அருகாத்தவேலோடி - அவ்வாளை (நழுவிப்பிடியாமல்) காத்துக்கொள்ளுதலை விரும்பி, வயிரவாள்கையில்கொண்டு - வைரப்பிடியுள்ள வாளைக்கையில்பிடித்து, நலந்தவனை கொடிகளையும்மரம் - நல்லதவம் செய்யும் முனிவன் பூங்கொடிகளையும் வலியபூலதுகளையும மரங்களையும், குறைபடுத்து - வெட்டி, பின்னர் - பழகியபின், பற்றல் விலங்குயாவும் - தன் இடமவந்த எல்லாவிலங்குகளையும், ஒறுத்து வாள் பிடித்து அற்ற - முறை தொழித்து வாள்பிடித்த பயனால், பற்றுநீரில்லையுறு - எரிகின்ற தீயையுடைய நரகத்தில் சார்ந்து, பருவரல்உழந்தான் - துன்பம அடைந்தான். எ-று.

28. (இ-ள்) ஆதலால் வரிவில்வந்தி - ஆகையால் கட்டமைந்தவில்லைத்தாங்கி, அரக்கரை முனிந்துகோறல் - இராக்கதரைக் கோபித்துக்கொல்லுதல், தீதெனஉரைப்ப - தீதென்றுசொல்ல, ஐயன் சீதைசொல்மகிழ்ந்துகேட்டு - தலைவன் சீதையினுடைய சொல்லைமகிழ்ந்துகேட்டு, மாதவர் தமக்குமுன்னம - பெருந்தவத்தை யுடையார்க்கு முன்னே,வஞ்சினம் உரைத்தஆற்றால் - சபதத்தைநான் சொல்லிய முறைமையினால், பாதகர்க் கொல்லின் - அப்பாவிகளைக்கொன்றால், நன்மைபயக்கும் - (அக்கொலை) நன்மையைத்தரும், பழிஉறாது - நிந்தைசாராது. எ-று.

தீது குறிப்பு வினைமுற்று. வஞ்சினமென்றது அறத்தை ஆக்கவும் அல்லதைப் போக்கவுமே யான் வில்லையேந்தியது என்று நம்மைக் கண்டு அடைக்கலம புகுந்த தண்டகாரணிய முனிவர்களுக்குக் கூறிய சபதத்தை. கொல்லினன்மை பயக்கும என்பதில் கொல்லுதற்றொழிலைச் சுட்டிய அது என்னும சுட்டுத்தோன்றா எழுவாய்.

29. (இ-ள்.) அன்றியும் - அல்லாமலும், அரசர் ஏந்தரிப்பதேஅறமதுஆகும - ஆயுதத்தைத்தாங்குவதே அரசகுலத்தினர்க்குத் தருமநிலைஆகும, மன்றல்அம்குழலாய்என்ன - மணம்அமைந்த அழகிய கூந்தலையுடையாளேயென்று, வரிசிலை இராமன்கூறி - கட்டுள்ள கோதண்டத்தைத் தாங்கிய சீராமன்சொல்லி, துன்றுஅருந்தவத்தின்மிக்க சுதீக்கணன் - அருமையாகிய அடைதற்குரிய தவத்தில்மிக்க சுதீட்சணமுனிவன், வழிமுன்காட்ட - வழியைமுன்நின்று காட்டியதனால், தென்தமிழ்முனிவன்சாலை - தெற்கில் வழங்கும் தமிழை வெளிப்படுத்தின அகத்திய முனிவனதுபன்னசாலை, அணித்துஎன - சமீபத்திலுள்ளதென்று, செல்லுமஎல்லை-போகும் போது. எ-று.

உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை, ஏ பிரிநிலை. அறமது என்பதில், அ சாரியை, து பகுதிப்பொருள் விகுதியாயினும் தன்னை யேற்றபெ

யரின்பாற் பொதுமையை நீக்குகின்றது. மன்றலங் குழலாய் சினையடியாகப் பிறந்த குழலாளென்னும் பெண்பாற்பெயர் விளியுருபேற்று ஈற்று ளகரம யகரமாய்த் திரிந்தது .ஆதலால் அன்மொழித் தொகை அன்று.

30. (இ-ள்)செல்நெறியதனில்-போகும்வழியில்,ஓர்தாமரைமடுவில்-தாமரைமலர்களையுடைய மடுவில், தெய்வநல்முழவு இயம்பக்கேட்டு - தெய்வத்தன்மையுள்ள நல்லமிருதங்கம் ஒலிக்கக்கேட்டு, நண்ணும்ஓர்முனிவனோடும் - எதிர்வருகின்ற ஒப்பற்ற தர்மபிர்து என்னும் முனிவனிடத்து, மன்னும் இதுஎன் என்ன இடைவிடாது ஒலிக்கின்ற ஒலியாதென்றுகேட்க, மறைபயில் மாண்டு கண்ணன் - வேதங்கள் தேர்ந்துள்ள மாண்டுகர்ணி, என்னும் நல்முனிவன் - என்னப்படும் நல்லமுனிவன், நீருள்இரு தவம்புரியும்எல்லை - நீர்க்குள் பெருந்தவத்தைச் செய்யும்போது, எ-று.

நெறியதனில், நெறியது பகுதிப்பொருள் விகுதிபெற்ற இடப்பெயர், இல் ஏழாம்வேற்றுமை உருபு, அன் உருபுப்புணர்ச்சியில் வந்த சாரியை. மற்று, கொல் அசை. இருந்தவம் பண்புத்தொகை நிலைத்தொடர்; விரிந்தால் இருமையாகிய தவமென விரியும். இருமை யென்னும் பண்புப்பெயர் தவமென்னும் வருமொழிப் புணர்ச்சியில் மை யீறுகெட்டதும், இனவெழுத்து மிகுதலும் சந்தி.

31. (இ-ள்) ஏத்து அருமுனிவன் செய்யும் - துதித்தல் முடியாத முனிவன் செய்கின்ற, இந்தவம் ஒழிப்ப - பெருந்தவத்தை ஒழிப்பதற்கு, தெய்வக்கூத்தியர் ஐவர் தம்மை - தேவலோகத்து நடனப் பெண்கள் ஐந்துபேரை, வயிரவாள் குரிசில்ஏவ - வச்சிராயுதத்தையுடைய தேவராசன் அனுப்பியதனால், வேய்த்தடவுத் தோளார்எய்த - மூங்கில்போலும் பெருந்தோள்களையுடைய தெய்வப்பெண்கள்வர, முனிஉளம்விழைந்து - முனிவன்உள்ளத்தில் விருப்புக்கொண்டு, வாவிநீத்தம் ஓர்சாலைஆக - தடாகத்தின் நீர்வெள்ளம் சிறந்த இடமாக, தவத்தினால் நிறுவிஅன்னோன் - தவத்தினால் நிலைபெறச்செய்து அம்முனிவன். எ-று.

ஏத்தரு என்பதில் ஏத்து முதனிலைத் தொழிற்பெயரெனக்கொண்டு எழுவாய்த் தொகாநிலைத் தொடரெனினும், ஏத்த எனப்பதம்பிரித்துச் செயவெனெச்சந் திறு தொகுத்தல் பெற்றதெனினும் பொருந்தும். கூத்தியர் தொழிலடியாகப் பிறந்தபலர்பாற்பெயர்; கூத்துமுதனிலையில்லாத் தொழிற்பெயர் பகுதி, இ பெண்பால் விகுதி,உகரக்கேடு சந்தி,இவ்வொருமைப் பெயரின் பன்மையை உணர்த்தவந்த அர் பலர்பால் விகுதி, ய் சந்தி. நீத்தம் நீந்தப்படுவதென்னும் பொருளில் நீந்து பகுதி, அம் செயப்படு பொருண்மை விகுதி, நகரம் தகரமானதும், உகரக்கேடும் சந்தி, அம் புடைபெயர்ச்சியை யுணர்த்தும விகுதி எனக்கொண்டு, தொழிலாகுபெயரெனினு மொக்கும். நிறுவி இறந்தகாலவினையெச்சம்; நில் தன்வினைப் பகுதி, து பிறவினை விகுதி, லகரக்கேடும், தகரத்திரிபும் சந்தி. இங்ஙனம் முடிந்த நிறு பிற

வினைப்பகுதி, வ் சந்தி, உ சாரியை ; இ இறந்தகால வினையெச்ச விகுதி. உகரச்சாரியை பெறாது வரின் நிரீஇ என்ற சொல்லிசை அளபெற்று வரும்.

32. (இ-ள்.) நீசரும்பு அனுக்கும் செம்சொல் - மதுரமாகிய கரும் பின்சுவையை அழிக்கவல்ல நல்லசொற்களைப் பேசவல்ல, தெரிவையர் நல ன்உண்டு ஆட - பெண்கள்சுகத்தை உண்டபின் ஆடாநிற்க, சதியின் ஆடும்அ மலைஇம்முழக்கம்என்ன - காளவொற்றின்படி நடிக்கின்ற ஒசை நமக்குக் கேட்கின்ற இவ்வோசைஎன்று சொல்ல, வாங்குவில் தடவுத்தோள் அண் ணல் - வளைப்பதற்குரிய வில்லைத்தாங்கிய பெருந்தோளையுடைய பெரியோ னாகிய சீராமன், அவைவிரும்பிக்கேட்டு - அவற்றை விருப்பமாய்க்கேட்டு, நீங்குழி இளவலோடும் இராகவன் - (தருமபிருது)நீங்கிய காலத்தில் சீராம ன் தம்பியுடனே நடந்தனன். எ-று.

ஆடும் என்னும் பெயரெச்சம் தன்காரியமாகிய அமலை என்னும் கா ரியப் பெயர்கொண்டது. முழக்கமென்பது தொழிற்பெயர் ; பகுதி முழங் கு. கரும்பு பொருளாகுபெயர். அண்ணல், இளவல் பண்பாகுபெயர் ; அல் பகுதிப்பொருள் விகுதி.

33. (இ-ள்.) வில்வலன் துணைவன் ஆகும் - வில்வலனென்பவன் தன்தம்பியாகிய, வெய்யவாதாபிதன்னை - கொடியவாதாபியை, ஒல்லையில் தகரது ஆக்கி - விரைவில் ஆடாக்கி, ஒறுத்தஊன் புழுக்கல் - துண்டித்தத சையால் சமைத்தகறியை, ஆங்குப்புல்லிய மறையோர்க்கு ஊட்டி - தன் னிடம்வந்த வேதங்களையுணர்ந்த முனிவர்களுக்கு உண்பித்து, போதுக என்று இயம்ப - வரக்கடவாயென்று அழைக்க, வெய்யோன்வல்லையில் மு னிவர்வீய - கொடிய அசுரனாகிய வாதாபி உடனே முனிவர் இறக்கும்படி, வயிறுபோழ்ந்து ஏகுவான் - (அவரது) வயிற்றைப் பிளந்துகொண்டு வெளி யேவருவான். எ-று.

வெய்ய பண்படியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம் ; வெம்மை ப குதி, அ பெயரெச்சவிகுதி, மை யீறுகெட்டதும், முன்நின்ற மகரமெய் ய கரமானதும், தனிக்குறின்முன் ஒற்றாகிய அம்மெய் இரட்டியதும் சந்தி, இது வெவ்விய எனவும் வரும். இது மகரமெய் வகர மெய்யாகத் திரிந்து இகரச்சாரியையும்,இரட்டிய வகரச்சந்தியும், யகரச்சந்தியும் பெற்றது. தக ரது இதில் அகரம் சாரியையும்,து பகுதிப்பொருள் விகுதியும் ஆகும். புழுக் கல் பிறவினைத் தொழிற்பெயர்; இது ஆகுபெயராய் வேவித்த பொருளுக்கா யிற்று. தன்வினைத் தொழிற்பெயர் புழுங்கல். ஒறுத்த காரணப்பொருட்டா கிய இறந்தகாலப் பெயரெச்சம் ஊனென்னும் காரியப்பெயர் கொண்டது.

34. (இ-ள்.) செம்தமிழ்மணக்கும்-செம்மையாகியதமிழ்மணக்கின்ற, செவ்வாய்க்குறுமுனிதனக்கு - சிவந்தவாயையுடையஅகத்திய முனிவனுக் கு,தீயோன் வெம்திறல்தம்பிதன்னை-மிக்கவலியமைந்த தம்பி வாதாபியை,

இன்னவண்ணம் விருந்துசெய்ய - மேற்சொல்லியபடி விருந்துசெய்துஅழைக்க, அந்தம் இல்வலியோன்தன்னை - முடிவில்லாத வலியுடையவாதாபியை, அகட்டிடை அறுத்த - வயிற்றினுள் சீரணிக்கச்செய்த, வெற்றிமைந்துடைய முனிவன்சாலை - வெற்றியையும் தலைவலிமையையுமுடைய அகத்தியமுனிவனதுசாலை, ஈதெனை வழங்கல்உற்றான், இது என்றுசொல்லினான். எ-று.

மக்களுடைய இயற்கை யுருவினும் குறுகிய உருவமுடைமையால் குறுமுனிவனென்னும் பெயர்வழங்கியது, தம்பி பொருளடியாகப் பிறந்த இளையானென்னு முறைப்பெயர் ; தாம் பகுதி, பி இளையவனென்னும் முறைப் பொருண்மை விகுதி, பகுதி ஒருமையிற் பன்மை வந்தவழுவமைதி, தம் ஆதல குறுக்கல் விகாரம். இன்ன வண்ணமென்பது இன்னணமென மரீஇயது. முனிவன் இறைவனை யாரோடும் பேசாமல்சிந்தனைசெய்பவன்.

35. (இ-ள்.) தமிழ்முனிசாலையெய்தி இறைஞ்சலும் - தமிழை வெளியிட்ட அகத்தியமுனிவனது பன்னசாலையை அடைந்துவணங்குதலும், தவநனிமிக்கோன் - தவத்தில் மிகுந்த அகத்தியமுனிவன், உமிழ்கதிர் வாளும்வில்லும் தூணியும் உதவக்கொண்டு - கதிரெறிகின்றவாளையும் வில்லையும் அம்பறாத்தூணியையும் கொடுக்கவாங்கி, ஆங்கு- அப்போது, அமை உறழ்தோளியோடும் - மூங்கில்ஒத்த தோளையுடைய சானகியோடும், ஐயனும் இளையகோவும் - சீராமனும் இலட்சுமணனும், கமழ்ல் அம்துறை சூழ்பஞ்சவடியினில்-(நல்லமலா) மணத்தலையுடைய அழகிய ஆற்றின் துறையால் சூழப்பட்ட பஞ்சவடியில், கடிது சென்றார் - விரைவாகச் சென்றார்கள். எ-று.

பஞ்சவடி ஐந்து ஆலமரங்களையுடையஇடம் ; வடம்-ஆலமரம். கடிது உரிச்சொலடியாகப் பிறந்த குறிப்பு வினையெச்சம் ; கடி பகுதி, த எழுத்துப்பேறு, உ வினையெச்ச விகுதி இவ்வாறன்றிப் பண்புப்பெயரடியாகப் பிறந்த குறிப்பு வினையெச்சமெனினும் ஒக்கும்; விரைவுப் பொருளதாகிய கடுமை பகுதி, உகரவினை யெச்சவிகுதிப் புணர்ச்சியில், மை யீறுகெட்டதும், உகரம இகரமானதும் சந்தி, த் எழுத்துப்பேறு.

36. (இ-ள்.) அவ்வுழிஎருவைமன்னன்சடாயு-அவ்விடத்தில் கழுகுகளுக்கு அரசனாகியசடாயு, வந்துஅணுகலோடும் - வந்துநெருங்குதலும, செவ்விசேர இராமன்நோக்கி - நற்குண நற்செய்கை சேர்ந்துள்ள சீராமன்பார்த்து, யாரைநீ செப்புகஎன்ன - நீ எத்தன்மையாய்சொல்லக்கடவை என்றுகேட்க,எவ்வெலாத்திசையும்வென்றசயரதன்தோழன்யான்-எப்படிப்பட்ட திக்கிலுள்ளாரை யெல்லாம் வெற்றிகொண்ட சயரதனுடைய சிநேகன் நான், என்கவ்வைஇல் மரபின் செய்திகேள்என் - எனது துன்பமதெலிலாத பரம்பரையினது செய்தியைக் கேளென்று, கழறல் உற்றான் - சொல்லினான். எ-று

செவ்வி செம்மையென்பது போன்ற பண்புப்பெயர் ; செம் பகுதி, இகரம் பகுதிப்பொருள் விகுதி, மகரம் வகரமாகத் திரிந்தசும், அது இரட்டியதும் சந்தி. யானோ முன்னிலையொருமை விகுதி வினைக்குறிப்பு ; யார் படர்க்கையிடத்துக் குரியதாயினும், முன்னிலையொருமை விகுதிபெற்றமையின் முன்னிலைக் குரியதாயிற்று. தொண்டனேன் என ஆண்பாற்படர்க்கைப் பெயர் என் என்றும் தன்மை யொருமை விகுதி பெற்று அவ்விடத்துக் குரியதாயிற்று. "திருப்புயம்புகழ் களியமோம்" "பாணமோம்" பலர்பாற் படர்க்கைப் பெயர் தன்மைப் பன்மை விகுதிபெற்று அவ்வாறு வருதல் காண்க. திசை இடவாகுபெயர். செப்புக வியங்கோள் வினை. முதனிலை திசைச்சொல்.

37. (இ-ள்.) ஆசு அறுதக்கன் ஈன்ற - குற்றமற்ற தக்கன்பெற்ற, அறுபதுமகளிர்தமயில் - அறுபது பெண்களில், எசு அறும் எண்மர்தம்மை - நிந்தையில்லாத எட்டுப்பெண்களை, காசிபற்கு ஈந்தான் - காசிபமுனிவனுக்குக் கொடுத்தான், அந்தப் பாசிழைமகளிர் தம்மில் - அந்தப் பசும்பொன் அணியணிந்த பெண்களில், அதிதி முப்பான் முக்கோடி - அதிதி முப்பத்துமூன்றுகோடியாகிய, தேசுஉறும்-ஒளிமிகுந்த, அமரர்ப்பெற்றாள் - தேவர்களைப்பெற்றாள், திதி தயித்தியரை ஈன்றாள் - திதிஎன்பவள் அசுரரைப் பெற்றாள். எ-று.

மகளிர் பொருளடியாகப் பிறந்த பலர்பாற் பெயர் : மக பகுதி, அள் பெண்பால் விகுதி, விகுதி அகரக்கேடு முதற்குறை, இங்ஙன முடிந்த பெண்பாலொருமைப் பெயரைப் பன்மைப் பெயராக்குதற்கு இர் என்னும் பல்லோர் படர்க்கை விகுதி புணர்ந்தது : புத்தேளிர், பெண்டிர் இவற்றிலும் இர் விகுதிகாண்க. பாசிழை பசும்பொன்னாற்செய்த இழை என்பது பொருளாதலால் அது ஓர் குறிப்பாகிய மரபு வழுவமைதி. எசு முதனிலைத்தொழிற்பெயர். தைத்தியர் தத்திதாந்த நாமம். ஐகாரத்துக்கு அகரமும் யகரஇகரமும் தயித்தியரெனப் போலியாகவந்தன.

38. (இ-ள்.) தனுஅயக்கிரீவன் தந்தாள் - தனுஎன்பவள் அயக்கிரீவனென்னும் அசுரனைப் பெற்றாள், காளி காளிகன்தனோடும் - காளியென்பவள் காளிகனென்னும் பாமபுடனே, புனிதம்ஆம் நாகம்தந்தாள் - சுத்தமாகிய பாம்புகளைப் பெற்றாள், தாமிரை என்னும் பூவை - தாமிரையென்னும்பெண், செனிகிரவுஞ்சிபாசி திருதராட்டிரியினோடும் - சேனிகிரௌஞ்சிபாசி திருதராட்டிரியினோடு, கனிமொழிச் சுகிஎன்று ஓதும் - முக்கனியை ஒத்தசொற்களைப் பேசுகின்ற சுகியென்று சொல்லும், கன்னியர் தம்மைப்பெற்றாள் - பெண்களை இன்பமாகப்பெற்றாள். எ-று.

கிரவுஞ்சி என்பதில் அகர வகர உகரம் ஔகாரத்துக்குப் போலியாகவந்தன.

39. (இ-ள்) பாசிபாசத்தைஈன்றாள்-பாசியென்பவள் பாசத்தைப்பெற்றாள், செனிபருந்து உவணம்ஈன்றாள் - சேனிபருந்துகருடன்என்னும் பற

வைகளைப்பெற்றாள், தேசுஉடை கிரௌஞ்சிஎன்பாள் - ஒளியையுடையகி ரௌஞ்சிஎன்பவள், கூகையைச் சிறப்பின் ஈன்றாள்-கூகையைச்சிறப்போ டுபெற்றாள், ஆசுஅறஉயர்ந்த சீர்த்தி - குற்றமில்லாமல் உயர்ந்தகீர்த்தியை யுடைய, திருதராட்டிரிநல் அன்னம் ஏசுஅறநேமிப்புள் - திருதராட்டிரி யென்பவள் நல்லஅன்னமும் சக்கரவாகமும், உற்கானனம் இவற்றை ஈன் றாள் - தீயுணிப்பறவையும ஆகியஇவற்றைப் பெற்றாள். எ-று.

40. (இ-ள்.) சுகிஎனஉரைப்பாள் நதையினைத்தந்தாள் - சுகியென அழைக்கப்படுபவள் நதையென்பவளைப் பெற்றாள், நதைதொழும் விநதை யைத்தந்தாள் - நதையென்பவள் வணங்கத்தக்க விநதையைப்பெற்றாள், துகள்அறு குரோதவசை -குற்றமற்றகுரோதவசையென்பவள், அரிமிருகிசு வேதை மாதங்கிசார்த்தூலி-என்னும் இவ்வைந்துபெண்களோடு,திகழ்சுரு சுரசைகத்துரு சாபிபத்திரமதையுடன் - விளங்குகின்றஇந்நான்குபெண்க ளோடு, சிறப்பின்வகைபடு மிருகமந்தையை ஈன்றாள் - (பெண்களுக்குரிய) சிறந்த குணங்களின் வகைஉண்டாகிய மிருகமந்தையைப் பெற்றாள், மிரு கிநீள் மிருகம் ஈன்றனள் - மிருகியென்பவள் நீண்ட மிருகத்தைப் பெற் றாள். எ-று.

இது முதலிய ஆறுசெய்யுளும் இவ்வத்தியாயத்தின் முதற் செய்யு ள்போன்ற எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம். இச்செய்யுளின் முதலடி யில் ஙகையை ஙதையெனத் திருத்துக.

41. (இ-ள்.) உரைத்திடு மிருகமந்தை - எடுத்துப்பேசப்படும் மிரு கமந்தை யென்பவள், வெம்கரடி சவரிமான் கவரிமான் உயிர்த்தாள் - வெ வ்வியகரடியையும சமரிமானையும கவரிமானையும்பெற்றாள், நிரைந்தசீர்ப்ப த்திரமதை - முறையாக எடுத்துப்பேசுகின்ற புகழையுடைய பத்திரமதை யென்பவள், இராவதையைஈன்றனள் - இராவதையென்பவளைப்பெற்றாள், இராவதை நிகரில்வரைக்குஇணை அயிராவதத்தினை ஈன்றாள் - இராவதை யென்பவள் மலைக்கு ஒப்பாகிய ஐராவதயானையைப்பெற்றாள், அரிகுரங்கு அளித்தனள் - அரியென்பவள் குரங்கைப்பெற்றாள், மானம்பரித்த சார்த் தூலி - மானத்தைப்பூண்ட சார்த்தூலியென்பவள், மந்தியோடுஅழல்வாய் ப்பாய்புலி தன்னை ஈன்றனள் - பெண்குரங்கோடு கோபிக்கின்ற வாயையு டைய பாயுமியல்புள்ள புலியைப் பெற்றாள். எ-று.

42. (இ-ள்)சொற்றமாதங்கி-மேல்சொல்லியமாதங்கியென்பவள்,மாத ங்கம் உயிர்த்தாள் - யானையைப்பெற்றாள், சுவேதை திக்கயத்தினைப்பெற் றாள் - சுவேதையென்பவள் திக்குயானைகளைப்பெற்றாள், மற்றையசுரோபி- மற்றசுரோபியென்பவள், ரோகிணியோடும் திருவியைமகிழ்ந் தினிதுஅ ளித்தாள் - உரோகிணியையும் திருவியையும் மகிழ்வாய் இன்பமாகப்பெற் றாள்,உற்ற கந்திருவி குதிரையை உயிர்த்தாள்-தன்மையுள்ள கந்திருவி என் பவள் குதிரைகளைப் பெற்றாள்,உரோகிணி பசுவினைப்பெற்றாள்-உரோகிணி

யென்பவள் பசுவைப்பெற்றாள், பற்றுஉறு சுரசை நாகங்கள் ஈன்றாள் - அன்பு மிகுந்தசுரசை நல்ல பாம்புகளைப் பெற்றாள், கத்துருப் பன்னகம் உயிர்த்தாள் - கத்துரு ஒழிந்தபாம்புகளைப்பெற்றாள். எ-று.

சொற்ற இறந்தகாலப் பெயரெச்சம்; சொல்பகுதி,ற் இறந்தகால இடைநிலை,அ பெயரெச்ச விகுதி, லகரம் றகரமாதல் சந்தி. திக்கயம் வடமொழிச் சந்தி; ககரமெய் மொழிக்கீறாகாத தமிழில் திகருக் கயமெனவழங்கும். பன்னதம், பத் ந கம் எனப் பதம்பிரித்துப் பாதத்தால் இலது நடைஎன்பர்வடநூலார். மற்றைய இடைச்சொலடியாகப் பிறந்தகுறிப்புப் பெயரெச்சம்: மற்று "ஐ யீற்றுடைக் குற்றுகரமும் உளவே" என்பதில் ஐயை உடைமையாக்கிக் கூறினமையால், வருமொழிநோக்கி வாராத ஐயை ஏற்ற மற்றை பகுதி, ய் சந்தி, அ பெயரெச்ச விகுதி.

43. (இ-ள்) மனுஎன உரைப்பாள்-மநுவென்றசொல்லப்பட்டவள்,முகத்தினில்மார்பில் - முகத்திலும் மார்பிலும், தொடையினில் வழங்கு உறுகாலில் - தொடையினும் நடக்கின்ற காலிலும், புனிதமாமறையோர்வேந்தர்நல்வணிகர் - சுத்தமாகிய பெரிய வேதங்களையுணர்ந்த பிராமணர்களையும் அரசர்களையும் நல்லவைசியர்களையும், பின்னவர்தமைப் பொறையுயிர்த்தாள்- சூத்திரர்களையும் முறையேபெற்றாள், அனலைஎன்றுஉரைப்பாள் - அனலையென்று சொல்லப்பட்டவள், தருக்களைப்பயந்தாள்- மரங்களைப்பெற்றாள், வினதையென்பவள் - விநதையென்பாள், அருணனையுந்துனைவினில் பறக்கும் புள்அரசினையும் - அருணனையும் வேகமாய்ப் பறக்கின்ற பறவை யரசனையும், துகள்அறஇனிதின் ஈன்றனள் - குற்றமற இனிமையாகப்பெற்றாள். எ-று.

44. (இ-ள்.) அருணன்என்று உரைப்போன்- அருணனென்றுசொல்லப்படுவோன், அருள்செய்சம்பாதிதன்னுடன் - (எனக்கு) கருணைசெய்த சம்பாதியோடு, சடாயுஎன்று உரைக்கும் எருவையின் வேந்துஆம் என்னையும் ஈன்றான்என - சடாயுஎன்று சொல்லப்படும் கழுகுகளினது அரசனாகிய என்னையும் பெற்றானென்று, மகிழ்ந்து இனிது எடுத்துஉரைத்து-மகிழ்ந்து இனிமையாக எடுத்துச்சொல்லி, வரிசிலை உழவநின்புறம் காத்துஇங்கு இருக்குவன்என்று - கட்டமைந்த வில்லையேந்திய வீரனாகிய ஸ்ரீராமனே உன்னைப் புறத்தில காத்துக்கொண்டு இங்கு இருப்பேனென்று சொல்லி, அயல்வனத்தின் - பக்கத்துள்ள சோலையில், விரிசிறைப்பறவை ஏகலும் - விரிந்த சிறகையுடைய சடாயுசெல்லுதலும், இராமன் விழைவொடும் ஆங்கு அமர்ந்தனன் - ஸ்ரீராமன் விருப்பத்தோடு பஞ்சவடியில் தங்கினான். எ-று.

சம்பாதியும் சடாயுவும் சூரியமண்டலத்தைச் சாரச் சென்றபோது அச்சூரியகிரண வெப்பம் பொறுக்காமல் தன் சிறகு தீந்தமைபற்றி சடாயு தவித்தலைப் பார்த்து, தன் சிறகினிழலில் சடாயுவைக் கொண்டுவந்தமையால் அருள்செய் சம்பாதி என்றான்.

45. (இ-ள்)சென்றுஅவன் இருக்கும் எல்லை-போய்ப் பர்சவடியில் இருக்கும்போது, சிலைத்தழும்பு இருந்ததிண்டோள் குன்றினைநோக்கி-வில் லினது வடுஉள்ள திண்ணிய தோளையுடைய மரகதமலையை ஒத்த சீராம னைப்பார்த்து, ஆசைகூர்ந்து - ஆசைமிகுந்து, சூர்ப்பநகை என்னும வல்தி றல்அரக்கி - சூர்ப்பநகையென்னும் மிகவலிஅமைந்த இராட்சதி, மானி டஉருவம் எய்திப்போந்து - மனுஷவுருவத்தைப் பெற்றுவந்து,இன்றுஎனை மருவி ஆவிதருகஎன - இப்போது என்னைச்சேர்ந்து என்னுயிரைத் தரக்க டவையென்று, இரந்துசொன்னாள் - கெஞ்சிக்கேட்டாள் எ-று.

இதுமுதலிய இருபதுசெய்யுளும் முதற்சீரும் நான்காஞ்சீரும் பெரும் பாலும விளவிறுதிச் சீராகவும், ஒழிந்த நான்குசீரும் மாவிறுதிச் சீராகவும் வந்த அறுசீர்களாலமைந்த நான்கு கழிநெடிலடிகளால் செய்யப்பட்டன ஆதலால அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தமெனப்படும. பெரும்பாலுமெ ன்றது விளவிறுதிச்சீர் நிற்குமிடத்துக் காயிறுதிச்சீரும் சிறுபான்மைவரு மென்பதற்கு. சஎ-ஆம் செய்யுள் இரண்டாம் அடியில் நான்காஞ்சீர் புளி மாங்காய்ச்சீர் நின்றதைக் காணக.

46. (இ-ள்) ஐயனும் அசதிஆடி - ஐயனாகிய சீராமனும் நகை யாடிப் பேசி, சிலமொழி அறையும் எல்லை - சில சொற்களைச் சொல்லு ங்காலை, பைஅரவுசுப்புச் செவ்வாய் - படமுடைய பாம்புபோன்ற இடை யையும் செவ்வாயையுமுடைய, சீதைபால்கு எய்தல்நோக்கி-சானகி(சீரா மன்) பக்கத்தில் அடைதலைப்பார்த்து, அரக்கிகையிறுவ்வௌவ - சூர்ப்பந கை தன்கைகளால் எடுக்கும்படி முயலுதலை, இளையவன்கண்டு - இலட்சும ணன்பார்த்து, வெய்யவள்காதும மூக்கும்கொய்தான-அக்கொடியாளுடை யகாதையும் மூக்கையும் அரிந்தான், கரன்அடிவீழ்ந்துசொன்னாள் - கரனு டைய பாதத்தின்மேல் விழுந்து (தனக்குநேர்ந்ததை) சொல்லிமுறையிட் டாள். எ-று.

47. (இ-ள்.) அ உரை கேட்டலோடும் - அச்சொல்லைக்கேட்டவு ம், அழல்எழஉருத்துப்பொங்கி - நெருப்புப்பறக்கக் கோபித்துப்பொங்கி, தெவ்அடுகரனும - பகைவர்களைக்கொல்லுகின்ற கரனும், வில்தூடணனும், வில்லைப்பிடித்த தூடணனும் - வேல்திரிசிராவும் - வேலைப்பிடித்த திரிசிரா என்பவனும், வெம்அழல்சூலம் ஏந்தி - வெவ்விய தீயைவீசுகின்ற சூலாயுத த்தைத்தாங்கி, விரிகடல் தானையோடும் - விரிந்தகடலொத்த சேனையுட னே, எவ்வெலாத்திசையும் சூழ்போந்து - எப்படிப்பட்ட எல்லாத்திக்குக ளிலும் சூழ்ந்து வந்து, இராமனைஅமரின்எதிரா - சீராமனைப் போரில்எதிர் த்தார்கள், எ-று.

தெவ் பண்பாகுபெயர். போந்து இறந்தகால வினையெச்சம்: புகு என்பதன் மரூஉ ஆகிய போ பகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, உ வினையெச்ச விகுதி, சந்தித்தகரம் நகரமாதல் மெலித்தல் ; இயற்கையா

கிய போ என்பது பகுதி எனின், அது போய்என வருமே அன்றிப் போந்தென வாராமையாலும், போயென்பது செய்மைக்கண் செல்லுமே அன்றி இதுபோல அண்மையில் வாராமையாலும் கொள்ளலாகா தென்க. சூழ்என்னும முதனிலை சூழ்ந்து என்னும் வினையெச்சப்பொருள்பட நின்றது.

48. (இ-ள்.) ஏற்றவர்உடலம் - எதிர்த்த அரக்கர்களுடைய உடல்கள், புல்தோல் - மீந்தோலும், இறைச்சிஎன்பு - இறைச்சியும் எலும்பும, நருள்மூளை-நரம்பும்மூளையும், வீற்றுவீற்றுக - வேறுவேறாகும்படி,வீழ - நிலத்தில்விழ, வெம்சிலைக்கல்வி காட்ட-வெவ்விய கோதண்டத்தின்தேர்ச்சியைக்காட்டியதனால், ஊற்று இருந்து ஒழுகுகண்ணாள்-ஊற்றுநீர் இருந்துபிரவகிக்கின்ற கண்களையுடையாளாகி, இலங்கையின் ஒல்லைஎய்தி - இலங்கையில் விரைவிற்போய், ஆற்றல்அம் குருதிஒள்வாள் - வலிஅமைந்த உதிரந்தோய்ந்த அழகிய ஒளியுள்ள வாளைத்தாங்கிய, இராவணற்கு அறியச் சொன்னாள்-இராவணனுக்கு அறியும்படிச் சொல்லினாள் சூர்ப்பநகை. எ-று.

நருள்நர்பகுதி, உள் பகுதிப்பொருள் விகுதி; கடவுள்(நன்மை) இதிலும் அவ் விகுதிகாண்க. இது பண்பாகுபெயர் : நரலென்பதும் இது. கல்வி காரணவாகுபெயர். ஊற்று தொழிலடியாகப் பிறந்தபெயர்: ஊறு பகுதி, இ வினைமுதற்பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி, இகர விகுதி புணர்ந்து கெட்டமாத்திரத்தில் முதனிலை நீண்டு இரட்டியது. வாள் (கூர்மை) பண்பாகுபெயர்.

49. (இ-ள்.) கேட்டலும்வெகுளியோடுகாமமும் - கேட்டலும்கோபமும் காமமும், கிளர்ந்துபொங்க - மேலெழுந்து பொங்கியதனால், வாள்திறல் அரக்கர்கோமான் - வாளின்வல்லமையுடைய அரக்கர்க்கு அரசனாகிய ராவணன், மாமன்நல்இருக்கைஎய்தி - மாமனாகியமாரீசனது நல்லஇருப்பிடத்தைச்சேர்ந்து, ஊட்டுஅரக்கு உண்டசெவ்வாய் ஒள்தொடிச்சீதை-ஊட்டுதற் குரியசெந்நிறம்பெற்ற சிவந்தவாயையுடைய ஒள்ளியவளையலணிந்த சானகி, காணத்தீட்டு அருபடிவம்மான்ஆய் - காணும்படி சித்திரித்த லருமையாகிய உருவமுடையமானாகி, செல்கஎனமறுத்துச் சொல்வான் - செல்லக்கடவையென்று சொல்ல (மாரீசன்) மறுத்துச் சொல்லுவான். எ-று.

தன் தங்கை மூக்கும் காதும் அறுப்புண்டமையையும், கரன், தூடணன், திரிசிராஎன்னும் மூவரும் பதினாலாயிர வெங்கல ரதவீரர்களும் ஒரு முகூர்த்தகாலத்தில் அழிந்தமையையும் கேள்விப்படலும் கோபமும், சீதையினுடைய பேரழகைக் கேள்விப்படலும் காமமும் ஒருசேர உண்டாயின. நல்லிருக்கை என்றது மாரீசன் புலன்களை ஒறுத்து யோகத்திலிருக்கும் இடத்தை.

50. (இ-ள்.) முன்னர் - தாடகையைக் கொலைசெய்த காலத்தில், ஆங்கு - அவ்விடத்தில், மாைஉரு ஆக - மாையென்னு மானுருவாக, வாள் எயிறு அரக்கர் இருவரோடு - கூர்மையாகிய வளைபற்களையுடைய இரண்ட

ரக்கர்களோடு, இராமன் முன்னா எய்தலும்-சீராமனுக்கு முன்னே நான் போகுதலும், அவன்கை அம்பால் - அச்சீராமன் கையம்பினால், பொரா அரு என்னோடு எய்தும் - ஒப்பில்லாத என்மேலே தைக்க, இருவரும் பொன்றல் செய்தார் - இருவரும் இறந்தார்கள், யான் வெருவி மாயைதன்னால் - நான் பயந்து மாயாவித்தையினால், இலங்கையில் மேவினேன் - இலங்கையில் வந்துசேர்ந்தேன். எ-று.

வெருவியானென்பதை வெருவுயானெனப் பதம்பிரித்து, வினைத்தொகை நிலைத்தொடராக்கி, பயந்தானென உரைப்பினும் பொருந்தும். இராமன் முன்னர் எல்லைப் பொருளதாகிய ஐந்தாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்; இராமனின் முன்னென விரியும்; அங்ஙனமாகில் சீராமனுக்கு முன்னென்றது என்னெனின், அவனுக்கு இவன் இளையான், அதற்கு இது சிறிது என உலகவழக்கில் வழங்கலாலென்க. இங்ஙனம் அன்றி, பண்புத்தற்கிழமைப்பொருளதாகிய ஆறாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடரெனவைத்து உரைப்பினும்பொருந்தும முன்னா பண்பாகுபெயராய் இடத்தை உணர்த்தியது.

51. (இ-ள்.) கத்துருமகவான் ஆனை கறுப்பு என - கத்துருஎன்பவள் இந்திரனுடைய யானை கருமையுடையதென்று சொல்ல, வினதைதனயர் நிறம் மைத்தடவுக்கண்ணாள் வெள்ளை என்றலும் - விநதையென்று சொல்லப்படும் மையெழுதிய பெரிய கண்களையுடையாள் வெண்ணிறமுடையதென்று சொல்லுதலும், மைந்தர்செய்யும் வித்தகச்சூழ்ச்சி தன்றால் - புத்திரர் தாம் செய்த தேர்ச்சியுள்ள ஆலோசனைக் காரியத்தினால், விநதையை தாசி ஆக - விநதையை அடிமைப்பெண்ணாகச் செய்தமையினால், அந்தவேலைக்கருடன் - அப்போது கருடன், அன்னை அரு சிறைநீக்க எண்ணி - தன் தாயினுடைய அடிமையாகிய அரியசிறையை நீக்கக்கருதி. எ-று.

எண்ணிஎன்னும் இறந்தகால வினையெச்சம் - ருங - ம் பாட்டில் உதவி என்னும் வினைகொண்டதாதலின் இது குளகமெனப்படும். "குளகம் பலபாட்டொருவினை கொள்ளும்" என்பதனாலு முணர்க. தனித்து நின்று முடியும் செய்யுள் முத்தகச் செய்யுளெனப்படும். ரு, "முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்" என்பது. சூழ்ச்சி காரணவாகுபெயர்.

52. (இ-ள்.) மேவுநெறியில் - தான்பறந்து செல்லும் வழியில், ஈர்ஆறுயோசனை அகன்றமேனி - பன்னிரண்டுயோசனை தூரம் பரப்புள்ள உடலையும், பாஅடிக்களிறும் - பரந்த பாதங்களையும்உடையயானையையும், அன்னபரப்பு உறும்ஆமை ஒன்றும் - அப்படிப்பட்ட விசாலமுள்ள ஆமை ஒன்றையும், சேவடிஉகிரின்அள்ளி - சிவந்த பாதங்களினது நகங்களினால் எளிதாகஎடுத்து, பழுமரம் சேர்தலோடும் - ஆலமரத்தில் சேர்தலும், யாரும்ஆஎன ஆர்ப்ப - எல்லோரும் ஆஎன்ற பேரிரைச்சலிடும்படி, அதன்பணை ஒடிந்தது - அம்மரத்தின் பெருங்கிளை ஒடிந்தது. எ-று.

டாய் என்பதுபோலவே கரையடி, கரை - நல அளி என்றது அர்ச்சயாகமையை [illegible] மையையும் [illegible] பளியில் சென்ற தென்பதை உ[illegible] த்த [illegible] மரம் [illegible] குறியுடைய மாரோனை [illegible] பொருள். நூ [illegible] ட்டு, அவலது அசிரம் [illegible] பிடிலை [illegible]

53 ([illegible]) [illegible] யோசனையின் [illegible] - நூறுயோசனை [illegible] நீண்ட [illegible] பெருங்கிளையில், [illegible] சௌவி - எளிதாகவுக [illegible], [illegible] - டறந்தெ [illegible], அங்கில பெருமவாலகிலவி [illegible] - [illegible] பெருங்கிளையில் [illegible] தளள [illegible] இவ்வியிரம [illegible] வாலகிலவிய [illegible] [illegible] யிலைா [illegible] - [illegible] யை [illegible] [illegible], [illegible] அசு [illegible] - [illegible] இரசிவிட்டு, [illegible] துளடு [illegible] - [illegible] காயங்கிலா [illegible] (டாகடல) [illegible] [illegible] கலை [illegible] குருவி [illegible] மாகரு [illegible] சொ[illegible], [illegible] - [illegible] யுமைம [illegible] யையும(தன் [illegible] கு [illegible] எ-டு

வாலகிலவியா அறுபதினாயிரவரும் பிரமனுடைய புத்திரர் சிறியவரு [illegible] யார். [illegible] யோகமகாயோகியாகளாதலால் [illegible] களை மேருமலையில் [illegible] மௌனமோனங் [illegible] அ[illegible] கு [illegible] குறிப்பொருளது கருடருஅமிர் [illegible] கலசத்தை நீ [illegible] வர [illegible] அடிமையினின்று நீங்குவேனென்று [illegible] சைதையை [illegible] வி[illegible] தை புத்திரராருளாதனன் கருட[illegible] சேவருலகம் புக்கு அமிர்தத்தை எடுத்துவருகையில் வந்து மறித்த தே[illegible] யாவரையும் தன்சிறைக்காற்றிலை [illegible] செய்து அமிர்த [illegible] கொண்டுவந்து கொடுக்க, அவள் கத்துருவுக்குத்தந்து அடிமை [illegible] கத்துரு [illegible] விரித்து அதன்மேல அக்குடத்தை வைத்தனள் அந்த [illegible] உடனேவந்து கவர்ந்துபோயினன். அமி[illegible] சிந்திய [illegible] யைக்கத்துருவின் [illegible] சாடபங்கள நக்[illegible] பிளந்தன

54 (இ-ள) [illegible] அவன்[illegible] அகாலத்திலகருடன் தங்[illegible] யமரம இது [illegible], [illegible] இயலிடத்தில செயகின்ற, [illegible] கேள் - [illegible] மையழிகின்ற [illegible] றநீங்கேன், என் றலும அரசகரேசிறி என்ற மாரீசன்சொலலு நலும இராவணன கோபங் கொண்டு, [illegible] கொணறது [illegible] களையுடைய கர[illegible] னை(சிராமனை) சொல்செய்த செயதியை, அகமபனன விளமபுஞானறும் - அகமபனன([illegible]) சொலலிய நாளிலு, [illegible] வாது உணரந் தேன் - நின்னிடத்துவா [illegible] சொலலினேன, அன்றும மறுததுஇவைபோ[illegible] சொ[illegible] - [illegible] நாளிலும தடுத்து இசசொறகளபோலும சொறகளைச் சொலலிரு[illegible] எ-று.

தவத்தினென்னும் ஐ [illegible] நீங்கறபொருளது [illegible] ஏழாவத னிடப்பொருளில வருமபெயா நச்சினாாக்கினியா இடைச்சொல் என்

பா. உம்மை எதிரது தழீஇய எச்சவும்மை அன்றுமென்றவுடமை இறந்த துதழீஇய எச்சவுமமை. போல்வ பலவின் படாகசை எதிகால வினையா லணையுமபெயா

55. (இ-ள்.) எங்கைதன் செவியும்மூககும் - என்தங்கையினுடை ய காதையும் மூககையும், இகலின்றி - பகை இலலாமலிருககு, அறுத்த வெய்யோன் மஙகையைவௌவ - அறுததகொடிய இராமனதுமனையாளை ககிரகிககுமபடி, மான்ஆய்ச்சென்று - நீமானுருவாய்ப்போய், அவளை மயக கிடாய்எல - அசசனகராச புததிரியை மயஙககசசெய்யாயானல், துஙகமணி மௌலிகொய்வன் என்றலும் - உனது நீணடகிரீட மணிநத தலையை அரி வேன்என்று சொலலுதலும, துணுககமஎய்தி - மனமகலங்குதலை அடைந் து, அஙகுஅவன்முன்னம் அம்பொன் மானுரு - அவவாசசிரமததில் அவனு ககெதிரில அழகிய பொன் மானுருவை, அமைநது சென்முன் - சமைநது போயினன். எ-று.

இகலென்றது மூககையும செவியையும் அரிதறகுக காரணமாய்நிற் கும் பகை. எஙகை பொருளழியாகப் பிறந்த முறைபபெயா, யாம் பகுதி, கை இளையாளென்னும் முறைப்பொருணமை விகுதி, யா மென்பதில் யா இடப்பிறப்பாலொதந எவ்வானது குறககல, மகரம் ஙகரமானது சந்தி, அவன் முன்னமென்றது ராவணனுககுத தன்னிடம நமபிககை உணடா மபடி.

56 (இ-ள) அமிர்தச் செம்வாய்க் கறபினுக்குஅரசி - அமுதம்போ லச் சிவந்த வாயாறபேசும் சொறகளையுடைய கறபுநிலைககு அரசியாகியசா னகி, பொன்பிதிரவ்ய்ககும பொன்னின பொடியை ஒததுளள, புளளிப பொறி இளமானை - மிகக புளளிகளையுடைய மென்மையாகிய மானை, வௌவிந தருதிஎனன - உயிரோடு பிடிததுததா என்று, இராமனுககு அ ன்பினில கூற - சீராமனுககு அன்போடுசொலல, தொடாதலும-சீராமன்பி னசெலலுதலும, கடிதின்ஓட - மான்விரைவாக ஓடாநிறக, (அது வஞசக மானென உணமையுணாநது) விலபழுதது உமிழும் - கோதணடம் பழு தது உமிழுகின்ற, வெய்யகணை ஒனறால வீழததினன் - வேகமுளள அம பொன்றிஞல வீழசசெயதான. எ - று.

புளளிப்பொறி இருபெயரொட்டுப் பணபுத் தொகைநிலை, விறபழு ததுமிழுமென்றது இலககணை, வீழ்ததினன் பிறவினையாகிய ஆண்பாற படாககை யிறநதகால வினைமுறறு; வீழதன் வினைப்பகுதி, த சந்தி, து பி றவினைவிகுதி, பெறற வீழதது பிறவினைப்பகுதி, இன் இறந்தகால இடை நிலை, அன் ஆணபாறபடாககை விகுதி, உகரககேடு சந்தி, பிறவினை விகு தி பெறாமல வீழ்ததானெனவும் வரும்.

57. வீழ்தருபொழுதின் - (மாரீசன்) விழுகின்றகாலத்தில், சீதாஇ லக்குவஎன்று - சீதையே இலக்குவனேயென்று சொல்லி, வீழும்ஆழ்துய

ன்மொழியைக்கேட்டு - வீழ்கின்றஅழ்கின்றதுயரத்தைவெளிப்படுத்துகின்ற சொல்லைக்கேட்டு, அணியிழை இளையகோவை - அணிந்த ஆபரணங்களை யுடைய சீதைஇளையபெருமாளை, வாழி - நீ வாழக்கடவை, எம்கோமான் செய்திகண்டு - எங்களுடைய நலைவனுடைய செய்தியைஅறிந்து, இவண் வருதிஎன்ன - என்னிடம்வா என்றுசொல்ல, தாழ்இருதடக்கை ஐயன் - (முழந்தாள் வரையும்) தொங்குகின்ற பெரிய கைகளையுடைய இலக்கும ணன், தளர்வொடும் கடிதுசென்றான் - மனத்தளர்ச்சியோடு விரைந்து போயினான். எ-று.

அணியிழை வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொ கைக் காரணப்பெயர்; அணியென்பதைப் பண்புப் பெயராகக்கொண்டு, பண்புத் தொகைப்புறத்துப் பிறந்ததெனினும் பொருந்தும். வாழிஎன ஈறு கெட்ட வியங்கோளெனக் கொள்ளாமல் தொழிலடியாகப் பிறந்த பெயரெ னக்கொண்டு, வாழ் பகுதி, இ ஆண்பால் விகுதி: வாழ்வையுடையானெ னக் கோமானுக்கு விசேடணமாகினும் பொருந்தும். செய்தி தொழிலடி யாகப் பிறந்தபெயர்; செய் பகுதி, த எழுத்துப்பேறு, இ செயப்படுபொரு ண்மை விகுதி. பொருள் செய்யப்பட்டகாரியம, இங்ஙனமன்றித் தொழிற் பெயராகக் கொள்ளலுமாகும். தளர்வு என்பது அண்ணனுடையகட்டளை யைக் கடந்துசெல்ல நேர்ந்ததனாலும், பிராட்டி தனியே இருத்தலாலும் உண்டாகிய மனத்தளர்வு.

58. (இ-ள்.) இருவரும் அகன்றஅற்றம் - இராமலட்சுமணர் நீங்கி யசமயத்தை, நோக்கிய இலங்கைவேந்தன் - பார்த்த இராவணன், அருமறை பறையும் - அருமையாகிய வேதங்களினால் சொல்லப்படும், முக்கோல் பகவன்ஆய் - திரிதண்டத்தை ஏந்திய முனிவனது வேடங்கொண்டு, அருகின்எய்த - பிராட்டியின் பக்கல் வந்துகொண்டிருக்க, திருஅனாள் - திரும களாகிய அச்சானகி, ஐயன்வேள்வித்தீயினில்ஒளிப்ப - சீராமனுடையஙித் தியாக்கினியில் ஒளிக்க, செமதி - சுவந்தநீத்தெய்வம், மருவருமாயாசீதை வகுத்து-அடைதலரிய பொய்ச் சீதையைப் படைத்து, முன்விடுத்தது-(இ ராவணனுக்கு) எதிரில் விடுத்தது. எ-று.

அற்றம் தொழிற்பெயர்; அறு பகுதி, அம் புடைபெயர்ச்சி விகுதி, பகுதி ஒற்று இரட்டல்சந்தி, உகரக்கேடும் சந்தி, இக்கு வற்றமெனவும் பதம் கொள்ளக் கிடந்தமையினால், வறு பகுதியெனக் கொள்ளினும் இது வும் இல்லாமையென்னும் பொருளது. பறையுமென்பது திசைச்சொல், ஐயன் வேள்வி என்றது சீராமன் தினமும் செய்துவரும் ஓமம். ஒளிப்ப தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவினையாயினும், இங்குத் தன்வினை. திருவே சானகியாதலால் திருவனாளென்பதற்குத திருவாகிய அன்னாளெ ன இருபெயரொட்டுப் பண்புத் தொகைநிலைத் தொடராகக் கொண்டோத் தாம், அன்னாள் இடைச்சொலடியாகப் பிறந்த குறிப்பு வினைப்பெயர். மா யாசீதை வடமொழிச் சந்தி.

59. இலங்கையேந்தன் - இராவணன், சீதைஎன்று - (மாயாசீதையை) மெய்ச்சீதையெனக் கருதி, சில்லிஅம் தடவுத்தேர்ஏற்றிப்போதலும் - சக்கரம்பூண்ட அழகிய தேர்மேலேற்றிக்கொண்டு போதலும், சடாயுவெம்போர்புரிய - கழுகுஅரசன் வெவ்விய போரைச்செய்ய, ஒள்வாளில் வீழ்த்தி -(சிவனிடத்துப்பெற்ற) ஒள்ளியவாளினால் (சடாயுவை) விழச்செய்து, மூதெயில் - பழமையாகியமதில், அண்டகோள முகடுஉயர் - சுவர்க்கத்தின்முகட்டில் உயர்ந்த, இலங்கைஎய்தி - இலங்கையை அடைந்து, மாதினை அசோகநீழல் - பிராட்டியை அசோகமரநிழலில், அரக்கியர் மருங்குவைத்தான் - அரக்கியரிடத்து வைத்தான். எ-று.

சீதையென் றென்பதைச் சடாயுவுக்குங் கூட்டுக. என்று இடைச்சொலடியாகப் பிறந்த இறந்தகால வினையெச்சம். மூதுமையென்னும் பண்புப்பெயரோடு எயிலென்னும் பெயர் பண்புத் தொகைநிலைத் தொடராகப் புணர்ந்தபோது, நிலைமொழி மை யிறுகெட்டதும், ஆதி நீண்டதும், உகரங்கெட்டதும் சந்தி. மூதெயில் உயர் இலங்கை என்றுந்தொடரில் உயர்நினை தொடர்ந்த என்னும் சூத்திரத்தில் "சொற்சுருமிற்று" என்றுஞ் சூத்திரத்தால் அமைந்த பால் வழுவமைதி. சில்லி, மாது பண்பாகுபெயர்.

60. (இ - ள்.) ஈங்குஇவைநிற்க - பஞ்சவடியில் நடந்த இச்செய்திகளைப் பேசுதல்நிற்கட்டும், எய்தும் இலக்குவன் - சென்ற இலக்குமணன், இராமன் செய்யபூகழல்வணங்கி - சீராமனுடைய சிவந்ததாமரைப்பூப்போலும் பாதங்களை வணங்கி - ஆங்கவன் உற்றவை புகலலோடும் - பஞ்சவடியில் நடந்தவற்றைச் சொல்லுதலும், வாங்கிய சிலையோன் சாலைமருவினன்அணங்கைக் காணாது - வளைத்தவில்லையுடையானாகிய் தன்பன்னசாலையைச் சார்ந்து சானகியைக் காணாமல், ஏங்கிவெய்து உயிர்த்து மாழ்கி - அழுது வெப்பமாகப் பெருமூச்சுவிட்டுக் கலங்கி, எங்கணும் தருவிப்போனான் - எங்கும் தேடிக்கொண்டு சென்றான், எ - று.

பஞ்சவடியில் நடந்தசெய்தியை நூலாசிரியர் சொல்லிக் கொண்டு வருதலால் பஞ்சவடியை ஈங்கென அண்மைச் சுட்டானும், இளையபெருமாள் பஞ்சவடியினின்று நீங்கித் தூரத்திலிருக்கின்றமையினால் அதனை ஆங்கெனச் செய்மைச் சுட்டினாலும் சுட்டினார். தன்தேவிக்கு அரக்கரால் ஏதேனும் தீங்கு நேரிடுமே என்னுங் கருத்தினனாகி, அவ்வரக்கரைக்கொலைபுரிய வாங்கிய சிலையோனாயினான். அணங்கு பண்பாகுபெயர். காணாது எதிர்மறை வினையெச்சம்; காண் பகுதி, ஆ எதிர்மறை விகுதி, அனைத்துமொருபகுதி, த் எழுத்துப்பேறு, உ வினையெச்ச விகுதி, து விகுதி என்பராயின் "உருபும் வினையும் எதிர்மறுத் துரைப்பினும், திரியாதத் தம் ஈற்றுருபி என்ப" என்னுஞ் சூத்திரத்தை காட்டி மறுக்க.

61. (இ-ள்.) அறைகழல் வீரர்எய்து நெறியினில் - ஒலிக்கின்றவீரகண்டைஅணிந்த வீரரிருவம் நடக்கின்றவழியில், அமரர்கோமான் சிறை

அரிவையைவெளவிய [illegible] - [illegible]திரன் சிறகை அரிந்த [illegible], சடாயு [illegible] [illegible] சடாயுவை [illegible] [illegible] அருக [illegible] [illegible] பெரு [illegible] கருணையுடைய [illegible], [illegible] பேசும் [illegible] - [illegible] சொல்லும்போது, [illegible] [illegible] அதனுக்கு [illegible] - [illegible] சடாயுவுக்குச் செ [illegible] [illegible] கடமையைச் செய்துமுடித்து அப்பு றம் சென்றாகள், என்று

[illegible] அவனை [illegible] [illegible] சிறை அரிந்த [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] இந் திரனை [illegible] [illegible]

62 (இ-ள்) [illegible] - கௌசலியினது பெண் மையாகிய பேராமடத்த [illegible] புனற்குச்செல்லும இ [illegible] அச்சு [illegible] அயிலவி [illegible] இல [illegible] ([illegible]) [illegible] வருத்தத்தையும் கொ [illegible] இலக்குமணனை, அயோமுகிபோ [illegible] அரக்கிமுகத்து [illegible] -அயோமுகியெனனும் பெயரையுடைய [illegible] [illegible] முகத்தை நாகத்துடனே, கொய [illegible] - [illegible] - கழுத்திலிட்டக [illegible] [illegible] [illegible] இராமலட்சுமணாகள், கவ [illegible] வாழகின்ற காட்டில் புகுந்தாாகள்.

போதுஅன்று [illegible] [illegible]மையுடைய பேரருமபு, இதுகாலகா குபெயா [illegible] [illegible] [illegible] [illegible] போ [illegible], மா [illegible] [illegible] முதனிலை திரிந்த [illegible], தல விகுதிபுணாந்து கெட்டமாத்திரத்தில முதனிலை [illegible] அபிலகூாமை, அது பணபிகதானமையி [illegible] [illegible] தாகநீாகொணடு வர இராத்திரியபோதில் செல்லுகையில், அயோமுகியெனனும் அரக்கி இவா யோனை [illegible] மந்திரத்தி [illegible] தூககிககொணடு போயினள். இலக்குமணன் அமமயககம் நீஙகி அவளமுககையும் ராககையும அரிந்துவி டடு நீாகொணடுவந்து சோாந்தனன

63 (இ-ள்) [illegible] விலஙகு எலலாம - மதமயக கத்தையுடைய பெரியாணைமுதலிய மிருகஙகளையெலலாம, கையரிககொ ணடு - [illegible] [illegible] பெயயும கவநதனை - வயிறறில வை கக்கிற கவநதனை, செருப்பஅன்னை - கொலைசெயயஅவன், மொய்கழல இபககனஆகி - விடமிகங்கா வீரகணடையுடைய யடசனுகி, முறையினி ல பணிநதுபோறறி-(நூலவிந்த)முறையில வணஙகிததுதிததது, ஐயன்மீா

சவரிதன்பால் - ஐயர்களே சவரியென்பவளிடத்தில், அடைகஎன அடைந்தார் - செல்லக் கடவீரென்றுசொல்ல (அப்படியே) சென்றார்கள். எ-று.

கவந்தன்செய்தி.—இவன் தனுவென்னும் இயக்கன் மகன். ஒருநாள், கண்டோரா அஞ்சத்தக்க உருக்கொண்டு, தூலசிரசு என்னும் முனிவரிடத்துச் சென்று ஆசியம் செய்தகாலை அவர் சிற்றங்கொண்டு, நீயின் இயற்கை யுருநீங்கி, இவ்விகார உருவோடிருக்கக் கடவையெனச் சபித்தனர். இவ்வுடலோடு இந்திரனுக்குமுன் சேட்டை செய்தமையால் அவன் சினங்கொண்டு வச்சிராயுதத்தினால் புடைத்தலும் தலையுள்ளே அழுந்தினான். எனக்கு விகாரவுருவம் ஒழிவென்றெனககேட்க,இந்திரன் உளமிரங்கி சிராமனால் ஒழிவாகுமென்று அருள்செய்தனனென்பது. ஐயன்மீர் அண்ணன் மாரென்பதுபோல ஒருமை யீறுகெடாமலே மாரென்னும் பன்மை யீறு பெற்ற ஐயன்மார் விளியுருபேற்று, ஐயன்மீரென நின்றது, என இடைச்சொலடியாகப் பிறந்த காரணப்பொருட்டாகிய இறந்தகாலச் செயவெனெச்சம்.

64. (இ-ள்.) அருதவத்து உணங்குமேனிச் சவரியும் - அருமையாகிய தவத்தினால் உலர்ந்த உடலையுடைய சவரியும், அடகுமூலம் விருந்தளித்து - இலையையும் கிழங்கையும் விருந்துணவாகத்தந்து, அண்ணல்கேட்டு-உயர்ந்தோனேகேள், விரிதலைமதங்கவெற்பில் - வாழைமரங்களையுடையமதங்கமலையில், பொருந்தினன் சுக்கிரீவன் - சுக்கிரீவன் வசிக்கின்றான், அவனொடு நண்புபூண்டு - அவனொடு நேசங்கொண்டு, திருந்தலர்ச் செகுத்திஎன்ன - பகைவர்களைக் கொல்என்று, உரைத்து நல் முத்திசேர்ந்தாள்-சொல்லி நல்லமோட்சவுலகைச் சேர்ந்தாள். எ-று.

அண்ணல் பண்பாகுபெயர். விரிதலை வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். முனிவர்களுண்ணுதற்கு இலைகலத்தையும், நல்லகனியையும் தருதலால் வாழையை மட்டும் கூறினார்போலும், விரிதலை பரந்த சிகரங்களையுடைய எனவும்,பரந்த இடத்தையுடையவெனவும் உரைத்தலும் பொருந்தும். சவரியுமென்ற உம்மை ஒருபுடை யிறந்தது தழீஇய எச்சவும்மை, மூலமென்பதும் பண்பாகுபெயர். விருந்து புதுமை, அது பண்பாகுபெயராய்ப் புதியவரை உணர்த்தி, அது காரணவாகுபெயராய், அவர்க்காகச் செய்த உணவுக்காதலால் காரணவாகுபெயர். திருந்தலர் எதிர்மறை வினையாலணையும் பெயர் ; திருந்து பகுதி, அல் பகுதிப்பொருளை மறுத்த எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்துமொரு பகுதி, அர பல்லோர் படர்க்கை விகுதி.

65. (இ-ள்.) மையகார்நிற வண்ணனும் இளவலும் - கரியமேகம் போலும் ஒளியமைந்த நிறமுடைய சிராமனும் இலக்குமணனும், மணிதாழ்-இரத்தினங்கள் அழுந்தியுள்ள,ஐயதண் புனல்பம்பை மாநதிமருங்கு-அழகுள்ள குளிர்ச்சியாகிய நீர்வளமுள்ள பம்பைஎன்னும் யாற்றின் பக்கத

தில், அனுமன் பொய்இல்வாய்மைகேட்டு - அநுமானுடைய பொய்இல்லா தசொற்களைக்கேட்டு, அவனோடும் அளவளாய்ப்போந்து - அவனோடுகலந்துபேசிப் புகுந்து, செய்யதாமரை நாயகன் - சிவந்ததாமரை மலர்களுக்குக்கணவனாகிய சூரியனுடைய, மதலைபாற் சேர்ந்தார் - புத்திரனாகிய சுக்கிரீவனிடத்தில் சேர்ந்தார்கள். எ-று.

சூரியனைக் கண்டு செந்தாமரையோடொப்ப வெண்டாமரையும் மலர்வதாயினும், திருமகளுக்கு இருப்பிடம் இதுவே ஆகும் சிறப்புக் கருதிச் செய்ய தாமரையைக் கூறினர். மைய, ஐய இரண்டும் பண்படியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். அநுமன் அஞ்சனாதேவி சிவந்தகனி உணக்கு உணவு என்னக்கேட்டு, உதயசூரியனைச் சிவந்த கனிஎனக்கருதிப் பாய்கையில் இராகு கேதுக்கள் எங்களால் பற்றப்படும் சூரியனைச் சிறுகுரங்கொன்று பற்றவருகின்றதே என்ன, இந்திரன்வந்து வச்சிரத்தால் புடைத்தலும், மேருமலையில் வீழ்ந்துசிதைந்த தாடையையுடையானென்பது பொருள். இதுமுதலிய முப்பது செய்யுளும் முதற்சீரும் இறுதிச்சீரும் மாவிறுதிச்சீராகவும், ஒழிந்தசீர் மூன்றும் பெரும்பாலும் விளவிறுதிச் சீராகவும் வந்த நெடிலடி நான்காலமைந்தன ஆதலால்கலிநிலைத்துறை. பெரும்பாலுமென்றது, விளவிறுதிச்சீர் நிற்குமிடத்தில் காயிறுதிச்சீர் சிறுபான்மை வருதலு முண்டு, எகூ - ஆம் பாட்டு முதலடியில் ச-ஆம் சீர் இராமன் வில் எனப் புளிமாங்காய்வந்ததைக் காண்க.

66. (இ-ள்.) தணிப்புஅருதிறல் சுக்கிரீவனை- (பிறரால்) அடக்குதலில்லாத வலியமைந்த சுக்கிரீவனை, தழல்சான்றுஆ - அக்கினிசாட்சியாக, பிணித்தஅன்பினின் - (உள்ளத்தில்) கட்டிய அன்பினால், பெட்பொடும் தோழமைகொள்ள - பெருமையாகச்சிநேகங்கொள்ள,வணக்குவெஞ்சிலைவளைப்பதற்குரிய வெவ்விய கோதண்டத்தை, கொடுங்கணை வாலிமார்புஉருவ - கொடுமையாகிய அம்பு வாலியினுடைய மார்பை உருவும்படி,பணித்தி என்றலும் - கட்டளையிடு என்றுசொல்லுதலும், பங்கயக்கண்ணன் நேர்ந்தனன் - தாமரை மலர்போன்ற கண்களையுடைய சீராமன் இசைந்தான்.

சுக்கிரீவன் இரந்து கேட்கின்றான் ஆகலின் கணை வாலிமார் புருவ வெஞ்சிலை பணித்தி என்றான். தணிப்பு - பிறவினைத் தொழிற்பெயர். தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய தணி என்பது இங்குப் பிறவினைப் பகுதி, ப் சந்தி, பு புடைபெயர்ச்சி விகுதி, தன்வினையில் தணிவு எனவரும். சான்று உரிச்சொலடியாகப் பிறந்த ஒன்றன் படர்க்கைப்பெயர். சால் பகுதி, று ஒன்றன்படர்க்கை விகுதி, லகரம் றகரமாதல் சந்தி,அது னகரமானது மெலித்தல் விகாரம். பொருள் நிறைவுள்ள தென்பது.

67. (இ-ள்.) வாலிதிண்திறல் உரைக்குவன் - வாலியினுடைய மிகுந்த பலத்தைச் சொல்லுவேன், மகிழ்ந்து கேட்கஎன்ன - களித்துக்கேட்கக்கடவாய் என்று, சீலம்எய்தியசுக்கிரீவன் - நல்லொழுக்கத்தைப் பெற்ற

சுக்கிரீவன், தெரிந்து உரைப்பான் - துணிந்துசொல்லுவான், ஆலம் அன்னமாயாவி என்றுஉரைத்திடும்-(உலகத்தாருக்குவி)ஷம்போன்ற வஞ்சகம் செய்வோனென்று சொல்லப்படும், அவுணன் - அசுரன், காலன் அன்னஒர்வாலியை - காலக்கடவுளை ஒத்த ஒப்பற்ற வாலியை, கடுசமர்க்குஅழைத்தான் - கடுமையாகிய போர்செய்வதற்கு அழைத்தான். எ-று.

வாலி - விருபவிருஷனுடைய வாலிற் பிறந்தவன். சுக்கிரீவன் நல்லகழுத்துடையான். திண்திறல் ஒருபொருட் பன்மொழி. எய்திய இறந்தகாலப் பெயரெச்சம். எய்து பகுதி, இன் இறந்தகால இடைநிலை, அ பெயரெச்ச விகுதி, இடைநிலையின் ஈற்று னகரக்கேடு சடைக்குறை, பகுதியீற்று உகரக்கேடும், யகரந்தோற்றமும் சந்தி. வாலியினிடத்து நல்லொழுக்கமிலது என்பதைக் குறிப்பிக்க சுக்கிரீவனைச் சீலமெய்திய என விசேடணித்தார்.

68. (இ-ள்) ஆங்கவன்றனை தொடர்ந்துபோய் - அப்போதுஅவ்வசுரனைத்தொடர்ந்துசென்று, பாதலத்து அணைந்து - பெரிய பிலத்திலெசேர்ந்து, வீங்குதோள்உடை அவுணனது - பருத்ததோள்களையுடைய அவ்வசுரனது, ஆர்உயிர்வீட்டி - அருமையாகியஉயிரைக் கொலைசெய்து, ஈங்கு உறுமையின் - இங்கேவராமையால், இறந்தனன் எனமனத்து எண்ணி - இறந்தான் என்றுமனத்தில் நினைத்து, நீங்குபாதலம்அடைத்து - புறத்தில் வரத்தகுந்த பிலத்தை (மலைகளால்) அடைத்து, யான்நெடுநகர்புகுந்தேன் - நான்கிட்கிந்தை என்னும பெரிய நகரத்தில் வந்தேன்.

பாதலம் ஒருலகத்தின் பெயராயினும் அது இங்கே மிகுந்தஆழமுடைய இடத்துக் காயிற்று. வழக்கத்தில் பாதாளக்கொலுசு என்பதனாலுமறிக. அவுணனது உயிர் ஒற்றுமைப் பொருளதாகிய ஆறும்வேற்றுமைத்தொகைநிலைத் தொடர். உயிர் வீட்டல் என்பது உடலினின்று உயிரைப்பிரியச்செய்தல். வீட்டி பிறவினையாகிய இறந்தகால வினையெச்சம். வீடு தன்வினைப்பகுதி தன்னொற் றிரட்டிய வீட்டு பிறவினைப்பகுதி, உகரத்தின் திரிபாகிய இ இறந்தகால வினையெச்ச விகுதி, உகரக்கேடு சந்தி : தன்வினையில் வீடிஎன வரும்.

69. (இ-ள்.) வாலிஆர்உயிர்மறிந்தனன்என்று - வாலிஅருமையாகிய உயிர்நீங்கினனென்று, எனக்கு அமைச்சர் - எனக்கு மந்திரிமாகள், கோலம்நீண்முடி சூட்டவும் - அழகிய பெரிய கிரீடத்தைச் சூட்டுதலும், கொடுதொழில்வாலி - கொடிய தொழிலைச் செய்யும்வாலி, பிலம் அடைத்திடும் கல்லினை - பிலத்தை அடைத்துவைத்த மலையை, காலினால் உடைத்து - காலினால் உடைத்து, என்பால் அடைந்து- என்னிடம்வந்து, யான் இரப்பவும் பருவரல் விளைத்தான் - யான் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவும் எனக்குத் துன்பத்தையுண்டாக்கினான்.

அமைச்சர் - அருகில் உள்ளார் என்பது பொருள். முடி-தலைக்குப் பண்பாகுபெயராய் நின்றமுடி என்பது தானியாகு பெயராய்க் கிரீடத்தை

யுணர்த்தியது. கல் கருவியாகுபெயர். கால் இங்கு அடியை உணர்த்தலால் முதலாகுபெயர். இரப்பவும என்றவும்மை உயர்வு சிறப்பு. இரப்ப நிகழ்கால வினையெச்சம். இர பகுதி, ப் சந்தி, ப் விரித்தல் விகாரம், அ காரண காரியப் பொருட்டல்லாமையால் நிகழ்கால வினையெச்ச விகுதி. பருவரல் தொழிற்பெயர். பருவா பகுதி, அல் புடைபெயர்ச்சி விகுதி, ரு விரித்தல் விகாரம், உகரக்கேடு சந்தி, பகுதி ஆ அகரமானது குறுக்கல். பருவருகின்றான் பருவந்தான் என வினை விகற்பங்கள் வரும்.

70 (இ-ள்.) மந்தரத்தினைகடலினை - மந்தரமலையையுங்கடலையும், மற்றொழிற்குஅழைத்த - மல்லுப்போருக்குஅழைத்த, துந்துபிப்பெயர் அசுரனது - துந்துபியென்னும் பெயரையுடைய அசுரனது, ஆருயிர் தொலையா - ஆருயிரைநீக்கி, மேலெடுத்து - மேலே தூக்கி, உந்திஎறிதலும் - தள்ளிஎறிதலும், மதங்கன் உற்று உறையும் - மதங்கமுனிவன் தங்கி வசிக்கின்ற, இந்த மாதவச்சாலையின் - இந்தப் பெரிய தவச்சாலையில், எய்தி வீழ்ந்தது - (அந்த மாமிசபிண்டம்) வந்து விழுந்தது. எ-று.

முடிவுக்காலத்தில் உலகத்தைக் கடல் அழிக்கவல்லதாதலால் அதனையும் மற்போர்க் கழைப்பானாயினன். துந்துபிப்பெயர் இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர். இது பொருளை யுணர்த்தாது சொல்லையுணர்த்தி நின்றது. இந்த இ என்னும் சுட்டின் மரூஉ.

71. (இ-ள்.) மதங்கமாமுனி - மதங்கனென்னும்பெருமுனிவன், ஆங்கு அதுநோக்கி - அங்கே இறைச்சித் திரளையைப்பார்த்து, அவ்வாலி - இத்திரளையை எறிந்தவாலி, கதங்கொடு ஈங்குஉறின் - கோபத்தினால்இம் மலையில் வந்தால், கதிர்முடித்தலை - கிரணமுள்ள முடிஅணிந்த தலை, ஒரு நூறு விதமபட - நூறுவகையாக, தனிதெறிக்கஎன - தானேசிந்தக்கடவதென்று, வெகுண்டு உரைத்ததனால் - கோபித்துச் சபித்தமையினால், அதிர்ந்துவாலி இங்கு அணுவுஉறான்என - நடுங்கி இம்மலையில் சேர்தலிலனென்று, இவண்அமர்ந்தேன் - இங்குத் தங்கினேன்- எ-று.

தனித்தெறித்தலாவது பிறர் புடைத்தலில்லாமலே உடைந்து சிந்துதல். கொளவென்பதன் மரூஉஆகிய கொடு மூன்றுவதன் சொல்லுருபு. வெகுண்டு இறந்தகால வினையெச்சம்; வெகுள் பகுதி, ட் இறந்தகால இடைநிலை, உ வினையெச்ச விகுதி, ளகரம் டகரமாதல் சந்தி, அது ணகரமாதல் மெலித்தல். உரைத்ததனால் இறந்தகாலத் தொழிற்பெயர் மூன்றனுருபை ஏற்றபோது இடையே அன் சாரியைபெற்றது; உரைத்தது அன் ஆல் என வகுத்துக் காண்க.

72. (இ-ள்.) துந்துபிப்பெயர் அரக்கனது என்புஇது - துந்துபிப் பெயரையுடைய அரக்கனது எலும்புஇதுவாகும், துளைவின் அந்தரத்துஎடுத்துஎறிகஎன - விரைவாக ஆகாயத்தில் எடுத்தெறியக் கடவை என்று, இரவிசேய்அறைய- சூரியபுத்திரன் கேட்டுக்கொண்டமையால், மந்தரகிரி

அனையதை - மந்தரமலையொத்த எலும்பை, மணிவிரற்றலையால் - செம்மணி போன்ற பாதத்தின் பெருவிரலினுனியால், உந்தஐயிரண்டுயோசனை-தள்ளப் பத்துயோசனைதூரம், ஒல்லை ஏகியது - விரைவில்போய் விழுந்தது.

துந்துபிப்பெயர் - மந்தரகிரி என்பன இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத் தொடர். மந்தரக் கிரியெனக் ககரமிக்கது சந்த இன்பப் பொருட்டு வந்த விரித்தல் விகாரம். ஐ யிரண்டு பண்புத்தொகை நிலைத் தொடர்.

73. காழ்கொண்டு ஓங்கி - வயிரம்பற்றி உயர்ந்து, எண்திசையினும்கவடுவிட்டு உயர்ந்த - எட்டுத்திக்கிலும் பெருங்கிளைகிளைத்து உயர்ந்த, ஏழ்மராமரம் உருவிடஎய்கஎன - ஏழ்மராமரங்களையும் உருவும்படி எய்யக்கடவையென்று (சுக்கிரீவன்) கேட்டுக்கொள்ள, இராமன்தாழ் தடவுக்கையின் - சீராமன் தனது நீண்டபெருங் கைகளினால், ஆற்றல்அம் தடவுச்சிலை குனித்து - வலியமைந்த அழகிய பெரியவில்லைக் குனித்து, பாழிமாமரம் உருவிட - மிகப்பெருமையாகிய மராமர மேழையும் உருவும்படி, ஓர்கணைபணித்தான் - ஓரம்புக்குக் கட்டளையிட்டான். எ-று.

வாலி யென்பவன் பெருவலியுடையனாயிருக்க, இச்சிறுவனாகிய சீராமன் அவன்மார்பை உருவும்படி அம்பையெய்யும் பெருவலியுளனோஇலனோ என்று ஐயப்பட்டு இவ்விரண்டு வினைகளையும் செய்யும்படி சுக்கிரீவன் கேட்டுக்கொண்டனன். பாழிமா ஒருபொருட்பன்மொழி. குனித்து பிறவினையாகிய இறந்தகால வினையெச்சம்; குனி தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய பகுதியாயினும் இங்குப் பிறவினைப் பகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, உ வினையெச்ச விகுதி; குனிவித்து என்பதில் விவ் விகுதிதொகுத்த லென்பாரு முளர். குனிந்து தன்வினை.

74. வில்விழுங்குதோள் ஐயனது ஆற்றலைவியந்து - விற்கல்வியை முற்றுமுணர்ந்த தோளையுடைய சீராமனது வலியை அதிசயித்து, கொல்சினத்தவாலியை - (பகைவரை) கொல்லுகின்ற கோபமுள்ள வாலியை, கதிர்சேய் அறைகூவ - சூரியபுத்திரன் போர்செய்ய அழைத்ததனால், அவன்மல்லினால்இவன் வலிதொலைத்தலும் - அவ்வாலி மற்போரினால் இச்சுக்ரீவனுடைய வலியைப் போக்குதலும், மாழாந்து ஒல்லைமீண்டு - மனம்கலங்கி விரைவில் திரும்பி, அஃது உரைத்தலும் இராகவன் உரைப்பான்- தான்வலிதொலைந்ததைச் சொல்லுதலும் சீராமன் சொல்லுவான், எ-று.

வில்தான் காரணமாக உண்டாகிய கல்வியை உணர்த்தலால் காரணவாகுபெயர். வில்லைப்பிடித்தல், அம்பைத் தொடுத்தல், எய்தல் முதலியவற்றை உணர்த்தும் நூலையுணர்த்துகின்றதெனக் கொள்ளின் காரியவாகுபெயர். வில்விழுங்குதோள் - வில்லை விழுங்கிய தோள்என உரைத்தலும் ஒன்று; அதாவது தோளினது பெருமைக்கு வில் ஒரு சுள்ளிபோலக் கிடக்கின்றதென்பது. சினத்த குறிப்புப் பெயரொச்சம்; சினமென்னும் பண்

புப்பெயர் பகுதி, அத்துச் சாரியை ; அ பெயரெச்ச விகுதி, மகரக்கேடும், சாரியை முதல் அகரக்கேடும், ாற்றுகரக்கேடும் சந்தி. தெரிகிலே வினையில் இனைந்த எனவரும், இதுவும் பெயரடியாகப் பிறந்த தாயினும், பகுதி இன. அறைகூவ ஒருசொல்லின் தன்மைதது.

75. (இ-ள்) வேறுகணடிலன்உங்களை என்று-உங்களிருவரையும்வேற்றுமை தெரிக்கிலனென்றுசொல்லி, வில்வீரன்-வில்வீரனாகிய ஸ்ரீராமன், ஊறு தேன்மலாப்பிணையல ஒன்று - சுரக்கின்ற தேனையுடைய ஒருபூமாலையை, அணிந்து அமர் உடற்றச் சேறி என்றலும் - தரித்துக்கொண்டு போர்செய்யும்படி நீபோஎன்று சொல்லுதலும், சென்றுவாலியைப்போர்க்குஅழைப்ப- போய்வாலியைப் போர்க்குஅழைக்க, ஏறுஇரண்டுஎதிர்ந்து - இரண்டுஆண்சிங்கங்கள் (ஒன்றை ஒன்று) எதிர்த்து, அமர்புரிந்தால் எனஏற்றார்-போர்செய்தாற்போல எதிர்த்துப்போர்செய்தார்கள். எ-று.

வேறு பண்புப்பெயர். கண்டிலனுங்களை யென்பதைக் கண்டிலன் நுங்களை எனப் பதம் பிரித்தலுமாம். பிணையல் தொழிலாகுபெயர். சேறி ஏவலொருமை; செல் பகுதி, ற் எழுத்துப்பேறு, இ ஏவலொருமை எதிர்கால விகுதி, எ ஏயானது நீட்டல் விகாரம. உயர்ந்ததென்னும் பொருளில் ஏறு தொழிலாகுபெயர்.

76. (இ-ள்) ஏற்றவெஞ்சமர்புரிதலும்-மேற்கொண்டவெவ்வியபோரைச் செய்தலும், இராமன் வில்வணக்கி - ஸ்ரீராமன் வில்லைவளைத்து, பாறுஇனம சுழன்று - பருந்தின்கூட்டம்சுழல, ஒன்னலாரிணப்புலால்பருகி- பகைவருடைய கொழுப்பாகிய தசையை யுண்டு, ஊறுஇருந்து நெய்த்தோர்உமிழ்-ஊற்றெடுத்து இரத்தத்தை உமிழ்கின்ற, பகழிஒன்றுஉகைப்ப - ஓரம்பினைப் பிரயோகித்தமையினால், கூற்றம் அஞ்சுறும் - யமனும அஞ்சுகின்ற, வாலிதன்உயிர்குடித்தது - வாலியினதுயிராகிய நீரை(அந்த அம்பு) குடித்தது. எ-று.

ஏற்ற வெஞ்சமர் என்பதற்கு மேம்பாடாகிய வெவ்விய சமர் எனவும்உரைக்கலாம். பாற்றினம் ஒன்றன கூட்டத் தற்கிழமைப்பொருளதாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். சுழன்று சுழல என்பதன் திரிபு. இங்ஙனமன்றிப் பிறவினையாகிய வில்விகுதி தொகுத்தலாயிற்றெனினும் பொருந்தும். ஒன்னலா எதிர்மறை வினைப்பெயர் ; ஒன்று என்பதன் மரூஉ ஆகிய ஒன்னு பகுதி, அல் அததொழிலை மறுத்த விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்துமொரு பகுதி, ஆ பல்லோா படர்க்கை விகுதி.

77. (இ-ள்.) பரிதிவானவன் மைந்தன் - சூரியனாகியதேவனதுகுமாரன், அவ்வுலகு அடிப்படுத்து - அக்கிட்கிந்தையிலுள்ளாரைத் தன்பாதத்தின்கீழடங்கும்படி அடக்கி, புரவுபூண்டிட - காக்குந்தொழிலைக்கைக்கொள்ள, பொழிகதிர்மணிமுடி புனைந்து - பொழிகின்ற கதிர்களையுடைய இரத்தின கிரீடமணிந்து, கருவிவான்பொழி- (உலகத்துக்கு) துணைக்காரணமா

கிய மேகங்கள் மழையைப் பொழிகின்ற, காலம்ஆங்கு ஒழிந்திடுகாறும் - கார்காலம் அவ்விடத்தில் ஒழியும்வரையும், அருவிதூங்கு - அருவிநீர் ஒழுகுகின்ற, உயர்பிரச் சிரவணமலைஅமர்ந்தார் - உயர்ந்த பிரச்சிரவணமென்னும் மலையில் (இராமலட்சுமணர்கள்) தங்கியிருந்தனர்கள். எ று.

கருவிவானென்பதற்குத் தொகுதியையுடைய மேகமெனவும் பொருள்கொள்ளலாம். கருவி தொகுதிக் குறிப்புணர்த்தும் உரிச்சொல். தொகுதி மின்னல், முழக்க முதலானவற்றின் கூட்டம். பரிதி வட்டம்; அது பண்பாகு பெயராய்ச் சூரியனை உணர்த்தியது. பரிதிவானவன் இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர்.

78. (இ-ள்.) சிறந்தமல்லல் அம்திருவினால் - சிறந்தவளப்பமாகிய அழகிய செல்வத்தைப் பெற்றமையினால், இரவிசேய் நம்மை மறந்தனன் கொல்என்று - சூரியபுத்திரன் நம்மை மறந்துவிட்டானோ என்று ஐயப்பட்டு, இளவலை விடுத்தலும் - இலக்குமணனை அனுப்புதலும், அறம்கிடந்து ஒளிர்நெஞ்சினன்வணங்கி - அறம்தங்கி விளங்குகின்ற மனமுடைய இலட்சுமணன் (சீராமனை) வணங்கி, கிட்கிந்தைஅடைந்து - கிட்கிந்தையைச்சார்ந்து, ஆங்கு உறைந்த வெய்யவன் மைந்தனுக்கு - அந்நகரத்திலுள்ள சூரியபுத்திரனுக்கு, யாவையும் உரைத்தான் - (சீராமன்) சொல்லியவற்றையெல்லாம் சொல்லினான். எ-று.

அறங்கிடந்தொளிர் நெஞ்சினனென்பதைச் சுக்கிரீவன்மேலேற்றி, அவன்செய்நன்றி மறப்பவனல்லனென்பதைக்குறிப்பிக்க இவ்வாறு கூறினானென்னினுமொக்கும். வெய்யவன் பண்படியாகப் பிறந்த ஆண்பாற்படர்க்கைப் பெயர்; வெம்மை பகுதி, அன் ஆண்பாற் படர்க்கை விகுதி, பகுதி மை யீறுகெட்டதும், மகரம் யகரமானதும், அது இரட்டியதும் சந்தி.

79, (இ-ள்.) இரவிகாதலன் - சூரியபுத்திரன், இளவலோடு இராமன்மாடெய்தி - இலட்சுமணனோடு சீராமனிடத்து அடைந்து, விரைவின் வானரத்தலைவரை - விரைவில் வானரப்படைத் தலைவரை, குணக்கினும் மேற்கும் - கீழ்த்திசையிலும் மேற்றிசையிலும், பரவும்உத்தரதிசையினும் - துதிக்கப்படும் வடதிசையிலும், பனிமொழி அணங்கை - குளிர்ச்சியாகிய சொல்லையுடைய சானகியை, துருவி ஒல்லையின் மீள்கென - தேடிவிரைவில் திரும்பிவரக் கடவீரென்று, தூதுவினின்விடுத்தான் - விரைவில் அனுப்பினான். எ-று.

இன் என்னும் ஐந்தனுருபை மேற்கென்பதனோடுங் கூட்டுக. வடக்கு மங்கல திசை ஆதலால் பரவுமென அடைகொடுத்தார்.

80. (இ-ள்.) அங்கதன் திறல்சாம்பவன் - அங்கதனும் வலியுள்ள சாம்பவனும், நீலன்என்று அறையும் - நீலனுமென்று சொல்லப்படும், துங்கவெம்படைத் தலைவர் சூழ்தர - உயர்ந்தவெவ்விய படைத்தலைவர் சூழ்ந்து

வர, சுடர்நுழி மங்குல்ஆர் குழல்மடவரற்கு - ஒளிர்ந்த தன்மோதிரத்தை மேகம்போன்ற நிறைந்த கூந்தலையுடைய சீதைக்கு, அளிக்கஎன வழங்கி - கொடுக்கக் கடவையென்று கொடுத்து, தென்றிசை அநுமனை, தெற்குத்திசையில் அனுமானை, சிங்கஏறு எனவிடுத்தான் - ஆண்சிங்கத்தை அனுப்புவதுபோல அனுமானை அனுப்பினான். எ-று.

சிங்கஏறு அனான் எனப் பாடமாயின் ஆண்சிங்கத்தை ஒத்தவனெனச் சிராமன்மேலேற்றிக் கூறுக. மடவரல் ஆறும்வேற்றுமைத் தொகைப்புறந்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயர்; விரிந்தால் மடத்தினது வரலாற்றை யுடையாளென விரியும்; மடம் கற்பு.

81. (இ-ள்.) நெடும்பம்சொடுகானமும் - தீக்கொள்ளிகள்உண்டாகின்ற கொடிய காடுகளையும், வரைகளுமநீந்தி - மலைகளையுங்கடந்து, புடைகொள்வானபில மருங்கினில் எய்தலும் - பேரிடங்கொண்ட உயர்ந்தபிலத்துக்குப் பக்கத்திற்செல்லலும், டோதந்துஇடர்விளைத்திடும் அவணனை - புகுந்து சங்கடத்தை உண்டாக்குகின்ற அரக்கனை, இராவணன்என்று-இராவணனென்று கருதி, அடல்விளைத்து போரை உண்டாக்கிக்கொண்டு, அவன்ஆர்உயிர் அங்கதன்செகுத்தான் - அத்துமிரனென்பவனுடைய அரிய உயிரை அங்கதன் கொலைபுரிந்தான். எ-று.

நெடி நெருப்பு என்பதன் மரூஉ. இப்பதத்துக்குச் சிள் வண்டென்பாருமுண்டு. வரை மூங்கிலுக்குப் பண்பாகு பெயர்: மலைக்குத்தானியாகு பெயர்.

82. (இ-ள்.) அங்கதன் முதலாகிய வானரர்தலைவர் - அங்கதன்முதலிய வானரப் படைத்தலைவர், சிங்கஏறென - ஆண்சிங்கங்கள்செல்வதுபோல, பிலந்துவாரத்திடை - பிலத்தின்துவாரத்தில், சென்று - நுழைந்து, மணிக்குப்பை - இரத்தினராசி - கங்குல்மேய்ந்து ஒளிர்கதிர் - இருளைமுற்றும் உண்டு விளங்குகின்ற கிரணங்களை, கால்விரிக்கும் - கான்று (வீசி)பரப்புகின்ற, துங்கமாநகரிடத்தில் - உயர்வாகிய பெரியநகரத்தில், ஓர்தோகையைக் கண்டார் - மயில்போலும் சாயலுடைய ஒருபெண்ணைக் கண்டார்கள். எ-று.

கங்குல் பொருளாகுபெயர். காலென்னும் முதனிலை வினையெச்சப் பொருள்பட்டு நின்றது. தோகை மயிலுக்குச் சினையாகுபெயர். அது பெண்ணுக்கு உவமையாகுபெயர். இப்பெண்ணின் பெயர் சுயம்பிரபை.

83. (இ-ள்) கண்டவானரர்உளம்இறும்பூதுஉற-பார்த்தவானரர்மனத்தில் ஆச்சரியம்பொருந்த, கருதி - எண்ணி, வண்டுபாட்டுஅயர் - வண்டுகள் பாடுதல் செய்கின்ற, வணர்இரு கூந்தல்நீயாரை - வளைவாகிய பெரியகூந்தலையுடையாளே நீயார், அண்டர்ஊர்நிகர்நகரம் - தேவருடைய அமராவதி ஒத்த இந்நகரம், யார்நகர் - யாவருடைய நகரம், அருபவளம் விண்டு கூறுஎன - அருமையாகிய பவளம்போன்ற வாய்திறந்து சொல்லென்று

கேட்க, மின்கொடிமெல்மெல மிழற்றும் - மின்னற்கொடியை ஒத்தசுயம் பிரபை மெள்ளமெள்ளச் சொல்வாள். எ-று.

பாட்டு முதனிலை திரிந்த தொழிற்பெயர் : பாடு பகுதி, தல் விகுதி புணர்ந்து கெட்டமாத்திரத்தில் பகுதி தன்ஒற்றிரட்டியது. யார் நகரொன்பதில் யாரென்பது யாவரென்னும் பல்லோர் படர்க்கை வினாப்பெயரின் மரூஉ. மின்கொடி ஆறும்வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர்.

84. (இ-ள்.) மயன்எனும்திறல்அவுணர்கோன் - மயனென்றுசொல்லப்படும் வலியுள அசுரராசன், வரத்தினால் - (தான்பெற்றுள்ள) வரத்தினால், வெயில்செய் பொன்னினில் - வெயிலைவீசுகின்ற செம்பொன்னினால், முன்னம்செய்திடும் விழுநகர்ஈது - முன்னால் படைத்த சிறப்பாகிய நகரம்இது ஆகும், பயிலும்அன்னவன் - வாசம்பண்ணுகின்ற அம்மயனென்பவன், விசும்பிடை பனிமதி முகத்துக் குயிலைவெளவி - சுவர்க்கத்திலுள்ள குளிர்ச்சியாகிய சந்திரனைபோன்ற முகத்தையுடைய குயில்போன்றதெய்வப்பெண்ணைக் களவுசெய்துகொண்டுவந்து, இக்கோநகரதனில் வீற்றிருந்தான் - இந்தராஜநகரததில் பெருமையாக இருந்தான். எ-று.

வெயில் பண்புப்பெயர்; வெம் பகுதி, இல் பகுதிப்பொருள் விகுதி, மகரம் யகரமாதல் சந்தி ; இது வெப்பமாகிய கிரணத்துக் கானதால் பண்பாகுபெயர். விசும்பு இடவாகு பெயர். குயில் உவமை யாகுபெயர். இல் என்னும் ஏழனுருபேற்ற நகரது என்னும் பெயா அன் சாரியை பெற்றது.

85. (இ-ள்) அச்சுஅணங்குவேல்-(பகைவருக்கு)பயத்தையும்நோயையும்தருகின்ற வேலைத்தாங்கிய, மயனுடைஆர்உயிர்மடிய - மயனுடைய அரியஉயிர் (உடலினின்று) நீங்கும்படி, வச்சிரப்படை எறிந்து - வச்சிராயுதத்தினால் (அவனை) துணைடித்து, வானவர்க்கு இறைஅகல - தேவராசன்நீங்க, செச்சைஅம்குழல் - மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடைய,திருநிகர்ஏமைக்கு அந்நகரம் - திருமகளையொத்த ஏமை என்பவளுக்கு மயன்செய்த நகரத்தை, பச்சைமால் உந்திபூத்தவன் - பச்சைநிறமுடைய திருமாலினது உந்தியில் உண்டாகிய பிரமன், பரிவுடன் அளித்தான் - அன்போடு கொடுத்தான். எ-று.

உந்தி பூத்தவன் எழுவாய்ந் தொகாநிலைத் தொடருமாம். பச்சை பண்புப்பெயர்; பசுபகுதி, ஐ பகுதிப்பொருள் விகுதி, தன்ஒற்றிரட்டலும் உகரகேடும் சந்தி. மால் அடியார்பாகல் மோகமுடையான், யாவரினும் பெரியான் என்னும் இருபொருளிலும் பண்பாகுபெயர்.

86. (இ-ள்.) தாமப்பூங்குழல - மலர்மாலை யணிந்த கூந்தலையும், தண்நிலாத்தரளம் வெள்முறுவல் - குளிர்ந்தநிலாவைவீசுகின்றமுத்துப்போ

ன்ற பற்களையுமுடைய, எமைஎன்பவள் - ஏமையென்னப்பட்டவள், இந்ந கர் என்வயின் அளித்து - இந்நகரத்தை என்னிடத்திற்கொடுத்து, காமர் வானுலகு அடைந்தனள் என்றலும் - அழகிய சுவர்க்கலோகத்தைச் சேர்ந் தாளென்று சொல்லுதலும், கவிகள்நாமஇதியாம் செல்நெறி - வானரங்க ள்புகையூட்டிய சுந்தலையுடையபாளே நாங்கள் செல்லும் வழியை, காட்டு எனத்தொழுத - காட்டென்றுதொழுதன. எ-று.

தாமவோதி இரண்டாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக காரணப்பெயர். வானுலகு ஏழாம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர். தொழுத பலவின் படர்க்கை இறந்தகால வினைமு ற்று; தொழு பகுதி, த் இறந்தகால இடைநிலை, அ பலவின் படர்க்கை விகுதி.

87. (இ-ள்) அஞ்சனப்புயல்தூதர்நீர் - கருமையாகியமேகம்போன்றஸ்ரீ ராமனுடைய தூதர்களேநீங்கள், பிலம்அகன்றுஏக - பிலத்தினின்றும் நீங் கிப்போகும்படி, செஞ்செவேவிழி புதைக்கவென - மிகச்செம்மையாகக் க ண்களை மூடிக்கொள்களென்றுசொல்ல, செங்கையால் புதைப்ப - (வானரர்) அகங்கைகளால் மூடிக்கொள்ள, அவள்மந்திரஜைஒன்று உணர்ந்தலும் - சுயம் பிரகாசை ஒரு மந்திரத்தைச் செபித்தலும், வெம்பிலம்அகன்று-கொடிய பி லத்தினின்று நீங்கி,மஞ்சுகண்படும் - மேகங்கள் உறங்குகின்ற,மகேந்திரவ ரையின்வந்து அடைந்தார் - மகேந்திரமலையில் வந்து சேர்ந்தார். எ-று.

புயல்முற்றுவமமாய்ச் ஸ்ரீராமனை உணர்த்த,உயர்திணைப் பெயராய் நிற்றலால் நிலைமொழி யிற்று லகரங்கெட்டு, வருமொழி முதல் தகரம் றகர மாகத் திரிந்தது, நன்-மெய், சூ-உ௪. செஞ்செவே. தன்னந்தனி, சிற்றஞ் சிறு, இவை எல்லாம்பொது வியல் - சூ-௬௯-இல். நன்-உரி-உ0-ஆல் அமை க்க. மஹேந்திரம் என்பதில் ஹ மொழிக்கிடையில் நின்றமையால் ககரமா கத் திரிந்தது.

88. (இ-ள்.) ஆங்கண்எய்திய - அம்மகேந்திரத்தில் சேர்ந்த, அங் கதன் முதலியவீரர் - அங்கதன் முதலாகியவீரர் - கோங்குஉலாவும் குழற் கொம்பினை - மணந்தங்கிய கூந்தலையுடையபூங்கொம்பையொத்த சீதையை, கண்டிலம்அன்றி - காணப் பெற்றிலோம் அது அல்லாமல், வீங்குபோரி டை - மிகுந்தபோரில், சடாயுவைப்போல வீந்திலம் - சடாயுவைப்போ லஉயிர்மாய்ந்திலோம், என்றுஏங்கும் மாற்றம்கேட்டு - என்றுபுலம்புகின்ற சொல்லைக்கேட்டு, இருந்தசம்பாதிஈது உரைப்பான் - (அம்மலையில்) உட் கார்ந்திருந்த சம்பாதி இதனைச் சொல்லுவான். எ-று.

முதலிய பொருளடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; முதலெ ன்னும் பண்புப்பெயர் ஆகுபெயராய் அங்கதனை யுணர்த்தலால் பொருளடி யாகப் பிறந்ததென்றும் முதல் பகுதி, இ சாரியை, ய் சந்தி, அ பெய

ரொச்சவ்விருத்தி அடிகதன்னெனும் பெயரோடு முதலென்னும் முதனிலை யிருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலையாகப் புணர்ந்தது. கொங்கென் பதுகோங்கமென முதனீண்டு நீட்டல் உலாவுமென்னும் பெயரெச்சம் உலாமென வகரவுயிர் மெய்கெட்டு நின்றது எங்குமெனும் காரியப்பொருட்டாகிய பெயரெச்சம் மாற்றமென்றுங் காரணப்பெயர்கொண்டது.

௮௯. (இ-ள்) எம்பியீரசமை எனத்தம்பி இறந்ததை, கூறுமின்ன னைப்ப - சொல்லுங்கோன்மொழி கேட்குதலும், கவிகள் - வானரங்கள், நடுநிமாகலர - (கண்டோர்) விரும்புகின்ற சீராமனது, நலமிணைக்கிழத்தியை - நலமிகுந்த சுந்தரிய மனைவியை, அரக்கன் வெம்புகாட்டிடை- கொசிகிகிணர காட்டிலஞ்சி ராவணனே, வெள்வலும் சடாயுமுனை விலக்க - கவா ந்து செலுத்தலும் சடாயு முன்னேபோய்த் தடுக்கையில், நம்பைமோலி யான் - நம்பைமலாமாலையணிந்த சிரங்களையுடைய இராவணனை, சுடாமணி வாள்தலை துணிதரான்-(கைப்பிடி) ஒளியுள்ள மணிகளிழைத்த வாளினால் (இருசிறகையும்) வெட்டினான் எ-று.

இவ்வாள் சிவன் சொரிந்தது. நம்பி ராகவன் என்பதை நம்பி ராகவனெனப் பகுமிரித்து நம்பியாகிய ராகவனெனப் பொருள்கொண்டு, இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடராக்கலும் ஒன்று அகர இகர உகரங்களைப் பெறுமல ரகரந்தை முதலிலுடைய வடமொழி வழங்கலுமு ண்டு "ரகுவெனபான் வரிசிலையால்" என முன்னோர் செய்யுளாலுமுண ர்க துயடை போக்குச் செல்வோர் நரிக்கும் மாலை, நம்பப எனனும் முதற்பொருளின் பெயர் மலராகிய சினைக்கு முதலாகுபெயராம். அது மாலைக்குக் கருவியாகு பெயராம் சினையாகுபெயருமாம் மோலி மௌ லியென்பதன் சிதைவு எம்பி என்பதில யாம பகுதி

௯0. (இ-ள்) மாழைநோக்கியைக்கொண்டு - மாம்பிஞ்சின்பிளவை ஒத்த கண்களையுடைய சானகியை எடுத்து, அவன் ஏகலும் வருந்தி-அவன் போகுதலும் மனம் வருந்தி, பாழியம்புயத்து இராகவன் - பெருமையாகிய அழகியதோள்களையுடைய சீராமன், பரிதிசேயோடும் தோழமைகொடு - சுக்கிரீவனிடத்து நட்புக்கொண்டு, வாலியைத்தொலைத்து அரசளிப்ப - வாலியை உயிர்மாய்த்து அரசுசெய்தலைக் கொடுத்தமையினால், ஏழை போம் இடம் நாடும் என்று - மடமென்னும் குணமுடைய சீதை சென்றுள்ள இடத்தைத்தேடுங்கோள் என்று கட்டளையிட்டு, எங்களைவிடுத்தான்- (சுக்கிரீவன்) எங்களை அனுப்பினான். எ - று.

மாழை பிஞ்சுக்கு முதலாகுபெயராய், அதுதன் பிளவுக்கு அவ்வாகு பெயராயிற்று நோக்கி சினையடியாகப் பிறந்த பெண்பாற் படர்க்கைப்பெயர் ; நோக்கு முதனிலைத் தொழிலாகுபெயராய்க் கண்ணை யுணர்த்தியது. அதுவே பகுதி, இ பெண்பாற் படர்க்கை விகுதி, உகரக்கேடு சந்தி. அளிப்ப காரணப்பொருட்டாகிய இறந்தகால வினையெச்சம், அளி பகுதி, ப் சந்

இ, ப் விரிததல் விகாரம, அ செயஎன் வாய்பாட் டிறந்தகால வினையெ ச்ச விகுதி.

91. (இ-ள்.) என்னாஓதலும் - என்றுசொல்லுதலும், எருவைவேந் தஉளம்கசிந்துஉருகி - கழுகுஅரசன் மனம்நெகிழ்ந்துஉருகி, முன்னமயானும் என் தம்பியும -முன்நாளில நானும் என்தம்பியும,மொய்கதிர் உலகில்-அடர் ந்த கிரணங்களையுடைய சூரியமண்டலத்தில், மன்னுவான் பறந்திடுதலும் - சேரும்படி பறந்துசெல்லுதலும், வருந்தும் என்தம்பிதன்னை - (சூரியவெப் பத்தினுல்) வருந்திய என் தம்பியை, என்உடைச் சிறையினுல் - எனதுசிற கினுல், தயாவொடுகாத்தேன் - தயையோடு காத்துக்கொண்டேன். எ-று.

முன்னம் பண்பாகுபெயராய்க் காலத்தை உணர்த்தியது. கதிர் பண்பாகுபெயர். மொய் கதிரெனக் கொள்ளின் வினைத்தொகைப் புறத் துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். உடைய என்னும் ஆ றும் வேற்றுமைச் சொல்லுருபு ஈறுதொகுக்கப்பட்டது. ஒடு உருபு விசே டணப் பொருளது ; தயாவொடுகாத்தே னென்பதற்குத் தயையுடையே னுகிக் காத்தேனென்றுரைக்க.

92. (இ-ள்.) வெய்யவன் கொடுகதிரினுல் - சூரியனுடைய அதி வெப்பமாகிய கிரணங்களினுல், மெல்சிறைகருகி - மென்மையாகிய சிறகுக ள்கரிந்து, மையலோடும் இம்மகேந்திரவரையினில் - மயக்கத்தையுடை யேனுகி இந்தமகேந்திரமலையில், வீழ்ந்துயுள் உற்றனன் - விழுந்துது ன்பமடைந்தேன், எம்பிஎவ்வழிபடர்ந்தனனோ - என்தம்பி எங்குச்சென் ருனோ, ஐயன்மீர் அஃதுஅறிந்திலன் - ஐயாகளே சடாயுசென்றவிடம்தெ ரியேனுய், இவ்வழிஅமர்ந்தேன் - இவ்விடத்தில தங்கினேன். எ-று.

மென்சிறை பண்புத் தொகைநிலைத்தொடர் , மென்மையென்னும் பண்புப் பெயரோடு சிறையென்னும் வருமொழி புணர்ந்தபோது, நிலை மொழியீற்று மை யீறுகெட்டதும், லகரம் நன்-மெய-சூ நசு-ஆல் னகர மானதும் சந்தி. புன்செய், வெண்பல், ஒண்கதிர் என வருவனவற்றுக்கும் விதி அதுவே. ஐயன்மீர் ஐயன்மார் என்னும் பல்லோர் படர்க்கைப்பெயர் விளியுருபேற்றபோது ஈற்றுகாரம் ஈகாரமாயினது.

93. (இ-ள்.) யான்பயந்தருள்சுபாரிசன் - நான்பெற்ற சுபாரிசன், ஊன்எனக்குஅளிப்பான் - இறைச்சியை எனக்குக்கொடுக்கும்படி, வான்ப டர்ந்து - உயர்மேகங்கள்வந்து பரவுபடி உயர்ந்த, மகேந்திரவரையில்மே வுதலும்-மகேந்திரமலையில் தங்குதலும, ஊன்படர் ஈர்வேல் இராவணன் - (பகைவருடைய)தசையில்தைத்த வேலையுடைய இராவணன், ஓர் அனங் கோடு-ஒரு பெண்ணையுடையானுகி, கான்படர்தனன்எனலும் - காட்டில நுழைந்துபோகுதலும், கனன்றுபோயப் பிடித்தான் - கோபித்துப்போய்ப் பிடித்தான். எ-று.

பயந்தருள் வினைத்தொகை வினை; பயமென்னும் பெயரடியாகப் பிறந்த பய பகுதி, த் சந்தி, து சாரியை, அருள் வினைமுதலி னுயர்வைக் காட்டும் விகுதி, சந்தித்தகரம் நகரமாதல் மெலித்தல், உகரக்கேடு சந்தி; இது விரிந்தால் பயந்தருளின என விரியும். அணங்கு அழகெனப் பொருள்கொள்ளின் பெண்ணுக்குப் பண்பாகு பெயா; அசையெனப் பொருள் கொள்ளின் கண்டோருக்கு விருப்பைத் தருகின்ற பெண்ணுக்குக் காரிய வாகுபெயர். இராவணன் யாவரையும் அழுவிப்பவ னென்பது பொருள். கனன்று பெயரடியாகப் பிறந்த இறந்தகால வினையெச்சம்; கனல் பகுதி, ற் இறந்தகால இடைநிலை, உ வினையெச்ச விகுதி, பகுதி யீற்று லகரம் றக ரமாதல் சந்தி, அது னகரமாதல் மெலித்தல்.

94. (இ - ள்.) பொருந்த வெளவலும் - செவ்வையாகப் பிடித்துக் கொள்ளுதலும், இராவணன் புரந்தருள்க என்ன - இராவணன் (சுபாரிச னை என்னை) காக்கக் கடவை என்று, வருந்திக்கூறலும் - வருந்தாநின் றுகேட்டுக் கொள்ளுதலும், விடுத்துஇவண்வந்து அவைபுகல - அவனைவிட் டுஎன்னிடம்வந்து அச்செய்திகளைச் சொல்லவும், திருந்துமாதவர் - குற்றம ற்றபெருந்தவத்தினர், சீதைஉய்ந்தனள் எனச்செப்ப-சீதை பிழைத்தாளெ ன்று சொல்லவும், பரிந்துகேட்டனன் - அன்பாகக்கேட்டேன், பார்வைக் கும் தோன்றினள் என்றான் - என் கண்பார்வைக்கும் தோற்றினாள் என் று சொல்லினான். எ-று.

சுபாரிசன் இராவணனை மறித்ததும், இராவணன் கெஞ்சியிரந்த தும், அவன் இரங்கிவிடுத்ததும் பலவாதலால் அவை எனப் பன்மைச்சுட்டி னால் சுட்டினான். திக்கடவுள் உண்மையாகிய சீதையைத் தான்மறைத்து, மாயையால் கற்பித்துவைத்த சீதைஇவளென்னும் மெய்ம்மை தங்கள் ஞா னநோக்கால் உணர்ந்தனராகலால் சீதை உய்ந்தனளென மாதவர்கூறுவ ராயினர். பார்வை இது தொழிற்பெயரெனக் கொள்ளின் பார் பகுதி, வை புடைபெயர்ச்சி விகுதியென்க; தொழிலடியாகப் பிறந்த பெயராய்க் கண் ணை உணர்த்திற்றெனக் கொள்ளின் பார் பகுதி, வ் எழுத்துப்பேறு, ஐ கரு விப்பொருண்மை விகுதியென்க. உம்மை ஒருபுடை இறந்தது தழீஇய எச் சவும்மை.

95 (இ-ள்) சாரங்கமுனிவரன் லோகசாரங்கனென்னும்முனிவர்களிற் [illegible]வன், இராகவன்தூதர் - சீராமனுடையதூதர்கள், மன்னின் நின் [illegible]றை - இங்குவந்தால் நின்சிறை, மாண்புடன் முளைத்திடும் - சிறப்பாக [illegible]க்கும், என்னமுன்னிப்பன்னினன் - என்று ஆராய்ந்துசொல்லின [illegible] எனப்பகர்தலும் - என்று(சம்பாதி) சொல்லலும், பண்டுபோல சிறகர் [illegible]ரி - முன்போல இறகுஅடர்ந்து, நன்கினின் முளைத்திட - செழுமை [illegible] முளைக்க, ராமனைத்துதித்தான் - சீராமனை (சம்பாதி) துதி பண்ணி [illegible] எ-று.

லோகசாரங்கமென்பது முதற்குறையாய், சாரங்கமெனவந்தது; இவ்வாறே இந்திரகோபம் - கோபம், பிண்டிபாலம் - பாலம், வாய்பாடு பாடு - என முதற்குறை பெற்றன. சிறகு குற்றியலுகரமாதலால் சிறகொ ன அர்போலிவந்தது.

96. (இ-ள்.) சீதைஆண்டு உறைஇலங்கையுள் - சானகி அங்கேயுள்ளஇலங்கையில், சோர்ந்தனள் என்னவுழி - சோர்ந்தாளென்று சொல்லி, வீந்தஅச்சடாயுவசகுஇருகைநீர உகுத்து - இறந்தஅச்சடாயுவுக்குஇரண்டுகைகளாலும் நீரைச்சிந்தி, காதல்கூர்தரும் வானரர்க்கு - (தன்னிடத்து) ஆசைமிகுகின்ற வானரர்களுக்கு, இன்உரைகழறி - இன்சொற்களைச் சொல்லி, ஏதமஅற்றிடும் எருவைவேர்து - (சிறையின் குறையாகிய) குற்றம் நீங்கிய கழுகுஅரசன், அன்றே ஏகினன் - அப்போதே சென்றான். எ-று.

தூரத்திலிருக்கின்றமையால் ஆண்டுறை இலங்கைஎன்றான். வீந்த காரியப்பொருட்டாகிய இறந்தகாலப் பெயரெச்சம்; வீ பகுதி, ந் சந்தி, த் இறந்தகால இடைநிலை, அ பெயரெச்ச விகுதி, சந்தித் தகரம் நகரமாதல் மெலித்தல் விகாரம், இது சடாயுவாகிய செய்பவினைக் கொண்டது. உகுத்து பிறவினையாகிய இறந்தகால வினையெச்சம்; உகு தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாயினும் இங்குப் பிறவினைப்பகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, உ வினையெச்ச விகுதி, தன்வினை உக்கு, உகுந்தெனவரும்; உகுவித்தென்பதில் உகுத்தென விவ்விகுதி தொகுத்தல்பெற்றதென்பாருமுளர்.

97. (இ-ள்.) துன்றவார்சிறை எருவைவேந்து - நெருங்கியநீண்ட சிறகையுடைய கழுகரசனாகிய சம்பாதி, ஏகலுமதுவன்றி நின்று - பறந்து போகலும் கூடிநின்று, வீரர்உள்நிறைந்த பேரஉவகையர்ஆகி - வானரவீரர் உள்ளத்தில் நிறைந்தபெருங் களிப்புடையர்களாய், வென்றமாருதி திரைக்கடல் கடக்கஎன - (பகைவர்களை) வெற்றிகொண்ட அநுமானே அலையையுடைய கடலைக்கடந்து செல்லக்கடவை என்று, விளம்ப - (சாம்பவன் முதலானோர்) கேட்டுக்கொண்டமையால், குன்றின்மீது இவ - மலையின் மேல் ஏறிய, கோள்புலிப்போத்து எனஇவர்ந்தான் - வலிமிகுந்தஆண்புலிபோல (மகேந்திரமலைச் சிகரத்தில்) ஏறினான். எ-று.

துவன்றல் நிறைதல். வார்சிறை வினைத்தொகை நிலைத்தொடர்; விரிந்தால் வார்ந்த சிறையென விரியும். வேந்து பண்பாகு பெயர். அண்மை விளி ஆதலால் மாருதிஎன இயல்பாய் நின்றது. மாருதி தத்திதாந்த நாமம்.

98. (இ-ள்.) அம்கண்வான்உலகுஅனைவும் - அழகிய இடமகன்ற வானிலுள்ள சுவர்க்கலோகத்தைப் பொருந்துகின்ற, மாகேந்திரவரையின் நின்று - மகேந்திரமலையிலிருந்து, அநுமன்திங்கள் நீள்முடி - அநுமான்சந்திரனைநீண்டசிரம், உரிஞச்செல்உழி - உராயும்படி செல்லும்போது, மகப

திஒறுப்ப - இந்திரன் (வச்சிரத்தினால்) தலையடிசததனால், மங்குல்சேர்வழி நீரினுள் மறைந்தமைனாகம் - (நீருண்ணமேகங்கள்செல்லுகின்றவழியே சென்று கடலிலமறைந்த மைந்நாகமலை, என்னுமையில்தங்கிவருக என - (அநுமானே) என்னிடத்தில் தங்கியிருந்து போஎனறுசொல்ல, அதனைத்தடவுகையின் நட வந்துபோனான் - அந்தமைந்நாக மலையைத் தன்பெருங்கைகளால் தடவிச்சென்றான். எ-று.

செல்வழி வினைத்தொகை நிலைநதொடா, விரிந்தால் செல்கின்றவழியெனவிரியும. "டம்பம்பெய அல்லாதமெய். ஈன்-உயிர - கு-கஙு - இல் "நெறி" என்றமையால் தோன்றியது. மலைகளின் சிறைகளைவெட்டுகின்ற இந்திரனுடைய கணைகருககுதத தோன்றாதபடிச் சென்றதாதலால "மங்குல்சோவழி நீரினுளமறைந்த மைந்நாகமென்றா. இது முதலிய பதினைந்து செய்யுளும் முதறசீரும, மூன்றாஞ்சீரும, நான்காஞ்சீரும்பெரும்பாலும விளவிறுகிச்சீரும், இரணடாஞ்சீ காயிறுதிச்சீரும், சடையினின்ற சீர மாவிறுதிச்சீரும பெறற நெடிலடி நான்காலமைந்தன ஆதலால் கலிநிலைத்துறை எனப்படும் பெரும்பாலுமென்றதூ விளவிறுதிச்சீ நிற்குமிடத்துச் சிறுபான்மை காயிறுதிச்சீ வருமென்னறகு; இதனை இசசெய்யுளில் முதலடியின் முதறசீரிலும், மூன்றாமடியின் முதறசீரிலும், நான்காமடியின் நான்காஞ்சீரிலும காணக.

99. (இ-ள்.) திரைசெய்தெள்கடல் முகட்டில் - அலைவீசுகின்றதெளிவாகிய கடலினது மேலிடத்தில், கழுழனின்செல்லும மாருதியை-கருடனைப்போல வேகமாய்ப்போகின்ற அநுமானை, சுரசைஎன்பவள் தடுப்ப - சுரசைப் பெயருடையவள் (குறுசகேவந்து) தடுத்ததனால், தன்னுடைப்பேர் உடலசுருககி - தன்னுடைய பெரியவுருவைச சுருஙகச்செய்து,வினைவின்வாய்வழிபபோகி - சிறிதுபோதில் (அவளுடைய)வாயில்சென்றுமீண்டு, மெய்ந்நிழல் வெளவுபோஅரககி - (தனககுமேலேசெல்லுகின்ற உயிரகளினது) உடலினிழலால (அவ்வுடலை) பற்றுகின்ற (அங்காரதாரை யென்னும்) பெரிய அரககியினது, குருதிவாயிடைப் புகுந்து - (பிறஉயிரகளினது) ௦திரம்படிந்த வாயிலபுகுர்து, குடல்பறித்து இலஙகையில் குதித்தான்- குடலைப்பிடுஙகி இலஙகையில் குதிதசான். எ-ற.

தேவர்கள் அநுமானுடைய வலியை இவ்வளவினதென்று அறிந்படி சுரசையென்பவளை அனுப்பினா. அத்தெய்வப்பெண் பெரிய உருக்கொணடு வந்து வழிமறிதது நின்று, எந்தனை அணடங்களைப் லும் விககாமல விழுஙகநதகக தன் பெருவாயைத் திறந்து இதன்வ செல் என்று சொல்ல, அநுமானும் சென்று மீண்டனன். சுரசை வர்களும் வியநது புகழ்ந்தார்கள ஓருயிரினிழலைப் பற்றிஇழுத்து ரினுடலை உணணுா வரம்பெறறுள்ள அங்கார தாரையென்னும் மறித்தனள். மறிததும் அநுமான் ஏன் மறித்தனைஎன, நீ எனக்

கு ஆகாரமாவாய் என்றனள். நீ வல்லாயாயின் உன்னென்று அவள்வாயி னுட்புகுந்து, குடலைப்பற்றி வயிறுமூதல் வாய்வரையும் பிளந்துகொண்டு காற்றுடியைப்போல மேலெழுந்து பாய்ந்தனன். குடல்பறித்து இதில் நிலைமொழி அலீற்றினைப் பெயராதலாலும், இது இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைப் புணர்ச்சியாதலாலும, நன் மெய்-கூ-உச-இன்படி குடற்பறி த்தென லகரம் றகரமாகாமல, உருபு-ரு-சகூ - இன்படி விகாரந் தியல்பா யிற்று.

100. (இ-ள்) கன்னிமூதெயில்கடந்து - அழிவிலாமையும்பழமையு மாகியமதிலாகியஆடையையுடுத்த, கடிநகர் இலங்கைகாத்துழும்பும் - காவ லுடைய நகரமாகிய இலங்கையை மிகுதியும் காக்கின்ற, மின்னு நக்கவா ள்எயிற்ற மின்னலை (இகழ்ந்து) சிரித்த ஒளியையுடைய பற்களையுடைய, அணங்கினை வெம்கொடிற்றின் பெண்ணாய் - (இலங்காமா தேவியென்னும்) பெண்ணினுடைய கொடிய கன்னத்தில் அறைந்து, அன்னமாநகர் முழு தும் - அப்படிப்பட்ட பெரிய நகரமுழுவதையும், அங்கையில் கனி என நோக்கி - உள்ளங்கை நெல்லிக்கனிபோலக்கண்டு, பொன்னம்மேகலை அணங் கை - நானுநிறமுள்ள மேகலையணிந்த சானகியை, காண்கிலன் ஆய்வருந்து கின்றான் - காணாதவனுகி வருந்துகின்றான். எ-று.

மூதெயில் பண்புத்தொகை நிலைத்தொடர்; விரிந்தால் முதுமையா கிய எயில் எனவிரியும், முதுமை என்னும் பண்புப் பெயரோடு எயிலென் னும் பெயர் புணர்ந்தபோது, நிலைமொழி யீறுகெட்டு, ஆதிநீண்டு, உகரங் கெட்டது சந்தி. காத்தோம்பல் ஒருபொருட் பன்மொழி. நக்க இறந்தகா லப் பெயரெச்சம்; நகு பகுதி, அ பெயரெச்ச விகுதி, பகுதி ஒற்றிரட்டிய தும், உகரக்கேடும் சந்தி, ஒற்றிரட்டலே இறந்தகாலங் காட்டியது. எட்டுக் கோவைகளையுடையது மேகலை. "எண்கோவை மேகலைகாஞ்சியிருகோவை, கண்கொள் கலாபமிருபத்தொன்று - பண்கொள், பருமம்பதினென்கு முப்ப த்திரண்டு, விரிசிகையென்றுணரற்பாற்று, இவ்வெண்பாவாலு முணர்க. இ து நச்சினார்க்கினியார் காட்டிய செய்யுள். ஏழுகோவையுடையது மேகலை என்பர் மண்டலபுருடர்.

101. (இ-ள்.) திங்களின் வடிம்புஇடறு - சந்திரனுடைய ஓரத் தைஇடறுகின்ற, சினைமலர்அசோகநல்நிழலில் - கிளைகளில்மலர்களையுடை யஅசோகமரத்தினது நல்லநிழலில், மங்குல்ஊடு ஒளிஎறிக்கும் - இரவின டுவில் ஒளியைவீசுகின்ற, மாசுபூத்தமெல்கொடிபோல - தூசுபடிந்த மெ ல்லிய பூங்கொடிபோல, வெம்கண் - கொடியகண்களையும், வாள்எயிறு-வா ள்போன்ற பற்களையுடைய, அகல்வாய் அரக்கியர்மருங்கு - விரிந்தவாயை யுமுடைய அரக்கியர்பக்கத்தில், வீற்றிருக்கும் நங்கைவாள் முகம்நோக்கி - பெருமையாக இருக்கின்ற சீதாபிராட்டியினது ஒளிதங்கிய முகத்தைப்பா ர்த்து, நல்நுதல் சீதைஎன்று உணர்ந்தான் - நல்லநெற்றியையுடைய சான கி என்று துணிந்தான் எ-று

வாளெயிற்றை வாய்கதும், வெங்கண், அகலவாயென்னும் இரண்டையும் அரக்கியர்க்கும் விசேடணமாகக்கொள்க. சீராமன் சொல்லிய குறிகளோடொத்திருத்தலால், நங்கைமுக நோக்கி, சீதையென்றுணர்வாறாயினன். நங்கை பெண்களிற் சிறந்தவள்.

102. (இ-ள்) அன்னகாலையின் - அநுமான்சேர்ந்தகாலத்தில், அரக்கர்கோன் எய்தி இரப்பவும் - இராக்கதராசனாகிய இராவணன்வந்துகெஞ்சவும், மறுத்த - அருவருத்து இடங்கொடாத கன்னிமாதவக்கொழுந்தின் - அறிவில்லாத பெருந்தவத்திலுயர்ந்த சீதையினது, கற்புஉடைமாட்சிமைநோக்கி - கற்பினுடைய பெருமையை (தன்கண்ணூர) கண்டு, தன்னுக்கங்குலின்யாரும் துயில்உழி - (இருள்)அடர்ந்த இராவிலெல்லா அரக்கியரும் நித்திரித்தபோது, ஆழிகைக்கொடுத்து - (சீராமன்தந்த)மோதிரத்தைக் கையிற் கொடுத்து, பொன்னினவார் சிலைக்குரிசில் -அழகாகிய நீண்டகோதண்டத்தையுடைய சீராமன், புகன்றவையாவையும் புகன்றுன - சொல்லிய அடையாளமொழிகளை யெல்லாம்சொல்லினான் எ-று.

இரப்பவுமென்ற உம்மை உயர்வு சிறப்பு. யாரும், யாவருமென்ற உம்மைகள் முற்றும்மைகள் யார் யாவரென்பதன் மரூஉ ஒன்றேயாம்; வினாவினைக்குறிப்பு முற்றன்று முற்றுமமை யேற்றமையால் யார் இரண்டும் வினைப்பொருளை விட்டு, எஞ்சாமைப் பொருளன. மாட்சிமை பண்புப்பெயர், மாண் பண்புப் பகுதி, சி பகுதிப்பொருள் விகுதி, மை யென்பது அப்பொருட்டாகிய விகுதி இது ஒருபொருட்பன்மொழி ஆழி பண்பாகு பெயர் புகன்றவை பலவின்பாற்கள்க இறந்தகால ஈறு திரிந்த வினையாலணையும் பெயர் புகல் பகுதி, ற இறந்தகால இடைநிலை, அன் சாரியை, அ பலவின் பாற்கை விகுதி, பகுதி யீற்று லகரம் றகரமாதல் சந்தி, சந்தி றகரம் னகரமாதல் மெலித்தல் விகாரம், இப்புகன்றன என்னும் வினையாலணையும் பெயர் அகர விகுதி கெட்டு, வை யென்னும் பெயர் விகுதி பெற்றமையால் ஈறு திரிந்ததாயிற்று.

103 (இ-ள்) ஆங்குநின்று எழுந்து அநுமன் - அங்கிருந்து அநுமான்பாய்ந்து, ஆடகப்பசுந்தளிர்என்ற - பொன்னாகிய பசியதளிர்கள் தளிர்க்[illegible] தேன்கொள்நாண்மலர்பொதுளும் - தேன்பெற்ற புதுமலர்கள் நெருங்[illegible] சோலைகள்யாவையும் - சோலைகளையெல்லாம், சிதைப்ப - அழிக்[illegible] வெங்குதோளினர் வலியினர் கிங்கரர் - பூரித்த தோள்களையுடை[illegible] விலையெர் துகினர்களாகிய கிங்கரர்கள்,வெம்சமர்உடற்ற-(அநு[illegible] எதிர்த்து) வெவ்வியபோரைச் செய்தமையால், ஓங்கல்அன்னதோ[illegible]ளால் - தனது மலையொத்த தோளின்வலியினால், அன்னவர் ஆர்உயிர் [illegible]கான் - அக்கிங்கரருடைய அரியஉயிரை மாய்த்தான். எ-று.

[illegible]லாபொதுளும் எழுவாயத் தொகாநிலைத் தொடராதலால் வருமொ[illegible]ரம் மிகாதியல்பாயிற்று ஓங்கல் தொழிலாகுபெயர். தோளினர்

வில்லா இவ்விருசொல்லு [illegible] காலங் குறிப்பு வினைமுற்று, முன்னது வினையெச்சமாயும், பின்னது பெயரெச்சமாயும் [illegible] - வினை - கூ - கஉ - உடம்பொடு - புணர்த்தல்

104 (இ - ள்) கமிழ்மொழியுடைய [illegible] பெரியகை [illegible] மலையைப் [illegible] இராவணன் கட்டளையிட்டு [illegible] படை [illegible] கடல்போல [illegible] ளாகிய, அயில் எயிற்று [illegible] பற்களை யுடைய [illegible] அரக்கர் [illegible] அமை [illegible] உழவர் [illegible] எழுவரும் [illegible] அவ்வா [illegible] - இந் [illegible]

[illegible] ஐகா [illegible] யாயா — [illegible]

105 (இ - ள்) [illegible] வாளபோ [illegible] - அழுப்பிய [illegible] - ஒரு இராவ [illegible] ஆகியும், இ [illegible] முன்னிலைக்குழந் [illegible] கன [illegible] குமாரராகிய [illegible] - [illegible] அநு [illegible] யாக்கை யாத்த அநு மான், அ [illegible] (அடங்கா) [illegible] தலையில் [illegible]

[illegible] மங்கல [illegible] நிக ழ்கால [illegible] விகுதி, [illegible] காமடகரமாதல் [illegible] சேட்டு [illegible] பனமொழி நிலந் தொடும் மூன்றனுருபு [illegible] பொருளது [illegible] சாரியை

106 (இ - ள்) வயிரவாட்படை உழவன் - வச்சிரமாகிய கூரிய ஆயுதவீரனாகிய இந்திரன், மறம்கெட வரிசிலைகுனித்த - வீரம்கெடும்படி கட்டமைந்த வில்லை வளைத்த, புயல் நிறத்து வெம்தழுநகனை மேகநிறமுள்ள வெப்பமாகிய நெருப்போலும் கண்களையுடைய, இராவணி அமர்க்களத்திற்புகுந்து நிரசித்துப் போர்க்கு எதிரில் புகுந்து, வெயில் எறித்துஅழல்கவிழ்க்கு வெயிலைவீசித் தீயைக்கொட்டுகின்ற, விரிஞ்சன்வெம் படையினில் வீ பிரமனுடைய கொடிய அத்திரத்தினால் கட்டி, அயில் எயிற்றுவாள

கனமுனனா - கூரியபற்களையுடைய வாளைத்தாங்கிய இராவணன் முன்பு, அவ்வநுமனை உய்த்தான் - அந்த அநுமானைக் கொண்டுபோய் விட்டான்.

இராவணி இராவணன் புத்திரன்; இது தத்திதாந்தநாமம். படையினிலென்னும் ஐந்தனுருபு கருவிப்பொருளது. நிறத்த பண்புப் பெயரடியாகப்பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; நிறம் பகுதி, அத்து சாரியை, அ பெயரெச்சவிகுதி, பகுதி யீற்று மகரக்கேடும், சாரியை முதல் அகரக்கேடும், உகரக்கேடும் சந்தி.

107. (இ-ள்.) ஆனைநீஎனமுனிவுஉற - (இராவணன்)நீயாரென்று கோபித்துக்கேட்க, அரக்கனைகிளையொடும அறப்பான் - இராட்சதாகளை உறவினருடனே களைந்துவிடும்படி, வீரவஞ்சினம் உரைத்த - வீரமாகியசபதமொழியைச்சொல்லிய, வில்லிதன்தூதன்யான் - கோதண்டத்தைத்தாங்கிய சிராமனுடைய தூதன் நான், இன்னே - இப்போதே, சோர்வில் கற்புடை அணங்கை விடாய்எனில் - தவறுதலில்லாத கற்பையுடையபிராட்டியை விடாய்ஆனால், உன்உடல்தணியா - உன்னுடம்பைப்பிடித்து, நருளின்சுவை பேய்க்குவழங்கும் - நரலின்சுவையைப் பேய்கொடுக்கும், அவ்விராகவன்பகழி - அச்சிராமனுடைய பாணம். எ-ன்றவாறு.

ஆனை யானையென்னும் முன்னிலை யொருமை வினா வினைக்குறிப்புமுற்றின் மரூஉ. களை தொழிலடியாகப் பிறந்தபெயர்; களை பகுதி, இ வினைமுதற் பொருண்மை விகுதி புணர்ந்து கெட்டது. இங்ஙனமன்றி முதனிலைத் தொழிலாகு பெயரென்னலும் பொருந்தும். தூதன தன்மையில் படர்க்கை வந்த வழுவமைதி. வில்லி ஆண்பாற் படர்க்கைப் பெயர்: வில் பகுதி, ல் சந்தி, இ ஆண்பாற்படர்க்கை விகுதி; இவ்விகுதி கருங்குழலி, பாசி என மற்ற ஒருமைகளிலும் வரும்.

108. (இ-ள்.) என்றுமாருதி உரைப்ப - என்றுஅநுமான் விடைசொல்ல, இராவணன் எளிதினில் குரங்கைக்கொன்று - இராவணன் இக்குரங்கை எளிதாகக் கொலைசெய்து, நீக்குமின் என்னலும - இல்லாமற்செய்யுமென்று கட்டளையிடுதலும், வீடணன் தூதனைக்கோறல் - விபீஷணன் தூதுவனைக் கொல்லுதல், வென்றிஅன்றுஎன விலக்க - வெற்றியாவது அன்றென்று விலக்கினமையினால், வாலினில் வெள்துகில் ... வாலில் அழுக்குப்படியாத சீலையைச்சுற்றி, மன்றவெம்கனல் கொளுவி - நிச்சயமாக வெவ்விய தீப்பற்றச்செய்து, வல்லையில் விடுக்க என்றான் - விரைவில் விடுக்கக்கடவீரென்று சொல்லினான். எ-று.

... தூதர் சாதிப்பன்மை கோறல் தொழிற்பெயர்; கொல் பகுதி, தல் தொழிற்சியை யுணர்த்தும் விகுதி, பகுதி ஒகரம் ஓகாரமானது நீட்டல், பகுதி யீற்று லகரங்கெட்டு, தகரம் றகரமாதல் சந்தி. கொளுத்தி பி... செய இறந்தகால வினையெச்சம்: கொள் தன்வினைப் பகுதி. உ

இராமன் வனம்புகுந்தவத்தியாயம்

. து பிறவினைவிகுதி பெற்ற கொளுத்து பிறவினையா
ாகிய இகரம இறந்தகால வினையெச்ச விகுதி, உகர
ற்றப் பொருளதாகிய இடைச்சொல். வெள்ளிய
தூய்மையை யுணர்த்தியது.

(இ-ள்.) அன்னஆறு வெம்அரக்கர் - இராவணன் சேனையாகிய
அரக்கர்கள், வாலிடைஆர்அழல்கொளுந்த - தன்வால்
கொளுத்த, கன்னிமூதெயில் உடுத்த - அழிவில்லாத பழைய
ஆடையைஉடுத்த, கடிநகாஇலங்கை கொளுட்டி - காவலையுடைய
இலங்காநகரத்தைத் தீயினுக்கு உணவாக்கி, வன்னமேகலைஅணங்கை
மேகலையை அணிந்தசானகியை, பணிந்து சூளாமணியையும்
- சூடாமணியைப்பெற்று, பின்னல்வெள்திரைக்கடல்தாவி
) பின்னுதலுடைய வெள்ளிய அலைகளை வீசுகின்ற கடலை
கந்திரத்து அடைந்தனன் - மகேந்திரமலையில்அடைந்தான்
பெருங் குணங்களையுடைய அநுமான். எ-று.

பிறவினையாகிய இறந்தகால வினையெச்சம்; உண் தன்வி
பிறவினை விகுதி, உ ஈறுவானது நீட்டல், ணகரம் டகரமாகு
உகரக்கேடும் சந்தி, உகரத்தின் திரிபாகிய இகரம் இறந்தகால வினை
யெச்சவிகுதி. சூளாமணி மயிர்முடியின்மேல அணியும் இரத்தினம்.
இறந்தகால வினையெச்சம்; தா பகுதி, உகரத்தின் திரிபாகிய ய் இறந்தகா
லவினையெச்ச விகுதி; இகரவிகுதி ஏற்றல் தாவி எனவரும்; இது உகர
சாரியை பெற்று, உகரககேடாகிய சந்தி பெற்று, தாவிஎனவந்ததெனினும்
பொருந்தும்.

110. (இ-ள்.) வாலிமைந்தனைத்தொழுது - வாலிமகனுகிய அங்க
தனைவணங்கி, மாதினைக் கண்டமைவிளம்பி - சீதையைசகண்டதைச்சொ
ல்லி, பீலிமாமயில அகவும் - தோகையையுடைய பெருமயில்கள் நடிக்கி
ன்ற, மதுவனமஅழித்தனன் - மதுவனத்தை (தன் துணைவரோடு) அழித்
து, பெயர்ந்து - அங்கிருந்து நீங்கி, நீலமால்வரைஅனைய - பெரிய நீலரத்தி
னமலைஒத்த, நெடியவன் சேவடிவணங்கி - பெரியானுடைய சிவந்தபாதங்
களை வணங்கி, சாலிமீன்பெருகற்பின் - அருந்ததியாகிய விண்மீன் ஒத்த
பெருங்கற்பையுடைய, தையலைக்கண்டமை பகர்ந்தான் - பிராட்டியைக்க
ண்டதை விண்ணப்பஞ்செய்தான். எ-று.

மாது காரியவாகுபெயர். தையல் பண்பாகுபெயர். கண்டமை இற
ந்தகாலத் தொழிற்பெயா; காண்கின்றமை, காணுமை என இந்தமை
தி, இறந்தகாலம், நிகழ்காலம், எதிமறை இம்மூன்று தொழிற்பெய
லும்வரும்; எதிர்காலத்து வாராது. சாலிமீன் இருபெயரொட்டுப்
தொகைநிலைத்தொடர்.

(இ-ள்) பகாந்தமாருதிபின்னும் - விண்ணைப்பஞ்செய்த அநு[illegible]மேலும், பரிவொடுவேறுஇருந்து - அன்போடுதனியிடத்திலிருந்து, [illegible]தவளந்தளவநகை - குவிந்த வெண்மையாகியமுல்லையரும்புபோன்ற [illegible]யும், மொய்குழல் தருசுடாமணியையெடுத்து - மொய்த்தகூந்தலையுமு[illegible]சிந்த ஒளியுடைய சூளாமணியைத் தன்கையிலே [illegible]தி, புகழ[illegible]வும் - புகழ்ந்துகொடுத்ததும், வாங்கியபொருப்[illegible] தடவுப்புயம் [illegible] - பொற்மலையொத்த பெருந்தோள்கள் பூரிக்கும்படி, மகிழ்ந்துகண [illegible] - உள்ளமகிழ்ந்து கண்மணிகள் [illegible]ரும்படி, சோகசினன் [illegible]ராமன் - பார்த்தான் [illegible] தாங்கிய [illegible]

[illegible] (இ-ள்) ஒறவை [illegible] தடவுத்தோள் [illegible]வன் - ஒருசக்கர[illegible] பெரியதேரில் [illegible] சூரியன் [illegible], மைந்தனமுறை[illegible] சுக்கிரீவன் முன்னே [illegible]போகவும், குறுகலார் உயிர்குடிக்கும் - பகைவருடைய உயிரை [illegible], [illegible]றிவாள் உடை இளவல் - வெற்றியைத் தருகின்ற வாளையுடைய இலக்குமணன், பின்வர - பின்னேவரவும் சொற்றமவெகுநிலைக்கு [illegible] வெற்றியைத்தருகின்ற வெவ்விய கோதண்டமேந்திய ராமர், [illegible] போர்த்து - விளவில் [illegible], எற்றுதெள்ளிரைசுருட்டும் - எறிந்த [illegible] அலைகளைச் சுருட்டுகின்ற [illegible] நீள்கடற்கரை [illegible] - [illegible] நீர்வளமுள்ள கடலின் கரையில் (சேனையோடு) இறங்கினான், எ-று.

ஒறவை [illegible] பண்புப்பெயராகிய ஒன்றென [illegible] டாகக் [illegible] மொழி [illegible] நோக்காமல், [illegible] பண்புத்தொகை [illegible]. [illegible] அணைபாற்பட்டாக்கை எதிர்கால [illegible] லையும் [illegible], [illegible]லத்திலும் ஒத்து நடக்கும் பொருளை எதிர்காலத்தாற் கூறுவர் தமிழ்நூலார். நிகழ்காலத்தாற் கூறுவர் வடநூலார். இது [illegible] சுருட்டும், இரங்கும் [illegible] [illegible] கொண்டன